உ

ஸ்ரீ கிருஷ்ணாய பரமாத்மனே நம:

# ஸ்ரீமத் பாகவதம்

## (தமிழ் வசனம்)

## முதல் ஸ்கந்தம்

ஸ்ரீராம ஜயம்
மாசி மீ 15உ
ராமாமிர்த ஸ்ரீ


மொழிபெயர்த்தவர் :

பண்டிட், R. சிவராம சாஸ்திரிகள்

இஞ்சிக்கொல்லை



ஸ்ரீ மஹாபாரதம் பிரஸ்

ஸ்ரீ வேதவிநாயகர் தெரு

கும்பகோணம்



பதிப்புரிமை ]


[ விலை ரூ. 2—8—0

Reprinted : May 1950

# பொருளடக்கம்


| அத்தியாயம் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| | முகவுரை .... | (i) |
| | முன்னுரை | |
| | ஸ்ரீமத் பாகவத மஹிமை | |
| 1. | சௌனக பிரச்னம் .... | 2 |
| 2. | ஸூதர் பிரதியுத்தரஞ் சொன்னது .... | 15 |
| 3. | பகவத் அவதாரங்கள் .... | 23 |
| 4. | வியாஸர் கவலையடைந்தது .... | 33 |
| 5. | வியாஸருக்கு நாரதர் உபதேசித்தது | 38 |
| 6. | நாரதருடைய முன் ஜன்மம் .... | 49 |
| 7. | அர்ச்சுனன் அசுவத்தாமாவை சிட்சித்தது | 56 |
| 8. | பகவானைக் குந்தி ஸ்தோத்திரஞ் செய்தது .... | 67 |
| 9. | பீஷ்மர் தர்மம் உரைத்தது .... | 76 |
| 10. | ஸ்ரீ கிருஷ்ணன் துவாரகை சென்றது | 87 |
| 11. | துவாரகாவாஸிகள் பகவானை உபசரித்தது | 94 |
| 12. | பரீக்ஷித்தின் உற்பத்தி .... | 101 |
| 13. | திருதராஷ்டிரர் வெளியில் சென்றது | 107 |
| 14. | தர்மபுத்திரருக்கு நேர்ந்த அபசகுனங்கள் | 117 |
| 15. | தர்மபுத்திரர் பரலோகம் சென்றது .... | 123 |
| 16. | பரீக்ஷித்து தர்மத்தைக் கண்டது .... | 131 |
| 17. | பரீக்ஷித்து மகாராஜன் கலியை நிக்ரஹித்தது .... | 137 |
| 18. | பரீக்ஷித்திற்கு நேர்ந்த பிராம்மண சாபம் .... | 143 |
| 19. | கங்கைக்கரைக்குச் சுகர் வந்தது .... | 150 |

# ஸ்ரீமத் பாகவதம்

## முகவுரை

"ஸாதுக்களைக் காப்பாற்றுவதற்கும், துஷ்டர்களைச் சிட்சிப்பதற்கும், தர்மத்தை ஸ்தாபிப்பதற்கும் ஒவ்வொரு யுகத்திலும் அவதரிக்கிறேன்" என்று பகவான் செய்திருக்கும் பிரதிக்ஞையின்படி கம்ஸன் முதலியவர்களை நாசஞ் செய்வதற்காக ஸ்ரீ மஹா விஷ்ணுவானவர் யதுகுலத்தில் ஸ்ரீகிருஷ்ணன் என்ற திவ்ய நாமதேயத்துடன் அவதரித்துச் செய்த லீலைகளைக் காட்டும் ஸ்ரீமத் பாகவத கிரந்தம் உலகோத்தரமென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

2. அந்த கிரந்தமானது ஸம்ஸ்கிருத பாஷையிலிருப்பதால் எல்லா ஜனங்களும் அதன் அர்த்தத்தைத் தெரிந்துகொள்ளமுடியாமல் இருக்கிறது. மேலும், அதற்கு உண்மையான மொழிபெயர்ப்பும் ஏற்படவில்லை.

3. ஸம்ஸ்கிருதம் தெரியாதவர்களும், ஸ்திரீகளும், பாலர்களும் இலகுவாய்த் தெரிந்துகொள்ளும்படி எளிதான வசனநடையில் இந்நூல் ஸம்ஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

4. அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம் ஆகிய மத சம்பந்தமான வியாக்யானங்களாகிய ஸ்ரீதரீயம், சந்த்ரிகா, வீரராகவீகம், முனிபாவப்ரகாசிகா, விஜயத்வஜீயம் முதலியவைகளின் விஷயங்களும் ஒவ்வொரு அத்தியாயத்தின் முடிவில் எழுதப்பட்டிருக்கின்றன.

5. இம்மொழிபெயர்ப்பில், ஸ்ரீதரீய வியாக்யானத்துடன் கிரந்தாக்ஷரத்தில் அச்சிட்டிருக்கும் மூல புத்தகத்தின்படி சுலோகங்களின் ஸங்கியை காட்டப்பட்டிருக்

கிறது. மேலும், இந்தக் கிரந்தமானது முக்கியமாகப் பரமாத்மாவின் குணங்களை வர்ணிப்பதற்காகவே ஏற்பட்டதாகையால் வேதாந்த விஷயங்கள் அடிக்கடி விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருப்பதால் அவைகள் கூடியவரையில் எளிய தமிழ் வசன நடையில் காட்டப்பட்டிருக்கின்றன.

6. இம்மாதிரியான பெரிய காரியத்தைச் செய்ய முன்வந்துள்ள எம்மை வித்துவான்களும் ஆஸ்திக ஜனங்களும் ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்.

இம்மொழிபெயர்ப்பில் குறைகள் ஏதாவது காணப்படுமானால் அவைகளை எமக்குத் தெரிவிக்கும் மித்ரமணிகளுக்கு வந்தனஞ் செலுத்துவதுடன், அடுத்த பதிப்பில் அவைகளைத் திருத்தி வெளியிடவும் சாதகமாகும்.

இங்ஙனம்,

கும்பகோணம்
15—5—49

ஸ்ரீ மஹாபாரதம் பிரஸ்

# ஸ்ரீமத் பாகவதம்

## முன்னுரை

இது, ஸ்ரீ பகவானுடைய அற்புத லீலைகளையும் அனந்த கல்யாணகுணங்களையும் முக்கியமாய் வர்ணிக்கும் கிரந்தம். இது வியாஸ மகரிஷியினால் சுகருக்கு உபதேசிக்கப் பட்டது. சுகர் பரீக்ஷித்து மஹாராஜனுக்குச் சொன்னார். அப்பொழுது ஸூதர் அவ்விடமிருந்து இக்கதையைச் சுகருடைய அநுமதியின்பேரில் தெரிந்துகொண்டார். பிறகு அவர் நைமிசாரணயத்தில் வசிக்கும் சௌனகர் முதலிய மகரிஷிகளுக்குச் சொன்னார்.

### ஸ்ரீமத் பாகவதமென்பது யாது?

ஸ்ரீமத் பாகவதமென்ற புராணம் எல்லாவற்றிலும் மேலானது. (1) ஸகல உபநிஷத்துக்களால் நிரூபிக்கப்படும் பரமாத்மா இதனால் வர்ணிக்கப்பட்டிருக்கிறார். (2) வியாஸ மகரிஷியானவர் விஸ்தாரமான வேதங்களைப் பிரித்தும், பாரதம் முதலிய இதிஹாஸங்களைச் செய்தும் தமது மனது பிரஸன்னமாகாததால் பகவானுடைய குணங்களையே முக்கியமாக வர்ணிக்கவேண்டுமென்று இதைச் செய்தார். (3) கீதா, ஸஹஸ்ரநாம, ராமாயண இந்தச் சப்தங்கள் தனியே உச்சரிக்கப்பட்டாலும், அவை முறையே பகவத் கீதை, விஷ்ணு ஸஹஸ்ரநாமம், ஸ்ரீ வால்மீகி ராமாயணம் என்பவற்றையே குறிப்பிடுதல்போல, பாகவதமென்ற சப்தமும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் குணத்தைச் சொல்லும் விஷ்ணு பாகவதத்தையே காட்டுகிறது. (4) மேலும் இது,

ஸகல லோகங்களாலும் நமஸ்கரிக்கப்பட்ட பாதங்களுள்ள சுக மகரிஷியாலும் அத்யயனஞ் செய்யப்பட்டது. (5) இது மோக்ஷத்தை விரும்பிய பரீக்ஷித் மஹாராஜனுக்குச் சுக மகரிஷியால் மோக்ஷசாஸ்திரமென்று உபதேசிக்கப் பட்டது.

**ஆட்சேபம்:** "ஹேமாத்ரி யென்னும் பெயருள்ள ஒரு பிரபுவினுடைய அரண்மனை வித்வான்களில் முக்கியராய் போபதேவரென்ற ஒரு பண்டிதர் இருந்தார். அவர் கோபால பக்தனுகிய அந்தப் பிரபுவைச் சந்தோஷப்படுத்து வதற்காக, அவருடைய நியமனப்படி இந்தப் புராணத்தை எழுதி அரசனிடம் கொடுத்தார். அரசன், அதை முழுவதும் மற்றைப் பண்டிதர்களுடன் பரிசோதித்து, அதிலுள்ள பதச்சேர்க்கை முதலியவைகளால் ஆச்சரியப்பட்டு, அதனை உலகத்தில் பரவச்செய்ய விரும்பி, அனேகம் பிரதிகளை எழுதுவித்துப் பண்டிதர்களைக்கொண்டு வியாக்யானமும் செய்வித்துப் பரவச்செய்தார்" என்ற ஒரு கதை பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறோமே, அப்படிக்கிருக்க வியாஸர் செய்தாரென்பது பொருந்துமா என்றால் :—

**சமாதானம்:** இந்த விஷ்ணு பாகவதம் போபதேவர் செய்ததன்று. ஹேமாத்ரியென்ற பிரபு ஒரு நாள் ஸபையில் வித்வான்களை நோக்கி, "இரண்டு முஹூர்த்தங்களில் பாகவதத்தின் அத்தியாயச் சுருக்கங்களைச் சுலோக ரூபமாகச் சொல்ல உங்களில் யார் சக்தியுள்ளவர்?" என்று கேட்டார். அப்பொழுது போபதேவரென்ற பண்டிதர், 'நாளைய தினம் சொல்லுகிறேன்' என்றார். மறு நாள் பாகவதாத்யாயஸாரம் என்ற கதானுக்ரமணிகையைச் செய்து அந்தப் பிரபுவினிடம் கொடுத்தார்.

அதன் முதல் சுலோகம் பின்வருமாறு: "வித்வானுகிற போபதேவரால் மந்திரியாகிய ஹேமாத்ரியினுடைய திருப்திக்காக இதில் ஸ்ரீமத் பாகவதத்தின் அத்யாயஸாரம் நிரூபிக்கப்படுகிறது." இதனுல் பிரபு திருப்தியடையாமலிருக்க, அவருடைய நியமனப்படி பக்திமுக்தாபலம், பக்தி

லஹரி என்ற இரண்டு கிரந்தங்களைச் செய்தார். அதனால் பிரபு பண்டிதரை மிகவும் கௌரவப்படுத்தினர்.

தவிர, போபதேவர்செய்த கிரந்தங்களின் விவரமானது பக்தி முக்தாபலமென்னும் கிரந்தத்தின் வியாக்யானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது, சாஸ்திரங்களைப் படித்தவர்களுக்குள் சிறந்தவரான போபதேவரால் வியாகரண விஷயமாக 10 கிரந்தங்களும், மனிதர்களின் வைத்திய விஷயமாக 15 கிரந்தங்களும், 16 வியாக்யானங்களும், ஸாஹித்ய விஷயமாக மூன்று கிரந்தங்களும், பாகவத தத்வ விஷயமாக மூன்று கிரந்தங்களும் செய்யப்பட்டன. அவைகள் யாவும், எல்லோராலுங் கொண்டாடத்தக்கவைகளே. தவிரவும், இந்தப் போபதேவர் ஸ்ரீமத் பாகவத கிரந்தத்தை இருபத்திரண்டு தடவை படித்தாரென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அவரால் வேதவியாஸ ஸ்தோத்திரமும் சுலோகரூபமாய்ச் செய்யப்பட்டிருக்கிறது. மேற்காட்டிய காரணங்களால் முன்னே சொன்ன ஆட்சேபத்திற்கு இடமேயில்லை. தவிரவும், ஸ்ரீமத் பாகவதத்தின் முதல் சுலோகத்தின் வியாக்யானத்தில் ஸ்ரீதராசாரியர் அவர்கள், "பாகவதமென்பது வேறு என்று சங்கிக்கக்கூடாது" என்பதாகச் சொல்லியிருக்கிறார்.

ஆட்சேபம்: ஸ்ரீமத் பாகவதம் வியாஸரால் செய்யப்பட்டதென்பது முற்றிலும் பொருந்தாது. அந்த மகரிஷியினால் செய்யப்பட்ட மஹாபாரதம், ஸ்காந்தம், விஷ்ணு புராணம் முதலிய கிரந்தங்கள் எளிதில் படிக்கக்கூடியவைகளாயும், எளிதில் அர்த்தஞ் செய்துகொள்ளக் கூடியவைகளாயும் இருக்கின்றன. இந்தப் பாகவதத்திலோ மேற்காட்டியவைகள் முற்றிலும் மாறியிருக்கின்றன. ஒருவரால் செய்யப்பட்ட கிரந்தங்களில் இவ்வளவு மாறுதலிருக்க நியாயமில்லை. ஆகையால் இதன் கர்த்தா வியாஸர் அல்லர் என்பதேயாம்.

சமாதானம்: சொன்ன ஆட்சேபம் சரியானதே. ஆனாலும், ஸ்ரீ வியாஸ பகவான் ஸ்ரீ நாராயணனுடைய

அவதாரம். அவர் வேதராசியை ஜனங்கள் அத்யயனஞ் செய்ய முடியாமல், புத்திக் குறைவுள்ளவர்களாயிருக்கும் காலத்தில், அக்குறையை நீக்குவதற்காக வேதங்களை நான்கு சாகைகளாகப் பிரித்தார். பின்னும் அவற்றைப் படிப்பதற்கும் கேட்பதற்கும் அதிகாரமில்லாத ஸ்திரீகள் சூத்திரர்கள் இவர்களுக்காக மஹாபாரதம், இதிஹாஸம் முதலியவைகளை எளிதில் அர்த்தமாகும்படி எளிய நடையில் எழுதி வெளியிட்டார். அப்படியே வேதார்த்தத்தைப் பகவத்கீதை, பிரஹ்மஸூத்திரம் இவைகளால் வெளி யிட்டார். இப்படி மந்தாதிகாரிகளை உத்தேசித்து எளியவைகளைச் செய்தார். உத்தமாதிகாரிகளான வித்வான்களுக்கு உபயோகப்படும்படி ஸகல வேதங்களால் நிரூபிக்கப்படும் பரமாத்மாவைக் கடினமான சந்தர்ப்பத்தால் வர்ணித்தார். ஆகையால் அதிகாரி பேதத்தால் நடையின் பேதம் ஏற் பட்டதேயொழிய கர்த்தாவின் பேதத்தால் ஏற்பட்ட தல்ல.

ரகுவம்சம், மேகஸந்தேசம், நளோதயம், ஹரிச் சந்த்ரோபாக்யானம், நளோபாக்யானம் இவைகள் மகா கவியாகிய காளிதாஸரால் செய்யப்பட்ட கிரந்தங்கள். இவைகளில் பதங்கள், அவைகளின் சேர்க்கை, விருத்தி, பாகம் முதலியவைகள் வெவ்வேருகக் காணப்படுகின்றன. அதனல் இவைகளை எல்லாம் காளிதாஸர் எழுதவில்லை யென்று சொல்லக்கூடுமா?

மேலும், ஆத்மபோதம், ஸௌந்தர்யலஹரி இவைகள் ஸ்ரீமத் பகவத்பாதர்களால் செய்யப்பட்டவைகளானலும், ஒன்றுக்கொன்று மேற்காட்டிய விஷயங்களில் மாறுபாடுள் ளனவாக இருக்கின்றன. ஆகையால், ஸர்வக்ஞர்களாயும், பகவானுடைய அவதார பூதராயுமான வியாஸ மகரிஷியி னுடைய வாக்கானது கங்காப்பிரவாகம் போலத் தடை யற்றது.

**ஆட்சேபம்:** பாகவதம் என்பது தேவீபாகவதமே யொழிய வியாஸ மகரிஷியால் செய்யப்பட்டதல்ல.

ஏனென்றால், "ஸ்ரீமத் பாகவதத்தை யெழுதி ஸ்வர்ண ஸிம்மாஸனத்தில் வைத்துத் தானஞ்செய்பவருக்கு மோக்ஷம் கிடைக்கும்"—மத்ஸ்ய புராணம். இதே விஷயத்தை ஸ்ரீதாராசாரியர்கள் முதலியவர்களும் சொல்லியிருக்கிறார்கள். இதைப்பற்றிக் கொஞ்சம் யோசிப்போம். ஸ்வர்ண ஸிம்மாஸனத்திற்கும் ஸ்ரீமத் பாகவதத்துக்கும் என்ன சம்பந்தம்? ஸ்ரீ மஹாவிஷ்ணுவுக்குக் கருடன் வாகனமென்று ப்ரஸித்தமே தவிர, சிங்கம் வாகனமென்று ஓரிடத்திலும் சொல்லப்படவில்லை; வேறு வாகனமிருப்பதாகத் தெரியவுமில்லை. பகவான் நரஸிம்மாவதாரஞ் செய்தவராகையால், ஸிம்மமென்று சொல்லியிருக்கிறதென்று யோசிப்போமானால், பரமாத்மாவின் ஸ்வரூபமாகிய ஸிம்மத்தின்மீது அவரை நிரூபிக்கும் கிரந்தத்தை வைத்துத் தானஞ்செய்வது நியாயமாகுமா? ஆகையால் தேவீ பாகவதமென்றே சொல்வது யுக்தம். ஸிம்மம் ஸ்ரீதேவியின் வாகனமாகையால், அதில் வைத்துத் தானஞ்செய்வது மோக்ஷத்தைக் கொடுக்குமென்பது பொருந்தும்.

**சமாதானம்:** முன்னே காட்டிய ஆட்சேபம் முற்றிலும் பொருந்தாது. ஸகல ஸ்வரூபியான ஸ்ரீபகவானுக்குக் கருடன், ஸிம்மம், ஆஞ்சநேயர், குதிரை, யானை இவைகள் வாகனமாக இருக்கின்றன. இப்பொழுது தேவதாலயங்களில் உத்ஸவகாலத்தில் மேற்காட்டிய வாகனங்களில் பகவானை யலங்கரிப்பது வழக்கமாயிருக்கிறது. "விஷ்ணுவின் வாகனங்களைச் சொல்லுகிறோம்: முதல் நாள் ஹம்ஸம், இரண்டாம் நாள் ஸிம்மம், மூன்றாம் நாள் ஆஞ்சனேயர், நான்காம் நாள் ஆதிசேஷன், ஐந்தாம் நாள் கருடன், ஆறாம் நாள் யானை, ஏழாம் நாள் ரதம், எட்டாம் நாள் குதிரை, ஒன்பதாம் நாள் பல்லக்கு, பத்தாம் நாள் புஷ்பகம்."-வைகானஸ தந்திரம், தெய்விக யக்ஞாதிகாரம், உத்ஸவ படலம். "பகவான் உத்ஸவ தினங்களில் ஹம்ஸம், ஸிம்மம், ஹனுமான், ஆதிசேஷன், கருடன், யானை, ரதம், குதிரை, பல்லக்கு, புஷ்ப மண்டபம் ஆகிய வாகனங்களில் முறையே வீற்றிருந்து அர்ச்சாவதாரத்தின் மகிமையைக் காண்பிக்

கிறுர்."—அத்ரி காரிகை. இதே விஷயம் வைசம்பாய காரிகையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் பகவானுடைய அனந்த கல்யாண குணங்களை வர்ணித்திருக்கும் ஸ்ரீ ம த் பா க வ த ம் ஸ்ரீமந் நாராயணஸ்வரூபமே தவிர வேறில்லை. அதை ஸிம்மாஸனத்தில் வைத்துத் தானஞ்செய்வதில் கொஞ்சமேனும் நியாய விரோதமில்லை. "ரிஷியின் அம்சமில்லாதவன் காவியம் எழுதமாட்டான்; விஷ்ணுவின் அம்சமில்லாதவன் அரசனுகிறதில்லை" என்றபடி, அரசன் விஷ்ணுவின் அம்சமுள்ளவனுகையால் ஸிம்மாசனத்திற்குரியவனுகிறுன். அப்படியிருக்க, பகவானுக்கு ஸிம்மாஸனமுண்டென்று என் சொல்லக்கூடாது? ஹேமாத்ரி முதலிய கிரந்தங்களில் தானபிரகாணத்தில் ரோகிகளுக்கு வியாதி நிவர்த்திக்காக,அந்தந்த வியாதிக்குத்தக்கபடி ஒரே தேவதையை அனேக வாகனங்களில் பூஜித்து, தானஞ்செய்யும்படி சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப்போல் ஸம்ஸார வியாதியால் உபத்திரவமடைந்தவனுக்கு,அதன் நிவர்த்திக்காக இம் மாதிரியான தானம் பிராயச்சித்தமாகச் சொல்லப்பட்டது. தேவீபாகவதம் முதலிய சக்தியை நிரூபிக்கும் கிரந்தங்களில் தேவிக்கு ஸிம்மம் வாகனமென்று சொல்லப்பட்டிருந்தாலும், "ஸிம்மம் ஸ்ரீதேவியின் வாகனமேயொழிய பகவானுடையதல்ல" என்று சொல்ல முடியாது. ஏனென்றுல், ஸ்ரீதேவி மஹா விஷ்ணுவிற்குப் பத்னியாகையால், தான் பர்த்தாவினுடைய வாகனங்களில் தனதிஷ்டப்படி ஒரு வேளை கருடன்மீதும், ஒருகால் ஸிம்மத்தின்மீதும், பின்னுமொருகால் யானையின்மீதுமாக ஏறிச் சஞ்சரிக்கலாமேயொழிய அவளுக்குச் சொந்தமான வாகனமின்னதென்று கற்பிப்பது பொருந்தாது. "வீடு, தோட்டம், வயல், பணம், வேலைக்காரர்கள், வேலைக்காரிகள், வாகனம், பசு, ஆபரணம், கடன் இவைகளில் பர்த்தாவுக்கு அதிகாரமேயொழிய பத்தினிக்கு அதிகாரமில்லையென்று" மனு ஸ்மிருதி முதலியவை சொல்லுகின்றன. "ஸ்திரீ ஒருபோதும் ஸ்வாதந்திரியத்தை யடையத்தக்கவளல்ல." புருஷனுடைய வாகனங்களில் அவர்களுடைய பத்னி ஏறினதால் அவைகள்

அவர்களுடையதாகிவிடுமா? அப்படி உலகத்தில் வழக்கமு மில்லை.

ஆட்சேபம் : "ஓ மைத்ரேயி! ஆத்மாவே பார்க்கத்தக்க வன், கேட்கத்தக்கவன், மனனஞ் செய்யத்தக்கவன்" என்ற சுருதிப்படி மோக்ஷத்தை விரும்பியவர்களுக்குச் சிரவணம் முதலியவைகள் விதிக்கப்பட்டிருக்கின்றனவே யொழியத் தானம் முதலியவை விதிக்கப்படவில்லையே. தானத்தால் மோக்ஷம் கிடைக்குமென்பது பொருந்துமா?

சமாதானம் : ஸ்ரீ வியாஸ மகரிஷியானவர் இந்தப் பாக வத சாஸ்திரம் எல்லா உபநிஷத்துக்களுக்கும் சமமான தென்று காட்டுதவற்காகவே சகல வேதார்த்தங்களைச் சுலோகரூபமாகச் செய்தார். சிலவிடங்களில் வேதத்தி லுள்ள பதச்சேர்க்கையையே காட்டியிருக்கிறார். கேவல வேதத்தை அர்த்தமறியாமலேயே சம்பிரதாயப்படி படிப்ப தால் மேலான பலன் கிடைப்பதுபோல வேதத்திற்குச் சம மான ஸ்ரீமத் பாகவத கிரந்தத்தைத் தானஞ் செய்வதாலும் மோக்ஷம் கிடைக்குமென்று சொல்லப்பட்டது. இதனால் புத்தக தானத்திற்கே இவ்வளவு பலன் கிடைக்குமாகில், குருமுகமாக சாஸ்திர முறைப்படி இதைத் தெரிந்துகொண் டவனுக்கு முக்தி கிடைப்பது நிச்சயம் என்ற தாத்பரியம் விளக்கப்பட்டது. மோக்ஷத்தை விரும்பியவர்களும் இடை யூறாகிய பாபத்தை நிவர்த்தித்துக்கொள்ள முயலவேண்டும். பாபம் நீங்கிச் சுத்தனானால்தான் மோக்ஷமடையத் தகுந்தவ னாக ஆகிறான். கலியுகத்தில் தானத்தால்தான் பாபத்தை நிவர்த்தித்துக்கொள்ள முடியும். அதனால்தான் பாகவத தானத்தால் மோக்ஷம் கிடைக்குமென்று வியாஸ மகரிஷி சொன்னார். "புத்தியுள்ளவன் கலியுகத்தில் தானத்தாலேயே பாபத்தை நிவர்த்தித்துக்கொள்ளவேண்டும்" — விஷ்ணு ஸ்மிருதி. "மூவுலகத்திலும் தானத்தைவிட மேலான தொன்றுமில்லை. தானத்தால் ஸ்வர்க்கம், லக்ஷ்மீ, சத்ரு ஜயம், வித்தை, ஸ்திரீகள், வியாதி நிவர்த்தி ஆகிய இவை கள் கிடைக்கும். நான்கு புருஷார்த்தங்களும் தானத் தாலேயே கிடைக்கின்றன."—ஸௌர புராணம். இவ்வுலகத்

திலும், பரலோகத்திலும் தானமே முக்கியமான க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியது. இதுவே மோக்ஷத்திற்கும் ஸாதனமென்று வேதம் சொல்லுகிறது"-ப்ரஹ்மகைவர்த்த புராணம். "கிருதயுகத்தில் தவமும், திரேதா யுகத்தில் ஞானமும், துவாபர யுகத்தில் யக்ஞமும், கலியுகத்தில் தானமும் க்ஷேமத்தைக் கொடுக்கும்."—மனுஸ்மிருதி. "ஆகையால் தானமே மேலானது"—சுருதி. "ஸ்ரீ கிருஷ்ண பகவான், அர்ஜுனனுடைய வார்த்தையைக் கேட்டு, தர்மபுத்திரரைத் தமது கையால் தடவிச் சொன்னதாவது: "ஓ! அரசனே! பிரம்மஹத்யை, கள் குடிப்பது, திருடுவது, ஆசாரிய பத்னியைப் புணர்வது முதலிய பாபங்கள் தானத்தாலேயே நிவர்த்தியாகின்றன. புத்திரன், பணம், புண்ணியம் முதலியவைகள் தானத்தாலேயே கிடைக்கின்றன."—ஸ்காந்தம்.

**ஆட்சேபம்**: பாகவதத்திற்கு வியாக்யானஞ் செய்த ஸ்ரீதராசார்யர் முதலானவர்கள் முதல் சுலோகத்திற்கு வியாக்யானஞ் செய்யும்பொழுது பாகவத லட்சணமாகக் காட்டிய வசனங்கள் பின்வருமாறு கண்டுகொள்க:

"எந்தக் கிரந்தத்தில் காயத்ரியின் மூலமாகத் தர்ம விஸ்தாரம் வர்ணிக்கப்பட்டிருக்கிறதோ, விருத்ராஸுர வதத்தின் கதை எதிலிருக்கிறதோ, அந்த 18,000 கிரந்தங்களுள்ளதே பாகவத புராணமென்று சொல்லப்பட்டது"--மத்ஸ்ய புராணம். 'எதில் ஹயக்ரீவ பிரஹ்மவித்யை, விருத்ராஸுர வதம், 18,000 கிரந்தங்கள், 12 ஸ்கந்தங்கள் ஆகிய இவைகளிருக்கின்றனவோ, எது காயத்ரியால் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதோ அதைப் பாகவதமென்று சொல்லுகிறார்கள்"—ஸ்காந்தம். "ஓ! அம்பரீஷ! ஸம்ஸார பந்தம் நிவர்த்தியாகவேண்டுமானல் சுகரால் சொல்லப்பட்ட பாகவதத்தைப் பிறர் சொல்லக் கேட்கவேண்டும்; தானுகவாவது படிக்கவேண்டும்."—பத்ம புராணம்."இது பிரஹ்மஸூத்ரங்களுடைய அர்த்தம்; மஹாபாரதத்தின் உண்மையான அர்த்தம்; காயத்ரீ மந்திரத்திற்கு பாஷ்யம்; புராணங்களுடைய ஸாரம்; வேதத்தின் அர்த்தங்களால் நிறைந்தது; 12 ஸ்கந்

தங்களுள்ளது; 100 விச்சேதமுள்ளது; 18,000 கிரந்தங்களுள்ளது; பாகவதமென்று பெயருள்ளது"—கருட புராணம்.

இதில் சொல்லிய லட்சணங்கள் யாவும் தேவீபாகவதத்தில் பொருந்தியிருக்கின்றனவேயொழிய விஷ்ணு பாகவதத்தில் பொருந்தியவைகளாயில்லை. மேலும், "மஹாமாயாரூபியான சக்தியின் மகிமையால் மஹாவிஷ்ணு, ஹயக்ரீவரானர்"—தேவீபாகவதம், ஸ்கந்தம் 1 அத்யாயம் 5. ஹயக்ரீவ பரமாத்மா அகஸ்திய மகரிஷிக்கு உபதேசித்த தேவிவிஷயமான கிரந்தங்களுக்கு ஹயக்ரீவப் பிரஹ்மவித்யையென்று பெயர். அந்த வித்யை ஸ்ரீ விஷ்ணு பாகவதத்திலாவது, மற்ற புராணங்களிலாவது சொல்லப்படாததனுலும் தேவீபாகவதமே பாகவதமென்பதற்கு அர்த்தம்.

சமாதானம்: பாகவதமென்றுல் விஷ்ணு பாகவதமென்றே அர்த்தங் கொள்ளவேண்டும். ஹயக்ரீவ பிரஹ்மவித்யை என்றுல் ஹயக்ரீவ பரப்ரஹ்மத்திற்கு மற்றவர் சொன்ன வித்தை என்றுவது, ஹயக்ரீவர் பிறருக்குச் சொன்ன வித்தை என்றுவது அர்த்தம் செய்யக்கூடாது. ஹயக்ரீவர் பிறரிடத்தில் உபதேசம்பெற்றுக்கொண்டாரென்றுவது, பிறருக்கு உபதேசித்தாரென்றுவது ஒரு கிரந்தத்திலும் சொல்லவில்லை. பிரளய காலத்தில் எல்லா வித்தைகளும் காணுமற்போனதால், பகவான் ஹயக்ரீவராக அவதரித்து அவைகளைக் கொண்டுவந்தார். இதுவே இந்த அவதாரத்திற்கு காரணம். ஆனதால் ஹயக்ரீவரால் கொண்டுவரப்பட்ட வித்தை யென்றே அர்த்தம் செய்யவேண்டும். மேலும், பிரஹ்ம சப்தத்திற்கு வேதமென்று அர்த்தம் வைத்துக்கொண்டால், வேதவித்யையென்றும், உண்மை என்று அர்த்தம் கொண்டால் தத்வஞானமென்றும், தபஸ் என்று அர்த்தம் கொண்டால் தபோவித்யை யென்றும், நான்கு முகங்களுள்ள பிரஹ்மதேவரென்று அர்த்தம் கொண்டால் பிரஹ்மதேவருக்கு உபதேசஞ்செய்யப்பட்ட வேதவித்யையென்றும், பிராம்மணர்கள் என்று அர்த்தம்கொண்டால் பிராம்மணர்களால் அத்யயனஞ் செய்யக்கூடிய வித்யை

யென்றும் அர்த்த மேற்படுகிறதேயொழிய தேவீ விஷய மான வித்யை என்ற அர்த்தம் எற்பட நியாயமில்லை. ஆகை யால் ஹயக்ரீவ பிரஹ்மவித்யை விஷ்ணு பாகவதத்திலேயே நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

**ஆட்சேபம்:** தேவி விஷயமான கிரந்தங்களில் அகஸ்திய மகரிஷிக்கு ஹயக்ரீவர் மஹாவித்யை உப தேசித்தாரென்று சொல்லியிருப்பது பொருந்துமா?

**சமாதானம்:** பொருந்தும்; ஹயக்ரீவரால் எடுத்து வரப்பட்டவைகளில் அகஸ்தியருக்கு உபதேசிக்கப்பட்ட மந்திரங்களும் சேர்ந்தவைகளேயாம். மேலும், பூர்ணிமா திதியில் தானஞ் செய்யவேண்டுமென்று சொல்லியிருக் கிறது. சிவாலயங்களிலும், விஷ்ணுவின் ஆலயங்களிலும் பஞ்சபர்வங்களில் பூர்ணிமா திதியில் விசேஷமான ஆரா தனஞ் செய்கிறார்கள். தேவியின் ஆலயங்களில் பூர்ணிமை யில் யாதொரு விசேஷ ஆராதனம் நடப்பதாகத் தெரிய வில்லை. மேலும், "ஏகாதசி, பூர்ணிமா இந்தத் திதிகளில் ஹயக்ரீவரை ஜபித்தவன் மஹாநுபாவனாக ஆகிறான்"— ஹயக்ரீவோபநிஷத். "பிரஹ்ம ஸூத்ரங்களுடைய அர்த்தமே பாகவதம்" என்ற கருடபுராணத்தில் சொல்லிய லக்ஷணம் தேவீபாகவதத்தில் கொஞ்சமேனுமில்லை; விஷ்ணு பாக வதத்திலேயே பொருந்தியிருக்கிறது.

---

# ஸ்ரீமத் பாகவத மகிமை

முன்னொரு காலத்தில் நைமிசாரண்யத்தில் வசிக்கும் சௌனகர் முதலிய மகரிஷிகள் ஸூதரை நோக்கி, "ஏ ஸூதரே! கோரமாகிய இக்கலியுகத்தில் பிராணிகள் அதர் மத்தில் ஆசையுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்குப் பக்தி, ஞானம், வைராக்கியம், விவேகம் ஆகிய இவைகள் எதனால் உண்டாகும்? எது பலவிதமான சிரேயஸ் ஸாதனங்களில் மேலானது? எது சுத்தமானவை களுக்கும் பரிசுத்தியை யுண்டுபண்ணுகிறது? எது ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கு மிகவும் பிரியத்தை யுண்டுபண்ணக் கூடியது? சிந்தாமணியானது, இவ்வுலகத்திய சுகத்தை மட்டில் கொடுக்கும். மகேந்திரன், ஸ்வர்க்க சுகத்தை மாத்திரம் கொடுப்பார். ஆசாரியர்கள் சந்தோஷமுண்டா னால் யோகிகளுக்கும் கிடைக்க அரிதான வைகுண்ட பதத்தையும் கொடுப்பார்கள். ஆனதால் அதைச் சொல்ல வேண்டும்" என்று கேட்டார்கள்.

இதைக் கேட்ட ஸூதர் சௌனகரை நோக்கி, "உமக்கு இவ்விஷயத்தில் பிரியம் உண்டானதால் எது ஸம்ஸார தாபத்தை நிவர்த்திசெய்யுமோ, எது ஸ்ரீகிருஷ்ண பகவா னுக்கு சந்தோஷத்தை யுண்டுபண்ணுமோ, எது பக்தியை விசேஷமாக விருத்திசெய்கிறதோ, அதனை நான் யோசித் துச் சொல்லுகிறேன்; ஜாக்ரதையாகக் கேளும். பரீக்ஷித்து மஹாராஜனுக்குச் சுகரால் உபதேசிக்கப்பட்ட ஸ்ரீமத் பாகவத சாஸ்திரமே சித்தசுத்தியை யுண்டுபண்ணக் கூடியது; ஜன்மாந்தரத்தில் புண்ணியஞ் செய்தவன்தான் பாகவதத்தைக் கேட்பான்; படிப்பான். ஸபையில் பரீக்ஷித் துக்குச் சுகர் ஸ்ரீமத் பாகவதக் கதையைச் சொல்லத் தொடங்கும்போது தேவர்களனைவரும் அமிருதக் குடத்தை யெடுத்துக்கொண்டு வந்து சுகரை நமஸ்கரித்து, "இந்த அமிருதத்தை அரசன் புசிக்கட்டும். நாங்கள் பாகவதமாகிய அமிருதத்தைப் பானஞ்செய்கிறோம். நீர் அமிருதக்

குடத்தை அரசனுக்குக் கொடுத்துவிட்டு, கதாமிருதத்தை எங்களுக்குக் கொடுக்கவேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்கள்.

அதனைக் கேட்டு சமீபத்திலிருக்கும் சக்ரவர்த்தியான வர், "ரத்னத்திற்கும் காசமணிக்கும் எவ்வளவு பேதமோ, அவ்வளவு தாரதம்யம் பகவத் கதைக்கும் அமிருதத்திற்கு முள்ளது" என்று யோசித்து, தேவர்களை நோக்கிச் சிரித் தார். சுகரும், 'தேவர்கள் பகவத் பக்தியில்லாதவர்கள்' என்று நினைத்து, கதாமிருதத்தை அவர்களுக்குக் கொடுக்க சம்மதிக்கவில்லை. ஆகையால் பாகவதக் கதையானது தேவர்களுக்கும் அரிதாயிற்று. பின்பு பரீக்ஷித்து மஹா ராஜனுக்கு ஸ்ரீமத் பாகவதக் கதையால் மோக்ஷம் கிடைத்த தைப் பார்த்து, பிரம்மதேவர் ஆச்சரியமடைந்து, ஸத்ய லோகத்தில் தராசைக் கட்டி மோக்ஷ ஸாதனங்கள் எல்லா வற்றையும் நிறுத்தார். அப்பொழுது ஸ்ரீமத் பாகவதமே பாரமுள்ளதாக இருந்தது; மற்றவை இலகுவாயிருந்தன. அதனைக் கண்டு ஸகல மஹரிஷிகளும் மிகவும் ஆச்சரியப் பட்டு ஸ்ரீமத் பாகவதத்தைப் பகவானுடைய ஸ்வரூபமாக நினைத்தார்கள். அதனைப் படிப்பதாலும் கேட்பதாலும் உடனே மோக்ஷங் கிடைக்கும். மேலும், இந்தக் கிரந்தத்தை ஏழு தினங்களில் முழுமையும் விதிப்படி கேட்டால் சகல பலன்களும் ஸித்திக்கின்றன. இதனை ஸனகர் முதலான யோகிகள் நாரதருக்கு முன்காலத்தில் உபதேசித்தார்கள். தேவரிஷியாகிய நாரதரும் பிரம்மத்தை வர்ணிக்கும் இந்தக் கிரந்தத்தைக் கேட்டார். ஏழு நாட்களில் இதைக் கேட்க வேண்டிய முறையும் நாரதருக்கு அவர்களால் உபதேசிக்கப் பட்டது" என்று சொன்னார்.

இதைக் கேட்ட சௌனகர் ஸூதரை நோக்கி, "ஏழு நாட்களில் ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்கும் முறையைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்ற விருப்பம் நாரதருக்கு உண்டான காரணம் என்ன? அவர் பரப்ரம்மத்தின் ஸ்வரூபத்தை நன்குயறிந்தவரல்லவா? மேலும், ஸனகர் முதலிய பிரம்ம புத்திரர்களோடு நாரதருக்கு ஸம்வாதம்

எவ்விடத்தில் நேர்ந்தது? இவற்றிற்குப் பிரதியுத்தரம் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

அதனைக் கேட்டு ஸூதர் பின்வருமாறு விடைசொல்ல லானார். "ஹே சௌனகரே! சுகர் என்னை அந்தரங்க சிஷ்யனாக நினைத்து எனக்கு எதனை உபதேசித்தாரோ அதனை உமக்குச் சொல்லுகிறேன். முன் ஒரு காலத்தில் விசாலா நகரத்தில் நான்கு மஹரிஷிகள் ஸாதுஸங்கம் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் சேர்ந்தார்கள். அப்பொழுது அவ்விடத்தில் தெய்வச்செயலால் தேவரிஷி யாகிய நாரதரும் வந்தார். அவர்கள் நாரதரைக் கண்டு, 'ஓ! பிரம்மபுத்திரரே! நீர் ஒரு விஷயத்திலும் ஆசையில்லாதவர்; அப்படியிருந்தும் மிக்க வேகமாக எவ்விடம் செல்லுகிறீர்? உம்முடைய முகம் வாடினதாகக் காணப்படுகிறது; அதற்குக் காரணம் என்ன? ஜனங்கள் பொருள் செலவழிந்த காலத்தில் எப்படி வருத்தப்படுவார்களோ அப்படி சூனிய சித்தராக இருக்கிறீர்; நீர் இப்படியிருப்பது உசிதமல்ல. ஆதலால் அதன் காரணத்தைச் சொல்லவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்கள்.

அதைக் கேட்டு நாரதர் விடை சொன்னதாவது:— "நான் பூமியையே எல்லாவற்றிலும் மேலானதென்று நினைத்துப் புஷ்கரம், பிரயாகை, காசி, கோதாவரி, ஹரி க்ஷேத்திரம், குருக்ஷேத்திரம், ஸ்ரீரங்கம், இராமேசுவரம் முதலிய தீர்த்தங்கள் சென்று எங்கும் அலைந்தேன். அப்படியும் மனதுக்கு ஸந்தோஷம் ஏற்படவில்லை. இந்தப் பூமி முழுவதையும் கலி அதர்மத்துடன் வியாபித்துக்கொண்டான். அதனால் ஸத்தியம், தபஸ், சௌசம், தயை, கொடுப்பது ஆகிய இவை ஓரிடத்திலுமிருப்பதாகக் காணப்படவில்லை. எல்லா ஜனங்களும் தங்கள் தங்கள் வயிறு நிரம்பப் புசிப்பதில் மாத்திரம் ஆசையுள்ளவர்களாகவும், கபடமாகப் பேசுந் தன்மையுள்ளவர்களாகவும், மந்தபுத்தி யுள்ளவர்களாகவும், பாக்கியமற்றவர்களாகவும், பலவகை யான உபத்ரவமுள்ளவர்களாகவும், பாஷண்டர்களிடத்தில் (வேதவிரோதிகள்) பிரீதியுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள்.

ஒவ்வொரு வீடுகளிலும் ஸ்திரீகளே பிரபுவாயிருந்து அதிகாரம் செய்கிறார்கள்; மைத்துனனே புத்தி சொல்லுகிறான்; எல்லோரும் பெண்களை விலைக்கு விற்கிறார்கள்; தம்பதிகள் ஒருவர்க்கொருவர் கலகஞ் செய்துகொள்ளுகிறார்கள். ஆசிரமங்கள், புண்யதீர்த்தங்கள், நதிகள், தேவாலயங்கள் ஆகிய இவைகள் துஷ்டர்களால் பெரும்பாலும் கெடுக்கப்பட்டன; யோகி, ஸித்தன், ஞானி, நல்ல கர்மாவைச் செய்கிறவன் ஆகிய இவர்கள் ஒருவரும் உலகத்தில் காணப்படவில்லை; நல்ல காரியங்கள் யாவும் கலியாகிய அக்னியால் எரிக்கப்பட்டுச் சாம்பலாயின; ஒவ்வொரு தேசங்களிலும் ஜனங்கள் அன்னவிக்கிரயஞ் செய்கிறார்கள்; பிராம்மணர்கள் வேதத்தை விற்கிறார்கள் ; ஸ்திரீகள் பெரும்பாலும் வியபிசாரம் செய்கிறார்கள். இம்மாதிரியான கலியின் விளையாட்டை எங்கும் பார்த்துக்கொண்டு நான் யமுனையின் கரைக்கு வந்தேன்; அதுதான் ஸ்ரீ கிருஷ்ண பகவான் விளையாடின இடம்; அவ்விடத்தில் ஒரு அற்புதத்தைக் கண்டேன்; அதாவது யௌவன வயதுள்ள ஒரு பெண் மனவருத்தத்துடன் அவ்விடம் இருந்தாள்; அவளுடைய பக்கத்தில் இரண்டு வயதுசென்றவர்கள் பிரக்ஞையில்லாதவர்களாய்ப் பெருமூச்சு விட்டுக்கொண்டு படுத்திருக்கக் கண்டேன்; அந்தப் பெண் அவர்களுக்குப் பணிவிடை செய்தும், அழுதுகொண்டும், தன்னைக் காப்பாற்றுகிறவர் யாரென்று பத்துத் திக்குகளையும் பார்த்துக்கொண்டுமிருந்தாள்; மேலும் அவளுக்கு அநேக ஸ்திரீகள் விசிறுவது முதலிய உபசாரங்களை அடிக்கடி செய்துகொண்டிருந்தார்கள். வெகு தூரத்திலேயே அவர்களைப் பார்த்து, நான், மிகுந்த ஆச்சர்யமடைந்து, உண்மையைத் தெரிந்து கொள்ள விரும்பி அவர்களுடைய சமீபம் சென்றேன். அப்பொழுது அந்தப் பெண் என்னை நோக்கி, "ஓ! ஸாதுவே! க்ஷணகாலம் தாங்கள் இவ்விடமிருக்கவேண்டும்; என்னுடைய கவலையையுந் தீர்க்கவேண்டும்; தங்களைப் போலொத்த ஸாதுக்களைத் தரிசித்தால் ஸகல பாபங்களும் நிவர்த்தியாகுமென்பதில் சந்தேகமில்லை; தங்களுடைய

தர்சனம் வரும் க்ஷேமத்தைக் காட்டுகிறது; தங்களுடன் ஸம்வாதம் செய்வதால் பலவகையிலும் என் கவலை தீர்ந்து விடும்" என்று தெரிவித்துக்கொண்டாள்.

அதைக் கேட்டு நான் அந்தப் பெண்ணை நோக்கி, "நீ யார்? இவ்விருவர்களும் யார்? தாமரை மலர்போன்ற கண்களுள்ள இந்தப் பெண்கள் எவர்கள்? ஓ தேவி! நீ கவலைப் படும் காரணமென்ன? இவைகளை விஸ்தாரமாகச் சொல்" என்று கேட்டேன்.

அதனைக் கேட்டு அந்தப் பெண் சொன்னதாவது:— மகனக்குப் பக்தியென்று பெயர்; இவ்விருவரும் என்னுடைய புத்திரர்கள்; ஒருவனுக்கு ஞானமென்று பெயர்; எற்றவனுக்கு வைராக்கியமென்று பெயர்; இவ்விருவர்ளும் காலமகிமையால் கிழத்தனத்தை யடைந்தார்கள். இந்தப் பெண்கள் கங்கை முதலிய நதிகள்; என்னைச் சேவிப்பதற்காக வந்தவர்கள். மேலும் நான் தங்களிடத்தில் என் விஷயத்தை விஸ்தாரமாகத் தெரிவிக்கவேண்டியவளாக இருக்கிறேன்; அதாவது நான் திராவிட (தமிழ்) தேசத்தில் பிறந்தவள்; கர்ணட தேசத்திலும் மஹாராஷ்டிர தேசத்தின் சில பாகங்களிலேயும் வளர்ந்தவள். கூர்ஜர தேசத்தில் கிழத்தனத்தை யடைந்தேன். மிக்க பாபியான கலியின் சம்பந்தத்தால் பாஷண்டர்கள் என்னுடைய அவயவங்களைத் துண்டித்துவிட்டார்கள். ஆகையால் தேக பலம் குறைந்து, புத்திரர்களுடன் மிகுந்த சிரமத்தை யடைந்து இந்தப் பிருந்தாவனம் சேர்ந்தேன். இவ்விடம் வந்தவுடன் அழகான சரீரமுள்ள யௌவனமுடையவளாயினேன். இதோ படுத்துக்கொண்டிருக்கும் இவ்விரு குழந்தைகளும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்; அவர்கள் கிழத்தனமுள்ளவர்களாயிருப்பதால் அவர்களைப் பார்த்து, நானும் துக்கிக்கிறேன்; உலகத்தில் தாய் வயதுசென்றவளாயும், புத்திரர்கள் யௌவனமுள்ளவர்களாயு மிருப்பது வழக்கம். இப்பொழுது புத்திரர்கள் வயது சென்றவர்களாயும், அவர்களுடைய தாயாகிய நான் யுவதியாகவும் இருக்கக் காரணம் யாது? நாங்கள் மூவரும் எப்பொழுதும் சேர்ந்தே சஞ்ச

சித்துக்கொண்டிருக்கிறேம்; தாங்கள் யோகிகளுக்குள் சிறந்தவராகையால் இவ்விஷயத்தை அறிந்து சொல்ல வல்லமையுள்ளவராவீர்; ஆதலால் என்னிடம் கிருபை வைத்து என்னுடைய சந்தேகத்தைத் தீர்க்கவேண்டும்" என்று கேட்டாள்.

அதைக் கேட்டு நான் அந்தப் பெண்ணை நோக்கி, "ஓ பால்யப் பெண்ணே! நான் எல்லா விஷயத்தையும் ஞானக் கண்ணுல் அறிந்து சொல்லுகிறேன்; நீ கவலைப்படவேண்டாம்; ஸ்ரீ நாராயணன் உனக்கு க்ஷேமத்தைச் செய்வார்" என்று சமாதானஞ் செய்து ஒரு க்ஷணநேரத்தில் அவ்விஷயங்களை நன்ருகத் தெரிந்துகொண்டு, பின்னும் அந்தப் பெண்ணைப் பார்த்துப் பின்வருமாறு சொன்னேன்: 'ஓ பெண்ணே! இந்தக் கலியுகம் மிகவும் கோரமானது; அதனுல் நல்லொழுக்கம், யோக மார்க்கம், தவம் ஆகிய இவைகள் கெடுக்கப்பட்டன; எல்லா ஜனங்களும் அசுரர்கள்போல் கெட்ட காரியத்தையே செய்கிருர்கள்; ஸாதுக்கள் துக்கிக்கிருர்கள்; அஸாதுக்கள் சந்தோஷிக்கிருர்கள். இந்தக் காலத்தில் எவன் தைரியமுள்ளவனுகி நல்ல கர்மாக்களை அனுஷ்டிக்கிருனே அவனே தீரனென்று சொல்லப்படுகிருன். இந்தப் பூமி ஒவ்வொரு வர்ஷங்களிலும் முறையே ஸ்பர்சிக்கத்தகாதவளும், பார்க்கத்தகாதவளும், ஆதிசேஷனுக்குச் சுமையானவளுமாக ஆகிவிட்டாள். நல்ல கர்மங்கள் ஓரிடத்திலும் காணப்படவேயில்லை; உன்னையும் உன்னுடைய புத்திரர்களையும் இக்காலத்தில் ஒருவரும் பார்க்கிறதில்லை; ஜனங்கள் விஷயங்களில் ஆசைகொண்டு, காரியம் அகாரியம் என்ற பகுத்தறிவில்லாதவர்களாய் உன்னை ஆதரிக்காமல் உபேக்ஷித்தபடியால் நீ இளைத்திருக்கிருய். இந்தப் பிருந்தாவனத்தின் மகிமையால் நீ யுவதியானுய். பக்தியானது இவ்விடத்தில் நர்த்தனஞ்செய்துகொண்டிருப்பதால் இது மேலான க்ஷேத்திரமேயாம். இவ்விருவர்களையும் அங்கீகரிப்பவர்கள் இவ்விடத்தில் இல்லாததினுல் இவர்களுக்குக் கிழத்தனம் போகவில்லை" என்று மறுமொழி சொன்னேன். அப்பொழுது அந்தப்

பெண், "மிக்க பாபியான கலியைப் பரீக்ஷித்து மகாராஜன் ஏன் உலகத்தில் வைத்திருந்தார்? கலியுகம் வந்தவுடன் முன்னிருந்த சகல வஸ்துவின் ஸாரங்களும் எங்கே போயின? மிகுந்த தயையுள்ள ஸ்ரீ மஹாவிஷ்ணுவும் ஏன் பார்த்திருந்தார்?" என்று கேட்டாள். அதைக் கேட்டு நான் பின்வருமாறு சொன்னேன்: "ஸ்ரீ கிருஷ்ண பகவான் பூமியிலிருந்து வைகுண்டஞ் சென்ற தினத்திலேயே உலகத்தில் கலி வந்துவிட்டான். அப்பொழுது அரசனாயிருந்த பரீக்ஷித்து திக்விஜயஞ் செய்துவருங் காலத்தில் வழியில் கலியைக் கண்டார். அவனும் அவரைச் சரணமடைந்தான்.

அவர், 'தவம், யோகம், ஸமாதி ஆகிய இவைகளால் அடையக்கூடாத உத்தமமான பிரயோசனம் பகவானுடைய நாமங்களைப் பஜனம் பண்ணுவதனால் இக்கலியில் எல்லோருக்கும் கிடைக்கிறது' என்று நினைத்து, கலியுகத்தில் பிறக்கும் மனிதர்களுடைய சௌக்கியத்தின்பொருட்டே கலியைக் கொல்லவில்லை. கெட்ட காரியங்களைச் செய்வதனால் வஸ்துக்களுடைய ஸாரம் போய்விட்டது. பிராம்மணர்கள் ஒவ்வொரு வீட்டிலும் அரிசிக்கு ஆசைப்பட்டு, பாகவதக் கதையைச் சொல்ல ஆரம்பித்ததால் கதையின் ஸாரம் போய்விட்டது. மேலும், பிராம்மணர்கள் மிக்க கோரமான பல காரியங்களையும் செய்து நாஸ்திகர்களாய் (பரலோகத்தில் சிரத்தையில்லாதவர்கள்) ஒவ்வொரு தீர்த்தக் கரைகளிலும் வசிப்பதனால் தீர்த்தத்தின் ஸாரம் போய்விட்டது. காமம், கோபம், லோபம், விஷயங்களில் ஆசை ஆகிய இவைகளால் கலங்கிய மனமுள்ளவர்கள் தவஞ் செய்வதால் தவத்தின் ஸாரம் போய்விட்டது. மனிதர்கள் மனதை அடக்காமல் உலோபம், இடம்பம் இவைகளையடைந்தும், பாஷண்ட மதத்தை ஆசிரயித்தும், உண்மையான சாஸ்திரத்தைப் படிக்காமலுமிருப்பதால் தியான யோகத்தின் ஸாரம் போய்விட்டது. வித்வான்களும் மோக்ஷத்தை யடைய முயற்சியாமல் எருமைகள்போல் ஸ்திரீகளுடன் ரமித்துப் புத்திரர்களை உண்டுபண்ணுவதிலேயே

சாமர்த்தியத்தை யடைந்திருக்கிறார்கள். பெரியோர்களு டைய சம்பிரதாயப்படியுள்ள விஷ்ணுபக்தி ஓரிடத்திலு மில்லை. இம்மாதிரி ஒவ்வோரிடங்களிலும் வஸ்துக்களுடைய சாரம்போய்விட்டது. ஆனால் இது யுகத்தின் தர்மம். எவர்மீது குற்றஞ் சொல்லக்கூடும்? அதனால்தான் சமீபத்திலிருக்கும் புண்டரீகாக்ஷன் (தாமரைக்கண்ணன்) இதைச் சகித்துக் கொண்டிருக்கிறார்" என்று சொன்னேன். இதனைக் கேட்டு அந்தப் பெண்ணானவள், "ஓ தேவரிஷியே! நீர் மிகவும் மேலானவர்; என்னுடைய அதிர்ஷ்டவசத்தால் இவ்விடம் வந்தீர்; ஸாதுக்களுடைய தரிசனம் ஸகல ஸித்திகளையுங் கொடுக்கும்; தங்களுடைய உபதேசத்தால் பிரகலாதனென் பவர் மாயையைக் கடந்து ஆத்ம சுரூபத்தை அடைந்தவ ராய் விளங்குகிறார். மேலும், தங்களுடைய கிருபையால் துருவர் என்பவர் சாசுவதமாகிய (துருவ) பதத்தை அடைந் தார்; ஆனதால் ஸகல க்ஷேமத்தையும் கொடுப்பவரும், பிரம்மதேவரின் புத்திரருமாகிய தங்களை நமஸ்கரிக்கிறேன். என்னைக் காப்பாற்றவேண்டும்" என்று வேண்டிக்கொண் டாள். அதனைக் கேட்டு நான் பின்வருமாறு பதில் சொன் னேன்:—"ஓ! சிறு பெண்ணே! என் கவலைப்படுகிறாய்? ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய தாமரை மலர்போன்ற பாதங் களை இடைவிடாமல் தியானஞ்செய்; துக்கம் ஒருபோதும் நேரிடாது; அவர் துச்சாஸனன் முதலியவர்களால் செய்யப் பட்ட உபத்திரவத்திலிருந்து திரௌபதியைக் காப்பாற்றி னார். கோபஸ்திரீகளை ஸம்ரக்ஷித்தார். அவர் இப்பொழுது தேசாந்தரம் போகவில்லை. உன்னிடத்தில் தமது பிராண னைக் காட்டிலும் விசேஷமான பிரியம் வைத்திருக்கிறார். பக்தியாகிய உன்னால் அழைக்கப்பட்டு அவர் நீசர்களுடைய வீடுகளுக்கும் வருகிறார். கிருதயுகம், திரேதாயுகம், துவாபர யுகம் என்னும் இம்மூன்று யுகங்களிலும் முறையே ஸத் யம், ஞானம், வைராக்கியம் ஆகிய இவைகள் மோக்ஷத் துக்கு ஸாதனங்களாயிருந்தன. இக்கலியுகத்தில் பக்தி மாத்திரத்தாலேயே மோக்ஷம் கிடைக்கிறது. ஆனதுபற்றியே ஞானசுரூபியாகிய பகவான் உனக்குச் சரீரத்தை யுண்டு

பண்ணினர். பின்பு நீ ஒருகால் இரு கைகளையும் கூப்பிக் கொண்டு 'நான் என்ன செய்யவேண்டும்?' என்று பகவானைக் கேட்டாய். அப்பொழுது அவர், 'என் பக்தர்களைப் போஷிக்கவேண்டும்' என்று ஆக்ஞாபித்தார். நீயும் அதனை ஒப்புக்கொண்டாய்; அதனால் பகவான் சந்தோஷித்து முக்தியை உனக்கு ஊழியப் பெண்ணுயிருக்கும்படி செய்தார். பின்னும் ஞானம், வைராக்கியம் என்னும் இவர்களையும் உன்னிடம் ஒப்புவித்தார். பின்பு நீ வைகுண்டத்தில் உன்னுடைய நிஜரூபத்துடன் இவர்களைப் போஷித்துவந்தாய். பூமியில் பக்தி விருத்தியாகவேண்டியதற்காகச் சாயாமயமான ரூபத்துடனும், முக்தி, ஞானம், வைராக்கியம் ஆகிய இவர்களுடனும் பூமிக்கு வந்தாய். கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம் ஆகிய இம்மூன்று யுகங்களிலும் மிகுந்த ஆனந்தத்துடனிருந்தாய். கலியில் முக்தியென்னும் பெண் பாஷண்டர்களாகிய வியாதியால் மிகவும் குறைந்துவிட்டாள். அவள் உன்னுடைய அனுமதியினால் வைகுண்டத்திற்கு மறுபடியுஞ் சென்றாள். ஆனால் உன்னால் நினைக்கப்படும்போதெல்லாம் வைகுண்டத்திலிருந்து இவ்விடம் வருகிறதும் போகிறதுமாய் இருக்கிறாள். ஞானம், வைராக்கியம் இவ்விருவர்களும் புத்திரஸ்நேகங்கொண்டு உன்னால் காப்பாற்றப்பட்டும், இக்கலியில் ஜனங்கள் அவர்களை உபேக்ஷித்துவிட்டபடியால் வயது சென்றவர்களாய்விட்டார்கள். ஆனாலும் உன்னுடைய கவலையை நான் போக்கடிக்கிறேன்; இந்தக் கலியுகத்துக்குச் சமமான யுகம் வேறில்லை; இந்த யுகத்திலும் ஒவ்வொரு வீடுகளிலும் ஒவ்வொரு ஜனங்களிடத்திலும் உன்னை ஸ்திரமாயிருக்கும்படி செய்கிறேன். அப்படிச் செய்யாவிடில் நான் விஷ்ணுபக்தனல்ல. கலியில் மிக்க பாபிகளான ஜனங்களும் பகவத் பக்தியைப் பெற்று வைகுண்டத்தையடைகிறார்கள். யமன், பிசாசங்கள், ராக்ஷதர்கள், அசுரர்கள் ஆகிய இவர்களால் பக்தியுள்ளவர்கள் உபத்திரவிக்கப்படமாட்டார்கள். பக்தியால் பகவான் வசப்படுவதுபோல, தவம், வேதம், ஞானம், நல்ல கர்மா இவைகளால் சுவா

தீனப்படுகிறதில்லை. அந்த விஷயத்தில் கோபிகா ஸ்திரீ களே உதாரணம். அனேக ஜன்மங்களில் புண்ணியம் செய் தால்தான் பக்தி பண்ணவேண்டுமென்ற விருப்பம் உண்டா கும். கலியில் பக்தியே மேலானது. பக்தியை நிந்தித்ததால் துர்வாஸஸ் துக்கத்தை யடைந்தார். அநேக விருதங்களா லும், புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் பண்ணுவதாலும், யோகங்களாலும், யாகங்களாலும், ஞானத்தாலும் என்ன பிரயோசனம்? பக்தியொன்றே முக்தியைக் கொடுக்கக் கூடியது" என்று சொன்னேன். இதனைக் கேட்டுப் பக்தி யாகிற அந்தப் பெண் மிக்க சந்தோஷத்தால் பெருத்து என்னை நோக்கி, "ஓ! நாரதரே! நீர் மிகவும் மேலானவர்; உம்மிடத்தில் எனக்கு மிகுந்த பிரீதி உண்டாயிருக்கிறது; உம்மை ஒருபொழுதும் விடமாட்டேன்; உம்முடைய மனத்தில் எப்பொழுதும் வசிப்பேன்; தங்களுடைய அனுக்கிரகத்தால் என் கவலை தீர்ந்துவிட்டது; ஆனாலும், என்னுடைய இந்தப் புத்திரர்களுக்கு மூர்ச்சை தெளிய வில்லை; ஆதலால் இவர்களை எழுப்பிவிடும்" என்று வேண்டிக் கொண்டாள். அப்பொழுது எனக்கு அவளிடத்தில் தயை உண்டாயிற்று. பின்பு நான் அவ்விருவர்களுடைய காதி லும் உபநிஷத் வாக்கியங்களையும், கீதா வாக்கியங்களையும் சொல்லி, 'ஓ! ஞானமே! விழித்துக்கொள்; ஓ! வைராக் கியமே, எழுந்திரு' என்று இரைந்து சொன்னேன். அப் பொழுது அவர்கள் கொட்டாவி விட்டுக்கொண்டு எழுந் திருந்தார்கள். ஆனாலும் பசி, தாகம் முதலியவற்றால் வருத்தப்பட்டு மறுபடியும் படுத்துத் தூங்க யத்தனித்தார் கள். அது கண்டு நான், 'இனி என்ன செய்கிறது?' என்று பகவானைத் தியானம் செய்தேன். அப்பொழுது, 'ஓ! மக ரிஷியே! ஏன் விசாரப்படுகிறீர்? புண்ணிய கர்மாக்களை அனுஷ்டிப்பீரானால் இவர்களுடைய தூக்கமும் கிழத்தன மும் நீங்கும். அந்தக் கர்மங்களைச் சில ஸாதுக்கள் உமக்கு உபதேசிப்பார்கள். அதனால், பக்தியானது உலகம் முழுவ தும் பரவிவிடும்" என்று ஆகாசத்திலிருந்து ஒரு தொனி உண்டாயிற்று. அதனை நானும் மற்றவர்களும் கேட்டு ஆச்

சரியமடைந்தோம். பின்பு ஆகாசவாணியால் சொல்லப்பட்டபடி எப்பொழுது, எந்த விடத்தில், எவர்கள், எந்தக் கர்மங்களை நமக்கு உபதேசிப்பார்களோவென்று நான் யோசித்து ஞானம், வைராக்கியம் இவ்விருவர்களையும் அவ்விடத்திலேயே நிறுத்திவிட்டு, ஒவ்வொரு புண்ய தீர்த்தங்களுக்குஞ் சென்று இவ்விஷயத்தைப்பற்றி ஒவ்வொரு மஹரிஷியையும் கேட்டுக்கொண்டே சஞ்சரித்தேன். ஒருவரும் 'இந்தக் கர்மாவை அநுஷ்டிக்கவேண்டும்' என்று நிச்சயித்துச் சொல்லவில்லை; சிலர் இது செய்யமுடியாத காரியமென்றும், பின்னும் சிலர் இதனைத் தெரிந்துகொள்வதே சிரமமென்றும் சொன்னார்கள். சிலர் பேசாமலேயிருந்துவிட்டார்கள்; சிலர் இதனைக் கேட்டு இருந்த இடத்தைவிட்டு ஓடிப்போனார்கள்; மேலும், "எல்லா வேதங்களாலும், கீதா வாக்கியங்களாலும் விழித்துக்கொள்ளாத ஞான வைராக்கியங்கள் வேறு எந்த உபாயத்தால் எழுந்திருக்கப் போகிறார்கள்? நாரத மஹரிஷியாலும் அறியப்படாத விஷயம் மற்ற மஹரிஷிகளால் சொல்லமுடியுமா என்று ஜனங்கள் ரகசியமாகப் பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள். அப்பொழுது எனக்கு யாதொரு நிச்சயமுமுண்டாகவில்லை. ஆனாலும் பதரிகா வனஞ் சென்று தவஞ்செய்யத் தொடங்கினேன்; அவ்விடத்தில் மிக்க தேஜஸ்விகளான ஸனகர் முதலிய யோகிகளைக் கண்டேன்; கண்டவுடன் விசேஷ ஆனந்தமடைந்து அவர்களை நோக்கி, "ஓ! யோகி சிரேஷ்டர்களே! நான் செய்த பாக்கிய விசேஷத்தால் தங்களைக் கண்டேன். நீங்கள் ஐந்து வயதுள்ளவர்களானாலும் முன்னோர்களுக்கும் முந்தியவர்கள். எப்பொழுதும் வைகுண்டத்திலேயே இருப்பவர்கள்; ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் லீலைகளைக் கானம் செய்பவர்கள்; எப்பொழுதும் பகவானையே சரணமடைந்தவர்களாகையால் ஜரை (கிழத்தனம்) உங்களை உபத்திரவிக்கிறதில்லை. ஆகையால் என்னை அநுக்ரகிக்க வேண்டும்; ஆகாசவாணியால் சொல்லப்பட்ட கர்மங்கள் எவை? பக்தி, ஞானம், வைராக்கியம் ஆகிய இவைகள் எல்லா வர்ணாசிரமங்களிலும் ஸ்திரமாய் வஸிக்கும்படி

என்ன உபாயம் செய்யலாம்? அதனைச் சொல்லவேண்டும்" என்று கேட்டேன். அப்பொழுது அவர்கள் என்னைப் பார்த்து, "ஓ! தேவரிஷியே! இந்த விஷயத்தில் இலகுவான உபாயமொன்றிருக்கிறது ; நீர் வைராக்கியத்தை அடைந்தவர்களுக்குள் மேலானவர்; பகவத் பக்தர்களுக்குள் சிறந்தவர் ; ஆகையால் பக்தியை உலகத்தில் ஸ்தாபிப்பதற்கு நீர் தகுதியானவரே. அநேக மஹரிஷிகள் அநேக மார்க்கங்களைக் காட்டியிருக்கிறார்கள் ; ஆனாலும் அவைகள் பெரும்பாலும் சுவர்க்கத்தையே கொடுக்கக்கூடியவைகளாயிருக்கின்றன. மேலும், சிரமப்பட்டுச் செய்யக்கூடியவைகளாயுமிருக்கின்றன; மோக்ஷத்தைக் கொடுக்கும் மார்க்கம் மிகவும் இரகசியமானது ; அதனை உபதேசிப்பவர்கள் கிடைப்பதரிது. ஆகாசவாணியால் சொல்லப்பட்ட கர்மம் யாதெனில் ஞான யக்ஞமேயாம். சிலர் திரவிய யக்ஞத்தை (யாகம்) அனுஷ்டிக்கிறார்கள். பின்னும் சிலர் தபோ யக்ஞத்தையும், மற்றும் சிலர் யோக யக்ஞத்தையும், இன்னும் சிலர் ஸ்வாத்யாய யக்ஞத்தையும் (வேதங்களை அத்யயனம் செய்வது) அனுஷ்டிக்கிறார்கள். இவைகளுள் ஞான யக்ஞமே மேலானது. அது சுகரால் பரீக்ஷித்து மகாராஜனுக்கு உபதேசிக்கப்பட்ட பாகவதத்தைக் கேட்பதேயாகும். அந்தப் பாகவத சாஸ்திரத்தைக் கேட்பதால் பக்தி, ஞானம், வைராக்கியம் இவைகளுக்கு மிகுந்த பலமுண்டாகும்; ஞான வைராக்கியங்களுக்கு நேர்ந்த கஷ்டமும் விலகும். மேலும், சிங்கத்தின் சப்தத்தைக் கேட்ட செந்நாய்கள் போலப் பாகவதக் கதையைக் கேட்டமாத்திரத்தில் கலியின் தோஷங்கள் யாவும் ஓடுகின்றன. பக்தியானது ஞானம், வைராக்கியம் இவைகளுடன் ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு ஜனங்களிடத்திலும் நன்றாய்ப் பிரகாசிக்கும்" என்று உபதேசித்தார்கள்.

அப்பொழுது நான் அவர்களைப் பார்த்து, 'ஓ பிரம்மதேவரின் குமாரர்களே! வேதாந்த வாக்கியங்களாலும், கீதா பாடத்தாலும் விழித்துக்கொள்ளாத அவர்கள் பாகவத பாடத்தால் எழுந்திருப்பார்களா?' என்று கேட்டேன்

அதற்கு அவர்கள் பின் வருமாறு விடை சொன்னார்கள். "ஸ்ரீமத் பாகவதக் கதையானது உபநிஷத்துக்களின் ஸாரத்தால் செய்யப்பட்டதாகையால் இது மிகவும் மேலானது. பாலில் நெய் இருந்தாலும் அது எப்படித் தனியாகத் தெரியவில்லையோ அதுபோல வேதத்தில் ஸாரமானது எங்கு மிருந்தாலும் தனியாக நன்ருய்ப் பிரகாசிக்கவில்லை. ஆனாலும், அந்தப் பாலைக் காய்ச்சிக் கடைந்து, அதிலிருந்து தனியாக நெய் எடுக்கப்பட்டால் அது தேவர்களுக்கு மிகவும் திருப்தியை உண்டுபண்ணுகிறது. தவிரவும், கரும்பில் அடிமுதல் நுனிவரையில் சர்க்கரை இருந்தாலும் அதனைப் பிரித்தெடுத்த பிறகு தான் புசிக்கக்கூடியதாகிறது. அதுபோலவே, வேதத்திலுள்ள சாரங்கள் எல்லாவற்றையும் எடுத்து ஸ்ரீமத் பாகவதம் செய்யப்பட்டது. இது பக்தி, ஞானம், வைராக்கியம் இவைகளை உலகத்தில் ஸ்தாபிப்பதற்காகவே வெளியிடப்பட்டது. முன்னொருகால் ஸ்ரீ வேதவியாஸ மஹரிஷி ஸ்ரீமத் மஹா பாரதத்தைச் செய்தும், வேதங்களை அத்யயனம் செய்தும், உபநிஷத்துக்களின் உண்மையான அர்த்தத்தைத் தெரிந்துகொண்டும், பகவத் கீதையைச் செய்தும் அஞ்ஞானம் விலகாமல் தாபமடைந்து ஸரஸ்வதி நதிக்கரையில் கவலைப்பட்டுக்கொண்டிருக்கும்பொழுது உம்மால் நான்கு சுலோகங்கள் உபதேசிக்கப்பட்டன. அவைகளைக் கேட்டு அவர் உடனே கவலை தீர்ந்தவராக, அவைகளைக்கொண்டு பாகவதத்தைச் செய்தாரல்லவா? அப்படிக்கிருக்க, பாகவதத்தைக் கேட்பதால் தூக்கம் விலகுமாவென்று நீரே கேட்பது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது" என்று சொன்னார்கள். பின்பு நான் அவர்களைக் கொண்டாடி, அவர்களை நோக்கி, "இந்த ஞான யக்ஞத்தை எவ்விடத்தில் செய்யலாம்? எவ்வளவு நாட்களில் பாகவதக் கதை கேட்கப்படவேண்டும்? அதன் முறை எப்படி? பாகவத சாஸ்திரத்தின் மகிமையை ஸகல வேதங்களு மறிந்த தாங்களே சொல்லவேண்டும்" என்று கேட்டுக்கொண்டேன்.

அப்பொழுது அவர்கள், 'ஓ! நாரதரே! கங்கையின் சமீபத்தில் ஆனந்தவனமென்பது ஒன்று உண்டு; அது மிகவும் ஏகாந்தமான இடம்; ஜல சௌக்கியமுள்ளது; அனேக மஹரிஷிகள் அவ்விடத்தில் வசிக்கிறார்கள்; அவ்விடத்தில் வசிக்கும் பறவை முதலியவைகளுக்கும் இயற்கையான விரோதம் இல்லை; அவ்விடத்தில் பாகவதக் கதையைச் சொல்வதாகிற ஞான யக்ஞத்தை நீர் நடத்தவேண்டும்; அவ்விடத்திற்குப் பக்தியானவள் தன் புத்திரர்களுடன் வருவாள். அந்தக் கதையைக் கேட்டமாத்திரத்தில் அவர்கள் யௌவன வயதை அடைவார்கள்" என்று சொல்லி என்னை அழைத்துக்கொண்டு பாகவதக் கதையைக் கேட்ப தற்காக ஆனந்தவனம் சென்றார்கள். அப்பொழுது இதனைக் கேட்டுப் பூலோகம், தேவலோகம், பிரம்மலோகம் ஆகிய இவ்விடங்களிலிருந்து பகவத் பக்தர்கள் எல்லோரும் ஆனந்தவனம் சென்றார்கள். அன்றியும், பிருகு, வஸிஸ்டர், சியவனர், கௌதமர், மேதாதிதி, தேவலர், தேவராதர், பரசுராமர், விசுவாமித்திரர், சாகலர், மார்க்கண்டேயர், பிப்பலாதர் முதலிய மஹரிஷிகளும், வியாஸர், பராசரர் முதலிய யோகிகளும், சாயாசுகர், ஜாஜலி, ஜஹ்னு முதலியவர்களும் தங்கள் தங்களுடைய ஸ்திரீகள், புத்திரர்கள், சிஷ்யர்கள் முதலியவர்களுடன் கங்காதீரம் சென்றார்கள். மேலும் ஆறு சாஸ்திரங்களும், பதினேழு புராணங்களும், நான்கு வேதங்களும், கங்கை முதலிய நதிகளும், புஷ்கரம் முதலிய குளங்களும், க்ஷேத்திரங்களும், பத்துத் திக்குகளும், தண்டகை முதலிய வனங்களும், மேரு முதலிய மலைகளும் திவ்ய சரீரமுள்ளவைகளாய்க் கதையைக் கேட்பதற்காக அவ்விடம் வந்து கூடின. மேலும் தேவர்கள், கந்தவர்கள், கின்னரர்கள் ஆகிய இவர்களும் வந்தார்கள். எல்லோருக்கும் ஆசாரியர்களான ஸனகர் முதலியவர்களைப் பிருகு மஹரிஷி தாம் நேரில் அழைத்துவந்தார். அப்பொழுது அந்த ஞான யக்ஞத்தில் நான் தீக்ஷை செய்துகொண்டு அந்தக் குமாரர்களுக்கு ஆசனங் கொடுத்து நமஸ்காரம் செய்து அவர்களைப் பூஜித்தேன். அங்கே ஒரு பக்கத்தில் மஹரிஷிகளும், மற்றொரு பக்கத்தில் தேவ கணங்களும்,

இன்னொரு பக்கத்தில் வேதம், உபநிஷத் முதலியவைகளும், மற்றொரு பக்கத்தில் தீர்த்தங்களும், இன்னொரு பக்கத்தில் ஸ்திரீகளும் தங்களுக்குத் தகுந்த ஆசனங்களில் உட்கார்ந்தார்கள். 'ஜய' என்றும், 'நமஸ்காரம்' என்றும் சப்தங்கள் மிகுதியா யுண்டாயின. சங்க வாத்தியங்கள் முழங்கின. ஆகாசத்தில் தேவர்கள் விமானங்களிலிருந்து கற்பக விருக்ஷப் புஷ்பங்களின் மழையைப் பெய்தார்கள். இப்படி எல்லோரும் ஒரே மனமாய்ப் பாகவத மாகாத்மியத்தைக் கேட்க விரும்பியிருக்கும்பொழுது, என்னை உத்தேசித்துக் குமாரர்கள் பின்வருமாறு சொன்னார்கள்: 'ஸ்ரீமத் பாகவதக் கதையை ஜனங்கள் எப்பொழுதும் கேட்கவேண்டும். அதனைக் கேட்டமாத்திரத்தில் பகவான் மனதில் ஆவிர்ப்பவிக்கிறார். இது பதினெண்ணாயிரம் கிரந்தங்க ளடங்கியது; பன்னிரண்டு ஸ்கந்தங்கள் உள்ளது; பரீக்ஷித்து மஹாராஜனுக்கு சுகரால் உபதேசிக்கப்பட்டது. இதுவே மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடியது. மற்ற பலவகையான சாஸ்திரங்கள் புத்திக்கு மயக்கத்தை யுண்டுபண்ணுகின்றன. எந்த வீட்டில் பாகவதக் கதை படிக்கப்படுகிறதோ அதுவே புண்ணிய க்ஷேத்திரமாகும். ஆயிரம் அசுவமேத யாகங்கள், நூறு வாஜபேயங்கள் இவைகளைச் செய்தாலும், அதனாலுண்டாகும் புண்ணியமானது பாகவதக் கதையைப் படிப்பதனாலுண்டான ஸுகிருதத்தின் பதினாறிலொரு பாகத்திற்கும் சமமாகாது. ஒவ்வொரு நாளும் பாகவதத்தில் ஒரு சுலோகத்தையாவது, அதன் பாதியையாவது அவசியம் படிக்கவேண்டும். ஒவ்வொரு வேதங்களின் முதல் மந்திரங்கள், வேதமாதாவாகிய காயத்ரீ மஹாமந்திரம், புருஷஸூக்தம், வேதங்கள், பாகவதம், துவாதசாக்ஷரம், ஸூரியன், பிரயாகம், ஸம்வத்ஸர ரூபியாகிய காலம், பிராம்மணர்கள், அக்னிஹோத்ரம், காமதேனு, துவாதசி திதி, துளசி, வஸந்த ருது, புருஷோத்தமராகிய நாராயணர் ஆகிய இவர்களுக்குள் தாரதம்யமில்லை. எவன் ஒவ்வொரு நாளும் பாகவதத்தைப் படித்து, அதன் அர்த்தத்தைத் தெரிந்துகொள்ளுகிறானோ அவனுக்குக் கோடி ஜன்மங்களில் செய்யப்பட்ட பாபங்க-

ளும் நிவர்த்தியாகின்றன. தவிரவும், மரண காலத்தில் இந்தச் சுக சாஸ்திரத்தைக் கேட்பதால் வைகுண்டத்தை யடைவான். இந்தப் பாகவத புத்தகத்தை ஸ்வர்ண சிம்மாஸனத்தில் வைத்து விஷ்ணுபக்தர்களுக்குத் தானஞ் செய்கிறவன் ஸ்ரீ கிருஷ்ணனுடைய சாயுஜ்ய பதத்தை யடைகிறான். பிறந்தது முதல் ஒருபொழுதாவது பாகவதக் கதையைக் கேட்காதவன் சண்டாளனுக்கும் கழுதைக்கும் சமானனென்று சொல்லப்படுகிறான். தவிரவும், அவனைப் பக்தர்கள் உயிருள்ள பிணமென்றும், பூமிக்குச் சுமையாயிருப்பவனென்றும் சொல்லுகிறார்கள். இந்தக் கதையை இந்திரியங்களை ஜயித்து, மனதை அடக்கி வெகு நியமத்துடன் கேட்க வேண்டுமாதலால் அவ்வளவு நியமத்தை அனுஷ்டிப்பது இக்கலிகாலத்து ஜனங்களால் முடியாததாகுமென்றும், இவர்களுக்கு ஆயுள் மிகக் குறைந்ததென்றும் யோசித்து, சுகர் ஏழு நாளில் இதைக் கேட்கவேண்டுமென்று ஒரு விதி நியமித்திருக்கிறார். அந்த விதிப்படி ஏழு நாளில் பாகவதத்தைக்கேட்பதனால் சகல யாகங்கள் செய்த பலன்களும், சகல விரதங்களை அனுஷ்டித்த பலன்களும், சகல தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்த பலன்களும் உண்டாகும் என்று எனக்கு உபதேசித்தார்கள்" என்று ஸூதர் சௌனகர் முதலிய மஹரிஷிகளுக்குச் சொன்னார். இதைக் கேட்டுச் சௌனகர், பாகவத புராணம் மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடியதென்றும், மற்றவைகளைக்காட்டிலும் மேலானதென்றும் தாங்கள் சொல்லக் கேட்டு மிகவும் ஆச்சர்யத்தை யடைந்தோம். அவ்வளவு மேன்மை அந்தச் சாஸ்திரத்திற்குக் கிடைத்த காரணமென்ன? சொல்லவேண்டும்" என்றார். அதனைக் கேட்ட ஸூதர் அவரை நோக்கிச் சொன்னார். "ஓ! சௌனகரே! ஸ்ரீ கிருஷ்ண பகவான் பூமியைவிட்டுத் தம் உலகம் போகும் முன்னிலையில் உத்தவர் பகவானை நோக்கி, 'தாங்கள் வைகுண்டம் சென்றால் பக்தர்களை யார் சம்ரக்ஷிப்பார்? கலியுகத்தில் ஜனங்கள் துஷ்டர்களாகிவிடுவார்கள். உம்முடைய நிர்க்குண சுரூபத்தை ஜனங்கள் உபாசிப்பது மிகவும் கஷ்டம். அதற்காகவே தாங்கள் பூமியில் அவ

தாரம் செய்திருக்கிறீர்கள். ஆகையால் இவ்வுலகத்திலே வசிக்கவேண்டுமேயொழிய மேலுலகம் செல்லக்கூடாது" என்று வேண்டிக்கொண்டார். இதனைக் கேட்டுப் பகவான், "பக்தர்களுக்காக நாம் செய்யவேண்டியதென்ன?" என்று யோசித்து, தேஜோரூபியாக ஸ்ரீமத் பாகவதத்தில் பிரவேசித்தார். அதனாலேதான் அது எல்லாவற்றிலும் மேலானது. அதனைக் கேட்பதாலும் படிப்பதாலும் துக்கம், தாரித்ரியம், பாபம் முதலாகிய இவைகள் நிவர்த்தியாகின்றன. ஏழு நாளில் இந்தக் கிரந்தம் முழுவதையும் விதிப்படி கேட்டால் தேவர்களாலும் தாண்ட முடியாத விஷ்ணுவின் மாயையைக் கடந்து சுரூப ஞானத்தை அடையலாம். 'ஓ சௌனகர் முதலியவர்களே! இப்படிப் பாகவதத்தின் மகிமையை வர்ணித்தவுடன் ஆனந்தவனத்தில் பக்தியின் புத்திரர்களான ஞான வைராக்யர்கள் மிக்க பலத்துடனும் அழகான சரீரத்துடனும் எழுந்திருந்தார்கள். பக்தியும், 'ஹே கிருஷ்ண! ஹே கோவிந்த! ஹே முராரே!' என்று சொல்லிக்கொண்டு விசேஷ சந்தோஷமடைந்தார்கள். பின்னும் அவர்களுடைய ஆக்ஞையால் பகவத் பக்தர்களுடைய மனதில் வசித்துவந்தாள். மேலும், அவ்விடத்தில் ஸ்ரீமந் நாராயணமூர்த்தி நீருண்ட மேகம்போலக் கறுத்த திருமேனியோடு நான்கு கைகளிலேயும் சக்ரம் முதலிய ஆயுதங்களை ஏந்தி, பீதாம்பரத்தை யுடுத்திக்கொண்டு துளசி மாலையால் அலங்கரிக்கப்பட்டுக் கோடி மன்மதனைப்போல் அழகுள்ளவராகி, பக்தர்களுக்குத் தரிசனங் கொடுத்தார். அப்பொழுது எல்லோரும் பரமானந்தத்தை யடைந்து, பகவானைத் தோத்திரம் செய்தார்கள். மேலும், ஸ்ரீமத் பாகவதமே மேலானதென்றும் தெரிந்துகொண்டார்கள்.

பிராம்மணர்களுடைய பொருள்களை அபகரிப்பதாகிய மகா பாபங்களைச் செய்தவர்களும் ஏழு நாட்களில் ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்பதனால் பரிசுத்தர்களாகிவிடுகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. துங்கபத்ரா நதிக்கரையில் ஒரு பட்டணத்தில் ஆத்மதேவரென்ற ஒரு பிராம்மண சிரேஷ்டரிருந்தார். அவர் சகல வேதங்களையும் அத்யயனஞ்

செய்தவர். சூரியன் போன்ற தேஜஸ் உள்ளவர்; தம் முடைய வர்ணாசிரம தர்மங்களைக் குறைவின்றி நடத்திவரு பவர்; ஆனால் அவர் மிகுந்த ஏழை. அவருக்குத் துந்துலி என்ற பத்னி யொருத்தி யுண்டு. அவள் மிகவும் அழகுள்ள வள்; மேலான குலத்தில் பிறந்தவள்; ஆனாலும் வெகு வாகப் பேசுகிறவள்; வீட்டுவேலைகளில் மிகவும் சாமர்த்திய முள்ளவள்; சண்டையில் மிகுந்த பிரியமுள்ளவள்; தான் சொன்னதே சரியென்று ஸ்தாபிக்கும் சுபாவமுள்ளவள். அந்தத் தம்பதிகளிருவரும் பலவகையான தர்மங்களை யனுஷ்டித்தார்கள். அப்படியும் அவர்களுக்குப் பெண்ணாவது பிள்ளையாவது பிறக்கவில்லை. அதனால் கவலையடைந்து அந்தப் பிராம்மணன் வீட்டை விட்டுக் காட்டுக்குச் சென் றார். அவ்விடத்தில் மத்யான்ன காலத்தில் ஒரு குளத்தில் ஸ்நானம் பண்ணித் தாகத்தைத் தீர்த்துக்கொண்டு தெய்வச் செயலாய் அவ்விடம் வந்த ஒரு ஸன்யாஸியின் அருகிற் சென்று அவரை நமஸ்கரித்துப் பெருமூச்சு விட்டு அவரு டைய பக்கத்தில் நின்றார். அவரைப் பார்த்து ஸன்யாஸி யானவர், "ஓ பிராம்மணா! நீர் ஏன் துக்கப்படுகிறீர்" என்று கேட்டார். அதைக் கேட்டுப் பிராம்மணன் அந்த ஸன்யாஸியை நோக்கி, "எனக்குப் புத்திரனில்லை; என் வீட்டிலிருக்கும் பசுவும் மலடாயிருக்கிறது; என்னால் வைத்து வளர்க்கப்பட்ட மரமும் புஷ்பிக்கிறதில்லை; காய்க் கிறதுமில்லை; என் வீட்டிற்குக் கொண்டுவந்த பழங்களும் காய்ந்துபோகின்றன; குழந்தைகளில்லாமலும் பாக்கிய மில்லாமலும் இருக்கும் நான் பிழைத்திருந்து என்ன பிர யோஜனம்" என்று சொல்லி மிகவும் கதறினார். அதைக் கேட்டு அந்த ஸன்யாஸியானவர் அவருடைய நெற்றியில் எழுதப்பட்டிருக்கும் அக்ஷரங்களை வாசித்துப் பார்த்து, பிராம்மணனை நோக்கி, "ஓ! பிராம்மணா, உமக்கு ஏழு ஜன்மம் வரையில் பிள்ளை பிறக்காது. ஸகரர் என்னும் ராஜன் புத்திரசோகத்தை அடைந்தாரல்லவா? ஆகையால் பிள்ளை பிறக்கவில்லையென்று நீர் வருத்தப்படுவது நியாய மில்லை; ஆகையால் குடும்பத்தின் ஆசையை யொழித்து

ஸன்யாசஞ் செய்துகொள்ளும்" என்றார். அதனை கேட்டு, பிராம்மணன் கொஞ்சமேனும் அதற்கு ஸம்மதிக்காமல் விஷய சுகத்திலேயே ஆசைப்பட்டு, பிள்ளை பிறக்கும்படி அனுக்கிரக்கவேண்டுமென்று பலவாறு வேண்டிக் கொண்டார். ஸன்யாஸியானவர், "பிராம்மணா! தெய்வச் செயலை மாற்றுவதற்கு யாரால் முடியும்? அதனை மாற்ற முயன்றால் துக்கத்தையே அடையும்படி நேரிடும். ஆகை யால் உமக்குப் புத்திரசுகம் கிடைக்காது. ஆகிலும் உமக்கு ஒரு பழத்தைக் கொடுக்கிறேன். இதனை உம்முடைய பத்னி யிடம் கொடுத்துப் புசிக்கும்படி செய்யும். உத்தமமான புத்திரன் பிறப்பான்" என்று சொல்லிப் பழத்தைக் கொடுத் தார். பிராமணன் அதைப் பெற்றுக்கொண்டு தம்முடைய வீட்டிற்கு வந்து தமது பத்னியிடம் கொடுத்து அவளை நோக்கி, "இதுமுதல் ஒரு வருஷம் வரையில் ஒரு வேளை போஜனம் செய்துகொண்டு, ஸத்யம், சௌசம், தயை இவைகளில் தவறாமல் நியமத்துடன் நீ இருக்கவேண்டும். இந்தப் பழத்தைப் புசி. நல்ல பிள்ளை பிறக்கும்" என்று சொல்லிவிட்டுக் கிராமாந்தரம் போய்விட்டார். அந்தத் துந்துலி என்பவள் தன்னுடைய தோழிகளின் முன்பாக இவ்விஷயங்கள் எல்லாவற்றையும் சொல்லி வருத்தப்பட் டாள். எப்படியென்றால், "இந்தப் பழத்தை நான் புசித்த மாத்திரத்தில் வயிற்றில் கர்ப்பம் உண்டாகிவிடும்; வயிறு பெருத்துவிடும்; ஆகாரம் குறைந்துவிடும்; தேகத்தில் வலிமை குறையும்; வீட்டு வேலைகளை எப்படிச் செய்ய முடியும்? வயிற்றுக்குள்ளிருக்கும் கர்ப்பமானது வெளி வருவது கஷ்டம். ஒருகால் சிசு வயிற்றில் குறுக்காக விழுந்து விட்டால் நான் உயிரை இழக்கும்படி நேரிடுமே, பிரஸவ காலத்தில் உண்டாகும் உபத்திரவத்தை நான் எப்படி சகிப் பேன்? இந்த ஒரு வருஷம் நியமமாயிருப்பது மிகவும் கஷ் டம். நான் பிரசவித்திருக்கும்பொழுது வீட்டிலிருக்கும் எல்லாத் தனங்களையும் பர்த்தாவின் ஸகோதரியானவள் அபகரித்துவிடுவாள்; பிரஸவித்த பிறகு குழந்தையைக் காப்பாற்றுவது மிகவும் கடினம்; ஆகையால், மலடியாக

வாவது, விதவையாகவாவது இருப்பது மேலானதென்று நினைக்கிறேன்" என்று சொல்லி அப்பழத்தை அவள் புசிக்கவில்லை. பின்பு, பிராம்மணன் தமது பத்னியை நோக்கிப் பழத்தைப் புசித்தாயா என்று கேட்க, அவள் புசித்தேன் என்றும் அவருக்குச் சொன்னாள். இந்தச் சமயத்தில் அந்தத் துந்துலியின் ஸகோதரி யொருத்தி தெய்வச் செயலாய் அவள் வீட்டுக்கு வந்தாள். அப்பொழுது துந்துலி அவளிடத்தில் இவ்விஷயம் முழுவதையும் சொன்னாள். அதைக் கேட்டு அவள் துந்துலியை நோக்கி, "நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். நான் இப்பொழுது கர்ப்பமாயிருக்கிறேன். நான் பிரஸவிக்கிற வரையில் நீ வீட்டிற்குள்ளேயே இருந்து கர்ப்பிணியாக இருப்பது போலப் பிறருக்குச் சொல்லிக்கொண்டு இரு. உன் வீட்டிலிருக்கும் பணம் முழுவதையும், நீ உன் புருஷனுக்குக் கொடுத்துவிடுவாயானால், எனக்குப் பிறக்கும் குழந்தையை உனக்குக் கொடுத்துவிடுகிறேன். உன் வீட்டில் வந்திருந்து, அந்தக் குழந்தையையும் வளர்க்கிறேன். இந்தப் பழத்தைப் பசுவுக்குக் கொடுத்துவிடு" என்று சொன்னாள். அவளும் அப்படியே செய்தாள். பின்பு அவள் பிரஸவித்ததும் அந்தக் குழந்தையை அதன் தகப்பன் இரகசியமாகத் துந்துலியினிடம் கொடுத்தான். அந்தத் துந்துலியும் 'சுகமாய்ப் பிரசவித்தேன்' என்று தன்னுடைய பர்த்தாவிடம் தெரிவித்தாள். அந்த ஆத்மதேவர் மிகுந்த ஸந்தோஷமடைந்து சிசுவிற்கு ஜாதகர்மம் முதலியவைகளைச் செய்தார். அப்பொழுது துந்துலியானவள் தனது பர்த்தாவை நோக்கி, 'என்னுடைய ஸ்தனத்தில் பாலில்லை. எத்தனை நாள் அன்னியர்களுடைய பாலைக் கொண்டு குழந்தையை வளர்க்க முடியும்? என்னுடைய தங்கையின் குழந்தை இறந்துபோய்விட்டதால் அவளுக்குப் பால் மிகுதியாயிருக்கிறது. அவளை வரவழைத்து வீட்டில் வைத்துக்கொண்டு குழந்தையை வளர்க்கும்படி செய்ய வேண்டும்' என்று சொன்னாள். அவரும் அதற்குச் சம்மதித்து அப்படியே செய்தார். அந்தக் குழந்தைக்கு

அந்தக் குழந்தைக்கு துந்துகாரி என்று பெயர் வைக்கப் பட்டது. அதற்குப் பின மூன்று மாதம் கழித்து வீட்டி லிருந்த பசுவானது பிரசவித்தது. நல்ல தேஜஸும் அழகுமுள்ளவனுமான புத்திரன் பிறந்தான். ஆனால் அக் குழந்தைக்குக் காதுமட்டும் பசுவின் காதுபோலிருந்தது. அதனால் அவனுக்குக் கோகர்ணனென்று பெயரிடப் பட்டது. அவன் வித்வானும், சுத்தனும், ஆசார முள்ளவனுயு மிருந்தான். துந்துகாரியோ மிகவும் துஷ்ட னும், திருடனும், அசுத்தனும், மகா பாபியாயு மிருந் தான். இபபடிச் சில காலம் சென்றபிறகு துந்துகாரி யானவன் தாசிகளிடத்தில் ஆசைப்பட்டுப் பணம் முழு வதையும் செலவழித்துத் தாய், தகப்பன் இருவர்களையும் அடித்து, வீட்டிலிருக்கும் பாத்திரங்களையும் பிடுங்கிக் கொண்டுபோனன். அப்பொழுது அவனுடைய தகப் பனாகிய ஆத்மதேவர், "அபுத்திரனயிருப்பதே மேலா னது; இந்தத் துஷ்டப் பிள்ளையையடைந்து நான் மிகவும் கஷ்டபபடுகிறேன். என்னை இப்பொழுது யார் காப்பாற்று வார்கள்?" என்று கதறினர். அப்பொழுது கோகர்ணன் ஸம்ஸாரத்தின் துக்கங்களை அவருக்குச் செவ்வையாக எடுத்துரைத்து வைராக்யத்தை உண்டுபண்ணினன். பின்பு அவர் புத்திரனுடைய உபதேசத்தால் வீட்டை விட்டுக் காட்டுக்குச் சென்று ஒவ்வொரு நாளும் பாக வதத்தில் பத்தாவது ஸ்கந்தத்தைப் படித்து, அதனால் ஸ்ரீ கிருஷ்ண ஸாயுஜ்யத்தை யடைந்தார் பிறகு அந்தத் துந்துகாரியென்பவன் தாயாரை நோக்கி, 'வீட்டில் பணம் எங்கேயிருக்கிறது? சொல். இல்லாவிடில் உன்னைக் கொல்வேன்' என்று அதட்டினன். அதனால் அவள் ஒரு நாள் இரவில் ஒரு கிணற்றில் விழுந்து மரணமடைந் தாள். கோகர்ணன் என்பவன் விஷயங்களில் ஆசை

யில்லாதவனாகித் தீர்த்தயாத்திரை செய்துகொண்டிருந்தான். துந்துகாரியென்பவன் வீட்டிலேயே ஐந்து தாசிகளை வைத்துக்கொண்டு அவர்களைப் போஷிப்பதற்காக கெட்ட காரியங்களைச் செய்துவந்தான. அந்தத் தாசிகள் நகை வேண்டுமென்ற விருப்பத்தால் அவனை நிர்ப்பந்தித்தார்கள். அதற்காக அவனும் தேசாந்தரம் சென்று நல்ல வஸ்திரங்கள், நகைகள் முதலியவைகளைத் திருடிக்கொண்டுவந்து கொடுத்தான். இப்படி மிகுதியான பணத்தையும் நகைகளையும் இவன் திருடிக்கொண்டு வந்திருக்கிறன் என்று தெரிந்து அந்தத் தாசிகள் ஒரு நாள் ராத்திரி, "இவன் இவ்வளவு பொருள்களையும் திருடிக்கொண்டு வந்திருப்பதனால் அரசனுடைய சேவகர்கள் இவ்விடம் வந்து நம்மைப் பிடித்துக்கொள்வார்களே" என்று யோசித்து ஒருவருக்கும் தெரியாமல் கயிறுகளால் இவனைக் கட்டிக் கழுத்தில் சுருக்கிட்டார்கள். அப்படியும் அவன் சீக்கிரத்தில் மரிக்கவில்லை. அப்பொழுது அவர்கள் அக்னியை அவன் முகத்திற் போட்டு உபத்திரவிக்க அவன் இறந்தான். பின்பு அவன் சரீரத்தை ஒருவருக்கும் தெரியாமல் ஓரிடத்தில் அடக்கம் செய்தார்கள். மறுநாள் துந்துகாரி எங்கேயென்று கேட்பவர்களுக்குப் பணம் சம்பாதிப்பதற்காகத் தேசாந்தரம் போயிருக்கிறனென்றும், ஒரு வருஷத்தில் திரும்பி வருவானென்றும் சொல்லிக்கொண்டிருந்தார்கள். இறந்துபோன துந்துகாரி அவனுடைய பாபத்தால் பிரேத ஜன்மத்தையடைந்து வாயு சரீரத்துடன் அங்குமிங்கும் அலைந்துகொண்டு வெயில், குளிர், பனி, மழை இவைகளைச் சகித்தும், பசி தாகத்தால் துபைத்தை யடைந்து மிகவும் துக்கித்துக்கொண்டுமிருந்தான். சில காலத்தில் கோகர்ணன் துந்துகாரி இறந்துபோனானென்பதைக் கேள்விப்பட்டு அவனை உத்தேசித்து கயா

க்ஷேத்திரத்தில் சிராத்தம் செய்ததுமன்றி, ஒவ்வொரு தீர்த்தங்களிலும் அவனை உத்தேசித்துப் பிண்டதானம் முதலியவைகளையுஞ் செய்தான். பிறகு சில காலத்தில் தன்னுடைய பட்டணம் வந்து, தன்னுடைய வீட்டின் திண்ணையில் அன்று ராத்திரி படுத்திருந்தான். அப்பொழுது பிரேத ரூபியாயிருக்கும் துந்துகாரி, அவ்விடத்தில் படுத்திருக்கும் தன் பந்துவைப் பார்த்து, ஒருகால் ஆடுபோலவும், பின்னுமொருகால் யானைபோலவும், எருமைபோலவும், இந்திரன்போலவும், அக்னிபோலவும், புருஷன் போலவும் பலவகையான ரூபத்தை எடுத்துக் கொண்டான். கோகர்ணன் அவனைப் பார்த்து, "நீ யார்? பிரேதமா அல்லது பிசாசமா அல்லது ராக்ஷஸனா" என்று கேட்டான். இதைக் கேட்டு விடை சொல்லமுடியாமல் அழுதுகொண்டு அது ஜாடை காட்டினது. அப்பொழுது கோகர்ணன் இரு கையிலும் தண்ணீரை எடுத்துத் தெளித்தான். அதனால் அது தன்னுடைய பாபங்கள் விலகி, விடை சொல்ல ஆரம்பித்தது. "நான் உன்னுடைய சகோதரன்; எனக்குத் துந்துகாரியென்று பெயர். நான் செய்த பாப கர்மங்களால் பிராமண ஜன்மம் போய்விட்டது; அநேக பிராணிகளை இம்சித்துத் தாசிகளைப் போஷித்துவந்தேன்; கடைசியில் அவர்களாலேயே கொல்லப்பட்டேன்; அதனால் பிரேத ஜன்மத்தை யடைந்து கஷ்டப்படுகிறேன்; நீ எனக்குப் பந்துவாகையால் என்னிடத்தில் தயை செய்து என்னைக் காப்பாற்று" என்றது. அதனைக் கேட்ட கோகர்ணன், 'ஓ துந்துகாரியே! உனக்காகக் கயாக்ஷேத்திரத்தில் விதிப்படி பிண்டதானம் செய்தேன். அப்படியிருக்க உனக்குப் பிரேதமாயிருக்கும் தன்மை ஏன் போகவில்லை? இனி, நான் செய்யவேண்டியதென்ன?' என்று கேட்டான். அதனைக் கேட்டு அந்தப் பிரேதமானது, 'நூறு கயா சிராத்தம் செய்தாலும் என்

னுடைய பாபம் நிவர்த்தியாகாது. ஆகையால் வேறு ஒரு உபாயத்தை யோசிக்கவேண்டும்' என்றது. அதைக் கேட்டு, கோகர்ணன், "உன்னுடைய பாபங்களை விலக்கத் தகுந்த உபாயத்தை ஆலோசித்து, அதை அனுஷ்டிக் கிறேன். அதுவரையில் நீ கவலையற்றவனுயிரு" என்று சொல்லிவிட்டு, இராத்திரி முழுவதும் அது விஷயமாக யோசித்தும், யாதொரு நிச்சயமும் தோன்றுதவனுயிருந் தான். காலையில் அந்தப் பட்டணத்திலிருக்கும ஜனங்கள் எல்லோரும் தேசாந்தரத்திலிருந்து வந்த கோகர்ணனைப் பார்த்து க்ஷேமம் விசாரித்தார்கள். கோகர்ணன் இராத்திரியில் நடந்த விஷயங்கள் எல்லாவற்றையும் அவர்களிடம் தெரிவித்தான். அவர்கள் யோசித்து ஒன்றும் தோன்றுமல் சூரிய பகவானைக் கேட்கவேண்டு மென்று சொன்னுர்கள். உடனே கோகர்ணன் சூரியனைத் தோத்திரம் செய்து அவர் வேகத்தைத் தடுத்துவிட் டான். அப்பொழுது சூரிய பகவான், "ஏழு நாட்களில் ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்டால் பிரேதத்வம் நிவர்த்தி யாகும்" என்று அனுக்கிரகித்தார். அதனைக் கேட்டுக் கோகர்ணன் பாகவதக் கதையைப் படிப்பதற்கு முயல லுற்றுன். அதனைக் கேட்பதற்காகப் பல தேசங்களிலிருந் தும், பல கிராமங்களிலிருந்தும் நொண்டிகள், கண்ணில் லாதவர்கள், ரோகிகள் ஆகியவர்கள் வந்தார்கள். இன் னும் அநேகம் பெரியோர்களும் வந்து கூடினுர்கள். அவ்விடத்துக்கருகிலிருந்த ஏழு கணுக்களுள்ள ஒரு மூங்கிலில் வாயு சரீரத்தையுடைய அந்தப் பிரேதம் ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்பதற்காக வந்து சேர்ந்தது. அப் பொழுது கோகர்ணன் விஷ்ணுபக்தனுகிய ஒரு பிராம் மணனைக் கேட்பவராக வைத்துக்கொண்டு பாகவதக் கதையை வர்ணித்தார். முதல் நாள் கதை முடிந்தவுடன் அருகிலிருந்த மூங்கிலில் ஒரு கணு வெடித்தது. இப்படி

ஏழு நாட்களில் ஏழு கணுக்களும் வெடித்தன. அன்றி, ஏழாவது நாளில் அந்தப் பிரேதமானது தனது பூர்வ சரீரத்தை விட்டு மேகம்போலக் கறுத்த திருமேனியுடன் பீதாம்பரம், கிரீடம், குண்டலம், துளசி மாலை இவைகளால் அலங்கரிக்கப்பட்டு திவ்ய ரூபத்தை யடைந்து கோகர்ணனை நோக்கி, "சாதுவே! நான் உன்னால் க்ஷேமத்தை யடைந்தேன்" என்று சிலாகித்தது. இந்தச் சமயத்தில் விஷ்ணுதூதர்கள் வைகுண்டத்திலிருந்து விமானத்துடன் வந்தார்கள். எல்லாரும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, துந்துகாரி அவ்விமானத்தில் ஏறினன். அப்பொழுது கோகர்ணன் விஷ்ணுதூதர்களை நோக்கி, 'ஓ விஷ்ணு தாஸர்களே! இவ்விடத்திலிருக்கும் எல்லா ஜனங்களும் ஸ்ரீமத் பாகவதக் கதையைக் கேட்டார்களே. ஆதலால் பலனில் பேதமுண்டாகக் காரணமென்ன?' என்று வினவினன். அதனைக் கேட்ட ஹரி தாஸர்கள்' "ஓ சாதுவே! எல்லோரும் சிரவணம் பண்ணினவர்களானலும் இந்தப் பிரேதமானது 7-நாளும் உபவாசமிருந்து கதையைக் கேட்டு, அதனை மனனஞ் செய்ததுபோல மற்றவர்கள் செய்யவில்லை. ஆகையால் தான் பலன் வேருயிற்று. 'இது பலனைக் கொடுக்குமோ கொடாதோ' என்று சந்தேகப்பட்டு ஜபித்த மந்திரமும், பலவிடங்களில் மனத்தைச் செலுத்திக்கொண்டு செய்த ஜபமும், விஷ்ணுபக்தர்களில்லாத தேசமும், பாத்திரமான பிராம்மணர்கள் இல்லாத சிராத்தமும், வேதாத்யயனஞ் செய்யாதவனுக்குக் கொடுத்த தானமும், அனுசாரமுள்ள குலமும் ஆகிய இவைகள் பிரயோசனமற்றவைகள். குருவின் வார்த்தையில் நம்பிக்கையும், தன்னைத் தீனனாக நினைத்துக்கொள்வதும், மனதை அடக்கிக்கொள்வதும், கதையைக் கேட்பதில் நிலையான புத்தியும் ஆகிய இவ்வைகளுடன் கதையைக் கேட்பது மேலானது. இன்னொரு

தடவை இந்தக் கதையைக் கேட்டால் எல்லாருக்கும் வைகுண்டம் கிடைக்கும்; ஓ கோகர்ண! உனக்குப் பகவானுகிய கோவிந்தர் கோலோகத்தைக் கொடுப்பார்' என்று சொல்லி வைகுண்டம் சென்றூர்கள்.

பின்பு கோகர்கணன் ஆவணி மாதத்தில் மறுபடியும் பாகவத படனத்தை நடத்தினன். அவர்களும் கேட்டார்கள். கதை முடிந்தவுடன் அநேக விமானங்களுடன் நாராயணமூர்த்தியே நேரில் வந்து சங்கத்தை ஊதினர். பின்னும் அவர் கோகர்ணனைக் கட்டிக்கொண்டு தமக்குச் சமமாக அவனைச் செய்து, மற்றவர்கள் எல்லாரையும் விமானத்தில் ஏற்றிக்கொண்டு கோலோகம் சென்றூர். ஸப்தாஹ யக்ஞத்தின் மகிமை இப்பேர்ப்பட்டது. ஸப்தாஹ யக்ஞத்தால் கிடைக்கும் பலன் காற்று, ஜலம், இலை இவைகளைப் புசித்துக் கடுந்தவம் செய்வதாலும் யோகத்தாலும் அடைய முடியாது. இந்த இதிகாசத்தைச் சித்திரகூட பர்வதத்திலிருக்கும் சாண்டில்யமகரிஷியும் படித்துப், பரமானந்தத்தை யடைகிறூர். இது மிகவும் பரிசுத்தமானது. ஒரு தடவை கேட்ட மாத்திரத்தில் சகல பாபத்தையும் நிவர்த்திக்கக்கூடியது. சிராத்த காலத்தில் படித்தால் பிதிருக்களுக்குத் திருப்தி உண்டாகும். இதனைத் தினந்தோறும் படித்தால் மோக்ஷமும் கிடைக்கும்.

'ஓ சௌனகரே! ஸ்ரீமத் பாகவதத்தை ஏழு நாளில் படிப்பதற்குச் சில விதிகள் உண்டு. எப்படியென்றல் முதலில் ஜோதிஷ சாஸ்திர மறிந்தவர்களைக்கொண்டு நல்ல முகூர்த்தம் பார்த்து, அதில் ஆரம்பிக்க வேண்டும். ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி இந்த மாதங்களில் ஆரம்பிப்பது மேலானது. இன்ன காலத்தில் பாகவதம் படிக்க ஆரம்பிக்கப் போகிறேன்; அதனைக் கேட்கத் தாங்கள் எல்லோரும் வர

வேண்டும்; ஏழு நாளும் இருக்க முடியாமல்போனல் ஒரு நாளாவது கேட்கவேண்டும்; இந்த ஞான யக்ஞத்தில் ஒரு க்ஷணம் கிடைப்பது மிகவும் அரிது; ஆகையால் குடும்பத்துடன் எல்லோரும் வரவேண்டும்' என்று ஒவ்வொரு தேசங்களிலும் கிராமங்களிலும் பத்திரிகை மூலமாகப் பிரசித்தப்படுத்தவேண்டும். வந்தவர்களுக்கு இடம் முதலியவைகளைக் கொடுத்து உபசரிக்கவேண்டும். வாழை, மாந்தளிர் முதலிய மங்கள திரவியங்களால் மண்டபத்தை அலங்கரித்து, நான்கு திக்குகளிலேயும் துவஜங்கள் கட்டி வந்தவர்களுக்கு உட்காரத் தகுந்த இடங்களைச் செய்விக்கவேண்டும். மேலும் கதைசொல்பவருக்குத் திவ்யமான ஆசனம் அமைத்து வைக்கவேண்டும். கதை சொல்லுகிறவர் வைராக்யமுள்ளவராயும், வேதசாஸ்திரங்களை யறிந்தவராயும், விஷ்ணு பக்தராயும், அதிக ஆசையில்லாதவராயும், உதாஹரணம் சொல்வதில் சமர்த்தராயும், பிராம்மணராயும் இருக்கவேண்டும். சொல்லுகிறவர்க்கு உதவிசெய்வதற்காக அவர் போன்ற மற்றொருவர் அவருடைய பக்கத்திலிருக்கவேண்டும். சொல்லுகிறவர் விரதம் ஆரம்பிப்பதற்கு முந்தி க்ஷௌரம் செய்துகொள்ளவேண்டும். அருணோதயத்திற்குள் தம்முடைய நித்ய கர்மங்களைச் சுருக்கமாகவாவது முடித்துக்கொண்டு கதையை ஆரம்பிக்கவேண்டும். மண்டபத்தில் ஸ்ரீமத் பாகவத புஸ்தகத்தையும் பகவானுடைய விக்ரகத்தையும் வைத்து அவைகளையும், விக்னேசுவரரையும் நன்றாகப் பூஜித்து, பிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து கடைசியில், 'ஹே! கிருஷ்ணு! ஸம்ஸாரமாகிற சமுத்திரத்தில் முழுகியிருக்கும் தீனனாகிய என்னைக் காப்பாற்றும்' என்று ஸ்தோத்திரம் செய்ய வேண்டும். பிறகு கதை சொல்பவருக்கு வஸ்திரம், ஆபரணம் முதலியவைகள் கொடுத்து, 'சுகரால்

சொல்லப்பட்ட ஸ்ரீ மத்பாகவதத்தை அறிந்த பிராமண ஷேத்தம, இந்தக் கதையை உபதேசித்து என்னுடைய அஞ்ஞானத்தைப் போக்கும்' என்று கேட்டுக் கொள்ள வேண்டும். பணம், வீடு, புத்திரன் இவைகளில் அபி மானத்தை யொழித்து, சுத்த சித்தனயிருந்து கதையை கேட்கவேண்டும். கதையைச் சொல்லுகிறவர் சூரியோ தயம் முதல் மூன்றரை ஜாமம் கதை சொல்லவேண்டும். மத்தியானத்தில் மாத்யான்னிக கர்மத்திற்காக இரண்டு நாழிகை நிறுத்தி விடவேண்டும். மல மூத்ர உபத்திரவ மில்லாமலிருப்பதற்காக மிதமாய்ப் புசிக்கவேண்டும். கதை கேட்கிறவன் ஒரு தடவை ஹவிஸை புசிக்கலாம். சக்தியிருந்தால் ஏழு நாள் உபவாசமிருப்பது மேலானது; அல்லது நெய், பால் இவைகளைப் புசிக்கலாம். பழங்களை யாவது புசிக்கலாம். எப்படியிருந்தால் கதைகேட்க விக் னமில்லாமலிருக்குமோ அப்படி சக்திக்கு அனுகுணமாக நடக்கவேண்டும். ஆனல் ஸ்திரீ சங்கம், பாபில்படுப்பது இவைகள் கூடாதனவாம். ஒவ்வொரு நாளும் கதை முடிந்த பிறகே போஜனம் பண்ணவேண்டும். வேதங் களேயும், பக்தர்களேயும், பிராமணர்களேயும் நிந்திக்கக் கூடாது.

இப்படி ஏழு நாட்களானபிறகு புத்தகத்தையும். அதன் கதையைச் சொல்லுகிறவர்களேயும் பூஜித்து, கதை கேட்டவர்களுக்குப் பிரசாதம் (துலசி) கொடுக்கப் படவேண்டும். பின்பு மிருதங்கம், தாளம், வீணை, முதலியவைகளோடு பகவானுடைய குணத்தைக் கானம் பண்ணவேண்டும். அதன்பிறகு கதை சொன்ன வருக்கும், மற்றப் பிராமணர்களுக்கும், யாசகர்களுக்கும் பணம், அன்னம் முதலியவைகளைக் கொடுக்கவேண்டும். சன்னியாசியாயிருந்தால் மறுநாள் பகவத் கீதையைப் படிக்கவேண்டும். கிருகஸ்தராயிருந்தால் தசம ஸ்கந்தத்

தில் எவ்வளவு சுலோகங்களிருக்கின்றனவோ, அவ்வளவு ஹோமம் பண்ணவேண்டும். ஹோமம் பண்ணச் சக்தியில்லாவிட்டால், ஹோம திரவியத்தைத் தானஞ்செய்ய வேண்டும். பிறகு இந்த யக்ஞத்தின் மத்தியில் நேர்ந்த சகல தோஷங்களையும் நிவாத்திப்பதற்காக விஷ்ணு சகஸ்ரநாமத்தைப் படிக்கவேண்டும். அதன் பிறகு பன்னிரண்டு பிராம்மணர்களுக்குப் போஜனம் செய்து வைத்து அவர்களுக்கு சுவர்ணம், பசு இவைகளைக் கொடுக்கவேண்டும். சக்தியிருக்குமானால் மூன்று பலம் தங்கத்தால் சிங்கத்தின் உருவத்தைச் செய்து, அதில் பாகவத புத்தகத்தை வைத்து அதைப் பூஜித்து அதை ஆசாரியனுக்குக் கொடுக்கவேண்டும். இது ஞான யக்ஞமாம்.

ஓ சௌனகரே! ஆனந்த வனத்தில் சனகாதிகள் ஞான யக்ஞத்தை விதிப்படி முடித்தபிறகு தெய்வச் செயலால் அவ்விடம் சுகர் வந்தார். இவர் வியாசருக்குப் புத்திரர். ஞானமாகிய சமுத்ரத்திற்குச் சந்திரன் போன்றவர்; ஆத்ம லாபத்தால் பூர்த்தியடைந்தவர்; எப்பொழுதும் ஸ்ரீமத் பாகவதத்தைப் படிப்பவர்; பதினாறு வயதுள்ளவர். அவரைக் கண்டு அங்கிருந்த சபையோர்கள் எல்லோரும் விதிப்படி பூஜிக்க, அவர் ஸ்ரீமத் பாகவதத்தின் முதலாவது ஸ்கந்தத்தின் இரண்டு மூன்று சுலோகங்களில் குறிக்கப்பட்ட விஷயத்தை விஸ்தாரமாகச் சொன்னார். அப்பொழுது பகவான் தம்முடைய பக்தர்களான பிரகலாதர், மகாபலி, உத்தவர் ஆகிய இவர்களுடன் அவ்விடம் வந்து அவர்களை அனுக்ரகித்ததுமல்லாமல், 'ஞான யக்ஞம் நடக்குமிடத்தில் நாம் இப்படியே ஸான்னித்யம் செய்கிறோம்' என்றும் அனுக்ரகித்தார். ஆனதால் ஸ்ரீமத் பாகவதமானது, சம்சார

மாகிய சமுத்திரத்தில் முழுகிய ஜனங்களைக் காப்பாற்று கிறேன் என்று கர்ஜித்துக் கொண்டிருக்கிறது" என்று சொன்னார்.

இதனைக் கேட்டு சௌனகர் ஸூதரை நோக்கி, "ஸூதரே! சுகர் பரீக்ஷித்துக்கு எந்தக் காலத்தில் உபதேசித்தார்? கோகர்ணர் படித்த காலம் எது? ஆனந்தவனத்தில் குமாரர்கள் சொன்ன சமயம் எது" என்று கேட்டார். அவற்றைக் கேட்ட ஸூதர், சௌன கரைநோக்கி, 'சௌனகரே! ஸ்ரீகிருஷ்ண பகவான் வைகுண்டஞ் சென்ற நாள் முதல் நூற்றுமுப்பது வருஷங் களுக்குப் பிறகு கலியுகத்தில் புரட்டாசி மாதம் நவமியில் சுகர் பரீக்ஷித்துக்கு ஸ்ரீமத் பாகவதத்தைச் சொல்ல ஆரம்பித்தார். அது முதல் இருநூறு வருஷங்களுக்குப் பிறகு கிரீஷ்ம காலத்தில் நவமி திதியில் கோகர்ணர் ஸ்ரீமத் பாகவதக் கதையைச் சொன்னார். அதிலிருந்து நூற்றுமுப்பது வருஷத்துக்குப் பிறகு (மூவாயிரம் வருஷ மென்று சிலர் சொல்லுகிறார்கள்.) சுக்லபக்ஷ நவமியில் பிர்ம்ம புத்திரர்களான சனகாதிகள் சொன்னார்கள். நான்குவித புருஷார்த்தத்தைக் கொடுக்கிறதற்கு இக்க லியில் ஸ்ரீமத் பாகவத சாஸ்திரத்தைத் தவிர மேலானது ஒன்றுமில்லை. இது மிகவும் ரகசியமானது. சகல சாஸ்திரங்களுடைய சாரமானது. ஆகையால் இதனை பக்தியுடன் படியுங்கள்" என்று ஸூதர் சொல்லிமுடித் தார்—[பாத்ம புராணம், உத்தரகாண்டம், அத்தியாயம் ஒன்றுமுதல் ஆறு வரையில்.]

## பாகவத பேதங்கள்

அடியிற்கண்டவிதம் ஒரு தமிழ்ப் புத்தகத்தால் தெரியவருகிறது. அதன்படி பாகவதமானது எழு வகையுள்ளது.

1. இதிகாஸ பாகவதா்:— இது வியாஸமகரிஷியால் செய்யப்பட்டது; 18,000-சுலோகங்களடங்கியது. இதில் அத்தியாயங்கள் 200 இருக்கின்றன. மேலும் இது 12-ஸ்கந்தங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. பரீக்ஷித் மகாராஜனுக்குச் சுகரால் உபதேசிக்கப்பட்டது.

2. புராண பாகவதம்:— இது நாரதரால் ருக்மிணி தேவிக்குச் சொல்லப்பட்டது. இதைச் செய்தவர் வியாஸ மகரிஷியே. மேலும் இது 600-அத்தியாயங்களுள்ளது.

3. ஸம்ஹிதா பாகவதா்:— வைசம்பாயனரால் ஜனமேஜயருக்கு உபதேசிக்கப்பட்டது. 50,000-கிரந்தங்களடங்கியது. 1100-அத்தியாயங்களடங்கிய 12-கண்டங்களாகப் பிரிக்கப்பட்டது.

4. உபஸம்ஹிதா பாகவதம்:— இது சுதர்சனருக்கு அகஸ்திய மகரிஷியால் உபதேசிக்கப்பட்டது. இதிலுள்ள 70,000-சுலோகங்கள் 2000-அத்தியாயங்களாகவும், 100-பரிச்சேதங்களாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

5. விஷ்ணு ரகசிய பாகவதம்:— இது காசியபருக்கு ஹாரீதரால் சொல்லப்பட்டது. இடையிலே தண்டகங்கள் கலந்த 1,00,000 (லட்சம்) சுலோகங்களுள்ளது; 1000-அங்கங்களுள்ளது; 10,000-அத்தியாயங்களுள்ளது.

6. விஷ்ணு யாமள பாகவதம்:— இது பராசரரால் மைத்திரேயருக்கு உபதேசிக்கப்பட்டது. இதில் 80,000-சுலோகங்களிருக்கின்றன. மேலும் 800-அத்தியாயங்களுள்ளது; 8-ஸ்தானங்களுள்ளது.

7. கௌதம ஸம்ஹிதா பாகவதம்:— கௌதமர் கௌசிகருக்குச் சொன்னது; 100-அத்தியாயங்கள் கொண்டது; 10,000-சுலோகங்களுள்ளது; 4,00,000-சுலோகங்களுள்ள

கௌதம ஸம்ஹிதையில் கிரந்த லட்சண கண்டத்தில் பாகவத லட்சணமென்ற முதல் அத்தியாயத்தில் மேற்காட்டிய விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது.

## ஸப்தாஹ விதி

முன்னொரு காலத்தில் பரமசிவன் பார்வதியை நோக்கி, 'ஏ பார்வதீ! ஏழு நாட்களில் ஸ்ரீமத் பாகவதத்தைப் படிப்பவன் முதலில் வியாஸரையும் சுகரையும் நமஸ்கரித்து, மகாவிஷ்ணுவைத் தியானம் செய்துகொண்டு, முதல் நாளில் முதலாவது ஸ்கந்தம் முதல் இரண்யாக்ஷ வதம் வரையில் படிக்கவேண்டும். இரண்டாம் நாளில் பரதனுடைய சரிதம் வரையிலும், மூன்றும் நாளில் அமிருத மதன கதை வரையிலும், நான்காம் நாளில் பத்தாவது ஸ்கந்தத்தில் ஸ்ரீ கிருஷ்ணவதாரம் வரையிலும், ஐந்தாம் நாளில் ருக்மிணி கல்யாணம் வரையிலும், ஆறும் நாளில் உத்தவருடைய சம்வாதம் வரையிலும், ஏழாம் நாளில் முடிவு வரையிலும் படிக்கவேண்டும். படிக்கும்போது அத்தியாயத்தின் நடுவில் நிறுத்தக்கூடாது. அப்படி நிறுத்தினல் மறுபடியும் அந்த அத்தியாயத்தை அடிமுதல் படிக்கவேண்டும். படிக்கும்போது அர்த்தத்தைத் தெரிந்துகொண்டே படிக்க வேண்டும். சொல்லுகிறவன் வடக்கு முகமாயும் கேட்கிறவன் கிழக்கு முகமாகவாகினும் அல்லது மாறியாகினும் இருக்கலாம். ஒவ்வொரு அத்தியாயம் படித்தவுடனும் ஐந்து குன்றுமணி நிறையுள்ள தங்கத்தைத் தட்சிணையாகக் கொடுக்கவேண்டும். முழுமையும் முடிந்த பிறகு பசுவைத் தட்சிணையாகக் கொடுக்கலாம். அந்தப் பசுவின் கொம்புகள் சுவர்ணத்தால் அலங்கரிக்கப்படவேண்டும். ஏ தேவி! இம்மாதிரியான விதிப்பிரகாரம் ஸ்ரீமத் பாகவதத்தை யார் படிக்கிறார்களோ, கேட்கிறார்களோ அவர்களுக்கு ஸர்வாபீஷ்டமும் நிறைவேறும். இதனைப் படிக்குங் காலத்தில் சகல தேவர்களும், சகல மகரிஷிகளும், ஸ்ரீ விஷ்ணுவின் பார்ஷதர்களும் மகாவிஷ்ணுவும் அவ்விடத்தில் எப்பொழுதும் மிகுந்த ஆனந்தத்துடன் வசிக்கிறார்கள்' என்று சொன்னர்.—(பாத்ம புராணம், பாதாள காண்டம், அத்–71.)

## ஸ்ரீமத் பாகவதஞ் செய்யப்பட்ட காலம்

கலி யுகத்தில் முதல் ஆயிரம் வருஷங்களில் ஸ்ரீமத் பாகவதஞ் செய்யப்பட்டது.

துவாபர யுகத்தில் பகவான், வியாஸரூபியாய் அவதரித்து, வேதங்களைப் பிரித்து, அவைகளைப் பைலர் முதலானவர்களிடம் ஒப்புவித்தார். பின்பு அவற்றைப் படித்தல் முதலியவைகளில் அதிகாரமில்லாத ஸ்திரீகள், சூத்திரர்கள் முதலியவர்களுக் காக அவைகளின் அர்த்தத்தையே மகா பாரதமாகச் செய்து வெளியிட்டார். மேலும், அவரால் மகா புராணங்களும், உப புராணங்களும் வெளியிடப்பட்டன. கடைசியில் ஸ்ரீமத் பாகவதமும் செய்யப்பட்டது.

ஆட்சேபம் :— பெரியோர்கள் ஆத்மசிலாகை (தன்னைத் தானே புகழ்வது) செய்துகொள்ளமாட்டார்களாகையாலும், இதிகாச புராணங்களில் வியாஸ மகரிஷியைச் சிலாகித்திருப்பதாலும் அவை வியாஸரால் செய்யப்பட்டவையென்று சொல்வது பொருந்துமா ?

சமாதானம்:— அப்படியில்லை. வியாச மகரிஷி வேதங்களைப் பிரித்துத் தாம் செய்த மகா பாரதத்தைச் சுருக்கமாய்ச் செய்யும் தமது சிஷ்யர்களான வைசம்பாயனர், ஜைமினி ஆகிய இவர்களுக்கு ஆஞ்ஞாபனஞ் செய்தார். அவர்களும் தனியே பாரதச் சுருக்கம் செய்தார்கள். இப்பொழுது வழங்கிவரும் பாரதம் வைசம்பாயனர் செய்ததேயாம். மேலும், புராணங்கள் வெகுகாலத்திற்கு முந்தியே மார்க்கண்டேயர் முதலிய மகரிஷிகளால் செய்யப்பட்டிருந்தன. ஆனால், கால மகிமையால் அவைகளில் சிலவற்றில் சில பாகங்களும், பின்னும் சிலவற்றில் சில ஸர்க்கங்களும, சிலவற்றில் சந்தர்ப்பம், விஷயம் இவைகளைச் சொல்லும் சுலோகங்களும் காணமற்போயின. சில புராணங்கள் பூர்த்தியாகச் செய்யப்படாமலும் இருந்தன. இப்படிப் பற்பல வகையாகக் குறையுள்ள புராணங்களை வியாஸமகரிஷி அந்தந்தப் புராண நடைக்குச் சமமான நடையிலே தாம் சீர்திருத்தினர்.

பின்னும் அவருடைய சிஷ்யர்கள் அவைகளுக்கு உபோத்காதம் (முகவுரை), அவைகளிலுள்ள சுலோகம் முதலியவைகளின் சங்கியை, அனுக்கிரமணிகை, அந்தந்தப் புராணத்தைச் சொன்னவர்கள், கேட்டவர்கள், இவர்களுக்கு நேர்ந்த சம்வாதம் முதலியவைகளை எழுதிச் சேர்த்தார்கள்.

பின்பு அவைகளைவிட மேலானதாக வியாஸ மகரிஷி ஸ்ரீ பாகவதத்தைச் செய்து, தம்முடைய புத்திரராகிய சுகருக்கு உபதேசித்தார். பின்பு ஸூதர் அந்தப் பாகவதத்தைச் சுகரிடமிருந்து தெரிந்துகொண்டு, சௌனகர் முதலிய மகரிஷிகளுக்குச் சொன்னார். ஆகையால் இந்த விஷ்ணு பாகவதம் வியாஸரால் செய்யப்பட்டதேயாம். மற்ற புராணங்கள் அவரால் சீர்திருத்தப்பட்டனவேயாம்.

பரீக்ஷித்து மகாராஜனுக்குக் கலியுகம் வந்த பிறகு தர்மபுத்திரர் ராஜ்யாபிஷேகம் செய்வித்ததாகப் பாகவதம், விஷ்ணு புராணம், பாரதம் முதலியவைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னமேயே பாகவதம் செய்யப்பட்டிருக்குமாகில் பரீக்ஷித்தின் சரித்திரம் அதில் சொல்ல நியாயமில்லை. ஆகையால் இது கலியுகத்தின் ஆரம்பத்தில் செய்யப்பட்டதேயாம்.

## ஸ்ரீமத் பாகவதத்தைச் செய்தவர்

**பாகவதத்தைச் செய்தவர் ஸ்ரீ வேதவியாஸ மகரிஷி.** வேதங்களைப் பிரித்த காரணத்தால் இவருக்கு இப்பெயருண்டாயிற்று. இவர் மகாவிஷ்ணுவின் அவதாரம். இவருடைய பிதா பராசர மகரிஷி. இவருடைய தாய் சத்தியவதி. இவள் வசுவின் வீரியத்தைப் புசித்த மத்ஸியத்தினிடம் உண்டானவள். ஆனதுபற்றி இவளுக்கு மத்ஸ்யகந்தி என்னும் பெயர் சிலகாலம் வழங்கினதுண்டு. பராசர மகரிஷி ஒருகால் தீர்த்த யாத்திரை செய்துவரும்பொழுது வழியில் ஆற்றில் ஓடம் தள்ளிக்கொண்டிருக்கும் வலையன் கன்னிகையான மதஸ்யகந்தியைக் கண்டார். மேலும் அவர் அவளுடைய லாவண்யத்தைக் கண்டு மோகித்து அவளிடம் ஆசைகொண்டார். அப்பொழுது அவளுடைய மத்ஸ்ய

கந்தம் விலகி, நல்ல வாசனையுண்டாகும்படி அனுக்ரஹித்தார். அதுமுதல் அவளுக்கு யோஜனகந்தியென்று பெயர் வழங்கினது. அவ்விருவர்களுக்கும் பிறந்தவர் வியாஸ மகரிஷி.

அவர் வேதங்களைப் பிரித்தும், ஸ்திரீ சூத்திரர்களுக்காக ஐந்தாவது வேதமாகிய பாரதத்தையும் செய்தார். அப்படியும் அவர் மனத்திற்குச் சந்தோஷமுண்டாகாததனால் கவலையுள்ளவராக ஸரஸ்வதீ நதிக்கரையில் சம்யாபிராஸமென்ற ஆசிரமத்தில் வசித்தார். அப்பொழுது தெய்வச்செயலாய் அவ்விடம் வந்த நாரதரிடம் உபதேசம் பெற்று ஸ்ரீமத் பாகவதத்தைச் செய்தார்.

## கதை நடந்த க்ஷேத்திரம்

கலியுகத்தில் ஸூதர் நைமிசாரண்யத்தில் வசிக்கும் சௌனகர் முதலிய மகரிஷிகளுக்கு, இந்த பாகவதக் கதையைச் சொன்னார் மேலும் நைமிசமெனபது ஒரு புண்ய க்ஷேத்திரம். ஆனதுபற்றி அவ்விடத்தில் அநேக மகரிஷிகள் வசிப்பார்கள். அநேக பெரியோர்கள் அவ்விடத்திற்கு வருவதுமுண்டு. [பிர்ம்ம தேவர் பிராம்மணர்களை நோக்கி "இந்த மனோமயமாகிய சக்ரத்தைப் பிரயோகிக்கிறேன்; இதனுடைய நேமி(முனை) எவ்விடத்தில் மழுங்குமோ அதுவே தவஞ்செய்யத் தகுதியான க்ஷேத்திரம்" என்று சொல்லி, சூரியனுக்கொப்பான சக்ரத்தை மனத்தால் சிருஷ்டித்து, பரமசிவனைக் குறித்து நமஸ்காரஞ் செய்து, அதைப் பிரயோகித்தார். அதைப் பார்த்திருந்த பிராமணர்களும் மிகுந்த சந்தோஷத்துடன் அதன்பின் சென்றார்கள். அது கீழே விழுந்து அதன் நேமி மழுங்கினவிடத்திற்கு நைமிசமென்று பெயருண்டாயிற்று. அவ்விடத்தில் மகரிஷிகள் வசித்தார்கள் —வாயு புராணம்] அந்த க்ஷேத்திரததை நைமிஷமென்றும் சொல்வதுண்டு. ஸ்ரீ மகாவிஷ்ணுவானவர் கௌரமுகரென்ற மகரிஷியை நோக்கி, "ஒரு நிமிஷத்திற்குள் அசுர சைன்யங்கள் இவ்விடத்திற் கொல்லப்பட்டபடியால் இவ்விடத்திற்கு நைமிஷமென்று பெயருண்டாகட்டும்; இது பிராம்மணர்கள் முக்கியமாய் வசிக்குமிடம்" என்று சொன்னார்—வராக புராணம்.

மகரிஷிகளுக்கு உபயோகமாகிய மரங்கள் நிமிஷங்களென்று சொல்லப்படுகின்றன. அவைகள் ஏராளமாக இருக்குமிடமே நைமிஷ மெனப்படுகிறது; அல்லது நிமிஷரெனனும் மகரிஷி தவஞ்செய்த இடமாகையால் நைமிஷமென்று அதற்குப் பெயருண்டாயிற்று— **விஜயத்.**

## ஸூதருடைய வரலாறு

"இந்த விராட்ரூபியான மகா புருஷனுடைய முகத்திலிருந்து பிராமண ஜாதியும், கைகளிலிருந்து க்ஷத்திரிய ஜாதியும், தொடைகளிலிருந்து வைசிய ஜாதியும், பாதங்களிலிருந்து சூத்திர ஜாதியும் உண்டாயின என்று சுருதியில் சொல்லப்பட்டிருப்பதுபோல அவருடைய ரோமாஞ்சத்திலிருந்து (மயிர்கூச்சலிலிருந்து) ஸூத ஜாதி யுண்டாயிற்று. அவரே ரோமஹர்ஷணர்"—மகா பாரத தாத்பரிய நிர்ணயம்; அத்தியாயம் 90. பகவானுடைய கதையைக் கேட்டுக்கொண்டிருக்கும்போது பக்தி விசேஷத்தால் மயிர்க்கூச்சலுண்டானபடியால் அவருக்கு ரோமஹர்ஷணர் என்ற பெயருண்டாயிற்று. இவர் ஸூத ஜாதியிற் பிறந்தவர்:—அபியுக்தர்கள். அவருக்கு ஸ்ரீ வேதவியாஸ மகரிஷியானவர் சகல புராணங்களையும், இதிகாசங்களையும் உபதேசித்தார்.

பிறகு ரோமஹர்ஷணர் நைமிசாரண்யத்தில் வசிக்கும் மகரிஷிகளுக்குப் புராணங்களைச் சொல்லிக்கொண்டிருந்தார். அப்படியிருக்கையில் ஒரு நாள் பலராமன் அவ்விடம் வந்தார். அவரைக் கண்டவுடன் சகல மகரிஷிகளும் எழுந்திருந்து விதிப்படி மரியாதை செய்தார்கள். அப்பொழுது ரோமஹர்ஷணர் மாத்திரம் ஆசனத்திலிருந்து எழுந்திருக்கவில்லை. அதைக் கண்ட பலராமன் மிகவும் கோபங்கொண்டார். பிறகு அவர், "தாழ்ந்த குலத்தில் பிறந்தவராகிய இந்த ரோமஹர்ஷணர் நம்மைக் கண்டு எழுந்திருக்காமலும், இந்த மகரிஷிகளின் முன்பாக உயரமான ஆசனத்தில் உட்கார்ந்தும் இருக்கிறார். இவரை நிக்ரகிக்கவேண்டும்" என்று எண்ணி, கையிலிருந்த தர்ப்பத்தால் அவரை யடித்தார். அதனால் ரோமஹர்ஷணரும்

உடனே இறந்தார். அப்பொழுது மகரிஷிகள் அனைவரும் பலராமனை நோக்கி, "பிரபுவே! நீர் செய்தது தர்மத்திற்கு ஒத்ததல்ல. இவருக்கு நாங்கள் பிர்ம்மாசனத்தைக் கொடுத்து, இவருடைய தேகத்தில் சிரமம் உண்டாகாமலிருக்கும்படியும், அவர் வெகு காலம் ஜீவித்திருக்கும்படியும் அனுக்ரகித்திருந்தோம். நீர் உலகத்தை அனுக்ரகிப்பதற்காக அவதரித்தவராகையால், எங்களுடைய வார்த்தை பொய் ஆகாமலிருக்கும்படி செய்யவேண்டும். இந்தத் தோஷத்தை நிவர்த்தித்துக் கொள்வதற்காக நீர் பிராயச்சித்தத்தை யனுஷ்டிக்கவேண்டும்" என்றார்கள். அதைக் கேட்ட பலராமன் அவர்களை நோக்கி, "பிதாவிற்கும் புத்திரனுக்கும் பேதமில்லை யென்று சுருதியில் சொல்லப்பட்டிருப்பதனால், ரோமஹர்ஷணருடைய குமாரராகிய உக்ரசிரவஸ் என்பவர் அந்த ஆசனத்தில் உட்கார்ந்து உங்களுக்குப் புராணக் கதைகளைச் சொல்லட்டும். அவருக்கு எவ்வளவு நாள் கதைசொன்னாலும் தேகத்தில் சிரமமில்லாமலிருக்கட்டும். மேலும், வெகுநாள் ஜீவித்திருப்பார்" என்று சொல்லி, தீர்த்த யாத்திரைக்குச் சென்றார். [பாகவதம்—ஸ்கந்தம் 10, அத்தியாயம் 78.]

மேற்காட்டியபடி ரோமஹர்ஷணருக்குப் பிறகு அந்த உக்ரசிரவஸ், அந்த ஆசனத்திலிருந்து மகரிஷிகளுக்குப் புராணங்களைச் சொல்லிக்கொண்டிருந்தார். அந்த ரோமஹர்ஷணர் ஸூத ஜாதியில் பிறந்தவராகையால் அவருக்கு ஸூதரென்று பெயர் வழங்கிவருகிறது. பலராமன் பாரத யுத்தம் நடக்கும்போது நைமிசாரணியஞ் சென்றார். ஆகையால் அதுவரையில் அவ்விடத்தில் கதை சொல்லிக்கொண்டிருந்தவர் ரோமஹர்ஷணரேயாம். பிறகு அவருடைய புத்திரராகிய உக்ர

சிரவஸே புராணஞ் சொன்னார். ஆகையால் ஸ்ரீ மத் பாகவதத்தைச் சொன்னவர் உக்ரசிரவஸ் என்ற ஸூதரேயாம். இவர் சகல புராணங்களையும் இதிகாசங்களையும் அறிந்தவர். "திரையாருணி, கசியா, ஸாவர்ணி, அகிருதவிருணர், சிம்சுபாயனர், ஹாரீதர் ஆகிய ஆறு பேர்களும் வியாஸ மகரிஷியின் சிஷ்யராகிய என் தகப்பனாரிடமிருந்து ஒவ்வொரு ஸம்ஹிதையை அத்யயனம் செய்தார்கள். நான் இவர்கள் எல்லோருக்கும் சிஷ்யனாக இருந்து எல்லாப் புராண ஸம்ஹிதைகளையும் தெரிந்துகொண்டேன்" என்று ஸூதர் சொன்னார். [பாகவதம்—ஸ்கந்தம் 12, அத்தியாயம் 6, சுலோகம் 5—6.]

## சுகருடைய சரிதம்

முன்னொரு காலத்தில் மகாமேரு பர்வதத்தில் ஸ்ரீ வேத வியாஸ மகரிஷி உத்தமனாகிய புத்திரனை யடையவேண்டித் தவம் செய்தார். அதனால் பரமசிவன் சந்தோஷப்பட்டு அவரை நோக்கி, 'ஓ! மகரிஷியே, உம்முடைய இஷ்டப்படி மிகுந்த தேஜஸுள்ளவனும், கீர்த்தியுள்ளவனுமாகிய புத்திரன் உமக்கு உண்டாவான்' என்று அனுக்கிரகித்தார். பிறகு ஒரு கால் ஒப்பற்ற ரூபமுள்ள கிருதாசி என்ற அப்ஸர ஸ்திரீ அவ்விடம் வந்தாள். அவளைக் கண்டவுடன் இவருக்கு மன்மத தாபம் உண்டாகியது. அப்பொழுது மகரிஷியானவர் கிளி வேஷத்தை எடுத்துக்கொண்டார். பிறகு மிகவும் தைரியத்தால் மன்மத தாபத்தை மகரிஷி அடக்க முயன்றும் அது குறையாமல் விருத்தியாயிற்று. மேலும் அவருடைய வீரியம் நழுவினது. அதிலிருந்து உண்டான புத்திரர்தான் சுகரென்ற பெயரை யடைந்தார். இவர் பிறந்தவுடனே கங்கா நதியானவள் திவ்ய சரீரத்துடன் அவ்விடம் வந்து அவருக்கு ஸ்நானஞ் செய்துவைத்தாள். ஆகாயத்திலிருந்து தண்டம், கிருஷ்ண

ஜினம் ஆகிய இவைகள் விழுந்தன. விசுவாவசு முதலிய கந்தர்வர்கள் கானஞ் செய்தார்கள். தேவ துந்துபிகள் முழங்கின. இந்திரன் முதலிய உலகபாலர்களும் அவ்விடம் வந்தது மன்றி, புஷ்பங்களை வர்ஷித்தார்கள். பரமசிவன் பார்வதியுடன் அக்குழந்தைக்கு விதிப்படி உபநயனஞ் செய்தார். அவருக்கு மகேந்திரன் அற்புதமான கமண்டுலுவைக் கொடுத்தார். இவருடைய பிதாவாகிய வியாஸ மகரிஷிக்குப் பிறந்தவுடன் சகல வேதங்களும் தோன்றியதுபோலச் சுகருக்கும் வேதங்களும், சகல புராணங்களும், இதிகாசங்களும் தோன்றின. மேலும், பிருகஸ்பதி பகவானை ஆசாரியராக வரித்தார். ஆனதால் அந்தச் சுகர் எல்லா வித்தைகளையும் அப்பியசித்தவர். அவர் பால்ய வயதுள்ளவரானலும் தேவர்களாலும், மகரிஷிகளாலும், மற்றவர்களாலும் கொண்டாடக் கூடியவராக இருந்தார். மேலும், அவருடைய மனதானது மோட்ச தர்மத்திலேயே விருப்பமுள்ளதாக இருந்ததேயொழிய விஷயத்தில் செல்லவில்லை. பிறகு அவர் தம்முடைய பிதாவாகிய வியாஸ மகரிஷியை நோக்கி மோட்ச தர்மங்களைச் சொல்ல வேண்டும் என்று கேட்டார். அதைக் கேட்ட வியாச மகரிஷியானவர் தம் புத்திரரை நோக்கி, "மோட்ச தர்மம் தெரிந்து கொள்ளவேண்டுமானல் மிதிலா நகரத்தரசராகிய ஜனகரிடம் போய்த் தெரிந்துகொள்" என்றார். அதைக் கேட்ட சுகர் அப்படியே மிதிலா நகரஞ் சென்று, ஜனகருடைய அரண்மனைக்குள் போகும்போது அவ்விடமிருந்த காவலாட்களால் தடுக்கப்பட்டார். ஆனலும் கோபங்கொள்ளவில்லை. வெகுதூரம் நடந்து வந்ததால் சரீரத்திற்கு நேர்ந்த சிரமத்தையும், பசி தாகம் இவைகளால் நேர்ந்த துக்கத்தையும் சகித்தார். பிறகு அவ்விடமிருந்த ஒரு காவலாள் அவரை வணங்கி, உள்ளே அழைத்து நிழலில் உட்காரச் செய்தான். அதனாலும் அவர் சந்தோஷிக்கவில்லை.

பிறகு ஜனகருடைய மந்திரியானவர் மிக வணக்கத்துடன் வந்து சுகரை வணங்கி, அந்தப்புரத்திற்கு அழைத்துப்போய், திவ்ய மான ஆசனத்தில் உட்காரவைத்தார். பிறகு மிகவும் ரூபவதி களான சிறு பெண்கள் அநேகர் அவ்விடம் வந்து உத்தம மாகிய அன்னத்தாலும், வாத்தியகோஷங்களாலும், நர்த்த னங்களாலும், பிரியமான வார்த்தைகளாலும் உபசரித்தார் கள். மேலும், அவரைத் தோட்டத்திற்கு அழைத்துப்போய் அழகான மரங்களையும், பட்சிகளையும், தாமரஸ ஓடைகளையும் காண்பித்தார்கள். இப்படி அவர்களால் உபசரிக்கப்பட்டும், அவைகளில் பிரியப்படாமலே மோட்ச மார்க்கத்தையே தியா னித்துக்கொண்டு அன்றைய இராத்திரியைக் கழித்தார். மறுநாள் காலையில் ஜனக மகாராஜன் இவரைச் சபைக்கு வர வழைத்து, உபசரித்து, மோட்ச தர்மத்தை உபதேசித்தார். [மகாபாரதம், சாந்தி பர்வம், அத்தியாயம் 323—325.]

## ஸ்ரீ கிருஷ்ணவதார காலம்

சிருஷ்டிமுதல் 28-வது மகா யுகத்திற்கு உட்பட்ட துவாபர யுகத்தின் முடிவில், தேவகியினிடம் பகவான் அவதரித்தார். "28-வது மகா யுகத்தில் துவாபர யுகத்தின் கடைசியில் யது வம்சத்தில் பகவான் அவதரிக்கப்போகிறாரென்று கர்க்காசாரியா முன்னமே சொல்லியிருக்கிறார்"—விஷ்ணு புராணம் 5-வது பாகம் அத்தியாயம் 23.

மேற்காட்டிய துவாபர யுகமானது நிகழும் கலி யுகத்திற்கு முந்தினதேயாம். பகவான் பூலோகத்தில் கிருஷ்ணனாக அவ தரித்து, 125 வருஷங்கள் பூமியில் வசித்து, பிறகு வைகுண்டம் சென்றார். "ஓ பிரபுவே! யது வம்சத்தில் அவதரித்து, 125 வருஷங்களாயின"—ஸ்ரீமத் பாகவதம், ஸ்கந்தம் 11, அத்தி யாயம் 6.

"வசுக்கள், அசுவினீ தேவர்கள், மருத்துக்கள், ஆதித்யர்கள், ருத்ரர்கள், ஸாத்யர்கள் ஆகிய இவர்களுடன் மகேந்திரன் என்னை நோக்கிப் பின்வருமாறு விஞ்ஞாபனம் செய்தான்; கெட்ட நடத்தையுள்ள அசுரர்களைக் கொன்று, பூமியின் பாரத்தை நிவர்த்திசெய்தீர். சுவர்க்கத்திலிருக்கும் எல்லாத் தேவர்களும் உங்களால் யஜமானனுள்ளவர்களாக ஆகட்டும். நீங்கள் பூமியில் அவதரித்து 125 வருஷங்கள் ஆயின. உங்களுக்கு இஷ்டமிருந்தால் வைகுண்டம் வரலாம்."—விஷ்ணு புராணம், பாகம் 5, அத்தியாயம் 37.

இவ்விதம் தேவர்கள் பிரார்த்தித்தவுடன் ஸ்ரீ பகவான் உத்தவரை நோக்கி, "இன்றையமுதல் 7-வது நாளில் சமுத்திரம் இந்தப் பட்டணத்தைக் கவர்ந்துகொள்ளும். இவ்வுலகத்தை நான் விட்டவுடன் இவ்வுலகம் மங்கள காரியமற்றதும், கலியினால் அவமதிக்கப்பட்டதுமாகிவிடும்."—ஸ்ரீமத் பாகவதம், ஸ்கந்தம் 11, அத்தியாயம் 7.

"என்றைய தினத்தில் ஸ்ரீகிருஷ்ண பகவான் சுவர்க்கம் சென்றாரோ அன்றைய தினமே கலியுகம் வந்தது."—விஷ்ணு புராணம், பாகம் 4, அத்தியாயம் 24.

இதனால் தேவர்கள் பிரார்த்தித்தவுடன் தாமதமின்றிப் பகவான் வைகுண்டம் சென்றாரென்று தெரியவருகிறது.

ஆகையால் 28-வது மகா யுகத்தில் துவாபர யுகத்தின் கடைசிப் பாகத்தில் பகவான் அவதரித்து, 125 வருஷங்கள் பூலோகத்தில் வசித்தார். பின்பு வைகுண்டம் செல்லும்போது கலி வந்துவிட்டது. (துவாபர யுகம் முடிந்தது.)

"என்றைய தினம் ரோகிணி நட்சத்திரமோ அன்றைய தினம் இராத்திரி இருட்டில் தேவகியிடம் பகவான் அவதரித்தார்."—பாகவதம், ஸ்கந்தம் 10, அத்தியாயம் 3.

"நான் வருஷாகாலத்தில் சிராவண மாதத்தில் கிருஷ்ண பட்சத்து அஷ்டமி திதியில் தேவகியிடம் அவதரிக்கப் போகிறேன்."—விஷ்ணுபுராணம், பாகம் 5, அத்தியாயம். 1.

"சிராவண மாதத்தில் கிருஷ்ண பட்சத்திய அஷ்டமி திதியில், ரோகிணி நட்சத்திரத்தில், அர்த்தராத்திரி காலத்தில், சந்திரோதயமாகும் சமயத்தில், அபிஜித் முகூர்த்தத்தில், தேவகியிடம் மகா விஷ்ணுவானவர் அவதரித்தார். அதே காலத்தில் அவருடைய மாயையும் யசோதையினிடம் கோகுலத்தில் புத்திரியாகப் பிறந்தாள்."—ஹரிவம்சம், பாகம் 1, அத்தியாயம் 25.

மேற்காட்டிய பிரமாணங்களால் 28-வது மகா யுகத்தில் துவாபர யுகத்தில் 8,63,875-வது வருஷத்தில் சிராவண மாதத்தில் கிருஷ்ணபட்ச அஷ்டமி திதியில், ரோகிணி நட்சத்திரத்தில், அர்த்த ராத்திரியில் பகவான் அவதரித்தாரென்று நிச்சயிக்கப் படுகிறது. ஆகையால் பகவான் அவதரித்த காலம்முதல் நிகழும் 24-வது பரிவிருத்தியில் விக்ருதி வருஷம் வரையில் 5,177 வருஷங்கள் ஆயினவென்று பெரியோர்களால் சொல்லப் படுகிறது.

—சுபமஸ்து—

# ஸ்ரீமத் பாகவதம்

ஸ்ரீ கிருஷ்ணாய பரமாத்மனே நம:

॥ 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌾𑌗𑌵𑌤𑌮𑍍 ॥

॥ 𑌪𑍍𑌰𑌥𑌮𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑍇 𑌪𑍍𑌰𑌥𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌜𑌨𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑌸𑍍𑌯 𑌯𑌤𑍋𑌽𑌨𑍍𑌵𑌯𑌾𑌦𑌿𑌤𑌰𑌤𑌤
𑌶𑍍𑌚𑌾𑌰𑍍𑌥𑍇𑌷𑍍𑌵𑌭𑌿𑌜𑍍𑌞𑌃 𑌸𑍍𑌵𑌰𑌾𑌟𑍍
𑌤𑍇𑌨𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌹𑍃𑌦𑌾 𑌯 𑌆𑌦𑌿𑌕𑌵𑌯𑍇
𑌮𑍁𑌹𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌯𑌤𑍍𑌸𑍂𑌰𑌯𑌃 ।
𑌤𑍇𑌜𑍋𑌵𑌾𑌰𑌿𑌮𑍃𑌦𑌾𑌂 𑌯𑌥𑌾 𑌵𑌿𑌨𑌿𑌮𑌯𑍋
𑌯𑌤𑍍𑌰 𑌤𑍍𑌰𑌿𑌸𑌰𑍍𑌗𑍋𑌽𑌮𑍃𑌷𑌾
𑌧𑌾𑌮𑍍𑌨𑌾 𑌸𑍍𑌵𑍇𑌨 𑌸𑌦𑌾 𑌨𑌿𑌰𑌸𑍍𑌤𑌕𑍁𑌹𑌕𑌂
𑌸𑌤𑍍𑌯𑌂 𑌪𑌰𑌂 𑌧𑍀𑌮𑌹𑌿 ॥ ॥ ௧ ॥

𑌧𑌰𑍍𑌮𑌃 𑌪𑍍𑌰𑍋𑌜𑍍𑌝𑌿𑌤𑌕𑍈𑌤𑌵𑍋𑌽𑌤𑍍𑌰 𑌪𑌰𑌮𑍋
𑌨𑌿𑌰𑍍𑌮𑌤𑍍𑌸𑌰𑌾𑌣𑌾𑌂 𑌸𑌤𑌾𑌂
𑌵𑍇𑌦𑍍𑌯𑌂 𑌵𑌾𑌸𑍍𑌤𑌵𑌮𑌤𑍍𑌰 𑌵𑌸𑍍𑌤𑍁 𑌶𑌿𑌵𑌦𑌂
𑌤𑌾𑌪𑌤𑍍𑌰𑌯𑍋𑌨𑍍𑌮𑍂𑌲𑌨𑌮𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌾𑌗𑌵𑌤𑍇 𑌮𑌹𑌾𑌮𑍁𑌨𑌿𑌕𑍃𑌤𑍇
𑌕𑌿𑌂 𑌵𑌾 𑌪𑌰𑍈𑌰𑍀𑌶𑍍𑌵𑌰𑌃
𑌸𑌦𑍍𑌯𑍋 𑌹𑍃𑌦𑍍𑌯𑌵𑌰𑍁𑌧𑍍𑌯𑌤𑍇𑌽𑌤𑍍𑌰 𑌕𑍃𑌤𑌿𑌭𑌿𑌃
𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑍁𑌭𑌿𑌸𑍍𑌤𑌤𑍍𑌕𑍍𑌷𑌣𑌾𑌤𑍍 ॥ ॥ ௨ ॥

𑌨𑌿𑌗𑌮𑌕𑌲𑍍𑌪𑌤𑌰𑍋𑌰𑍍𑌗𑌲𑌿𑌤𑌂 𑌫𑌲𑌂
𑌶𑍁𑌕𑌮𑍁𑌖𑌾𑌦𑌮𑍃𑌤𑌦𑍍𑌰𑌵𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍 ।
𑌪𑌿𑌬𑌤 𑌭𑌾𑌗𑌵𑌤𑌂 𑌰𑌸𑌮𑌾𑌲𑌯𑌂
𑌮𑍁𑌹𑍁𑌰𑌹𑍋 𑌰𑌸𑌿𑌕𑌾 𑌭𑍁𑌵𑌿 𑌭𑌾𑌵𑍁𑌕𑌾𑌃 ॥ ॥ ௩ ॥

## அத்தியாயம் 1

### சௌனக பிரச்சினம்

"எதனிடமிருந்து சகல பிரபஞ்சங்களும் உண்டாகின்றனவோ, எதனல் காப்பாற்றப்படுகின்றனவோ, எதனிடத்தில் லயிக்கின்றனவோ, அது பிரம்மம்" என்ற சுருதியில் சொல்லியபடியுள்ள தடஸ்த இலட்சணமுள்ளவரும், அன்வய வியதிரேகங்களால் சகல ஜகத்காரணரும், எல்லாவற்றையும் அறிந்தவரும், சுயமாய்ப் பிரகாசிப்பவருமான எந்தப் பரமேசுவரர், நான்கு முகங்களுள்ள பிரம்மதேவருக்கு வேதங்களை மனத்தால் உபதேசித்தாரோ (அந்த வேதங்களைத் தெரிந்துகொள்வதில் வித்வான்களும் மோகிக்கிருர்கள்.) தேஜஸ், ஜலம், பூமி ஆகிய இவைகள் ஒன்றில் ஒன்று மாறுதலாகத் தோன்றுகிறதுபோல எந்தப் பரமாத்மாவிடம் (அவர் ஸத்யராகையால்) முக்குணங்களுடைய காரியமும் சத்தியமாகத் தோற்றுகிறதோ, அந்த சத்திய சுரூபியாகிய பரமாத்மாவைத் தியானிக்கிருேம். அவர் தம்முடைய தேஜஸினல் மாயா காரியமாகிய பிரபஞ்சத்தைத் தாண்டினவர்.

2. வேதவியாஸ மகாமுனியால் செய்யப்பட்டதும், அழகு பொருந்தியதுமான ஸ்ரீமத் பாகவத கிரந்தத்தில் மோட்சத்தைக்கூட விரும்பாமல் செய்யும் ஈசுவரருடைய ஆராதனரூபமாகிய உத்தம தர்மமானது காட்டப்பட்டிருக்கிறது. பிறருடைய மேன்மையைச் சகிக்காமலிருப்பதாகிய மாத்சரியமில்லாத சாதுக்களால் அறியக்கூடியதும் (ஜீவன், மாயை, ஜகத் என்னும் இவைகள் பரமாத்மாவை விட வேருனவையல்ல), மேலான சுகத்தைக் கொடுக்கக் கூடியதும், மூன்றுவகையானதாபங்களைப் போக்கக்கூடியதும், உண்மையுமான வஸ்துவானது இதில் நன்ருக வர்

ணிக்கப்பட்டிருக்கிறது. மற்ற சாஸ்திரங்களாலும், இதர சாதனங்களாலும் ஈசுவரனை இருதயத்தில் நிலைக்கச்செய்ய முடியுமா? ஆகையால் அவைகளால் என்ன பிரயோசனம்? இந்த ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்க விரும்பிய புண்யவான்களுடைய மனத்தில் கேட்ட க்ஷணத்திலேயே பகவான் நிலையாக வசிக்கிறார்.

3. வேதமாகிய கற்பக விருட்சத்தினுடைய பழம் ஸ்ரீமத் பாகவதமேயாம். இது வைகுண்டத்திலிருந்து நாரதரால் எனக்கும், என்னால் சுகருக்கும், அவர் முகமாகப் பூமியிலும் நழுவியது (பரவிற்று). இது அமிருத திரவமுள்ளது (ருசியுள்ளது); ரஸரூபமாயுள்ளது. ஓ! ரஸத்தை யறிந்தவர்களே! அதன் விசேஷ பாவனையில் சாமர்த்தியமுள்ளவர்களே! மேற்காட்டிய பழத்தை முக்தர்களாக இருக்கும் பொழுதும் அடிக்கடி புசியுங்கள்.

4—23. ஸ்ரீ மகாவிஷ்ணுவின் க்ஷேத்திரமாகிய நைமிசமென்னும் வனத்தில், சௌனகர் முதலிய மகரிஷிகள், சுவர்க்க லோகத்தை யடைவதற்காக ஆயிர வருஷங்கள் ஸத்ரமென்னும் யாகத்தை யனுஷ்டித்துவந்தார்கள். அப்பொழுது ஒரு நாள் அவர்கள் காலையில் அக்னி காரியங்களை முடித்துக்கொண்டு, எல்லோராலும் பூஜிக்கப்பட்டு, சுகமாய் உட்கார்ந்திருக்கும் ஸூதரை நோக்கி மிக்க பிரீதியுடன், "ஓ பாபமற்றவரே! புராணங்கள், இதிகாசங்கள், தர்ம சாஸ்திரங்கள் இவைகளை நீர் படித்திருப்பதுடன் அவ்வவற்றின் அர்த்தத்தைப் பிறருக்கும் தெரியும்படி சொல்லியுமிருக்கிறீர். ஓ சாதுவே! வேதங்களை யறிந்தவர்களுக்குள் சிறந்தவராகிய வியாஸ பகவானுக்குத் தெரிந்தவைகளும், பரம் (ஸகுணபிரம்மம்), அபரம் (நிர்க்குணபிரம்மம்) இவைகளை நன்றாய் அறிந்த மற்ற மகரிஷிகளுக்குத் தெரிந்தவை

களும், அவர்களுடைய அனுக்கிரகத்தால் தங்களால் உண்மையாக அறியப்பட்டவைகளே. ஆசாரியர்கள் ரகசியமான விஷயத்தையும் பிரியனாகிய சிஷ்யனுக்குச் சொல்வது வழக்கம்; ஆகையால் எப்பொழுதும் க்ஷேமத்தையே கொடுப்பது என்னதென்று சகல கிரந்தங்களைப் படித்துத் தாங்கள் நிச்சயமாகத் தெரிந்துகொண்டதை எங்களுக்கு உபதேசிக்கவேண்டும். ஓ சபைக்குரியவரே! இந்தக் கலியுகத்தில் ஜனங்கள்பெரும்பாலும் அதிகக் காலம் ஜீவித்திருப்பதில்லை; சோம்பலுள்ளவர்கள்; அதிலும் மிகவும் மந்தபுத்தியுள்ளவர்கள்; தவிரவும் பாக்கியக் குறைவுள்ளவர்கள்; (விக்னங்களால் வருத்தப்பட்டவர்கள்) வியாதி முதலியவைகளால் துன்பமடைந்தவர்கள்; ஆகையால் வெகு காலம் அநேக சாஸ்திரங்களைக் குரு முகமாய்க் கேட்கவும், அவைகளின் சாரத்தைத் தாமாகத் தெரிந்துகொள்ளவும் சக்தியற்றவர்கள்; பலவகையான கர்மங்களைச் சொல்லும் அநேக சாஸ்திரங்களோ தனித்தனியே தெரிந்துகொள்ள வேண்டியவைகளாக இருக்கின்றன. ஆனதால் எதனால் பரமாத்மாவின் பிரசாதம் சித்திக்குமோ அந்த சாரமான விஷயத்தைத் தங்களுடைய புத்திக்குத் தோன்றியபடி எடுத்து உபதேசிக்கவேண்டும். அதனால் சகல பிராணிகளும் க்ஷேமத்தை யடைவார்கள். ஓ! ஸூதரே! தங்களுக்கு இவ் விஷயம் யாவும் தெரிந்தவையே. தமக்கு க்ஷேமமுண்டாகட்டும். அளவில்லாத ஐசுவரியம் முதலியவைகளுள்ள ஸாத்வதர்களுக்கு நாதனாகிய புருஷோத்தமன் தேவகியினிடம் வசுதேவருக்குப் புத்திரனாக எதனைச் செய்வதற்காக அவதரித்தாரோ, அந்தச் சரிதத்தைக் கேட்க விரும்பும் எங்களுக்குத் தாம் உபதேசிக்கவேண்டும். எந்தப் பகவான் பூமியில் அவதரித்ததால் பிராணிகளுக்கு க்ஷேமம், ஐசுவரியம் இவைகள் கிடைத்தனவோ, கோரமாகிய ஸம்ஸாரத்தை

(இறப்புப் பிறப்பை) அடைந்தவன் எவருடைய திவ்ய நாமங்களை உச்சரித்த மாத்திரத்தில் அதிலிருந்து விடுபடுகிறானோ, எவருடைய நாமத்தைக் கண்டு பயமும் பயப்படுகிறதோ, மேலும் இந்திரியங்களை ஜயித்தவர்களான முனிகள் எவருடைய பாதங்களையே ஆசிரயித்திருக்கிறார்களோ, எவருடைய பாதத்திலிருந்து உண்டான கங்கையின் ஜலமானது தரிசிப்பவர்களையும், தொடுகிறவர்களையும், ஆசமனஞ் செய்பவர்களையும் பரிசுத்தர்களாகச் செய்கிறதோ, புண்ய சுலோகர்களால் கொண்டாடக்கூடிய அந்தப் பகவானுடைய சரிதம் ஸம்ஸார துக்கத்தைப் போக்குமாகையால் சுத்தனாகவேண்டுமென்ற எண்ணமுள்ள எவன்தான் அதைக் கேட்கமாட்டான்? ஆகையால் நாரதர் முதலிய ஞானிகளால் எப்பொழுதும் கானஞ் செய்யப்பட்டதும், ஸம்ஸார துக்கத்தை நிவர்த்திப்பதுமான, மேலான அந்தச் சரிதத்தைக் கேட்க நாங்கள் மிக்க சிரத்தையுள்ளவர்களாக இருக்கிறோம். பிரம்மா, ருத்திரன் முதலிய மூர்த்திபேதத்தைத் தரிப்பவரும், தம்முடைய மாய மகிமையால் லீலைகளைச் செய்பவருமாகிய ஸ்ரீ மகாவிஷ்ணுவின் அவதார கதைகளைச் சொல்லவேண்டும். அவைகளைப் போதிக்க, தாங்கள் வல்லமையுள்ளவர்களே. உத்தமசுலோகராகிய பகவானுடைய சரிதத்தைக் கேட்கக் கேட்க எங்களுக்குப் போதுமென்ற திருப்தி யுண்டாகிறதில்லை. பகவானுடைய சரிதமானது, கேட்பவர்களான ரஸிகர்களுக்கு அடிக்கடி இன்பத்தை கொடுக்கும். ஸ்ரீ மகாவிஷ்ணுவானவர் மாயையால் மனிதனாக அவதரித்து, பலராமனுடன் சேர்ந்து, மனிதர்களால் செய்ய முடியாத கோவர்த்தன பர்வதத்தைத் தூக்கியது முதலிய லீலைகளைச் செய்தாரல்லவா? இப்பொழுது கலியுகம் வந்துவிட்டபடியால், நாங்கள் விஷ்ணுவின் பதத்தையடைய விரும்பி மேற்சொல்லிய பகவானுடைய சரிதத்

தைக் கேட்பதற்காகவே தீர்க்க ஸத்ரஞ் செய்வதான காரணத்தைக்கொண்டு இந்த நைமிசாரண்யத்தில் வசிக்கிறோம். சமுத்திரத்தைத் தாண்ட விரும்பியவர்களுக்கு ஓடக்காரன் கிடைத்தாற்போல அதர்மத்திற்குப் பந்துவாகிய இந்தக் கலியைக் கடக்க விரும்பிய எங்களுக்கு உம்முடைய தரிசனம் தெய்வச் செயலால் நேர்ந்தது. தர்மத்தைக் காப்பாற்றி வந்தவரும், யோகிகளுக்கு அதிபதியுமான ஸ்ரீ கிருஷ்ண பகவான் மனித சரீரத்தைவிட்டுத் தம்முடைய சுரூபத்தை யடைந்தபின்பு தர்மம் யாரைச் சரணமடைந்தது? சொல்லவேண்டும்" என்று கேட்டார்கள்.

## நோட்டு

ஸ்ரீ வேதவியாஸ பகவான் பாகவத சாஸ்திரத்தைச் செய்ய விரும்பி, இடையூறின்றி முடியவேண்டியதற்காகப் பெரியோர்களுடைய சம்பிரதாயப்படி பரமாத்மாவை ஸ்மரிப்பதாகிய மங்களத்தைக் காட்டுகிறார்.—ஸ்ரீதரீயம்.

1—1 எவரிடமிருந்து—ஸ்ரீ பாதராயணரென்னும் வியாஸ பகவான், சகல ஜனங்களேயும் ஸம்ஸார பந்தத்திலிருந்து நிவர்த்தித்து, அனுக்கிரப்பதற்காக வேதாந்தத்தாலே அறியக்கூடியதும், மற்ற பிரமாணங்களுக்குப் புலப்படாததுமான பரப்பிரம்மத்தை எல்லா வர்ணத்தார்களும் அறியச் செய்ய நினைத்து ஸ்ரீமத் பாகவதமென்னும் கிரந்தத்தை நாரதருடைய உபதேசத்தால் செய்ய விரும்பினர். அது,விக்னமில்லாமல் முடியவேண்டியதற்காக பரமாத்மாவைத் தியானஞ்செய்தார். "எதனிடமிருந்து இந்தப் பிரபஞ்சம் உண்டாகின்றதோ"—"இந்த ஆகாசரூபமாகிய ஆனந்தமில்லாமற்போனல் எவன் ஜீவிப்பான்" என்ற அன்வய வியதிரேக சுருதிகளால் பிரம்மம் ஜகத்காரணமென்றும், அர்த்தேஷு அபிக்ஞ: என்று அன்வயஞ்செய்து, ஸகல பதார்த்தத்தை யறிந்தவர் என்று அர்த்தஞ்செய்வதால், பிரம்மத்தினிடத்தில் எல்லாவற்றையும் அறிந்திருப்பது முதலிய சகல கல்யாண குணங்களிருப்பதாயும் காட்டப்பட்டது.

பரமாத்மாவானவர், பிரம்மதேவருக்குத் தேஜஸ், ஜலம், பூமி இவைகளை ஒன்ளுேடொன்று கலந்து சிருஷ்டிக்கும் வகையை உபதேசித்ததுபோல, பிரீதியுடன் வேதத்தையும் உபதேசித்தார். "வேதங்கள் முடிவில்லாதவைகள்'' என்றபடி வேதங்களைப் பூராவாகத் தெரிந்துகொள்ள முடியாதாகையால், தடையற்ற ஞானமுள்ள யோகிகளும் மோகிக்கிருர்கள். "அந்த விஷ்ணுவின் மேலான பதத்தை எப்பொழுதும் ஸூரிகள் பார்க்கிருர்கள்'' என்றபடி நித்யஸூரிகள், நாராயணனுடைய திவ்ய மங்கள தேகத்தின் ஒப்பற்ற காந்தியைத் தரிசித்து மோகிக்கிருர்கள். மேற்காட்டிய மூன்று பூதங்களுடைய திரிவிருத்கரண சிருஷ்டியானது எவரிடத்தில் பொய்யாக விருக்கிறதோ (அது பகவானிடத்தில் சம்பந்திக்கிறதில்லையென்று கருத்து.) மேலும், எவர் தம்முடைய தேஜசிஞல் சகல தோஷங்களையும் நாசஞ் செய்கிருரோ, முக்காலத்திலும் இருப்பவராகையால் எவர் நித்யரோ, ருத்திரன் முதலியவர்களைவிடச் சிறந்தவராகையால் பரனே, அந்த பரப்பிரம்மத்தைத் தியானிக்கிறோம்.
—பாகவத சந்திரிகா.

ஒருகால் அசுரர்கள் பூமியில் அரசர்களாகப் பிறந்து அந்தப் பாரத்தால் பூமி மிக வருத்தமடைந்தாள். அப்போது ப்ரம்மா, ருத்திரன் முதலிய தேவர்கள், பூமிக்கு நேர்ந்த சிரமத்தை நிவர்த்திக்கும்படி ஸ்ரீ மஹா விஷ்ணுவை வேண்டிக்கொண்டார்கள். பகவான், அவர்களுடைய பிரார்த்தனைக் கிசைந்து, வெகு காலமாய்த் தபசு செய்துகொண்டிருக்கும் சத்யவதினியிடம் பராசருக்குப் புத்திரனுக அவதரித்தார். இவர்தான் வியாஸரென்று சொல்லப்படுகிருர். இவர் மந்தபுத்தியுள்ள ஜனங்களிடத்தில் மிகுந்த கருணையுள்ளவராய், வேதங்களைப் பிரித்து அதன் அனர்த்தத்தை நன்ருய்க் காட்டுவதற்காகப் பிரும்ம ஸூத்ரங்களைச்செய்தார். பின்பு அதைப் படிக்கத் தகாத ஸ்திரீகள் சூத்ரர்களுக்காகப் புராணங்களையும் வெளியிட்டார். பின்னும் அவர் வேதத்தின் அர்த்தத்தை நன்ருய்க் காட்டுகிறதும், 12 ஸ்கந்தமுள்ளதும், 18,000 கிரந்தங்களடங்கியதுமான பாகவத புராணத்தைச் செய்ய வாரம்பித்து, தாம் எப்போதும் பிரம்ம ஸாக்ஷாத்காரமுள்ளவராஞலும், இயற்கையில் விக்னம் சம்பந்தமில்

லாதவராலும், கிரந்தாரம்பத்தில் செய்யவேண்டிய ஸம்பிரதாயத்தை வித்வான்களுக்குத் தெரிவிப்பதற்காக, நாராயண ஸ்மரணமாகிய மங்களத்தைச் செய்தார். அதாவது—பரனைத் தியானஞ் செய்கிறோம். கிரந்தத்தின் ஆரம்பத்தில் நமஸ்கரிக்கக்கூடிய தேவதைகள் இருவகையானவைகள். 1. ஆதிகாரிக தேவதை.—சூரியன் முதலிய கிரகங்கள். 2. அபீஷ்ட தேவதை—பகவான். மேற்காட்டிய இருவகையான தேவதைகளின் சுரூபியும், ஸகல கல்யாண குணங்கள் நிறைந்தவருமான பரமாத்மாவே இந்தப் பாகவத சாஸ்திரத்தால் வர்ணிக்கப்படுகிறார். நாராயணனைவிடப் பரன் வேறொருவருமில்லை. அந்தப் புண்டரீகாக்ஷனே தேவன். அந்த நாராயணனே பரன்''—ஹரிவம்சம்.

"பிரும்மத்தை யறிந்தவன் பரனை யடைகிறான்''—சுருதி.

இவர் ஜகத்திற்குக் காரணமாயிருப்பவர். "எவரிடமிருந்து இந்தப் பூதங்கள் உண்டாகின்றனவோ, எவரால் உண்டானவைகள் ஜீவிக்கின்றனவோ, எவரிடம் லயிக்கின்றனவோ அதுவே பிரம்மம்''—சுருதி.

நான் எல்லாவற்றிற்கும் உற்பத்திஸ்தானம்; என்னிடமிருந்தே எல்லாம் உண்டாகின்றன; எல்லாப் பிராணிகளையும் சிருஷ்டிக்கிறவனும், காப்பாற்றுகிறவனும், நாசஞ்செய்கிறவனும் நானொருவனே''—ஸ்மிருதி.

மேற்காட்டிய அன்வயத்தால் விஷ்ணுவே ஜகத்காரணரென்று ஏற்படுகிறது.

ஆட்சேபம்—ருத்திரன் முதலியவர்களும் ஜகத்திற்குக் காரணமென்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறதே; அப்படியிருக்க, மேற்காட்டியது எப்படிப் பொருந்தும்?

சமாதானம்—வேதத்தில் சில பாகத்தில் அப்படிச் சொல்லப்பட்டிருந்தாலும், பெரும்பாலும் விஷ்ணுவே ஜகத்காரணம் என்றே சொல்லப்பட்டிருக்கிறது. 'எல்லா வேதங்களும் எந்தப் பதத்தைச் சொல்லுகின்றனவோ'—சுருதி.

"சகல வேதங்களாலும் அறியக்கூடியவன் நானே"—ஸ்மிருதி.

ஆட்சேபம்—பரமாணுவே ஜகத்காரணம் என்று ஏன் சொல்லக்கூடாது?

சமாதானம்—அப்படியல்ல. பிரத்யட்சத்திற்கும் ஆகமத்திற்கும் விரோதமில்லாத யுக்தியால் பிரம்மமே ஜகத்காரணமென்று சொல்லக்கூடும். புத்திரனுக்குப் பிதாவே காரணமென்று தெரியவருகிறதல்லவா? அதுபோல் பிரம்மதேவர் முதலியவர்களுக்குச் சேதனனே காரணமாயிருக்கவேண்டும். மாயை முதலியவைகள் அசேதனமாகையால் அவைகளைக்காரணமென்றுசொல்லக்கூடாது. இந்த விஷயம் சுருதியில் பலவிடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. பரமாணுவே ஜகத்திற்குக் காரணமென்று சொல்பவர்கள் சுருதி விருத்தமான யுக்தியைக் காட்டுவதனுல் அது ஒப்புக்கொள்ளக்கூடியதல்ல. அந்தப்பரமாத்மா எல்லாவற்றையும் பொதுவாகவும் விசேஷமாகவும் அறிந்தவர். அதனுல் பிரம்மதேவருக்கு வேதங்களையுபதேசித்தவர். அவருடைய அனுக்ரகமில்லாதவரையில் பிரம்மதேவர் முதலியவர்களும் மோகிக்கிறுர்கள். தேஜஸ், ஜலம், பூமி இவைகளின் காரியம் எப்படி ஸத், அஸத் இவைகளைவிட வேருக ஆகிறதில்லையோ, அப்படி பகவானுல் செய்யப்படுகிறபடியால் ஈசவர சிருஷ்டி, ஜீவ சிருஷ்டி, ஜட சிருஷ்டி ஆகிய இவைகள் மூன்றும் பொய்யானவையல்ல. மாயையைக் கடந்த ஆனந்தானுபவ ரூபராயு மிருக்கும் பரமபுருஷனைத் தியானிக்கிறோம். தேஜஸ் ஒன்ருனலும், தான்-தன் காரியமான பூமி முதலியவைகளில் பிரவேசித்து, சில காலத்தில் வெளிப்படுகிறதுபோல, பகவான் ஜகத்தைச் சிருஷ்டித்து, அவைகளில் பிரவேசிக்கிறுர். பின்பு பக்தர்களை அனுக்ரகிப்பதற்காகக் கிருஷ்ணன் முதலிய அவதாரஞ் செய்கிறுர். இதுவே ஈசுவர சிருஷ்டி யெனப்படும். சூரியன் முதலிய தேஜஸினுல் ஜலத்தில் அனேக பிரதிபிம்பங்கள் உண்டாவதுபோல் ஸ்தூல சரீரம் முதலிய உபாதிகளால் ஈசுவரனுடைய பிரதிபிம்பங்களாகிய ஜீவர்கள் உண்டாகிறுர்கள். இதுவே ஜீவ வர்க்கம் எனப்படும். குயவன் மண்ணினுல் குடம் முதலியவைகளை யுண்டுபண்ணுவதுபோல ஈசு

வரன் அகங்காரம் முதலியவைகளைச் சிருஷ்டிக்கிறார். இதுவே ஜட ஸர்க்கம்:—விஜயத்வஜீயம்.

1—4. லட்சணம்:—இருவகை. (1) தடஸ்த லட்சணம்:-மேற் காட்டியது 2. ஸ்வரூப லக்ஷணம்—ஸத்யசுரூபி, சகலத்தையு மறிந்தவர், ஸகல சக்தி யுள்ளவரென்பது. அன்வயம்—ஆகாசம் முதலிய காரியங்களின் ஸத்தையானது, ஆத்மாவின் ஸத்தையால் என்பது. வியதிரேகம்—எதிலில்லாததால் அது இல்லையோ அது (உதா) ஆத்மஸத்தையில்லாததனால் ஆகாச புஷ்பங்களில்லை—ஸ்ரீத.

பரமாத்மா, ஸத்ரூபியாய் எல்லாவற்றிலும் அனுவிருத்தித் திருப்பதால் எல்லாவற்றிற்கும் காரணமாகிறார். (உதா) மண்ணானது அதன் காரியமாகிய குடம், மடக்கு, தோண்டி முதலியவைகளிலும், தங்கமானது அதின் காரியமாகிய குண்டலம் முதலிய நகைகளிலும் தொடர்ந்திருக்கிறது—ஸ்ரீத.

4—5. அறிந்தவரும்—பிரதானம் (மாயை) ஜகத்காரணமானாலும் அதல்லவென்று காட்டப்பட்டது. "மாயை ஜடமானகையாலும், வேதத்தில் சிருஷ்டிக்க சங்கற்பித்தாரென்று சொல்லியிருப்பதாலும், அம்மாதிரியான சங்கற்பம் மாயையினிடம் ஏற்பட நியாயமில்லாததனாலும், மாயை ஜகத் காரணமல்ல—வியாஸ ஸூத்ரம்.

2—1. பிரகாசிப்பவர்—இதனால் சேதனனாகிய ஜீவனைவிட மேலானவரென்று காட்டப்பட்டது.

2—2 உபதேசித்தாரோ—"எல்லாவற்றிற்கும் முந்தி ஹிரண்ய கர்ப்பர் உண்டானார். அவர் சகல பூதங்களுக்கும் ஒரே யஜமானனாக இருந்தார். அவர் பூமியையும் அந்தரிக்ஷத்தையும் காப்பாற்றி வந்தார்" என்ற சுருதிப்படி பிரம்மதேவருக்கும் மேலானவரென்று காட்டப்பட்டது. எவர் முதலில் பிரம்மாவை யுண்டு பண்ணுகிறாரோ, எவர் அவருக்கு வேதங்களை உபதேசிக்கிறாரோ அந்த ஸ்வப்ரகாசரான தேவனை மோட்சமடைய விரும்பிய நான் சரணமடைகிறேன்.'—சுருதி.

மனதால்—பிரம்மதேவர் பிறரிடத்தில் வேதாத்தியயனஞ் செய் தாரென்று ஓரிடத்திலும் சொல்லப்படாமலிருந்தாலும் பரமாத்மா வின் சங்கற்ப மாத்திரத்தால் பிரம்மதேவருக்கு வேதங்கள் தோன் றினவென்று தாத்பரியம்.

வேதங்களை—பிரம்மா தானாக வேதங்களைத் தெரிந்துகொண் டவரல்லவென்பது கருத்து.—ஸ்ரீத.

பிரம்மதேவருக்கும் ஞானத்தை யுபதேசித்தவரும், இயற்கை யில் அளவற்ற நித்ய ஞானமுள்ளவரும், எல்லாவற்றையும் பிரகா சிக்கச்செய்பவரும், மற்ற தேஜஸை அபேட்சியாமலேயே பிரகாசிப்ப வரும், ஸத்யசுரூபியாயுமுள்ள பரமாத்மாவே ஜகத்காரணம். அவரே திவ்ய மங்களஸ்வரூபி. அவரைத் தியானிப்பதால் ஸகல க்ஷேமங்களும் கிடைக்கும்.

இந்தப் புராணத்தில் காயத்ரியின் அர்த்தமாகிய பரப்பிரம்ம வித்தை நன்றாய்க் காட்டப்பட்டிருக்கிறது.—அந்தக் காயத்ரீ, வேத மாதா. இது வேதத்தையே பிரமாணமாய்க் கொண்டது. "எதில் காயத்ரியை அனுசரித்து, தர்மங்கள் விஸ்தாரமாக வர்ணிக்கப்படு கின்றனவோ, எதில் விருத்ராசுர வதத்தின் கதை சொல்லப்பட் டிருக்கிறதோ அது பாகவதமென்று சொல்லப்படுகிறது. அதை எழுதி சுவர்ணத்தால் செய்யப்பட்ட சிம்மப் பிரதிமையுடன் புரட் டாசி மாதத்திய பௌர்ணமியில் எவன் தானஞ்செய்கிறானோ அவன் உத்தம கதியை யடைகிறான். இது 18,000 கிரந்தங்களுள்ளது"— மத்ஸ்ய புராணம். "ஓ அம்பரீஷ! உனக்கு சம்சார பந்தம் நிவர்த்தி யாகவேண்டுமானால் சுகஸ்வாமியால் உபதேசிக்கப்பட்ட ஸ்ரீமத் பாகவதத்தைப் பிறர் சொல்லக் கேளும். தானாகவாவது படியும்." பத்மபுராணம். சகல ஜகத்தையும் படைத்து, அவைகளைக் காப் பாற்றுகிறவர் என்றதாலும், ஸ்வயம்பிரகாசர் என்றதாலும் காயத்ரி யின் அர்த்தமானது காட்டப்பட்டிருக்கிறது.

6. மாறுத—கோடைக்காலத்தில் மத்தியான வேளையில் வனம் முதலிய சூன்யமாகிய விடங்களில், வெயிலை ஜலமென்று

நினைத்து, தாகமுள்ள ஜனங்கள் அதனுல் தாகத்தைப் போக்கிக் கொள்ளலாமென்று அதை யனுசரிக்கிருர்களல்லவா? அவ்விடத்தில் தோற்றுகிற ஜலமானது வாஸ்தவமல்ல. ஆசிரயமாகிய தேஜஸ் உண்மையானதால் (வியவகார காலத்தில்) ஜலமிருப்பதுபோல் தோன்றுகிறதுபோல ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணங்களால் உண்டாகியிருக்கும் சிருஷ்டிகள் யாவும் ஸத்யமன்று. ஆசிரயமாகிய ஆத்மாவின் ஸத்தையால் ஸத்தாகத் தோற்றுகிறது. ஸ்ரீத 12—வியாஸ மஹா—வியாஸ மஹாமுனியால் செய்யப்பட்ட இந்தப் பாகவதமென்ற கிரந்தத்தில் பக்தியாகிய தர்மம் சொல்லப்பட்டிருக்கிறது. அபிசார பிரயோகமாகிய சியேன யாகம்போல் இது பாபமுள்ளதல்ல. மோக்ஷ சாதனமாகையால் மிகவும் மேலானது; மாத்ஸர்யம் முதலிய துர்க்குணமில்லாத ஸாதுக்களால் அனுஷ்டிக்கக்கூடியது. இதனுல் நித்ய வஸ்துவாகிய பரமாத்மாவே அறியக்கூடியவர். அவரே அக்னி முதலிய ரூபமாகவிருந்து ஸ்வர்க்கம் முதலியவைகளைக் கொடுக்கிருர்; மூவகையான தாபத்தைப் போக்குகிருர்; புண்யசாலிகள் இந்தக் கிரந்தத்தைக் கேட்கவேண்டுமென்று விரும்பிய க்ஷணத்திலேயே அவர்களுடைய இருதயத்திலே பகவான் ஸ்திரமாக வசிக்கிருர். மற்ற கிரந்தங்கள் இதுபோல பக்தியையுண்டுபண்ணி, அதனுல் ஈசுவரனை மனத்திலிருக்கச் செய்கிறதில்லை. ஆகையால் இதுவே உத்தமமானது.—சந்திரிகா. அழகு—"தோஷமற்ற சகல புராணங்களும், பாகவதமில்லாத காலத்தில் ஸாதுக்களுடைய சபையில் பிரகாசிக்கும்'' என்றபடி பந்தகமாகாத "ஓ அர்ஜுன! நீ செய்கிறதையும், புசிக்கிறதையும், ஹோமஞ்செய்கிறதையும், தானஞ்செய்வதையும், தபஸ்செய்வதையும் எனக்கு அர்ப்பணம் செய்துவிடு"-(பகவத்கீதை) என்றபடி, பலனை யுத்தேசியாமல் செய்யும் கர்மங்களே மேலானவைகள். அவைகளே கபடமற்ற தர்மங்கள். "பகவானுடைய நாமங்களைச் சொல்லுவது முதலிய பக்தியே மனிதர்களுக்கு மேலான தர்மம். அதனுலேயே பகவான் சந்தோஷப்படுகிருர்'' என்றபடி பக்தியே மேலான தர்மம்.—விஜயத்வஜீயம். மோட்சத்தை விரும்பியவர்களுக்கு மிக ரமணீயமானது—ஸ்ரீத. 28—அமிருதத்ருவ—மோட்சத்திற்கு ஸாதனமாகிய

பக்தி ரசமுள்ளது. இதைச் சரீரம் போகும்வரையில் பானஞ்செய்யுங்கள். சந்த். செய்யப்பட்ட—கர்த்தாவினுடைய மேன்மையால் கிரந்தத்திற்கு மேன்மை காட்டப்பட்டது. அறியக்கூடியதும்—ஞான காண்டத்தைவிட உயர்ந்ததென்று காட்டப்பட்டது. புண்ய 23—புண்யம் செய்யாதவர்களுக்கு ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்கவேண்டுமென்ற ஆசையுண்டாகாது. 24-ஸ்திரமாக—தேவதா காண்டத்தைவிட மேலானதென்று கருத்து. மேற்காட்டியபடி கர்ம காண்டம், தேவதா காண்டம், ஞான காண்டம் ஆகிய மூன்று பாகங்களடங்கிய வேதார்த்தம் முழுவதும் இதனால் எளிதில் தெரிந்துகொள்ளக்கூடியதா யிருப்பதால் சகல சாஸ்திரத்தைவிட இது மேலானது. ஆகையால் இதை நித்யம் சாதுக்கள் மூகமாய்க் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும்—ஸ்ரீத. பரவிற்று—சிஷ்ய பரம்பரையால் நசுக்கிவிடாமல்ஜாக்கிரதையாகக்கொண்டுவரப்பட்டதென்று காட்டப்பட்டிருக்கிறது. சுகருக்கு உபதேசஞ் செய்தது முதலியவைகள் பாகவதஞ் செய்த காலத்திற்குப் பிந்திய காலத்தில் நடந்ததானாலும், வருங் காரியமும் நடந்ததுபோலவே சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீத. அமிருத—சுகமென்றால் கிளிக்குப் பெயர்: கிளியால் கொத்தப்பட்ட பழம் மிக ரஸமுள்ளதென்று பிரசித்தம். 2 அமிருதம்—மேலான ஆனந்தம். அதே ரஸம், அதையுடையது "அவரே ரசம், ரசத்தையடைந்தே இவன் ஆனந்தமுடையவனாக ஆகிறான்"—சுருதி. ரஸரூப:—மற்ற பழங்களில் எப்படி மேற்புறத்தில் தோலும், அதற்குள்ளே ரசமுமிருக்கிறதோ அப்படி இதில் தோல் முதலிய ரசமற்ற பாகங்களில்லை; ஆட்சேபம்—பழமென்றும், அதையே ரசமென்றும் சொல்வது பொருந்துமா? ரசமுள்ள பழமென்று சொல்லவேண்டாமா? சமாதானம்—மற்ற பழங்கள்போலத் தோல் முதலியவைகளில்லாமல் ரசமாகவே இருக்கிறதென்பதைக் காண்பிப்பதற்காக ரசமென்று சொல்லப்பட்டது. பூமியில் விழுந்த ரஸமென்றால் அதைப் புசிக்கமுடியாதாகையால் அது திரவரூபமாய்ப் போய்விடாமல் புசிக்கத் தகுதியாயிருக்கிறதென்பது பழமென்பதால் காட்டப்பட்டது. முக்தர்—ஆத்மாவிடத்திலேயே ரமித்துக்கொண்டிருப்பவர்களும், ம...

கிரந்தங்களில் ஆசையில்லாதவர்களுமான மஹரிஷிகளும், பகவானிடம் யாதொரு காரணமுமில்லாமல் பக்திசெய்கிறார்கள். இம்மாதிரியான குணமுள்ளவர் ஸ்ரீ மஹாவிஷ்ணு"—பாகவதம், ஸ்கந்தம். I—அத்தியாயம்7.— ஸ்வர்க்கலோகத்தை—ஸ்வர்காய—பகவான். அவரே உலகம் (பக்தர்களுக்கு இருப்பிடம்,) அவரையடைவதற்காக—ஸ்ரீத. ஸ்வர்க்க—மேலான ஆனந்தம், அப்பேர்ப்பட்ட லோகம் பரமபதம். அதையடைவதற்காக—முனி. 3-1 ஸத்ரம்-எந்த யாகத்தில் ரித்விக்குகளே யஜமானர்களாக விருக்கிறார்களோ அது-முனி. ஸத்ரம்—ஸாதுக்களைக் காப்பாற்றுகிறது.—விஜ அக்னி—நித்ய நைமித்திக ஹோமங்களை—முனி. புராணங்கள் 1. பிரம்ம புராணம், 2. பாத்மம், 3. விஷ்ணு புராணம், 4. சிவ புராணம், 5. நாரத புராணம், 6. மார்க்கண்டேயம், 7. ஆக்னேயம், 8. பவிஷ்ய புராணம், 9. பிரம்ம கைவர்த்தகம், 10. லிங்க புராணம், 11. வராஹ புராணம், 12. ஸ்காந்தம், 13. வாமனம், 14. கூர்ம புராணம், 15. மத்ஸ்ய புராணம், 16. கருட புராணம், 17. பிரம்மகாண்டம், 18-வது ஸ்ரீமத் பாகவத புராணம். 24—பல—அனேக சாஸ்திரங்களை அப்யசித்தாலும் அவ்வளவு பலன் கிடைக்கிறதில்லை யென்று கருத்து. ஸ்ரீத. 3—31. க்ஷேம—ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் கதையைக் கால தாமதமின்றிக் கேட்கவேண்டுமென்று விரும்பி, சுருக்கமாய் ஆசீர்வாதஞ் செய்தார்கள். "ஒரு முஹூர்த்தமாவது, ஒரு க்ஷணமாகிலும் ஸ்ரீ வாஸுதேவரை ஸ்மரிக்காமலிருப்பதே கெடுதிக்குக் காரணம்—ஸ்ரீத. 32. ஸாத்-பகவத் பக்தர்கள். ஸ்ரீத. 4—14. நாரதர்-இவர் பிரம்மதேவருடைய மனத்திலிருந்து உண்டானவர். இவர் தேவ ரிஷி; இவருடைய குணங்கள் மஹாபாரதம் ஸபாபர்வத்திலும், சாந்தி பர்வத்திலும் நன்றாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. இவர் கான வித்தையை அப்யசித்த கதை அற்புத ராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இவர் ஞானத்தைப் பிறருக்கு உபதேசிப்பதாலும், அஞ்ஞானத்தைப் போக்குவதாலும் நாரதரென்ற பெயரை யடைந்தார். 21—உத்தம-எவருடைய பெயரை உச்சரித்த மாத்திரத்தில் புண்யம் கிடைக்குமோ அவர். சொல்லவேண்டும்—மஹரிஷியின் கேள்வி

கள் ஆறு. அவைகளில் 1. சாஸ்திரங்களுடைய சாரமானது எது, 2. ஸ்ரீ கிருஷ்ண பகவான் செய்த காரியங்கள் எவை, 3. சிருஷ்டி முதலிய லீலைகள், 4. அவதார கதைகள். 5. பகவானுடைய சரிதம் 6. தர்மத்தை சம்ரட்சித்தது—ஸ்ரீத.

---

## அத்தியாயம் 2

### ஸூதர் பிரதியுத்தரஞ் சொன்னது

ரோமஹர்ஷணருடைய புத்திரரான ஸூதர் அந்த பிராம்மணர்களுடைய நல்வார்த்தையைக் கேட்டுச் சந்தோஷித்து, அவர்களுடைய கேள்வியைச் சிலாகித்துப் பிரதி யுத்தரஞ் சொல்ல ஆரம்பித்துப் பின்வருமாறு தம் குருவை வணங்கினர்.

2-3½. சுகர் அதிபால்ய வயதிலே (உபநயனஞ் செய்யப்படாமலிருக்கும் வயதிலே) கர்ம மார்க்கத்தில் விருப்பமில்லாதவராய், துறவியாகப் போகும்பொழுது, பிதாவாகிய வியாஸர் பிள்ளையைவிட்டுப் பிரிய மனமில்லாதவராய், ஓ! புத்திரா வென்று உரக்க அழைத்தார். அப்பொழுது மரங்கள் விடைகூறின. (மரங்களின் ரூபமாயிருந்து, பிதாவின் பிரீதியைக் குறைப்பதற்காகச் சுகரே அப்படிக் கூறினர் என்பதாம்.) அவர் சகல பிராணிகளுடைய இருதயத்தில் வசிப்பவர். அந்தச் சுக மகாயோகியை நமஸ்கரிக்கிறேன். எவர் சம்சாரமாகிய இருட்டைக் கடக்க விரும்பிய ஜனங்களிடத்தில் கருணை வைத்து, ஒப்பற்ற தமது மகிமையுள்ளதும், சகல வேதங்களின் சாரமாயும், நிகரில்லாததாயும், ஆத்ம தத்வத்தைக் காட்டுவதில் தீபமாயுள்ளதுமான ரகசியமாகிய புராணத்தை வெளியிட்டாரோ, வியாசருடைய புத்திரரும், முனிகளுக்குக் குருவுமாகிய அந்தச்

சுகருக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். நாராயணரையும், மனிதர்களுக்குள் சிறத்தவரான நரனையும், ஸரஸ்வதி தேவி யையும், வியாசரையும் நமஸ்காரஞ்செய்து, பின்பு (ஜயத் தை) கிரந்தத்தைச் சொல்லுகிறேன்.

4-35. ஓ மகரிஷிகளே! நன்ருய்க் கேட்டீர்கள். தாங் கள் கேட்ட விஷயம் உலகத்திற்கே மங்களத்தைக் கொடுக் கக்கூடியது. எதனுல் பரமாத்மா சந்தோஷிப்பாரோ அம் மாதிரி ஸ்ரீ கிருஷ்ணன் விஷயமாகக் கேட்டீர்கள். பலனை உத்தேசியாமல் இடையூறின்றி மகா விஷ்ணுவிடத்தில் செய்யும் பக்தியே மேலான தர்மம். அதனுல் பரமாத்மா மிகவும் சந்தோஷமடைகிருர். பகவானுகிய வாசுதேவரிடத் தில் பக்திசெய்தால், வைராக்கியமும் காரணமற்ற உண்மை யான ஞானமு முண்டாகும். புருஷர்கள் குறைவின்றி, தங்களுக்குரிய தர்மங்களை அனுஷ்டித்தும், அதனுல் பகவா னுடைய கதையைக் கேட்கவேண்டுமென்ற ஆசையுண் டாகாவிட்டால் அது பயன்படாததேயாகும். மகா விஷ்ணுவின் கதையாகிய அமிர்தத்தைப் பானஞ்செய்தும் (கதையைக் கேட்டும்) சித்தமுருகுதல், ஆனந்தத்தால் கண்ணீர் பெருக்குதல், மயிர்க்கூச்சலிடல் என்னும் இவை கள் எவனுக்கு உண்டாகவில்லையோ, அவன் ஆத்ம தத் வத்தைப் பல தடவை குரு முகமாகக் கேட்டாலும் அதன் உண்மையை அறியமாட்டான். (பகவத் பக்தி, வைராக்கியம், ஆத்மஞானம் என்னும் இவைகளே மேலான தர்மமென்று கருத்து.)மோக்ஷத்திற்கு உபயோகமாகிய தர் மத்திற்கு இரண்டாவது புருஷார்த்தமாகிய அர்த்தம் பல னென்றும், தர்மத்தை விட்டுப் பிரியாத அந்த அர்த்தத்திற் குக் காமம் பிரயோசனமென்றும் சிலர் சொல்வது மகரிஷி களால் ஒப்புக்கொள்ளப்படவில்லை. இது பிரசித்தமான விஷயம். இந்திரியங்களைத் திருப்திசெய்வதே (விஷயானு

பவம்) காமத்திற்குப் பலனென்று சொல்வதும் சரியல்ல. ஆனல் ஜீவிப்பதற்குப் போதுமான அளவு விஷயத்தை யனுபவிப்பதே பலனும். தத்துவத்தைத் தெரிந்துகொள்ள விரும்பியவனுக்குக் கர்மங்களால் கிடைக்கும் பலன் பயன் படாது. உண்மையை அறியவேண்டுமென்ற விருப்பமே அவனுக்குப் பலன். மேலும், நாசமற்றதான ஞானசுரூபத்தையே தத்வமென்று உண்மையை யறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். அதனையே உபநிஷத்தை அத்தியயனஞ் செய்தவர்கள் பிரமம் என்றும், ஹிரண்யகர்ப்பனை உபாசிப்பவர்கள் பரமாத்மாவென்றும், ஸாத்வதர்கள் பகவான் என்றுஞ் சொல்லுகிறார்கள். ஆதலால் சிரத்தையுள்ள முனிகள் வேதாந்தம் முதலிய சாஸ்திரங்களைக் குரு முகமாகக் கேட்டு ஸ்திரமாக ஞானம், வைராக்கியம், பக்தி இவைகளை அடைந்தும் ஜீவனுக்கும், பரமாத்மாவுக்கும் பேதமில்லை என்று தெரிந்துகொள்ளுகிறார்கள். ஓ பிராம்மண சிரேஷ்டர்களே! அவரவர்களுடைய ஜாதிக்கும் ஆசிரமத்திற்கும் தகுதியான தர்மத்தைச் சாங்கமாய் (குறைவின்றி) அனுஷ்டித்தால் அவர்களிடத்தில் ஸ்ரீ நாராயணன் பிரியப்படுகிறார். இதுவே அதற்குப் பலமாகும். ஆகையால் பகவானுடைய கதையைக் கேட்கும்போதும், அவருடைய நாம பஜனஞ் செய்யும்போதும், அவரைத் தியானஞ் செய்யுங்காலத்திலும், அவரைப் பூஜிக்கும்போதும் வேறு விஷயத்தில் மனத்தைச் செலுத்தாமலிருக்கவேண்டும். விவேகிகள் பகவத் தியானமாகிற கத்தியால் அகங்கார சம்பந்தத்தை யுண்டு பண்ணும் கர்மபந்தத்தை வெட்டுகிறார்கள். ஆகையால் அந்தப் பகவானுடைய கதையைக் கேட்பதில் விருப்பமில்லாதவர் யார்? (எல்லோரும் விரும்புவார்கள்.) ஓ பிராமணர்களே! புண்ய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்வதால் பாபங்கள் நீங்குகின்றன. பின்பு பெரியோர்களுடைய சேர்க்கை

யுண்டாகின்றது. பிறகு தர்மத்தில் சிரத்தையும், அதன்பின் வாசுதேவருடைய கதையைக் கேட்க விருப்பமும், பின்பு அதில் விசேஷப் பிரீதியுமாகிய இவைகள் முறையே உண்டாகின்றன. தம் கதையைக் கேட்பவர்களுக்கும், நாம பஜனஞ் செய்பவர்களுக்கும் புண்ணியத்தைக் கொடுப்பவரும், சாதுக்களுக்கு அனுகூலத்தைச் செய்பவருமான ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா தம்முடைய கதையைக் கேட்பவர்களுடைய இருதயத்தில் வசித்துக்கொண்டு காமம், கோபம் முதலியவைகளை நாசஞ்செய்கிறார். எப்பொழுதும் பகவத் பக்தர்களைச் சேவிப்பதாலும், பாகவத சாஸ்திரத்தைப் படிப்பதாலும் பெரும்பாலும் அஞ்ஞானம் விலகும். அதனால் உத்தமசுலோகராகிய (புண்யகரமான பெயருள்ள) பகவானிடம் நிலையான பக்தி யுண்டாகும். அப்பொழுது ரஜோகுணம் தமோகுணம் ஆகிய இவைகளாலுண்டாகும் காமம், குரோதம் முதலியவற்றால் அவர்களுடைய மனது விகாரமடையாமல் சத்வகுணமுள்ளதாய்ச் சாந்தமாயிருக்கும். இப்படிப் பகவானிடம் பக்தி செய்கிறவனுடைய மனதானது அதன் மகிமையால் சாந்தமாகிவிடும்; ஆசைகளும் ஒழிந்துவிடும்; பின்பு பரமாத்மாவின் உண்மையான சுரூப ஞானமுண்டாகும். ஆத்மரூபியான ஈசுவரனுடைய சாக்ஷாத்காரம் உண்டானவுடன் அகங்காரம் அடியோடு நாசமடைகிறது. சமுசயங்கள் யாவும் நிவர்த்தியாகின்றன. பிராரப்த கர்மம் தவிர மற்றவை நசிக்கின்றன. ஆகையால் வித்வான்கள் பகவானாகிய வாசுதேவரிடத்தில் எப்பொழுதும் மிகுந்த சந்தோஷத்துடன் பக்தி செய்கிறார்கள். அதனால் அவர்களுடைய சித்தம் சுத்தமாகிறது. பரம புருஷன் ஒருவரானாலும், உலகத்தைக் காப்பாற்றுவதற்கு ஸத்வ குணத்தாலும், சிருஷ்டிப்பதற்கு ரஜோ குணத்தாலும் முறையே ஹரி (விஷ்ணு), பிரம்மா, ருத்திரன் என்னும்

பெயரடைகிருர். ஸத்வமூர்த்தியான வாசுதேவரிடமிருந்தே மனிதர்களுக்கு க்ஷேமங்கள் யாவும் கிடைக்கின்றன. அக்னியானது கட்டையைப் பிடித்து எரிக்கும்போது அந்தக் கட்டையாகிய உபாதி சம்பந்தத்தால் புகை உண்டாகிறது. அதிலிருந்து வேதங்களில் சொல்லிய கர்மங்களுக்கு யோக்கியமான அக்னி விருத்தியடைகிறது. அதுபோல லய சுரூபமாகிய தமஸினிடமிருந்து ரஜோ குணமும், அக்னியிடமிருந்து ஸத்வகுணமும், அதனுல் பிரம்மபிராப்தியும் உண்டாகின்றன. முன்காலத்தில் பெரியோர்களான முனிவர்கள் சுத்த ஸத்வமூர்த்தியும், பகவானுமாகிய மகாவிஷ்ணுவை (இந்திரியங்களுக்குப் புலப்படாதவரை) பஜித்தார்கள். ஆகையால் அந்த மார்க்கத்தை அனுசரிப்பவர்கள், சம்ஸாரத்திலிருந்து க்ஷேமத்தை அடைவார்கள். மோட்சத்தை விரும்பியவர்கள், கோரசுரூபமுள்ள பரமசிவன், பிதிருகணங்கள் முதலியவைகளை உபாசியாமல் அவர்களை நிந்திக்காமலும், சாந்தர்களான நாராயணனுடைய கலைகளை (அம்சங்கள்) உபாசிக்கிருர்கள். ரஜோ குணம், தமோ குணம் இந்த சுபாவமுள்ள ஜனங்கள் ஐசுவரியம், புத்திரன், அழகு இவைகளை அடைய விரும்பி, தங்களுக்குச் சமமான சுபாவமுள்ள பிதிருக்களையும், ருத்திரன், ஹிரண்யகர்ப்பன் முதலியவர்களையும் சேவிக்கிருர்கள். வேதங்கள், யாகத்தின் சுரூபத்தைச் சொல்லுகின்றவைகளானுலும், யாகத்தால் ஆராதிக்கப்படும் தேவதை விஷ்ணுவாகையால், அவை யாவும் வாசுதேவருடைய புத்திரனுகிய பகவானையே சொல்லுகின்றன. யோக சாஸ்திரங்கள் எல்லாம் பிராணுயாமம் முதலியவைகளை நிரூபிப்பவைகளானுலும், அவைகள் பகவானை அடைவதற்கு உபாயமாகையால் அந்தப் பரமாத்மாவையே சொல்லுகிறவைகளாகின்றன. மற்ற கர்மங்களும் அந்தப் பரமபுருஷனுடைய ஆராதனத்திலேயே

உபயோகிக்கப்படுகின்றன. ஞானசாஸ்திரம், தவம், தர்ம சாஸ்திரம், கர்மத்தின் பலமாகிய ஸ்வர்க்கம் முதலியவைகள் யாவும் பரமாத்ம பரங்களே யாகின்றன. நிர்க்குணராயும், எங்கும் நிறைந்தவருமான அந்தப் பகவானே காரணரூபமாயும், காரியரூபமாயு மிருந்து, முக்குண சுரூபமாயுள்ள தம்முடைய மாயையால் முதலில் உலகத்தைச் சிருஷ்டித்தார். மேலும் அவர் அந்த மாயையால் உண்டாகிப் பிரகாசிக்கும் ஆகாயம் முதலியவைகள் உட்பிரவேசித்து, இயற்கையில் தாம் குணமற்றவரானுலும் குணமுள்ளவர்போலத் தோற்றுகிருர். அவர் விஞ்ஞானத்தால் (சித்சக்தி) நிறைந்தவர். கட்டைகளில்ஜ்வலிக்கும் அக்னி உண்மையில் ஒன்ருனுலும், ஆசிரய பேதத்தால் வெவ்வேருகத் தோன்றுகிறதுபோல ஜகத்ரூபியான பரமபுருஷன் ஒருவரானுலும், ஒவ்வொரு பிராணியிடத்திலும் வெவ்வேருகக் காணப்படுகிருர். அந்தப் புருஷோத்தமனே பூத சூட்சுமங்கள், இந்திரியங்கள், மனம் ஆகிய இவைகளால் உண்டுபண்ணப்பட்ட பிராணிகளிடத்தில் பிரவேசித்து விஷயங்களை அனுபவிக்கச் செய்கிருர். உலக கர்த்தாவாகிய ஈசுவரன் திர்யக் (பறவை, பசு முதலியவைகள்), தேவர்கள், மனிதர்கள் இவைகளில் சத்வமூர்த்தியாய் அவதரித்து, உலகங்களைக் காப்பாற்றுகிருர். இவைகளே லீலாவதார மெனப்படுகிறது.

## நோட்டு

11-22—பால்—எனக்கு உபநயனம் செய்யவேண்டும் என்று ஆசாரியரிடம் வாரதவர்; அல்லது தாமொருவராகப் போனுர்.-ஸ்ரீத. தேகம் முதலியவைகளில் அபிமானமற்றவர்.—இவர் ருத்ரனுடைய அவதாரம்—விஜய. 12-4—ஸ்ரஸ் தேவியென்ருல் ஸ்ரீதேவி. நானென்ருல் வாயு பகவான்—விஜ. ஜயம்—சம்ஸாரத்தை ஜயிப்பதால் இப்பெயர் கிடைத்தது. 14—காரண—"ஓ அர்ஜுன!

நான் வேதங்களாலும், தபஸினாலும், யாகத்தாலும் அறிய முடியாத வன்" என்ற ஸ்மிருதியின்படி பக்தியைவிட வேறு காரணமற்ற— ஸ்ரீத.—வீர, விஷ்ணுவின் பிரசாதத்தால் உண்டான ஞானம் விஜ.

12-24 தர்மத்—மோக்ஷத்திற்கு ஸாதனமாகிய தர்மத்திற்குப் பணம் பலனல்ல. தர்மத்திற்காகவென்று சம்பாதிக்கப்பட்ட பணத்திற்குக் காமம் பிரயோசனமாகாது. விஜ.11-12 ஹரி. ஆக்ஷே. விஷ்ணு ஒருவரே பிரம்மா, பரமசிவன் என்ற பெயரை அடைகிறார் என்று சொன்னதால், மூன்று தேவர்களும் ஒருவரொன்றும், ஒருவருக்கொருவர் பேதமில்லாதவர்களென்றும் ஏற்படுகிறது. "பிரம்மாவும் சிவனும் நாராயணனே" - சுருதி. "நாராயணர் என்ற பெயருடைய பிரம்மதேவர் கல்பத்தின் முதலில் ஜனங்களைச் சிருஷ்டித்தார். பிறகு அந்தப் பகவானாகிய விஷ்ணுவானவர் காலாக்னி ருத்ரரூபியாயிருந்து சகல லோகத்தையும் சங்கரித்தார். பகவான் ஒருவரே உலகத்தைச் சிருஷ்டிப்பது, பரிபாலிப்பது, நாசம் பண்ணுவது ஆகிய காரியங்களை முறையே பிரம்மா, விஷ்ணு சிவன் என்ற பெயருடன் நடத்திவருகிறார்"-ஸ்மிருதி. ஆகையால் மகாவிஷ்ணு மும்மூர்த்திகளுக்குள் ஒருவரொன்றே ஏற்படுகிறது. மேலும், இம்மூவர்களைக்காட்டிலும் மேலான பரதத்வம் ஒன்றிருப்பதாகவும் ஏற்படுகிறது. அந்தப் புருஷனால் இந்த ஜகத் முழுவதும் பூர்ணமாயிருக்கிறது. "அதைக்காட்டிலும் எது மேற்பட்டதோ, அது ரூபமற்றது. எவர்கள் இதை யறிகிறார்களோ அவர்கள் மரணதர்மமில்லாதவர்களாக ஆகிறார்கள்." சுருதிகள். "இவர் அமிர்தத்துக்கு ஸேதுவாயிருப்பார்" சுருதி. இதனால் மும்மூர்த்திகளுக்கும் மேலான பகவத்சுரூபமே ஸகல ஜகத்திற்குக் காரணம். அதைப் பஜிப்பவர்களே மோக்ஷத்தை யடைவார்கள். நாராயணனைப் பஜிப்பவர்கள்மோக்ஷத்தை யடையமாட்டார்கள். அவர் பரமாத்மாவுமல்ல. சமா தானம்: மும்மூர்த்திகளும் ஒருவரே யென்று சொல்வது நியாயமல்ல. "நாராயணனிடமிருந்து பிரம்மா உண்டாகிறார். நாராயணனிடமிருந்து ருத்திரன் உண்டாகிறார். நாராயணனிடமிருந்து ஆதித்யர்களும், பதினொரு ருத்ரர்களும்,

எட்டு வஸுக்களும், எல்லா வேதங்களும் உண்டானார்கள்." "நாராயணர் ஒருவரே யிருந்தார். பிரம்மாவும், ருத்ரனும் அப்பொழுது இல்லை." "நாராயணர் ஒருவரே யிருந்தார். சங்கராவது பிரம்மாவாவது அப்பொழுது இல்லை." "அவர் முனியாக விருந்து சங்கற்பித்தார். அவரிடமிருந்து இவை யாவும் உண்டாயின." "எவருடைய கொப்பூழில் தோன்றிய தாமரைப் புஷ்பத்திலிருந்து மகாத்மாவான பிரஜாபதி உண்டானரோ.' அதில் பிரம்மா உண்டானர். "அவர் முந்தி மூன்று கண்களுள்ளவரும், மூன்று தலைகளுள்ளவரும், மூன்று கால்களுள்ளவருமான ஸம்சார மூர்த்தியையுண்டுபண்ணினர்." பிரம்மதேவர், தக்ஷர் முதலியவர்கள், காலம், மற்ற ஸகல பிராணிகள் இவைகள் யாவும் மஹாவிஷ்ணுவின் விபூதிகளேயாம். மேலும் ருத்ரன், காலன், அந்தகன், நான்கு விதமான பிராணிகள் இவைகள் ஜனர்த்தனனுடைய விபூதியே. மேற்காட்டிய சுருதிகளாலும், ஸ்மிருதிகளாலும் பிரம்மா, ருத்ரன் இருவர்களும் மஹாவிஷ்ணுவால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் என்று தெரியவருகிறது. நாராயணனைக்காட்டிலும் மேற்பட்ட வேறு தத்வமிருப்பதாகத் தெரியவில்லை. "இந்த சகல ஜகத்தும் புருஷனேயாம். ஜகத்தானது அவனை உபஜீவிக்கிறது." "அவருக்கு ஸமானனும், மேற்பட்டவனும் காணப்படவில்லை" - சுருதிகள். "ஓ! அர்ஜுனா! என்னைக்காட்டிலும் மேலான தொன்றுமில்லை" - ஸ்மிருதி. பிரளய காலத்தில் எல்லாம் பிரகிருதியில் லயித்திருக்கும்பொழுது ஸகல ஜகத்ரூபியான நாராயணன் ஒருவரே இருக்கிறார். புண்டரீகாக்ஷனை விட வேறு மேலான தெய்வமில்லை. மேற்காட்டிய பிரமாணங்களால் மஹாவிஷ்ணுவே மேலானவரென்று ஏற்படுகிறது. ஆட்சேபம்: மும்மூர்த்திகளும் ஒருவரென்றும், விஷ்ணுவைக்காட்டிலும் மேலான தத்வமிருக்கிறதென்றும் பிரமாணங்களைக் காட்டியிருக்கிறேமே. ஸமாதானம்: அதிற்சொல்லிய சிவ, சம்பு, ஈச முதலிய சப்தங்களுக்கு நாராயணனென்றே அர்த்தங்கொள்ளவேண்டும். ருத்ரன் முதலியவர்கள் கர்மத்துக்கு வசப்பட்டவர்கள் என்று சொல்லியிருக்கிறது. வாசுதேவன் கர்மவச்யரென்று ஓரிடத்திலும் சொல்லப்படவில்லை. ஆகையால் நாராயணனே எல்லாத் தெய்வங்

களிலும் மேலானவர். அவரை அடைவதற்கு அவரே காரணம். வீர. 15-6. ஞானசா - கபிலரால் சொல்லப்பட்ட பிரகிருதி புருஷ விஷயமான கிரந்தம், தபஸ், சாந்திராயணம் முதலியவை. வீர. லீலாவதார-ஈசவரனுடையவை; கர்மாதீன மல்லவென்பது கருத்து.

---

## அத்தியாயம் 3

### பகவத் அவதாரங்கள்

உலகங்களைச் சிருஷ்டிப்பதற்காக பகவான் ஆதியில் மகத்தத்வம், அகங்காரம் முதலியவைகளுடன் கூடியதும், 16 கலைகளுள்ளதுமான புருஷதேகத்தை எடுத்துக்கொண்டார். பின்பு ஜலத்தால் உலக முழுவதும் மூடப்பட்டிருக்க, அவர் அந்த ஜலத்தில் படுத்து யோகநித்திரை செய்தார். அப்பொழுது அவருடைய மடுப்போலிருக்கும் கொப்பூழிற் றோன்றிய தாமரஸ புஷ்பத்திலிருந்து ஒருவர் உண்டானார். அவரே மரீசி முதலிய பிரஜாபதிகளுக்கு அதிபதியாகிய பிரம்மதேவர். மேற்சொல்லிய புருஷ ரூபத்தில் ஏற்பட்டிருக்கும் அவயவங்களின் அமைப்புக்களால் தேவர்கள், மனிதர்கள் முதலியவர்கள் சிருஷ்டிக்கப்பட்டு உலகமானது விஸ்தாரமாயிற்று. மேற்காட்டிய பகவத் ரூபமே சுத்தமானது. மேலான ஸத்வ குணமுள்ளது; ஞானக்கண்ணுள்ள யோகிகள் இந்த பகவத் சுரூபத்தை அநேகங் கற்கள், கைகள், முகங்கள், தலைகள், கண்கள், மூக்குகள், காதுகள் என்னும் இவைகளால் அற்புதமானதாகவும், அனேக கிரீடங்கள், குண்டலங்கள் முதலியவைகளால் பிரகாசிப்பதுமாகப் பார்க்கிறார்கள்; அந்தத் தேகத்திலிருந்தே அனேக அவதாரங்கள் வெளிப்படுகின்றன; காரியம் முடிந்தவுடன் அதனிடத்திலேயே அடங்குகின்றன.

மேலும், அந்த ரூபம் நாசமற்றது. அதனுடைய அம்சம் பிரம்மதேவர். அவருடைய அம்சமுள்ளவர்கள் மரீசி முதலிய பிரஜாபதிகள். அவர்களாலே தேவர்களும், பசு, பட்சி முதலியவைகளும் சிருஷ்டிக்கப்படுகின்றன.

6—28. புருஷ தேகத்தை அங்கீகரித்த அந்தத் தேவனே கௌமாரமென்ற சிருஷ்டியில் பிராமணராயிருந்து, பிரம்மசரிய விரதத்தைக் குறைவின்றி அநுஷ்டித்து வந்தார். இதுஒரு அவதாரம். மேலுமவர், பன்றி சரீரமெடுத்துப் பாதாளலோகஞ்சென்று, அவ்விடமிருந்த பூமியை இவ்வுலகத்திற்குக் கொண்டுவந்தார். இது மற்றொரு அவதாரம். தவிர, ரிஷி ஜன்மாவில் தேவ ரிஷியான நாரதராய் அவதரித்து, ஸாத்வத தந்திரமென்ற பாஞ்சராத்ர சாஸ்திரத்தைச் செய்து வெளியிட்டார். அதில் சொல்லிய கர்மங்கள் துக்கத்தைக் கொடுக்கிறதில்லை (பகவானுடைய ஆராதன ரூபங்களாகையால்). அந்த மகாபுருஷனே தர்ம கலையின் சிருஷ்டியில் நரன், நாராயணன் என்ற திவ்ய நாமங்களுடன் ரிஷிகளாக அவதரித்தார். அந்த நான்காவது அவதாரத்தில் இந்திரியங்களையும் மனத்தையும் அடக்கி, கடுமையான தபஸ் செய்தார். அவரே கபிலரென்ற மேலான பெயருடன் சித்த புருஷனாக 5-வது அவதாரஞ் செய்து காலமகிமையால் ஒளிந்துபோன தத்வங்களின் உண்மையைத் தெரிவிக்கும் ஸாங்கிய சாஸ்திரத்தை ஆஸுரி என்ற பிராமணருக்கு உபதேசித்தார். பின்னுமொரு சமயத்தில் அத்ரி மகரிஷியானவர் மகாவிஷ்ணுவை நோக்கி, "உமக்குச் சமமான புத்திரன் எனக்கு உண்டாகும்படி அநுக்ரகிக்க வேண்டும்" என்று பிரார்த்திக்கப் பகவான் அப்பேர்ப்பட்ட புத்திரன் தம்மைத் தவிர வேறொருவருமில்லாமையால் தம்மை அத்ரி ஏமாற்றிவிட்டாரென்று வெறுப்பில்லா

மல், தாமே தத்தாத்ரேயராக அவதரித்தார். மேலும் அவர், அலர்க்கனென்ற அரசனுக்கும், பிரகலாதன் முதலியவர் களுக்கும், ஆன்பிக்ஷகியை (ஆத்மவித்தையை) உபதேசித் தார். பின்னுமவர் ஆஹூதிஎன்பவளிடம் ருசி என்பவருக்கு 'யக்ஞர்' என்ற பெயருடன் அவதரித்து, சுவாயம்புவ மன் வந்தரத்தில் தாம் இந்திரனுகவிருந்து தம்முடைய புத்திரர் களான யாமன் முதலிய தேவர்களுடன் உலகத்தைக் காப்பாற்றினுர். இன்னும் அந்தப் பகவான் ஆக்னீத்ரரு டைய புத்திரராகிய நாபி என்பவருக்கு, மேரு தேவியினி டத்தில் ரிஷபரென்ற பெயருடன் அவதரித்து, எல்லா ஆசிர மங்களிலும் மேலான பரமஹம்ஸாசிரமத்தை யோகிகளுக்கு உபதேசித்தார். பின்னுமொருகால் மகரிஷிகளால் பிரார்த் திக்கப்பட்டு, பிரவென்ற ராஜரிஷயாக அவதரித்து, பசுவின் ரூபத்தைத் தரித்த பூமியினிடமிருந்து சகல வஸ்துக்களையும் கறந்து, உலகத்தைக் காப்பாற்றியதால் இந்த அவதாரம் மிகவும் விரும்பத்தக்கதாயிருந்தது. தவிரவும் சாக்ஷுஷ மன்வந்தரத்தில் சத்தியவிரதருக்காக மாயையால் காண்பிக் கப்பட்ட பிரளயத்தில் மத்ஸ்ய ரூபத்தைத் தரித்துப் பூமி யாகிய ஓடத்தில் வைவஸ்வத மனுவாக ஆகப்போகிற ஸத்ய விரதரை வைத்துக் காப்பாற்றினுர். அந்தப் பிரபுவே, தேவர் களும் அசுரர்களும் சேர்ந்து சமுத்திரத்தை அமிருதத்திற் காகக் கடையும்போது ஆமை யுருவங்கொண்டு மத்தா கிய மந்தர மலையை முதுகில் தாங்கினுர். அவரே தன்வந்தரி யாக அவதரித்தும், பிந்தி மோகினி வேஷங்கொண்டு அசுரர்களை மோகிக்கச் செய்து, தேவர்களுக்கு அமிருதத் தைக் கொடுத்துப் புசிக்கவுஞ் செய்தார். மிக்க பலிஷ்டனு கிய ஹிரண்யகசிபுவை நரசிம்ம சரீரமெடுத்து, பாய் பின்னு கிறவன் கோரையைப் பிளப்பதுபோல, நகங்களால் தொடையில் கிழித்து அவனைக் கொன்முர். இது பதினுன்கா

வது அவதாரம். பின்னுமொரு சமயத்தில், மகாபலியென்ற அசுரன் யாகஞ்செய்யும்பொழுது, பகவான் வாமன ரூபியாக அவனுடைய யாகசாலை சென்று, மூன்றடி பூமியை யாசித்தார். மேலும், அதனால் அவனிடமிருந்து சுவர்க்க ராஜ்யத்தைப் பிடுங்கிக்கொண்டு அவனை நிக்ரகித்தார். இது பதினைந்தாவது அவதாரம். பின்னுமொருகால் பூமியில் பரசுராமனாக அவதரித்து, தர்ம விரோதஞ் செய்யும் அரசர்களைக் கோபத்துடன் இருபத்தொருதரம் கொன்று, பூமியில் க்ஷத்திரிய வம்சமில்லாமல் ஒழியச்செய்தார். இது பதினாறுவது அவதாரம். அந்தப் பரமபுருஷனே ஸத்தியவதியிடத்தில் பராசரருக்குவியாஸராய் அவதரித்தார். இவருடைய காலத்தில் ஜனங்கள் மந்தபுத்தியுள்ளவர்களாயிருந்தபடியால் வேதங்கள் சாகை சாகையாகப் பிரிக்கப்பட்டன. மேலும், இராவணன் முதலிய ராக்ஷஸர்களைக் கொல்வதற்காக ஸ்ரீ ராமாவதாரஞ் செய்து, சமுத்திரத்தில் அணை கட்டியது முதலிய ஆச்சரியங்களைக் காட்டினார். இது பதினெட்டாவது அவதாரம். பின்பு விருஷ்ணி குலத்தில் பலராமன், ஸ்ரீ கிருஷ்ணன் என்ற திவ்ய நாமதேயங்களுடன் அவதரித்துப் பூமியின் பாரத்தை நிவர்த்தித்தார். இது பத்தொன்பதாவது அவதாரம். பின்பு கலியுகத்தில் கீகடம் (மத்தியகயை) என்ற தேசத்தில் புத்தனென்ற பெயருடன் ஜினருக்கு (சுத்தோதனனென்று சிலர்) புத்திரனாக அவதரிப்பார். கலியின் முடிவில் யுகசந்தியில் அரசர்களெல்லோரும் பெரும்பாலும் திருடர்களாக ஆகிவிடுவார்கள். அப்பொழுது ஜகத்திற்குக் குருவாகிய பகவான் கல்கியென்ற பெயருடன் விஷ்ணுயசஸ் என்பவருக்குப் புத்திரனாக அவதரிப்பார். இது (21) இருபத்தொன்றுவது அவதாரம்.

"ஓ! பிராம்மணர்களே! குறையாத ஜலமுள்ள பெரிதாகிய ஏரியிலிருந்து அநேக வாய்க்கால்கள் ஓடுவதுபோல, சத்வமூர்த்தியாகிய விஷ்ணுவின் அவதாரங்கள் கணக்கிட முடியாதவைகள். ரிஷிகள், முனிகள், தேவர்கள், மனுவின் புத்திரர்கள், பிரஜாபதிகள் எல்லோரும் மகாவிஷ்ணுவின் அம்சாவதாரமே தவிர வேறில்லை. மேலும், முன் காட்டிய படியுள்ள பகவானுடைய அம்சங்கள், கலைகள், விபூதிகள், சாக்ஷாத் விஷ்ணுவாகிய கிருஷ்ணன் இவர்கள் அசுரர்களால் உலகத்திற்கு உபத்திரவம் நேரும்போது அவர்களை நிக்ரகித்து உலகத்தைச் சுகிக்கச் செய்கிறார்கள்.

29. இந்தப் பகவானுடைய அதிரகசியமான அவதாரங்களைக் காட்டும் சுலோகங்களைக் காலையிலும் மாலையிலும் சுத்தனாய்ப் பக்தியுடன் படித்தவன் ஸம்ஸார துக்கத்திலிருந்து நிவர்த்தியடைகிறான்.

30-36. உருவமில்லாதவனும், சித்ரூபியாயுமிருக்கும் ஜீவனுக்குப் பகவானுடைய மாயையின் குணங்களாகிய மகத்தத்வம் முதலியவைகளால் இந்த ஸ்தூல சரீரம் ஏற்படுத்தப்பட்டது. வாயுவை(காற்றை) ஆசிரயித்த மேகங்கள் ஆகாயத்திலிருப்பதாயும், பூமியின் தூளிக் காற்றிலிருப்பதாகவும், அஞ்ஞர்கள் நினைப்பது (ஆரோபிப்பதுபோல) எல்லாவற்றிற்கும் சாட்சியாயிருக்கும் ஆத்மாவினிடம் சரீரம் ஆரோபிக்கப்பட்டிருக்கிறது. மேலும், ஸ்தூல சரீரத்திற்கு மேற்பட்டதும்கை,கால் முதலிய அவயவ பரிமாணங்களற்றதும், பார்க்கப்படாததும், கேட்கப்படாததாயும், சூட்சுமமாயும், ஜீவனுடைய உத்கிராந்தி (வெளியில் போவது) முதலியவைகளுக்குச் சாதனமாயுமுள்ள லிங்க சரீரமும், முன்காட்டியதுபோல ஆரோபிக்கப்படுகிறது. ஸ்தூல சரீரம் லிங்கசரீரமாகிய இவைகள் பரமாத்மாவினிடம் ஆரோபிக்கப்

படுவதற்குக் காரணம் அவித்தையே. உண்மையில் ஆத்மா விற்கு இவ்விரண்டின் சம்பந்தமுமில்லை. இம்மாதிரியான உண்மையான சுரூப ஞானம் எந்தக் காலத்தில் உண்டா கிறதோ அப்பொழுது ஜீவன், ஞானசுரூபியான பிரம் மாத்ம பாவத்தை யடைவான். ஈசுவரனுடைய மாயை யானது ஒய்வடையுமானல் அப்பொழுது ஜீவன் பிரம்மமாக ஆகிறான்; பரமானந்தரூபியாய் விளங்குகிறான். அந்தர் யாமியான பகவான் ஒன்றையுஞ் செய்யாமலிருப்பவரானு லும் கர்மங்களைச் செய்கிறவரென்றும், உற்பத்தியில்லாதவ ரானலும் பிறந்தாரென்றும் கவிகள் வேதத்தின் ரகசிய மான விஷயத்தை வர்ணிப்பது ஜீவனுக்குப் பிறப்பு முதலிய வைகளுண்டென்று சொல்வதுபோல மாயையே தவிர வேறில்லை. வீண்போகாத லீலைகளுள்ளவரும், சகல பிராணி களிடம் மறைந்திருப்பவருமான ஈசுவரனே இந்த உலகத் தைப் படைக்கிறார்; காப்பாற்றுகிறார்; சங்கரிக்கிறார். ஆனலும் சுதந்திரராகையால் ஆறு இந்திரியங்களுக்கு யஜ மானராயிருப்பதால் அவைகளின் விஷயங்களை வெகு தூரத்திலிருந்தே கிரகிக்கிறார். அவைகளில் சம்பந்தப்படுகிற தில்லை. மூடன் எப்படி நட (நர்த்தனஞ் செய்கிறவ) னல் செய்யப்படும் அபிநயத்தை யறியமாட்டானே அப்படி அற்ப புத்தியுள்ளவன், சகல ஜகத்தைப் படைப்பவரும் சங்கற்பத்தால் உருவங்களையும், வாக்கினல் பெயர்களையும் விஸ்தரிப்பவருமான பகவானுடைய லீலா விபூதிகளை (யுக்தி, தர்க்கம் முதலியவைகளின் சாமர்த்தியத்தால்) அறியமாட் டான். ஆனல், நன்மார்க்கத்தை ஸ்தாபிப்பவரும், சத் ருக்களை ஜயிக்கும் வீரியமுள்ளவரும், சக்ராயுதம் தரித்தவரு மான பரமாத்மாவின் சுரூபத்தை இடைவிடாமல் கபட மற்று, பகவானுடைய பாதங்களாகிய தாமரஸ புஷ்பத்தின் வாசனையைச் சேவிக்கும் பக்தனே சிரமப்பட்டுத் தெரிந்து

கொள்ளுகிறுன். ஓ பிராமணர்களே! இதைத் தெரிந்து கொண்டு சகல லோகத்திற்கும் நாதராகிய ஸ்ரீ வாசுதேவரிடம் எவர்கள் இடைவிடாமல் மனத்தைச் செலுத்துகிறுர்களோ, அவர்களுக்குக் கர்ப்பவாஸம் முதலிய துக்கத்தை உண்டுபண்ணும் பிறப்பு, இறப்பு நேரிடமாட்டா. ஆகையால் எல்லாவற்றையும் அறிந்த அந்த பகவத் பக்தர்களே தன்யர்கள் (மேலானவர்கள்).

40-44. ஸர்வஞ்ஞரான வேதவியாஸ மகரிஷி உத்தம சுலோக(நல்வினையைக்கொடுப்பதால் மேலான பெயருள்ள)ராகிய பகவானுடைய சரிதத்தைக் காட்டுகிறதும், வேதங்களுக்குச் சமமாயுள்ளதுமான ஸ்ரீமத் பாகவத புராணத்தைச் செய்துமுடித்தார். பிறகு உலகத்திற்கு க்ஷேமத்தைச் செய்யவேண்டி சகல மங்களங்களுக்கும் இருப்பிடமாயும், அர்த்தத்தாலும், சப்தத்தாலும் மிகவும் மேலானதுமான அந்தப் புராணத்தை, யோகிகளுக்குள் சிறந்தவரும் தம்முடைய புத்திர ரத்தினமுமாகிய சுகருக்கு உபதேசித்தார். அந்தச் சுகர் எல்லா வேதங்களிலும், இதிகாசங்களிலுமிருந்து அவற்றின் சாரத்தை எடுத்துச் செய்யப்பட்ட இந்தச் சாஸ்திரத்தை, கங்கைக்கரையில், மிகுந்த வைராக்கியத்துடன் பிராயோபவேசஞ் செய்திருக்கும் பரீக்ஷித்து மகாராஜனுக்கு, அநேக மகரிஷிகள் கேட்டிருக்கும்போது சொன்னுர். இவ்விதமாக அது பூமியில் பரவியது. ஓ! பிராமணர்களே! அந்தச் சமயத்தில் நான் அவ்விடம் போனேன். மேலும் அவ்விடத்தில் உட்கார்ந்திருந்து மிகுந்த தேஜசுள்ள அந்த பிரம்மரிஷியான சுகருடைய அனுக்ரகம் பெற்றேன்; நீங்களனைவரும் அதன் விஷயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று மிகுந்த ஆவலுள்ளவர்களாயிருப்பதால் நான் சுகரிடம் கேட்டபடி என் புத்திக்கெட்டியவரையில் சொல்லுகிறேன். (கிருஷ்ண பகவான் தர்மம், ஞானம்

இவைகளுடன் தமது உலகஞ் சேர்ந்த பிறகு கலியில் ஞானக்கண்ணில்லாமல் கஷ்டப்படும் ஜனங்களுக்கு இந்தப் புராணமாகிய சூரியன் உதயமாயிருக்கிறது.)

## நோட்டு

17-22. 16 கலைகள்-இந்திரியங்கள் 11, ஐந்து பூதங்கள், இந்தப் பதினறு கலைகள்; பகவானுடைய சரீரம் உண்மையில் இப்பேர்ப் பட்டதல்ல. ஆனாலும், விராட்தேகத்தின் அந்தர்யாமியா யிருக் கும் பகவானை விராட்ரூபமாக உபாஸிப்பதற்கு உபயோகமாகச் சொல்லப்பட்டது. ஸ்ரீத. 18-12 கௌமார-இவருக்கு ஸனத் குமாரரென்று பெயர். ஆனால் இவர் ஸனகர் முதலியவர்களில் சேர்ந்தவரல்ல. விஜயத். ஆதி புருஷன் பிரம்மதேவருடைய சுரூப மாகவிருந்து ஸனத்குமாரர் முதலியவர்களாக அவதரித்தார். பிறகு ஈசுவரனை உபாஸித்தார். அவர்கள் அனுப்ரவேசாவதார ரூபி களெனப்படுவார்கள். மேலுமவர்கள் அவித்யையுள்ளவர்களேயாம். ஆனாலும் பகவானை யுபாஸித்துக் காலாந்தரத்தில் ஞானத்தை யடை வார்கள். வீர. இது ஒரு—இந்த அத்தியாயத்தில் 21 அவதாரங்கள் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும் அவைகள் வரிசையாகச் சொல்லப்படவில்லை. ஆனாலும் இவ்விடத்தில் சொல்லிவருவதில் முதலாவது என்பதேயாம். ஸ்ரீத. 16. தேவரிஷி—மஹிதாஸரென்ற மஹரிஷி. விஜ 20. தர்ம—யமனுடைய அம்சம். ஸ்ரீத. கபிலர்— இவர் பிரஸித்தராகிய கபிலரல்ல வென்று சிலர். விஜ 31. வேறுப்- மூலத்தில் அனஸூயயா என்றிருப்பதால், அத்ரியின் பத்னியாகிய அனஸூயை யென்பவளால் அடையப்பட்டார்.—வீர. விஜ 19-4. யாம—ஒவ்வொரு மன்வந்தரத்திலும் தேவர்களுடைய பெயர் மாறு கிறதுண்டு.—விஜ. நாபி—ஸ்வாயம்புவ மனுவின் புத்திரர்—வீர. இந் திரனுடைய புத்திரன்.—முனி மஹரிஷி வேனனைக் கொன்ற பிறகு. வீர. மாயையால்—மன்வந்தரத்தின் முடிவில் பிரளயமில்லாமற் போனாலும், அக்காலத்தில் மார்க்கண்டேயருக்குக் காண்பித்தது போலக்காண்பிக்கப்பட்டது.—ஸ்ரீத. கடையில்—மடியில் வைத்துக் கொண்டு விஜ. வாமன—துஷ்டர்களுடைய கர்வத்தைக் குறைப்

பதால் இப்பெயர் கிடைத்தது. ஸ்ரீத. கோபத்துடன்.—சக்தியில் லாதவனுக்குக் கோபமுண்டாகுமேயல்லாமல், சாமர்த்தியமுள்ளவர் களுக்குக் கோபமுண்டாக நியாயமில்லையாகையால் கோபங்கொண் டவர்போலவென்பது கருத்து.—விஜ. ரிஷிகள்—மனுவின் புத்திரர் களாகிய பிரியவிரதர் முதலியவர்கள்.—விஜ. கலைகள்—குமாரர் கள், நாரதர் முதலியவர்கள்; கலாவதார பூதர்கள். அதிலும் குமாரர் முதலியவர்கள் ஞானமுள்ளவர்கள்; பிருது முதலியவர்கள் பகவா னுடைய சக்தி விசேஷமுள்ளவர்கள்.—ஸ்ரீத. விபூதிகள்—"எந்தப் பிராணிகள் விபூதியுள்ளவைகளோ, எது அழகு பொருந்தியதோ, எது பலமுள்ளதோ அவைகள் யாவும் என்னுடைய தேஜஸின் அம் சத்திலிருந்து உண்டானவைகள்" பகவத்கீதை. உருவமில்லாத— ஜீவனுக்கு தேக சம்பந்தம் விஷ்ணுவின் மாயையால் ஏற்பட்டதா கையால் ஞானத்தால் அந்த அவித்யை நிவர்த்தியாகிறதென்பது இதுமுதல் ஐந்து சுலோகங்களால் காட்டப்பட்டிருக்கிறது. ஸ்ரீத. ஆரோபி— நான் தேவன், இந்தச் சரீரம் என்னுடையது என்ற அபிமானத்திற்கு விஷயமாகச் செய்யப்பட்டிருக்கிறது. உண்மை யில் தேவர்கள் முதலிய சரீரம் ஜீவனுடைய சுரூபமல்ல. ஆட்சேபம்—தேவ சரீரம் முதலியவைகள் அவைகளுக்கு அபிமானி யாகிய ஜீவனால் தரிக்கப்படுகிறதாகையால் அவனுடையதென்று ஏன் சொல்லக்கூடாது? ஸமாதானம்— "எவனுக்கு ஆத்மா சரீரமோ, எவன் ஆத்மாவினிடத்திலிருக்கிறானோ" என்ற சுருதிப் படியும், ஜீவனும் பரமபுருஷனால் தரிக்கப்படுகிறபடியால் எல்லா வற்றிற்கும் பரமாத்மாவே முக்கியமான ஆதாரம்—வீர. ஆகாயம், வாயு இவைகள் கண்ணிற்குப் புலப்படாதவைகளானாலும் மேகக் கூட்டத்தை ஆகாசமென்றும், பூமியிலிருந்து கிளம்பும் தூளிகளை வாயுவென்றும் சொல்வது போல, அஞ்ஞர்கள் பிரதிமையைப் பார்த்து அதையே ஈசுவரனென்று சொல்லுகிறார்கள். அதனால் சாட்சியான பகவான், இந்திரியங்களால் பார்க்கக்கூடியவர் (திருச் யர்) என்றும், சித்ரூபியான அவர் ஜடரென்றும் ஏற்படுகிறது. ஆகை யால் இது பிராந்தியேயாம்.—விஜ. சூக்ஷ்மம்— "இவன் அவ் யக்தன், நினைக்க முடியாதவன்; விகாரமற்றவன்"—பகவத்கீதை.

ஒன்றையும்—புண்ய பாபங்களற்றவர், கர்மாதீனமான சரீரமில்லாத வர்—வீர. ரஹஸ்யம்.—“ உற்பத்தியை அடையாமலே பலவகை யாக உண்டாகிறார்” என்ற சுருதியில் உற்பத்தியடையாதவரென் றால் ஜீவன்போல் கர்மாதீனமாக ஜன்மமில்லாதவரென்றும், தமது இஷ்டப்படி பகவானுக்கு உற்பத்தியுண்டென்றும் அர்த்தம். அதைக் கவிகளே அறிவார்கள். “ தீரர்கள் அந்தப் பகவானுடைய சரீரத் தை அறிகிறார்கள் ”--சுருதி. ஆகையால் பகவானுடைய ஜன்ம தர்மங் கள், ஜீவனுடையது போன்றவைகள் என்று நினைக்கக்கூடாது என்பது வேத வாக்கியத்தாலேயே காட்டப்பட்டிருக்கிறது. வீர- லீலைகள் ஜீவன் அனுதியாகிய கர்மத்தால் புண்ய பாபங்களைச் செய்து தனால் சகல துக்கங்களை அடைவதுபோல், பகவானுடைய செய்கைகள் அவரைக் கட்டுப்படுத்துகிறதில்லை. மேலும் அவை கள் அவருக்கு லீலைகளாகும். அவைகள் வீண்போகாதவைகள் என்ற தால் ஜீவனுடைய கர்மங்கள் அனேக விசனமுள்ளவைகள் என்று காட்டப்பட்டன. இப்படிப் பலவகையிலும் ஜீவனைக்காட்டிலும் மேலானவரென்பது தாத்பரியம். ஆறு—ஞானம், சக்தி, தேக பலம், ஐசுவ்ரியம், வீரியம், தேஜஸ் இவைகளுக்கு அதிபதி. அற்ப புத்தி—நான், என்னுடையது என்ற அபிமானமுள்ளவன். நடன் —வேஷதாரியானவன் பலவகையான வேஷங்களைத் தரித்தாலும் எப்படி இவன் வேறாக ஆகிறதில்லையோ. அப்படி பகவான் மத்ஸ்யம், ஆமை முதலியவைகளின் உருவங்கொண்டாலும் அவரு டைய உண்மையான ரூபம் மாறுகிறதில்லை. மேலும், வேஷம் தரிப்பது முதலிய சேஷ்டைகள் அவனுக்கு விளையாட்டாயிருப்பது போல் பகவானுக்கும் அவைகள் லீலைகளேயாகும். அறிந்த— பகவந்த: என்ற பதத்திற்கு நீங்கள் என்று அர்த்தங்கொண்டு, ‘ஏ சௌனகர் முதலியவர்களே நீங்கள் மேலானவர்கள்.’ பிராயோப வேசம்—ஜீவித்திருப்பதில் ஆசையில்லாமல் ஆகாரமில்லாம லிருக் கிறதாகிய விரதம். வீர.—விஜய.

## அத்தியாயம் 4

### வியாசர் கவலை யடைந்தது

அதனைக் கேட்டுத் தீர்க்கஸத்ரம் செய்துகொண்டிருக்கும் மகரிஷிகளுக்குள் வயது சென்றவரும், கூட்டத்தில் முக்கியரும், ரிக்வேதியுமாகிய சௌனக ரென்பவர் ஸூத ரைக் கொண்டாடிப் பின்வருமாறு சொல்லத்தொடங்கினர்.

2—13. "ஓ மிகுந்த பாக்கியமுள்ள ஸூதரே! பரீக்ஷித்து மகாராஜனுக்குச் சுக ஸ்வாமியால் சொல்லப்பட்ட புண்யகரமான ஸ்ரீமத் பாகவதக் கதையை எங்களுக்குச் சொல்லவேண்டும். கதை சொல்வதில் தாங்கள் மிக்க சாமர்த்தியமுள்ளவர்கள். இந்தக் கதை எந்த யுகத்தில், எந்த விடத்தில் நடந்தது, எதற்காக, யாரால் தூண்டப் பட்டு இந்தக் கிரந்தத்தை வியாஸ மகாமுனிவர் செய்தார்? மேலும், அவருடைய புத்திரரான சுகரென்பவர் மகாயோகி; தாம், பிறர் என்ற பேதபுத்தியில்லாமல் எல்லாவற்றையும் பிரமசுரூபமாகப் பார்ப்பவர். பரமாத்மாவினிடத்திலேயே புத்தியைச் செலுத்தியவர்; மாயையாகிய தூக்கத்தை விட்டு விழித்தவர். இவருடைய சுபாவம் வெளியில் தெரியாது; பார்வைக்கு மூடன்போல் தோன்றுகிறவர். இவர் குரு ஜாங்கலமென்னும் தேசத்தில் அஸ்தினபுரத்தில் பைத்தியம் பிடித்தவன்போலவும், ஊமையன்போலவும், மூடன்போல வும் சஞ்சரிக்கும்போது, இவருடைய உண்மையைப் பட்டணத்து ஜனங்கள் எப்படித் தெரிந்துகொண்டார்கள்? இவர் எல்லா ஆசைகளையும் ஒழித்துத் துறவியாய்ப் போகும்போது பிதாவாகிய வியாஸ மகரிஷி புத்திர சிநேகத் தால் அவர் பின்செல்ல, வழியில் ஜலக்கிரீடை செய்து கொண்டிருந்த அப்ஸர ஸ்திரீகள் வஸ்திரமில்லாதவரும், யுவாவுமாகிய சுகரைக் கண்டு வெட்கப்படவில்லை. இவருக்

குப் பின்னே வருகின்றவரும், மரவுரியை யுடுத்திக் கொண்டவரும், வயது சென்றவருமான வியாஸ மகரிஷி யைப் பார்த்தவுடன் வெட்கமடைந்து தம் தம் ஆடைகளை யுடுத்திக்கொண்டார்கள். இந்த ஆச்சரியத்தைக் கண் ணுற்ற மகரிஷியானவர், அவர்களை இது விஷயமாகக் கேட்க, அவர்கள் மகரிஷியை நோக்கி, "புருஷன், ஸ்திரீ" என்ற பேத புத்தி உமக்கு இருக்கிறது. சுத்த திருஷ்டி யுள்ள புத்திரருக்கு அம்மாதிரியான எண்ணமில்லை" என்று பிரதியுத்தரஞ் சொன்னார்கள். அப்பேர்ப்பட்ட சுகருக்கும், பாண்டுவின் வம்சத்தில் பிறந்த பரீக்ஷித்து மகாராஜனுக்கும் எப்படி சம்வாதம் (பேச்சு) நடந்தது? அதனாலல்லவா இந்தப் பாகவதக் கதை வெளிப்பட்டது. இவர் கிருகஸ்தர் களுடைய வீட்டிற்குப் பிக்ஷைக்காகச் சென்றால் அந்தக் கிருகத்தைச் சுத்தப்படுத்துவதற்காகச் சொற்ப காலம் (மாடு கறப்பதற்கு எவ்வளவு காலம் பிடிக்குமோ அவ்வளவு காலம்) காத்திருப்பார். இவர் ஒரே இடத்திலிருந்தே பாக வதக் கதையைச் சொன்னது மிக ஆச்சரியம். ஏ! ஸூதரே! ஜனங்கள் அபிமன்யுவின் புத்திரராகிய பரீக்ஷித்து மகாராஜ னைப் பாகவதர்கள்(பகவானுடைய பக்தர்கள்)களுக்குள் சிறந்தவராகச் சொல்லுகிறார்கள். அவருடைய பிறப்பு மிகவும் அற்புதமானது. ஆகையால் அவருடைய சரிதத் தைச் சொல்லவேண்டும். பாண்டவர்களுக்குக் கீர்த்தியை விருத்திசெய்தவரான அந்தச் சக்ரவர்த்தி தமது அளவற்ற ராஜ்யத்தையும் லட்சியஞ்செய்யாமல் என்ன காரணத்தால் கங்கையின் கரையில் பிராயோபவேசஞ்செய்தார்? ஓ! ஸூதரே! சத்ருக்கள் உத்தம வஸ்துக்களைக் காணிக்கையாக எடுத்து வந்து தங்களுடைய க்ஷேமத்திற்காக அவருடைய பாதபீடத்தை (கால் வைத்துக்கொள்ளும் ஆசனம்) நமஸ் கரிக்கிறார்களே! அவ்வளவு பராக்கிரமமுள்ள மகாராஜன்

யௌவனமுள்ளவராயினும், ஒழிக்கமுடியாத பணத்தின் ஆசையையும், பிராணனிடத்திலுள்ள அபிமானத்தையும் விடவேண்டுமென்று எப்படி விரும்பினர்? உத்தம சுலோகராகிய பகவானிடத்திலேயே மனத்தைச் செலுத்தியவர்கள் உலகத்திற்கு க்ஷேமம், ஐசுவரியம் இவைகளை உண்டு பண்ணுவதற்காக ஜீவிக்கிருர்களே தவிர சொந்தமான காரியத்திற்காகவல்ல. ஆகையால் இந்த அரசன் சரீரத்தை விரும்பிய காரணம் யாது? (பிறருக்கு உபயோகமான சரீத்தைத் தான் கெடுப்பது நியாயமல்லவென்பது கருத்து.) வேதத்தின் அர்த்தம் தவிர இதிகாச புராணங்களின் அர்த்தங்களைச் சொல்வதில் மிக்க சாமர்த்தியமுள்ளவரென்று உங்களை நினைக்கிறேன். ஆகையால் என்னல் கேட்கப்பட்ட எல்லா விஷயங்களையும் சொல்லவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்.

14-18. இவற்றைக் கேட்டஸூதர் சொல்லத்தொடங்கினர். மூன்ருவது துவாபர யுகத்தின் கடைசியில் வசுவின் வீரியத்திற்கு உண்டான ஸத்யவதினிடம் பராசரருக்குப் புத்திரனுக அவதரித்த ஸ்ரீமகாவிஷ்ணுவின் அம்சம் இந்த வியாஸ மகாமுனியே. இவர் மகாயோகி. நடந்தது, நடக்கப்போகிறது இவைகளை அறிந்தவர். அவர் ஒருகால் ஸரஸ்வதீ நதிக்கரையில் ஆசமனஞ் செய்து சுத்தராய், சூரியோதய காலத்தில் தாம் தனியாய் உட்கார்ந்து, "அறியக்கூடாத வேகமுள்ள காலமகிமையால் யுக தர்மங்கள் கலந்து போய்விட்டன. ஐந்து பூதங்களுக்கும் சக்தி குறைந்துவிட்டது. ஜனங்களுக்கு சிரத்தை, தேக பலம், ஸத்வகுணம், ஆயுள் இவைகளும் குறைந்துபோயின. புத்தியோ கெட்ட மார்க்கத்தில் செல்லுகிறது" என்று ஞானக்கண்ணல் பார்த்து, எல்லா ஜாதியார்களுக்கும், எல்லா ஆசிரமிகளு

கும் என்ன செய்தால் அநுகூலம் உண்டாகுமென்று எல்லோருக்கும் உபகாரமான விஷயத்தைச் செய்ய விரும்பி யோசித்தார்.

19—23. வேதத்தில் சொல்லப்பட்டதும், நான்கு ரித்விக்குகளால் முடிக்கக்கூடியதும், சுத்தமானதுமான யாகமே ஜனங்களுக்கு அநுகூலத்தைச் செய்யக்கூடியதென்று நிச்சயித்து அந்தக் கர்மம் எப்பொழுதும் தொடர்ச்சியாய் நடந்தேறிவருவதற்காக ஒன்ருயிருந்த வேதராசியை நான்காகப் பிரித்தார். மேலும், அந்த நான்கு பாகங்களுக்கும் ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வம் என்று பெயர்களுண்டாயின. (பாரதம் முதலிய) இதிகாசங்களும், (பாகவதம் முதலிய) புராணங்களும் ஐந்தாவது வேதமென்று சொல்லப்படுகின்றன. மேற்காட்டிய ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வ என்ற நான்கு வேத சாகைகள் பைலர், வைசம்பாயனர், கவியாகிய ஜைமினி, ஸுமந்து என்கிற மகரிஷிகளிடம் முறையே ஒப்புவிக்கப்பட்டன. என்னுடைய பிதாவாகிய ரோமஹர்ஷணரிடம் இதிகாசங்களும், புராணங்களும் கொடுக்கப்பட்டன. மேற்சொல்லிய மகரிஷிகளே தங்கள் தங்களுடைய வேத சாகைகளைப் பலவகையாகப் பிரித்தார்கள். அவைகள் அற்ப புத்தியுள்ள இக்காலத்து ஜனங்களால் அத்யயனஞ் செய்யப்படுகின்றன. அவர்கள் தங்கள் தங்கள் சிஷ்யர்களுக்கும் அத்யயனஞ் செய்வித்து, அவைகளை உலகத்திற் பரவச்செய்தார்கள். யார் யார், எந்த எந்த சாகைகளை அத்யயனஞ் செய்தார்களோ, அவரவர்களுக்கு அந்த அந்த சாகைகள் சொந்தமாயின.

24—32. தீனர்களிடத்தில் பிரீதியுள்ள பகவானுகிய வியாஸ மகரிஷியால் இப்படி வேதங்கள் பிரிக்கப்பட்டன. பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் ஆகிய இவர்களுக்குள்,

அதமர் களாகிய த்விஜ பந்துக்களுக்கும், ஸ்திரீகளுக்கும் சூத்திரர்களுக்கும் வேதத்தைக் கேட்க அதிகாரமில்லாததனால், அவர்கள் இதிகாசத்தால் க்ஷேமத்தை யடையட்டும் என்னுங் கருணையால், வியாஸ மகரிஷி மகா பாரதம் என்ற கிரந்தத்தைச் செய்தார். ஓ! பிராமணர்களே, இப்படி எப்பொழுதும் எல்லாப் பிராணிகளுக்கும் க்ஷேமத்தைச் செய்வதிலேயே நோக்கமுள்ள அந்த மகரிஷியானவர் எல்லாவற்றையும் அறிந்தவராயிருந்தும் அவருடைய மனத்திற்குச் சாந்தி உண்டாகவில்லை; அதனால் அவர் சந்தோஷமில்லாமல் ஸரஸ்வதி நதியின் சுத்தமான கரையில் தாம் ஒருவராயிருந்து யோசித்துப் பின்வருமாறு சொல்லலானார். "நான் விரதமுள்ளவனாய், வேதங்களை அத்யயனஞ் செய்தேன். குருக்களையும், அக்னியையும் பூஜித்தேன். ஆசாரியனுடைய கட்டளையின்படி கபடமற்று நடந்தேன். பாரதமென்ற வியாஜத்தால், வேதத்தின் அர்த்தத்தை எல்லோருக்கும் தெரியும்படி வெளியிட்டேன். அதில் ஸ்திரீகளாலும், சூத்திரர்களாலும் அறியக்கூடியவைகளான தர்மங்கள் காட்டப்பட்டன. அப்படியிருந்தும் என்னுடைய ஆத்மா (ஜீவன்) இயற்கையில் பூரணனானாலும், பிரம்மவர்ச்சஸ் உள்ளவர்களுக்குள் சிறந்தவனானாலும், பிரம்மத்தின் சுரூபத்தை யடையாதவன்போலத் தோற்றுகிறான். இதற்கென்ன காரணம்? இது ஆச்சரியமாயிருக்கிறது. ஆனால் பாகவத தர்மங்கள் விஸ்தாரமாக வெளியிடப்படவில்லை. அவைகளில் பரம ஹம்ஸர்களுக்கு மிகவும் பிரியமிருக்குமே. அவைகளே ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவிற்குப் பிரியமானவைகள். அதனால்தான் நம்முடைய மனத்திற்கு ஆனந்தமுண்டாகவில்லையோ" என்று யோசித்து ஆத்மாவைச் சூனியனாக நினைத்து வருத்தமடைந்தார்.

33. இந்தச் சமயத்தில் ஸரஸ்வதி நதிக்கரையில் இருக்கும் அந்த வியாஸ மகரிஷியின் ஆசிரமத்திற்கு நாரதர் வந்தார். அப்பொழுது அந்த மகரிஷியானவர் தேவர்களால் பூஜிக்கப்பட்ட நாரதரைக் கண்டு எதிர்கொண்டழைத்து, சாஸ்திரமுறை தவறுமல் அவரைப் பூஜித்தார்.

## நோட்டு

25—3. தீர்க்க—அநேக வர்ஷங்களால் முடிக்கக்கூடிய யாகம்.—சந்த். 14—பேத—மூலத்தில் நிர்விகல்ப என்றிருப்பதால் நிச்சய ஞானமுள்ளவர். ஸமதிருக்—மித்ரன், சத்ரு, மற்றவர் ஆகிய இவர்களிடத்தில் சமபுத்தியுள்ளவர். ஏகாந்த மதி—ஜனசஞ்சாரமற்ற விடத்தில் வசிப்பதில் பிரியமுள்ளவர். மூட—எல்லாவற்றையும் அறிந்தவராயிருந்தும் தம்முடைய சாமர்த்தியத்தை வெளியிடாதவர்.—சந்த். 16—விழ்ந்த—"சகல பிராணிகளுக்கும் எது இராத்திரியோ, அதில் யோகியானவன் விழித்துக்கொண்டிருக்கிறுன்"—பகவத். 26—33. மூன்றவது—மகா யுகத்தில். 26—28. வேதத்தின்—இவர் ஸூத ஜாதியாகையால் வேதத்தில் இவருக்கு அதிகாரமில்லை யென்பது கருத்து.

---

## அத்தியாயம் 5

### வியாஸருக்கு நாரதர் உபதேசித்தது

பின்பு மிகுந்த கீர்த்தியுள்ளவரும், எப்பொழுதும் வீணையைத் தரித்தவரும், தேவரிஷியுமான நாரதர் சமீபத்தில் சுகமாய் உட்கார்ந்திருக்கும் பிரம்மரிஷியாகிய வியாஸ மகரிஷியை நோக்கி, பிரசன்ன முகமுள்ளவராய்ப் பின்வருமாறு சொல்லத் தொடங்கினர்: "ஓ மகா பாக்கியமுள்ள பராசர புத்திரரே! உம்முடைய சரீராபிமானியான ஆத்மாவானது (ஜீவன்) அந்தச் சரீரத்தாலும், மனத்திற்கு அபி

மானியான ஆத்மாவானது அந்த மனத்தாலும் சந்தோஷப்படுகிறதா? அறியவேண்டிய சகல தர்மங்களையும் பூர்ணமாகக் காட்டுவதும், ஆச்சரியத்தை யுண்டுபண்ணுகிறதுமான மகா பாரதத்தை விஸ்தாரமாகச் செய்தவர் நீரன்றோ? ஆகையால், விஷயம் யாவும் உமக்குத் தெரிந்திருக்கலாமே. மேலும், நீர் நித்யவஸ்துவாகிய பரமாத்ம சுரூபத்தை நன்ருக விசாரித்து அறிந்தவரல்லவா? அப்படியிருந்தும், ஒன்றையும் அறியாதவர்போல ஏன் துக்கிக்கிறீர்?" என்று கேட்டார்.

**4—11.** இதனைக் கேட்ட வியாஸ மகாமுனிவர், பின்வருமாறு சொல்லத் தொடங்கினர். "தாங்கள் சொன்னவை யாவும் என்னிட மிருக்கின்றன. ஆனாலும் என் மனத்திற்கு சந்தோஷம் உண்டாகவில்லை. அதன் காரணம் இன்னதென்றும் விளங்கவில்லை. பரம் (காரியம்), அபரம் (காரணம்) இவைகளுக்கு அதிபதியும், சங்கற்பமாத்திரத்திரத்தால் முக்குணங்களைக்கொண்டு ஜகத்தைச் சிருஷ்டிப்பவரும், அவைகளைக் காப்பாற்றுபவரும், பின்னும் அவைகளை நாசஞ்செய்பவரும், அவைகளில் சம்பந்தப்படாதவருமான புராண புருஷனை நீர் உபாஸித்தவர். ரகசியங்களான விஷயங்கள் யாவும் தங்களுக்குத் தெரியும். மேலும் நீர் சூரியன்போல மூவுலகத்திலும் சஞ்சரிப்பதால் எல்லாவற்றையு மறிந்தவர். சகல பிராணிகளினுள்ளில் சஞ்சரிக்கிற பிராணவாயுப்போல எல்லாருடைய புத்தியின் பிரவர்த்தியையும் அறிந்தவர். ஆனதுபற்றி, பிரம்மபுத்திரராகிய உம்மைக் கேட்கிறேன். நான் வேதங்களை முறைப்படி அத்யயனஞ்செய்து, அதன் உண்மையான அர்த்தத்தை யறிந்து, விரதங்களை யனுஷ்டித்து, யோகத்தால் பிரம்ம சுரூபத்தையும் அறிந்தேன். அப்படியிருந்தும், எந்தப் பாகம்

எனக்கு மிகவும் குறைவாயிருக்கிறதோ அந்தப் பாகத்தை யுபதேசிக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தார். அதனைக் கேட்ட நாரதர், வியாஸ மகாமுனியை நோக்கி, "இயற்கையில் பரிசுத்தமான பகவானுடைய யசஸ்ஸை (குணங்களை) வர்ணிப்பதால் பரமாத்மா சந்தோஷிப்பார். மற்ற ஞானத்தால் பகவான் திருப்தியடையமாட்டார். ஆகையால் தர்மாதி ஞானத்தைக் குறைந்ததாக நினைக்கிறேன். உம்மால் அந்தப் பகவானுடைய குணங்கள் பெரும்பாலும் முக்கியமாக வர்ணிக்கப்படவில்லை. முனிசிரேஷ்ட! மகாபாரதம் முதலியவைகளில் இடையில் ஈசுவரனுடைய கல்யாண குணங்கள் வர்ணிக்கப்பட்டிருந்தாலும், தர்மங்களையும், அதன் சாதனங்களையும் முக்கியமாகச் சொல்லியிருப்பதுபோல, பரமாத்மாவின் மகிமையைப் பிரதானமாக நீர் வர்ணிக்கவில்லை. எச்சிற்குழியில் கிடக்கும் சித்ரான்னம் முதலியவைகளைக் காக்கைகள் தின்று திருப்தியடையுமே யொழிய மானஸ ஸரஸில் சஞ்சரிக்கும் ஹம்ஸங்கள் அவைகளில் ஆசைப்படுகிறதில்லை. அப்படிப்போல உலகத்தைப் பரிசுத்தப்படுத்தும் பகவானுடைய மகிமையை வர்ணிக்காத கிரந்தங்கள், அற்புதமான பதச் சேர்க்கையுள்ளவைகளானாலும், அவற்றால் காமிகள் சந்தோஷப்படுவார்களே யொழியப் பிரம்மிஷ்டர்களான பரமஹம்ஸர்கள் திருப்தியடைகிறதில்லை. ஒவ்வொரு சுலோகத்திலும் அபசப்தங்களிருந்தாலும், நாசமற்றவராகிய பகவானுடைய திவ்ய நாமங்களும் மகிமையும் வர்ணிக்கப்பட்டிருந்தால், அந்தக் கிரந்தம் ஜனங்களுடைய பாபங்களையும் போக்கும். அதைச் சொல்பவர்களிருந்தால் பெரியோர்கள் கேட்பார்கள்; கேட்பவர்களிருந்தாலும் அவர்கள் சொல்லுவார்கள்; இருவகையாரு மில்லாதபோது தாமே கானஞ்செய்வார்கள்.

12—23. உபாதிகளின் சம்பந்தத்தை நிவர்த்திக்கும் பிரம்மஞானமும், பகவத் பக்தியில்லாதவனுக்குப் பலனை (அபரோக்ஷ ஸாக்ஷாத்காரத்தைக்) கொடுக்கிறதில்லை. மேலும், கர்மங்கள் எப்பொழுதும் துக்க ரூபங்களே. ஆதலால் பலனை யுத்தேசித்துச் செய்யப்பட்டவைகளானாலும், பகவானிடம் அர்ப்பிக்கப்படாதவரையில் அவைகள் பிரகாசிக்கிறதில்லை. ஓ! மகா பாக்கியமுள்ள வியாஸ மகரிஷியே! நீர் உண்மையான ஞானமுள்ளவர்; சுத்தமான கீர்த்தியுள்ளவர்; சத்தியத்திலேயே ஆசையுள்ளவர்; விரதங்களை அனுஷ்டித்தவர். ஆகையால் சகல பந்தங்களும் நிவர்த்தியாகவேண்டியதற்காகப் பகவானுடைய பலவகையான லீலா விபூதிகளை ஒரே மனதாகச் சிந்தியும். பகவானுடைய சரிதத்தில் ஆசையில்லாமல், மற்ற சரிதங்களைச் சொல்ல விரும்பியவர்களுடைய புத்தியானது பலவகையான தேவதா ரூபங்களையும், அநேக நாமங்களையும் சிந்தித்து நிலைபெறுமல் பெருங்காற்றில் அகப்பட்ட கப்பல் போல ஒரு நிலையாயிருக்கிறதில்லை. ஜனங்கள் இயற்கையாகவே காம்ய கர்மங்களில் ஆசையுள்ளவர்கள். அந்தக் கர்மங்கள் ஞானிகளால் நிந்திக்கக்கூடியவைகளானாலும், அவைகளைத் தர்மங்களென்றே சொல்லியிருக்கிறீர். ஆகையால் அவர்களைப் பிராகிருத ஜனங்களும் அப்படியே நினைத்திருக்கிருர்கள். “கர்மங்களாலும், பிரஜையாலும், தனத்தாலும் மோட்சத்தை யடையமுடியாது” என்ற சுருதிப்படி காம்ய கர்மங்கள் சிறந்தவைகளல்லவென்ற ஞானிகளுடைய வார்த்தையை அஞ்ஞர்கள் நம்புவதற்கு நியாயமில்லாமலிருக்கிறது. இப்படித் தாம் செய்தது ஒரு பெரிய சாஸ்திர விருத்தமான காரியம். ஆனதுபற்றி, காலத்தாலும், தேசத்தாலும் அளவிடக்கூடாத பிரபுவின் சுக சுரூபத்தை நிவர்த்தி மார்க்கத்தைக்கொண்டு வித்வான் தான் தெரிந்து

கொள்வான். அது அஞ்ஞனுல் அறியமுடியாது. ஆகையால் தேகம் முதலியவைகளில் அபிமானமுள்ளவர்களும், ஸத்வம் முதலிய குணங்களால் விஷயத்தில் செல்லுகிறவர்களுமான பிராகிருத ஜனங்களுக்காகப் பகவானுடைய லீலைகளை வர்ணியும். பின்னும், உலகத்தில் தன் ஜாதிக்கும், ஆசிரமத்திற்கும் உரியதான தர்மத்தைவிட்டு,பகவானுடைய தாமரைமலர்போன்ற பாதங்களைச் சேவித்துக்கொண்டிருந்தவன் பக்தியின் பயனை அடைவதற்கு முன்னமே பாதியில் மரணமடைந்தாலும், பக்தியின் தொடர்ச்சியற்றுப்போனாலும் அவனுக்கு அந்த வாசனையிருக்குமாகையால் ஒருபோதும் அவனுக்கு க்ஷேமக்குறைவு நேரிடாது. மேலும் ஈசுவரனிடம் பக்தி செய்யாமல், தன்னுடைய தர்மத்தை நன்ருய் அனுஷ்டித்தாலும் அதனுல் என்ன பலன் கிடைக்கப்போகிறது? (ஒன்றுமில்லையென்பது தாத்பரியம்.) பிரம்மதேவர் முதல் ஸ்தம்பமென்ற புழு வரையில் ஸம்ஸாரத்தில் சுற்றிக்கொண்டிருக்கும் எல்லாப் பிராணிகளாலும் எந்த வஸ்து அடையப்படவில்லையோ அதை யடைய முயலவேண்டும். எப்படி நாம் விரும்பாமலிருக்குங் காலத்திலும் துக்கம் நேரிடுகிறதோ, அப்படியே விஷய சுகமும் எந்த விடத்திலும் அந்த அந்தக் காலத்தில் கர்மத்தின் மகிமையைக் கொண்டு ஜனங்களால் அடையப்படுகிறது. கர்மத்தை மாத்திரம் அனுஷ்டித்தவன் ஸம்ஸார துக்கத்தை யடைவது போல ஒருவன் பகவத் பக்திசெய்து அந்த ஜன்மாவில் அது பூர்த்தியடையாமல் தாழ்மையான வேறு ஜன்மம் அடைந்திருந்தாலும் அதில் அவனுக்குத் துக்கம் நேரிடுகிறதில்லை. பகவானுடைய பாதங்களில் பக்திசெய்தவன் மறு ஜன்மத்திலும் அவைகளை மறக்கமாட்டான்; அவைகளுக்கு வசப்படுவான். ஈசுவரனைவிட்டு ஜீவன் எப்படி வேறில்லையோ, அப்படிப் பிரபஞ்சம் பகவானைவிட வேறில்லை. அவரிட

மிருந்தே இந்த ஜகத் உண்டானது. அவராலேயே காப்பாற்றப்படுகிறது. அந்தப் பரமாத்மாவை நீரே தெரிந்து கொள்வீர் ; ஆனாலும் சொற்ப பாகத்தைத் தெரிவித்தேன்; வீணாகாத ஞானமுள்ள நீர் பிறப்பில்லாத பரம புருஷனுடைய அம்சமேயாம். மேலும் நீர் இயற்கையில் ஜனன மரணமில்லாதவரானாலும், உலகத்தின் க்ஷேமத்திற்காகச் சரீரமெடுத்துக்கொண்டீர். ஆகையால் இவ்விஷயத்தைத் தெரிந்துகொள்ளும். அந்த மகா மகிமை பொருந்திய பரம புருஷனுடைய சரிதத்தை வர்ணியும். சாஸ்திரங்களைக் கேட்பது (சிரவணம்), யாகஞ்செய்தல், குளம் கிணறு வெட்டுவித்தல், பிரியமான வார்த்தை சொல்லுதல், மகா தானஞ்செய்தல் ஆகிய இவைகளின் பலன் என்னவென்றால் உத்தம சுலோகராகிய பகவானுடைய குணங்களை வர்ணிப்பதேயாம். இதுவே சாசுவதமாகிய பலன். இதற்கு உதாகரணமாக என்னுடைய முன்ஜன்ம விருத்தாந்தத்தைச் சொல்லுகிறேன்.

23—38. நான் முன்ஜன்மத்தில் பிராம்மணர்களுடைய வீடுகளில் வேலைசெய்துகொண்டிருந்த சூத்திரஸ்திரீயின் புத்திரனாக இருந்தேன். அப்பொழுது மழைக் காலத்தில் ஒரே இடத்தில் வசிப்பதாகிய சாதுர்மாஸ்ய விரதத்தை யனுஷ்டித்த சில சன்னியாசிகளுக்குப் பால்யத்திலேயே நான் சிசுரூஷை செய்துவந்தேன். பால்யமுள்ளவனானாலும், விளையாட்டுச் சாமான்களை வைத்துக்கொள்ளாமலும், பால்ய சாபல்யமில்லாமலும் இந்திரியங்களை ஜெயித்து, அவர்கள் ஏவினதைச் செய்வதிலேயே நோக்கமுள்ளவனாயிருந்தேன். அப்பொழுது சமபுத்தியுள்ள அவர்களுக்குச் சொற்பமாய்ப் பேசும் என்னிடத்தில் கருணை உண்டாயிற்று. ஒரு நாள் அவர் புசித்த பிறகு, பாத்திரத்தில் எஞ்சியிருந்த அன்னத்தை

அவர்களுடைய அனுமதியின்பேரில் நான் புசித்தேன். அதனால் சகல பாபங்களும் நிவர்த்தியாகிச் சுத்தனானேன். இப்படிச் சித்தம் சுத்தமானபோது, அவர்கள் அனுஷ்டிக்கும் பகவத்பக்தியாகிய தர்மத்திலேயே எனக்குப் பிரியம் நேர்ந்தது. அவர்கள் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய லீலைகளைக் கானஞ்செய்துகொண்டிருந்தார்கள். இனியவைகளான அவைகளை நான் எப்பொழுதும் அந்தரங்கமான பிரியத்துடன் கேட்டேன். அதனால் எனக்குப் பக்தி அதிகரித்தது. அதிலேயே விசேஷ நோக்கமுள்ள எனக்குப் பகவானிடம் ஸ்திரமான பக்தியுண்டானதால் அப்பொழுதே பரப்பிரம்மமானது பிரபஞ்ச சம்பந்தமற்றதென்றும், அதுவே நானென்றும், என்னிடத்தில் ஸ்தூல சூட்சும சரீரங்கள் அவித்தையால் பொய்யாக ஆரோபிக்கப்பட்டனவேயொழிய உண்மையிலில்லை என்றும் நான் தெரிந்துகொண்டேன். இப்படி மழைக் காலம், சரத் காலம் ஆகிய இரண்டு ருதுக்களிலும் மகாத்மாக்களாகிய அந்தச் சன்னியாசிகளால் சொல்லப்பட்ட மகாவிஷ்ணுவின் மகிமையை மூன்று காலங்களிலும் சிரவணஞ் செய்தேன். அதனால் சிறந்த பக்தியுண்டானதுமன்றி, ரஜோ குணமும், தமோ குணமும் என்னைவிட்டு விலகின. அவர்களுக்குச் சிசுரூஷை செய்வதிலேயே ஆசையுள்ளவனும், வணக்கமுள்ளவனும், பாபமில்லாதவனும், சிரத்தையுள்ளவனும், இந்திரியங்களை ஜயித்தவனும், பால்ய வயதுள்ளவனும், எப்பொழுதும் கூடவே சஞ்சரிப்பவனுமாகிய எனக்கு அந்த முனிவர்கள் தீனர்களிடத்தில் பிரீதியுள்ளவர்களாகையால் விசுவரூப யாத்திரைக்கு முன்னிலையில் பிரம்மவித்தையை யுபதேசித்தார்கள். அது மிகவும் ரகசியமானது; ஈசுவரனால் நேரில் சொல்லப்பட்டது. அதனால் நான் சகல பிரபஞ்
சிருஷ்டிக்கும் வாசுதேவராகிய பகவானுடைய

மாயா மகிமையைத் தெரிந்துகொண்டதுமன்றி, அவருடைய பாதத்தை யடையும் சாதனத்தையும் தெரிந்துகொண்டேன். ஓ! நன்ருய் விரதங்களை யனுஷ்டித்த பிராம்மணேத்தம! வியாதியை யுண்டுபண்ணும் திரவியங்கள், வேறு பதார்த்தத்தின் சேர்க்கையால் ரோகத்தை நிவர்த்திப்பது போல, கர்மமானது ஸம்ஸாரமாகிய வியாதியைக் கொடுக்கக்கூடியதானுலும், பரமாத்மாவிடம் சமர்ப்பிக்கப்பட்டால், அது மூவகையான தாபங்களையும் போக்குகிறது என்ற தர்ம ரகசியத்தையும் அவர்கள் எனக்கு உபதேசித்தார்கள். கர்மயோகங்களெல்லாம் ஸம்ஸாரத்தைக் கொடுக்கின்றவைகளானுலும், மேற்காட்டிய ஈசுவரனுடைய சந்தோஷத்திற்காகச் செய்கிறேம் என்ற எண்ணத்துடன் செய்து, அவரிடத்தில் சமர்ப்பிக்கப்படுமானல் அவை பந்தங்களாகிறதில்லை. பகவானுடைய சந்தோஷமாகிய பலனை விரும்பிச் செய்யப்படும் கர்மமானது, பக்தி யோகத்துடன் கூடிய ஞானத்தை யுண்டுபண்ணுகிறது. "எதனைச் செய்கிருயோ, எதனைப் புசிக்கிருயோ, எதனை ஹோமஞ்செய்கிருயோ, எதனைக் கொடுக்கிருயோ அதனை என்னிடம் கொடுத்துவிடு" என்ற பகவானுடைய ஆஞ்ஞையின்படி பெரியோர்கள் கர்மங்களைச் செய்கிருர்கள். கிருஷ்ணனுடைய கல்யாண குணங்களையும், திவ்ய நாமங்களையும் வாக்கினல் உச்சரிக்கிருர்கள்; அவரைத் தியானஞ் செய்கிருர்கள். பக்தியோகத்தால் நல்ல ஞானமுள்ள புருஷனனவன், வசுதேவருடைய புத்திரராயும், பிரத்யும்னராயும், அனிருத்தராயும், சங்கர்ஷண ரூபியாயுமிருக்கும் பகவானகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறேம்" என்று தியானஞ் செய்து, யக்ஞபுருஷனுகிய பகவானை உபாசிக்கிருன். அந்த ஈசுவரனுக்கு மேற்காட்டிய மந்திரத்தால் குறிக்கப்பட்ட சரீரத்தைவிட வேறு சரீரமில்லை.

39—40. பகவானுடைய கட்டளைப்படி நடந்த எனக்கு அந்தப் பகவான் தம்முடைய ஞானம் முதலியவை களுக்குச் சமமான ஞானத்தையும் ஐசுவரியத்தையும், தம் மிடத்தில் பக்தியையும் கொடுத்தார். அனேக சாஸ்திரங் களைக் குருமுகமாகக் கேட்ட வியாஸரே! பிரபுவாகிய பக வானுடைய மகிமையை நீரும் வர்ணியும். அதனால் வித்வான் களால் அறியவேண்டிய விஷயங்கள் யாவும் உம்மால் அறி யப்படும். துக்கத்தினால் வருத்தமடைந்தவர்களுக்கு அதனை நிவர்த்திசெய்யும் உபாயம் இதுவே யொழிய வேறில்லை.

## நோட்டு

8—17. ஆத்மா—சரீர வியாதி, மனோவியாதி முதலிய துக் கங்களில்லாமல் பகவத் பஜனத்தால் சந்தோஷமடைந்திருக் கிறார். சந்த். வீர, 21—பாரதம்—தேசத்தாலும், காலத்தாலும் அளவிடக்கூடாத பரப்பிரம்மத்தை விசாரித்தும், அர்த்தத்தாலும் சப்தத்தாலும், மகத்தான சப்த பிரம்மமாகிய வேதத்தையும் நன்றாய் விசாரித்திருக்கிறீர். ஆனதால் தாங்கள் பூமியில் அவதரித்த தின் காரியம் முடிந்துவிட்டது. அப்படியிருந்தும், அவதரித்த காரியத்தைச் செய்யாதவர்போல் கவலைப்படுகிறீர்.—விஜ. பரம்—பிரம்மா, ருத்ரன் இவர்கள். 30—அபரம்—இந்திரன் முதலியவர் கள்; பிரம்மா முதலியவர்களுக்கும் மேலானவர். வீர. யோகத் தால்—"யாகம், நல்ல ஆசாரம், இந்திரிய நிக்ரகம், பிறருக்கு இம்சைசெய்யாமலிருப்பது, தானம், வேதாத்யயனம் முதலிய கர் மங்களுக்குள் யோகத்தால் ஆத்மாவின் உண்மையை அறிவதே மேலானது"-யாஞ்யவல்கிய ஸ்மிருதி. அற்புதமான—யமகம் முதலிய சப்தாலங்காரங்களும், உத்பிரேக்ஷை முதலிய அர்த்தாலங்காரங் களும் பொருந்தியிருந்தாலும்—ஸ்ரீத.கானம்—விசேஷ ஆனந்தத்தை உண்டுபண்ணுவதால் கானஞ்செய்கிறார்கள்; ஸ்தோத்திஞ்செய்து பாபங்களைப் போக்கடித்துக்கொள்ளுகிறார்கள்.—ஸ்ரீத. "பரம ஹம்சர்களுக்கு அவை பிரியமானவைகள்; அவைகளே பகவானுக் குப் பிரியமானவைகள்." என்றபடி பாகவத தர்மங்களை வர்ணிக்

காமலிருக்கும் கிரந்தங்கள் பரம ஹம்ஸர்களால் ஆதரிக்கக்கூடிய வையல்லவென்று காட்டப்பட்டது—வீர. நிலைபெறுமல்—"ஓ அர்ஜுன! பரமாத்மாவைவிட வேறு ஒன்றுமில்லை என்னும் பக்தியானது ஒருவகையேயாம். அந்த நிச்சயமில்லாதவர்கள் இந்திரன், அக்னி முதலிய தேவதைகளைச் சிந்தித்து, புத்தியைப் பலவகையாகச் செலுத்துகிறார்கள்" பகவத் கீதை என்ன பலன்?— பகவத் பக்தியின்றி, தர்மத்தைமாத்திரம் அனுஷ்டிப்பவனிடம் பகவான் பிரீதி செய்கிறதில்லை. அதனல் பாபம் நீங்குகிறதுமில்லை. அதனல் ஆரம்பித்த காரியம் பூர்த்தியாகிறது மில்லை—ஸ்ரீத. சுற்றி—சுவர்க்கம் முதலிய மேலுலகங்களிலும், பூமி முதலிய கீழுலகங்களிலும் சஞ்சரிக்கும் ஜனங்கள், அவர்களால் முன்பு செய்யப்பட்ட பாப புண்யங்களால் துக்கத்தையும் சுகத்தையும் அடைவதுபோலப் புண்ய பாபங்களைக்கொண்டு மோக்ஷத்தை யடையமுடியாதாகையால், அதனை அடைவதற்கு முயலவேண்டும்.—சந்த். பிரபஞ்சம்—அசையும் பொருள், அசையாப் பொருள் இவைகளடங்கியது. "இந்தப் பிரபஞ்ச முழுவதும் பரப் பிரம்மம்,"—சுருதி. ஸ்வல்ப—நல்ல ஆசாரியர்களை யடைந்த புருஷன் பரமாத்மாவைத் தெரிந்து கொள்ளுகிறான்"—சுருதி. வியாசரென்ற திவ்விய நாமத்துடன் பகவான் பிரகாசிப்பதுபோலப் பிரபஞ்சமென்ற பெயருடனும் அவரே விளங்குகிறார்—சந்த். நான்—பெரியோர்களுடைய சேர்க்கையால் க்ஷேமம் கிடைக்குமென்பது காட்டப்பட்டது. சாதுர்மாஸ்யம்—ஒவ்வொரு வருஷத்திலும் நான்கு மாதங்கள் ஸஞ்சாரத்தைநிறுத்தி, ஒரே இடத்தில் வசிக்கவேண்டும் என்று சுருதியில் சொல்லியிருக்கிறபடி சன்னியாசிகள், "வர்ஷா காலமானது பிராணிகள்உண்டாகும் சமயமானதால் பெரும்பாலும் மார்க்கங்கள் ஜந்துக்களால் நிறைந்திருக்கும். ஆகையால் அவைகளுக்கு இம்சை நேரிடாமலிருப்பதற்காக நான்கு பக்ஷங்கள் இந்தக் கிராமத்திலேயே வசிப்பதாக உத்தேசித்திருக்கிறோம். உங்களுடைய சௌகரியத்தைத் தெரிவிக்கவேண்டும்" என்று கிராமவாசிகளான ஜனங்களைச் சன்னியாசிகள் கேட்கவேண்டும். அவர்கள் அப்படிக் கேட்டசன்னியாசியை நோக்கி, "தாங்கள் இவ்விடத்திலேயே சுகமாய் வசியுங்கள். எங்களால்

கூடிய சிசுரூஷை செய்து நாங்கள் கிருதார்த்தர்களாக ஆகிவிடு கிறோம்" என்று பதில் சொல்லுவார்கள். பின்பு ஆஷாட மாதத்திய பூர்ணமி முதல் நான்கு பக்ஷங்களை ஒரேயிடத்தில் போக்குவார்கள். இதுவேசாதுர்மாஸ்ய விரதமெனப்படும். பிறகு ஐந்தாவதுபக்ஷத்தின் பிரதமையில் சஞ்சாரத்திற்கு ஆரம்பிப்பார்கள். அதுவே விசுவரூப யாத்திரையாகும். புஜித்தேன்-எச்சிலான ஸ்தலத்தை சுத்திசெய்வது முதலியவற்றையுஞ் செய்தேன்—விஜ. ஆஞ்ஞை—சுருதிகளும் ஸ்மி ருதிகளும்; பகவானுடைய கட்டளை. பிரத்யும்ன—இதுமுதல் இரண்டு சுலோகங்களால் பகவானுடைய குணங்களையும் நாமங்களை யும் ஸ்மரிப்பதும்,பலத்தை யுத்தேசியாமல் கர்மானுஷ்டானம் செய் யும் பிரகாரங்களும், அப்படிச் செய்பவனே மேலானவனென்றும் காட்டப்பட்டிருக்கிறது. "ஓம் தத்ஸத் என்பது பரப்ரம்மத்தை மூவகையாகச்சொல்வதாக ஸ்மிருதியிலே சொல்லப்பட்டிருக்கிறது" என்று பகவான் சொல்லியிருப்பதினால் வாசுதேவ, பிரத்யும்ன, அனிருத்த, சங்கர்ஷண இந்த நான்கு ரூபமாயிருக்கும் பகவா னுக்கு நமஸ்காரம் பண்ணுகிறோம் என்பதால் பகவானுடைய திவ்ய நாமத்தை உச்சரிக்கவேண்டிய வகை காட்டப்பட்டது. மூலத்தில் தீமஹி—'தியானம் செய்கிறோம்' என்று இருப்பதால் பிரணவ சப் தத்தால் காட்டப்பட்ட அனந்த கல்யாண குணங்கள் நிறைந்த பகவானைத் தியானம் பண்ணுகிற பிரகாரமும், ரட்சிப்பது என்று அர்த்தமுள்ள 'அவ' என்ற தாதுவிலிருந்து பிரணவம் ஏற்பட்டதா கையால் எல்லாரையும் ரட்சிப்பதாகிய பரமாத்மாவின் குணமும், மேலும் அந்தப் பிரணவம் அகாரம், உகாரம், மகாரம் இம்மூன்று அக்ஷரங்களால் அமைந்திருப்பதால் எல்லாவற்றிற்கும் பரமாத்மா காரணமென்றும், எல்லாவற்றிற்கும் அதிபதியென்றும் காட்டப்பட் டிருக்கிறது. தவிரவும், வாஸுதேவ என்பதால் பரமாத்மாவானவர் எல்லாவற்றிக்கும் ஆதாரமென்றும, எல்லோருக்கும் அந்தராத்மா வென்றும், பிரத்யுமன் என்பதால், "அவ்விடத்தில் சூரியன் பிரகா சிக்கிறதில்லை;சந்திரனும்,நக்ஷத்திரங்களும், மின்னல்களும், அக்னியும் விளங்குகிறதில்லை" என்ற சுருதிப்படி நிகரில்லாத பிரகாசமுள்ள வர் என்பது 'அனிருத்த' என்பதால் ஸர்வ வியாபகரென்றும்,

## அத்தியாயம் 6

### நாரதருடைய முன் ஜன்மம்

சத்யவதியின் புத்திரராகிய வியாச மகரிஷியானவர், தேவரிஷியாகிய நாரதருடைய பிறப்பு, சரிதம் ஆகிய இவைகளைக் கேட்டுப் பின்னும் அவரை நோக்கி, 'ஓ! நாரதரே! உமக்கு ஞானோபதேசஞ் செய்த சன்னியாசிகள் சென்ற பிறகு பால்ய வயதுள்ளவரான நீர் என்ன செய்தீர்? பிரம்ம தேவருடைய புத்திரரே! அபர வயதில் என்ன செய்துகொண்டிருந்தீர்? தேகவியோக காலம் நேர்ந்த போது சரீரத்தை எப்படி விட்டீர்? ஜீவன் ஒரு சரீரத்தை விட்டு மற்றொரு சரீரமடைந்த பின் முன் ஜன்மத்தின் விஷயங்கள் கால மகிமையால் மறந்துபோகின்றனவே. அப்படிக்கிருக்க முன்காலத்தில் நடந்த விஷயம் எப்படித் தங்கள் ஞாபகத்திலிருக்கிறது?' என்றார். அதனைக் கேட்ட நாரதர் வியாச மகரிஷியை நோக்கி, "எனக்கு ஞானோபதேசஞ்செய்த சன்னியாசிகள் தேசாந்தரம் போன பிறகு சிறு வயதுள்ள நான் என்ன செய்தேனென்றால், என் தாயாருக்குக் குழந்தை நானொருவனே; ஆனதுபற்றியும், எனக்கு வேறு கதியில்லாததனாலும், என்னுடைய தாயார் என்னிடம் மிகவும் பிரியம் வைத்திருந்தாள். அவள் ஒன்றையும் அறியாதவள்; வேலைசெய்து ஜீவிப்பவள்; மரத்தால் செய்யப்பட்ட பிரதிமை மனிதர்களால் ஆட்டி வைக்கப்படுவதுபோல, இந்த ஜனங்கள் யாவும் ஈசுவரனுக்கு சுவாதீனப்பட்டிருக்கிறார்கள். ஆனதால் என் தாயார் என்னுடைய யோகக்ஷேமத்தை வகிக்க விரும்பினவளானாலும் அதை நடத்த சாமர்த்தியமற்றவளாக இருந்தாள். திக்கு, தேசம், காலம் ஆகிய இவைகளின் பிரிவையறியாத ஐந்து வயதுள்ள சிறுவனாகிய நான் மாதிரு

சிநேகத்தால் அந்தப் பிராம்மண கிருகத்திலேயே வசித்தேன். ஒரு நாள் இராத்திரி என் தாயார் மாடு கறப்பதற்காக வீட்டுக்கு வெளியே வரும்போது ஒரு பாம்பைக் காலால் மிதித்தாள். அப்பொழுது அனுதையான அவளை அந்த சர்ப்பம் காலனுல் தூண்டப்பட்டுக் கடித்தது. உடனே அவள் மரணமடைந்தாள். அப்பொழுது நான், "ஈசுவரன் பக்தர்களுக்கு க்ஷேமத்தைக் கொடுப்பதிலேயே நோக்கமுள்ளவராகையால் நமக்கு நேர்ந்த மாத்ரு துக்கம் அனுக்ரகமேயொழிய வேறில்லை" என்று நினைத்து வடக்குத் திக்கை நோக்கிப் புறப்பட்டேன். சம்பத்துள்ள அனேக தேசங்களையும், கிராமங்களையும், கோகுலங்களையும், ரத்தினம் விளையும் பூமிகளையும், பயிரிடுபவர்கள் வசிக்கும் இடங்களையும், மலையடிவாரங்களையும், பாக்கு மரம் முதலியவைகளின் தோட்டங்களையும், தாளுக முளைத்த மரங்கள் இருக்கும் காடுகளையும், மரங்கள் வைத்து விருத்திசெய்யப்பட்ட இடங்களையும், பலவகையான தாதுக்களால் அழகான மலைகளையும், யானைகளால் முறிக்கப்பட்ட கிளைகளுள்ள மரங்களையும், நல்ல ஜலமுள்ள குளங்களையும், தேவர்கள் ஜலக்கிரீடை செய்யும் தாமரை ஓடைகளையும், அவைகளிலிருக்கும் அழகான குரலுள்ள பட்சிகளையும், தேனீக்களையும், அவைகளால் அலங்கிருதமான தாமரைத் தடாகங்களையும் பார்த்துக்கொண்டு நான் ஒருவனுக அவைகளைக் கடந்து சென்று பயங்கரமான வனத்தைக் கண்டேன். அது கோரைகளும், மூங்கில்களும், வண்டுகளால் துளைக்கப்பட்ட மூங்கில்களும், நாணல்களும், தர்ப்பங்கள் அடர்ந்திருப்பதாலும், சர்ப்பங்களும், கோட்டான்களும், நரிகளும் வசிக்குமிடமாயிருந்ததாலும் மிகவும் பயங்கரமாயிருந்தது. அப்பொழுது நான் வெகுதூரம் நடந்ததால், பசி தாகமுண்

டாகி, அவற்ருல் இந்திரியங்கள், சரீரம் இவைகளின் வலிமை குறைந்து, களைப்படைந்தேன். பின்பு ஒரு நதியின் மடுவில் ஸ்நானஞ்செய்து, ஆசமனம் பண்ணி் சிரமத்தை நிவர்த்தித்துக்கொண்டேன். பின்பு மனிதர்களுடைய சஞ்சாரமில்லாத அந்தக் காட்டில் ஒரு அரசமரத்தின் கீழ் உட்கார்ந்து, சன்னியாசிகளிடம் உபதேசம் பெற்றபடி இருதயத்திலிருக்கும் பரமாத்வைத் தியானஞ் செய்தேன். பகவானுடைய பக்தியால் மனத்தை ஒருவகைப் படுத்தி, அவருடைய தாமரைபோன்ற பாதத்தைத் தியானஞ்செய்யும்போது என்னுடைய இரு கண் களிலிருந்து ஆனந்தபாஷ்பம் பெருகியது. அப்பொழுது சொற்ப காலத்தில் என்னுடைய இருதயத்தில் பகவத் சுரூபம் பிரகாசித்தது. ஓ! வியாச மகரிஷியே! விசேஷப் பிரேமையால் மயிர்க்கூச்சலுண்டாயிற்று. அதனுல் மிக்க சுகமுள்ளவனுய் ஆனந்தப் பிரவாகத்தில் மூழ்கி என்னையும் பகவத் ரூபத்தையும் மறந்திருந்தேன். இப்படிக்கிருக்க மிக்க அழகுள்ளதும், சகல துக்கங்களையும் போக்கக் கூடியதுமான அந்தப் பகவானுடைய ரூபம் மறைந்தது. உடனே அதனைக் காணுமல் மிகவும் மனவருத்தமடைந்து சீக்கிரமாக எழுந்திருந்தேன். மறுபடியும் அந்தப் பகவத் சுருபத்தைப் பார்க்க விரும்பி, மனத்தை யடக்கி அதே ரூபத்தை இருதயத்தில் தியானஞ் செய்தேன். அப்படியும் அந்த ரூபம் நேரில் தோன்றவில்லை. ஒரு தடவை பார்த்தால் திருப்தியுண்டாகாததனுல் மனக்கவலை யடைந்தேன்.

21—26. இப்படிக் காட்டில் கவலையுடனிருக்கும் என்னை நோக்கி வேதவாக்கியங்களுக்கு விஷயமாகாத பகவான், "ஓ! குழந்தாய்! கர்மம் முதலிய தோஷங்கு

ளற்றுப்போகாத யோகிகளால் என்னைப் பார்க்க முடியாது. ஆனதால் இந்த சூத்திர ஜன்மத்தில் நீ என்னைப் பார்க்கத் தகுந்தவனல்ல. ஆனால் ஒருதரம் என் உருவத்தைக் காண்பித்த காரணமென்னவெனில், ஒருதரம் என் உருவத்தைப்பார்த்தவனுக்குப் பின்னும் பார்க்கவேண்டுமென்ற எண்ணம் உண்டாகும். அதனால் என்னிடமே மனத்தைச் செலுத்தியவர்களுக்கு சகல மனோதோஷங்களும் நிவர்த்தியாகிவிடுகின்றன. வெகு காலம் சாதுக்களுக்குச் சிசுரூஷை செய்ததால் உனக்கு என்னிடத்தில் ஸ்திரமான பக்தி உண்டாயிற்று. ஆனதால் தோஷத்தை உண்டுபண்ணும் இவ்வுலகத்தை விட்டு என்னுடைய பார்ஷதனாக ஆகிவிடுவாய். என்னிடததில் உனக்கு உண்டான பக்தி ஒருபொழுதும் குறையாமலிருக்கும். மேலும், பிரளய காலததிலும் என்னுடைய அனுக்ரகத்தால் முந்திய ஞாபகம் தவறுமலிருக்கும" என்று அனுக்கிரகித்தார். இப்படி அனுக்கிரகிக்கப்பட்ட நான் மகா பூதமாயும், ஆகாச சரீரமுள்ளவரும், எல்லாருக்கு அதிபதியாயும், எல்லாருக்கும் சமீபத்திலிருப்பவரானாலும் ஒருவராலும் அறியப்படாதவருமான அந்தப் புருஷனுக்கு நமஸ்காரஞ் செய்தேன்.

27—32. பின்பு அனந்த (நாசமற்றவ) னுடைய திவ்ய நாமங்களை வெட்கப்படாமல் உச்சரித்துக்கொண்டும், அவரால் செய்யப்பட்ட ரகசியமான லீலாவிபூதிகளை நினைத்தும், மற்ற ஆசைகளை யொழித்தும், கர்வம், மாத்ஸரியம் இவைகளை விலக்கிக் காலத்தை எதிர்பார்த்து, சந்தோஷமாகப் பூமியில் சஞ்சரித்தேன். இப்படி ஸ்ரீ கிருஷ்ணனிடத்திலேயே மனத்தைச் செலுத்தி, ஒன்றிலும் பற்றுதலில்லாமல் சுத்தசித்தனாக இருந்தேன். இப்

படியிருக்கையில் சுத்தமான ஆகாசத்தில் மின்னலுடன் மேக வரிசை தோன்றினாற்போல திடீரென்று மரண காலம் நேர்ந்தது. அப்பொழுது சுத்தமான அந்தப் பார்ஷத சரீரத்திற்குப் பகவத் இச்சைப்படி நான் போகும்போது பிராரப்த கர்மம் நசித்து, ஐந்து பூதங்களால் ஏற்பட்டிருந்த பழைய சரீரம் கீழே விழுந்தது. பிறகு நான் இந்த மூவுலகத்தையும் காரண ரூபமாய் அடக்கிக்கொண்டு, பிரளய காலத்தில் சமுத்திர ஜலத்தில் ஸ்ரீ நாராயணன் சயனஞ் செய்து கொண்டிருக்கும்போது, பின்பு அவரிடம் சயனஞ்செய்ய விரும்பிய பிரம்மதேவரின் சுவாசத்தின் வழியாக அவருடைய இருதயத்தில் பிரவேசித்தேன். பிறகு 1000 சதுர் யுகங்கள் கொண்ட பிரம்மதேவருடைய இராத்திரி முடிந்தவுடன் மறுநாள் காலையில் பிரம்மதேவர் ஜகத்தைச் சிருஷ்டிக்க யத்தனித்தார். அப்பொழுது அவருடைய இந்திரியங்களிலிருந்து மரீசி முதலிய பிரஜாதிபதிகளும் நானும் உண்டானோம். நான் குறைவின்றி பிரம்மசரிய விரதங்களை யனுஷ்டித்து, மூவுலகத்தில் உள்ளிலும் வெளியிலும் மகாவிஷ்ணுவின் அனுக்கிரகத்தால் ஓரிடத்திலும் தடையற்ற நடையுள்ளவனாகிச் சஞ்சரிக்கிறேன்.

33—37. தவிரவும், இந்த வீணை ஈசுவரனால் கொடுக்கப்பட்டது. இது ஷட்ஜம் முதலிய ஸ்வரங்களாகிய நாதப் பிரம்மத்தால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. ஆனதால் மூர்ச்சனை முதலியவைகளுடன் ஸ்ரீ நாராயணனுடைய கதையைக் கானஞ்செய்துகொண்டே சஞ்சரிக்கிறேன். பகவானுடைய மகிமையை நான் கானஞ்செய்யும்போது, ஜகத்தைப் பரிசுத்தப்படுத்தும் பாதங்களுள்ளவரும், எல்லோராலும் பிரியப்படக்கூடிய லீலைகளுள்ளவருமான பகவான் என்னால் அழைக்கப்பட்டவர்

போல என் மனத்தில் வந்திருந்து தரிசனங் கொடுக்கிறார். விஷயத்தில் ஆசையால் அடிக்கடி அவைகளையே கவர்ந்துகொண்டிருக்கும் சித்தமுள்ளவர்களுக்குப் பகவானுடைய லீலைகளை வர்ணிப்பதே சம்சார சாகரத்தைத் தாண்டச் செய்யும் ஓடமென்று நிச்சயிக்கப்படுகிறது. காமம் முதலிய ஆறுவகைச் சத்துருக்களால் பீடிக்கப்படும் மனது பகவானைச் சேவிப்பதால் சுத்தமாவது போல யமம் முதலிய யோக சாதனங்களால் சுத்தப்படுகிறதில்லை. தோஷமற்றவரே! என்னுடைய பிறப்பு, என்டைய சரிதம் முதலிய இரகசியங்களைப்பற்றி உம்மால் கேட்கப்பட்டவைகளெல்லாவற்றையும் உம்முடைய மனம் சந்தோஷப்படும்படி விஸ்தாரமாகச் சொன்னேன்" என்று சொன்னார்.

38—39. ஓ! சௌனகர் முதலிய மகரிஷிகளே! இப்படி தெய்வச் செயலாய் வந்த நாரதர் சத்தியவதியின் புத்திரராகிய வியாசருடன் சம்பாஷணைசெய்து, 'நான் போய் வருகிறேன்' என்று சொல்லி, வீணையை மீட்டிக் கொண்டே சென்றார்.

நாரதர் உலகமெங்குஞ் சென்று, சார்ங்கமென்ற வில்லைத் தரித்த ஈசுவரனுடைய சரிதத்தை வாக்கினாலும், வீணையைக் கொண்டு கானஞ் செய்தும், சகல லோகத்தையும் சம்சார துக்கத்திலிருந்து காப்பாற்றுகிறார்; ஆகையால் இவரே பாக்கியசாலி. இது இப்படி இருப்பது ஆச்சரியம்.

## நோட்டு

ஸன்யாசிகள்—மூலத்தில் பிக்ஷு வென்றிருப்பதால் ஞான பிக்ஷை கொடுப்பவர்களென்று அர்த்தம்—விஜ. யோகம்—இல்லாதவைகளை ஸம்பாதிப்பது. க்ஷேமம்—ஸம்பாதித்தவைகளைக் காப்பாற்றுவது—வீர. தாயார் என்னிடத்தில் மிக்க பிரியம் வைத்திருந்த

படியால் பெரியோர்கள் பின் நான் போகவில்லை—விஜ. ஸ்நேஹத்தால்—எப்பொழுது இந்த ஸ்நேஹம் குறையுமென்று எதிர்பார்த்திருந்தேன். ஸ்ரீத. நினைத்து—எவனை யனுக்ரஹிக்கவேண்டுமென்று விரும்புகிறேனோ அவனுடைய பணத்தையும் பந்துக்களையும் நாசஞ் செய்கிறேன்'' —ஸ்மிருதி. புறப்பட்டேன்—மாதாவிற்கு அபரக்ரியை செய்தபிறகு—விஜ. கிராமங்கள்—'பிராம்மணர்களும் அவர்களுடைய வேலைக்காரர்களும் வஸிக்குமிடம்: அல்லது சூத்திரர்களும் அவர்களுடைய வேலைக்காரர்களும் வஸிக்குமிடம்'' — பிருது வேத—எதை யடையாமல் வாக்குகள் மனதுடன் திரும்புகின்றனவோ— சுருதி. திருப்தி—விஷயத்தில் ஆசையுள்ளவனுக்கு ஒரு தடவை விஷயத்தை யனுபவித்ததால் திருப்தியுண்டாகாததுபோல —வீர. மஹாபூதம்—''ரிக் வேதம் முதலியவைகள் இந்த மஹாபூதத்தின் நிச்வாஸமே'' சுருதி. காலத்தை—பிராரப்த கர்மத்தின் முடிவை—ஸ்ரீத. பிரவேசித்தேன்—''பிரம்மதேவர் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் தேகத்தில் பிரவேசித்து அவருடன் ஒன்றாய்க் கலந்து யோகநித்திரையை யடைந்தார்'' —கூர்ம புராணம். 1000 சதுர்யுக—மனுஷ்யமானத்தால் 1000 சதுர்யுகமானால் பிரம்மதேவருக்கு ஒரு பகல் முடியும் அவ்வளவு காலங்கள் அடங்கியது ஒரு ராத்திரியாகும். அம்மாதிரியானபகலும் ராத்திரியும் சேர்ந்தால் ஒரு தினம். அப்படி 30 தினங்கள் ஒரு மாதமாகும். அப்பேர்ப்பட்ட மாதங்களில் 12 கொண்டது ஒரு வர்ஷம். அப்படி நூறு வருஷங்கள் பிரம்மதேவருக்கு பரமாயுள். இதுவே பிரம்மமான மெனப்படும். மரீசி—வஸிஷ்டர் முதலிய மஹரிஷிகளும்—வீர. வெளியிலும்—கர்மிகள் மூவலகத்திற்கு வெளியில் வரமாட்டார்கள். தபஸ் முதலியவைகளால் பிரம்மலோகத்தை யடைந்தவர்கள் இதற்குள் வருகிறதில்லை. ஸ்ரீத. ஈசுவரனால்—பிரம்மதேவரால் கொடுக்கப்பட்டது—சந்த்ரூர்ச்சனை—ஸ்வாத்தின் ஆரோஹாவரோஹணம்.

# அத்தியாயம் 7

## அர்ச்சுனன் அசுவத்தாமாவைச் சிட்சித்தது

சௌனக மகரிஷியானவர், ஸூதரை நோக்கிப் "பிறகு பகவானாகிய வியாஸ மகரிஷி, நாரதருடைய அபிப் பிராயத்தை யறிந்து எதனைச் செய்தார்" என்று கேட்டார்.

2—8. இதனைக் கேட்ட ஸூதர், சௌனகரை நோக்கி, பிரம்ம பத்தினியாகிய ஸரஸ்வதி நதியின் மேல் 'சமயாபிராஸம்' என்னும் ஒரு ஆசிரமமுண்டு. அது மகரிஷிகள் யாகஞ் செய்யுமிடம். மேலும் அது இலந்தை மரங்களால் அலங்கரிக்கப்பட்டது. அந்த முக்கியமான ஆசிரமத்தில் வியாஸ மகரிஷியானவர், ஆசனமஞ்செய்து, சுத்தராய் உட்கார்ந்து, மனத்தை ஒருவகைப்படுத்தி, தியானஞ்செய்தார். பக்தியோகத்தால் சுத்தமாயும், ஸ்திர மாயுமுள்ள மனத்தில் புருஷோத்தமனையும், அவரை ஆசிரயித்த மாயையையும் தரிசித்தார். "மேலும், ஜீவன் உண்மையில் மாயையைக் கடந்த சாயைரூபமுள்ளவனானாலும் அந்த மாயைக்கு வசப்பட்டுப் பிரமித்து, தான்முக்குண சம்பந்தமுள்ளவனென்றும், மாயா குணங்களால் செய்யப் படும் காரியங்களைத் தான் செய்வதாக நினைத்து இருக் கிறான்" என்றும் தெரிந்துகொண்டார். பின்னும் அந்த அனர்த்தைத்தைப் போக்கக்கூடிய பக்தியோகத்தையும் அறிந்தார். பின்னும் அவர், உலகத்திற்கு ஏற்பட்டிருக் கும் இவ்விதமான அஞ்ஞானத்தை நிவர்த்திப்பதற்காக ஸ்ரீமத் பாகவதத்தைச் செய்தார். அதனைக் கேட்ட மாத் திரத்தில் பரமபுருஷனாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானிடத்தில், ஸ்திரமான பக்தியுண்டாகிறது. அதனால் சோகம், மோகம், பயம் ஆகிய இவைகள் நிவர்த்தியாகின்றன. மேலும் அவர் தம்மால் செய்யப்பட்ட அந்த ஸம்ஹிதையைப் பரி

சோதித்து நிவர்த்தி மார்க்கத்தில் ஆசையுள்ள தம்முடைய குமாரராகிய சுகருக்கு அதை உபதேசித்தார்" என்று சொல்லி முடித்தார்.

9—20. இதனைக் கேட்ட சௌனகர் ஸூதரை நோக்கி, "ஓ ஸூதரே! அந்தச் சுகர், ஒரு விஷயத்திலும் ஆசையில்லாதவர்; நிவர்த்தி மார்க்கத்திலேயே நோக்கமுள்ளவர்; ஆத்மாவிடமே ரமிப்பவர்; அப்படிக்கிருக்க அந்தப் பெரியதாகிய கிரந்தத்தை எதற்காக அவர் அப்யசித்தார்" என்று கேட்டார். அதனைக் கேட்டு ஸூதர் சௌனகரை நோக்கி, "ஓ சௌனகரே! மகரிஷிகள், ஆத்மாராமர்களானாலும், பகவத் சுரூபத்தை நன்றாய் அறிந்தவர்களாகையால் ஸம்சயமற்றவர்களானாலும், கிரந்தங்களைப் படிப்பதில் ஆசையில்லாதவர்களானாலும், பகவானிடத்தில் பலனை உத்தேசியாமலே பக்திசெய்கிறார்கள். ஸ்ரீ மகாவிஷ்ணுவின் சரிதங்கள், வைராக்கியமடைந்த மனத்தையும் வசப்படுத்திக்கொள்ள சாமர்த்தியமுள்ளவைகள். ஆனதால் சுக மகரிஷி பகவத் குணங்களில் விசேஷ ஆசையுள்ளவராகி, அந்தப் பெரியதாகிய உபாக்கியானத்தை அப்யசித்தார். அவர் வியாஸ மகரிஷியின் புத்திரர். அவரிடத்தில் விஷ்ணு பக்தர்கள் பிரியப்படுவார்கள். ஓ! மகரிஷிகளே! பரீக்ஷித் என்ற ராஜரிஷியின் பிறப்பு, அவர் செய்த காரியங்கள், அவருடைய மரணம், பாண்டவர்களுடைய மகாபிரஸ்தானம் இவைகளைக் கிருஷ்ண கதையைச் சொல்லுவதற்கு உபயோகமாகச் சொல்லுகிறேன். எப்படியெனில், கௌரவர்களும், சிருஞ்ஜயர்களும், யுத்தத்தில் அடிக்கப்பட்டு சுவர்க்கமடைந்தார்கள். பீமசேனன் தன்னுடைய கதாயுதத்தால் துரியோதனனுடைய தொடையை அடித்து முறித்தான். பின்பு "துரோணருடைய புத்திர

ராகிய அசுவத்தாமா வென்பவர் திரௌபதியின் புத்திரர்களை நாசஞ்செய்வதே தம்முடைய எஜமானனாகிய துரியோதனனுக்குப் பிரியமான காரியம்" என்று நினைத்து உபபாண்டவர்கள் தூங்கும் சமயத்தில் அவர்களுடைய தலையை வெட்டினர். இது துரியோதனனுக்குப்பிரியமன்று. மேலும், அதை எல்லோரும் வெறுக்கக்கூடிய காரியம் என்று நிந்தித்தார்கள். அப்பொழுது அக்குழந்தைகளுடைய தாயாகிய திரௌபதி தேவி புத்திர சோகத்தால் பரிதபித்துக் கண்ணீரைப் பெருக்கி அழுதாள். அந்தச் சமயத்தில் அவளை நோக்கி அர்ச்சுனன், "ஓ! நல்ல சுபாவமுள்ளவளே! என்னுடைய காண்டீவத்தில் பாணங்களைத் தொடுத்து அவைகளைப் பிரயோகித்து பிராம்மணர்களுக்குள் அதமனும், ஆயுதபாணியும், ஆததாயியுமான அசுவத்தாமாவினுடைய தலையை உன்னிடம் கொடுத்து உன்னுடைய துக்கத்தை நிவர்த்திக்கிறேன். அந்தத் தலையை ஆசனமாகச் செய்து புத்திரசோகத்தைப் போக்கிக்கொள்வாய்" என்று சமாதானஞ் செய்தான். இப்படி அழகான வார்த்தைகளைச் சொல்லி, சமாதானஞ் செய்து, தகுந்த முயற்சியுடன் குரு புத்திரராகிய அசுவத்தாமாவை அர்ச்சுனன் துரத்தினன். அவனுக்கு மித்திரரும், சாரதியுமாயிருப்பவர் ஸ்ரீ கிருஷ்ணனே. அவனுடைய வில் பயங்கரமானது. ரதமோ, ஹனுமத்வஜமுள்ளது. சிசுக்களைக் கொன்றவரான அந்த அசுவத்தாமா பின்தொடர்ந்து வரும் அர்ச்சுனனை வெகு தூரத்தில் கண்டு பயந்து பிராணனைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டி, பூமியில் எதுவரையில் போகக்கூடுமோ அதுவரையில் 'சிவபெருமானிடத்தில் பயந்து பிரம்மதேவர் ஓடியதுபோல'த் திரும்பிப் பாராமலே ஓடினர். அப்படியும் தம்மைக் காப்பற்றக்கூடியவர் கிடைக்காததனாலும், குதிரைகள்களைத்துப்போனபடியாலும்

அவர் பிரம்மாஸ்திரமே தம்மைக் காப்பாற்றுமென்று நினைத்தார். பின்பு ஆசமனஞ் செய்து சுத்தராய், பிரயோகித்த அஸ்திரத்தைத் திருப்பும் வகையறியாதவராயிருந்தும் பிராணனுக்குக் கெடுதி நேரிடும் சமயமாகையால் அந்த அஸ்திரத்தைப் பிரயோகித்தார்.

21—26. பின்பு எல்லாத் திக்குகளிலும் அந்த அஸ்திரத்தின் தேஜஸ் பரவியது. அதனைக் கண்டு அர்ச்சுனன் தன்னுயிர்க்குச் சேதம் வந்ததென்று நினைத்து, சாரதியாகிய ஸ்ரீகிருஷ்ண பகவானை நோக்கி, "ஓ! கிருஷ்ண! கிருஷ்ண! மிகுந்த பராக்கிரமமுள்ளவரே! பக்தர்களுக்கு நேரும் பயத்தை நிவர்த்திப்பவரே! ஸம்ஸாரத்தால் கஷ்டப்படும் ஜனங்களுக்கு மோட்சத்தைக் கொடுப்பவர் தாமொருவரே. நீரே முந்திய புருஷன். நீரே எல்லாவற்றிற்கும் பிரபு. பிரகிருதியைக்காட்டிலும் வேறானவர். ஆனந்தசுரூபத்திலிருப்பவர். நீர் மாயையைக் கடந்தவரானாலும், மாயைக்கு வசப்பட்டு, ஸம்ஸாரத்தில் மூழ்கியிருக்கும் ஜனங்களுக்கு தர்மம் முதலிய புருஷார்த்தங்களைக் கொடுக்கிறீர். வேறிடத்தில் மனதைச்செலுத்தாமல் தம்மையே பஜிப்பவர்கள் இந்தத் திவ்ய மங்கள சரீரத்தைத் தியானஞ் செய்கிறார்கள். ஓ! தேவர்களுக்குத் தேவனே! இதோ மிகவும் பயங்கரமான தேஜஸ் எங்கும் பரவிவருகிறதே, இது இன்னதென்று தெரியவில்லை. இதனைச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

27—28. அதனைக் கேட்டுக் கிருஷ்ண பகவான் அர்ச்சுனனை நோக்கி, "துரோணருடைய புத்திரராகிய அசுவத்தாமாவினால் பிரம்மாஸ்திரம் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. இது அதன் தேஜஸ்ஸே தவிர வேறில்லை. அவருக்கு அதனைத் திரும்பப்பெற்றுக்கொள்ளும் வழி தெரியாமையால் இது

வரையில் உபயோகிக்காமலிருந்து, இப்பொழுது தம் உயிருக்குச் சேதம் வருஞ் சமயமாகையால் தம்மைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டி அதனை உபயோகித்திருக்கிறார். அதனைத் தடுக்கமுடியாது. உனக்கு அந்தப் பிரம்மாஸ்திரம் நன்றாகத் தெரியுமாகையால் அதனைப் பிரயோகித்து எதிரியின் அஸ்திரத்தை நாசஞ்செய்" என்றார்.

29—30. இப்படி பகவான் சொல்லிய வார்த்தையைக் கேட்டுச் சத்துருக்களைக் கொல்லும் வல்லமையுள்ள அர்ச்சுனன் ஆசமனஞ்செய்து, ஸ்ரீ கிருஷ்ண பகவானைப் பிரதட்சிணஞ்செய்து எதிரியின் அஸ்திரத்தை யடக்குவதற்காகப் பிரம்மாஸ்திரத்தைப் பிரயோகித்தார். அவ்விரண்டு அஸ்திரங்களுடைய தேஜஸுகளும், பிரளய காலத்தில் அக்னியும் சூரியனும் விருத்தியடைவதுபோல, பூமி, அந்தரிக்ஷம் ஆகிய இவைகளை ஆக்ரமித்துப் பிரகாசித்தன. அவ்விருவர்களுடைய அஸ்திரங்களின் தேஜஸானது மூவுலகங்களையும் தகித்தது. அந்தத் தாபத்தைச் சகியாமல் ஜனங்கள் இது பிரளய காலத்து அக்னி என்றே நினைத்தார்கள். அப்பொழுது பிரஜைகள் உபத்திரவப்படுகிறதையும், உலோகங்களுக்கு நாசம் நேர்ந்ததையும் பார்த்து அர்ச்சுனன் ஸ்ரீ கிருஷ்ணனுடைய அனுமதிப்படி அந்த இரண்டு அஸ்திரங்களையும் உபசங்கரித்தான். பிறகு அசுவத்தாமாவின் சமீபம்சென்று பசுவை ரசனையால் கட்டுவதுபோல் கோபத்தால் சிவந்த கண்களுள்ளவனுகிய கிருபியின் புத்திரரைக் கட்டினர். பின்னுமவரைத் தன்னுடைய கூடாரத்திற்குக் கொண்டுபோக முயன்றார். அப்பொழுது தாமரைமலர் போன்ற கண்களுள்ள கிருஷ்ண பகவான் மிகுந்த கோபத்துடன் அர்ச்சுனனை நோக்கி, "ஏ பார்த்த! இவன் ராத்திரியில் தூங்கிக்கொண்டிருந்த யாதொரு அபராதமும் செய்

யாத குழந்தைகளைக் கொன்றவன்; பிராமணர்களுக்குள் அதமன் ஆனதால் இவனைக் கொல்லவேண்டுமே தவிர க் காப் பாற்றுவது உசிதமல்ல. மத்யம் முதலியவைகளைக் குடித்து மதித்திருப்பவன், அஜாக்கிரதையா யிருப்பவன், பைத்தியங் கொண்டவன், தூங்குகின்றவன், பால்ய வயதுள்ளவன், முயற்சிக்காதவன், சரணமென்று வந்தவன், ரதமில்லாத வன், பயந்து ஓடுகிறவன் ஆகிய இம்மாதிரியான சத்ருக் களைத் தர்மத்தை யறிந்தவர்கள் கொல்லமாட்டார்கள். எவன் பிராணிகளிடத்தில் தயையில்லாமல் பிறரைக் கொன்று தன் னுயிரைக் காப்பாற்றிக்கொள்ளுகிருனே அந்தத்துஷ்டனைச் சிட்சிப்பதே அவனுக்கு க்ஷேமமெனப்படும். தண்டிக்கப் படாதவரையில் பாபம் விலகாது; அதனுல் நரகத்தை யடை வான். மேலும், திரௌபதியின் முன்பாக உன் குழந்தைகளைக் கொன்றவருடைய தலையை உன்னிடம் சேர்ப்பிக்கிறேன்" என்று நான் கேட்டிருக்கும்போது உறுதிசெய்திருக்கிருய். இவன் தன்னுடைய எஜமானனுகிய துரியோதனனுக்கு இஷ்டமில்லாத காரியத்தைச் செய்தவன்; குலத்திற்கு அப கீர்த்தியை யுண்டுபண்ணினவன்; மிகுந்த பாபி; உன் னுடைய புத்திரர்களை நாசஞ்செய்தவன். ஆனதால் இவனைக் கொல்லவேண்டும்' என்று (அர்ச்சுனனுடைய புத்தியைப் பரிசோதிப்பதற்குச்) சொன்னர்.

40—41. இம்மாதிரி கிருஷ்ண பகவானுல் தூண்டப் பட்டும், மகாத்மாவாகிய அர்ச்சுனன் அசுவத்தாமா தன் பிள்ளைகளைக் கொன்றவரானுலும், குரு புத்திரராகையால் அவரை வதஞ்செய்ய இஷ்டப்படவில்லை. பின்பு மித்திரராகிய ஸ்ரீகிருஷ்ணன் சாரத்யஞ்செய்ய அர்ச்சுனன் தன்னுடைய கூடாரஞ் சேர்ந்து புத்திர நாசத்தால் துக்கிக்கும் திரௌபதி யை நோக்கி "ஓ திரௌபதி! உன்னுடைய புத்திரர்களைக்

கொன்றவர் இதோ இருக்கிறார். உன் இஷ்டப்படி இவருக்குச் சிட்சை செய்கிறேன்" என்றான்.

42—48. யாகத்தில் கொல்வதற்காக யூபத்தில் கட்டப்பட்ட பசுப் போலக் கயிற்றினால் கட்டப்பட்டவரும், கெட்ட காரியம் செய்ததால் தலைகுனிந்தவருமான குரு புத்திரரைக் கண்டு திரௌபதியானவள், நல்ல சுபாவமுள்ளவளாகையால் ஆசாரியருடைய புத்திரரென்ற கௌரவத்தாலும், தைன்யமடைந்தவரென்ற தயையாலும் அவருக்கு நமஸ்காரஞ் செய்தாள். பின்னும், பதிவிரதையான திரௌபதியானவள் அவரைக் கட்டிக்கொண்டு வந்ததைச் சகியாதவளாகி, தன்னுடைய பர்த்தாவை நோக்கி, "இவரை விட்டுவிடவேண்டும். இவர் பிராமணர். தவிரவும், குரு புத்திரராகையால் ஆசாரியர். ரகசிய மந்திரங்கள், உபசம்ஹாரம், பிரயோகம் ஆகிய இவைகளுடன் எல்லா அஸ்திரங்களையும் இவருடைய பிதாவான துரோணரிடமிருந்து தாங்கள் அப்யசித்தீர்கள். அவரே புத்திரரூபியாக இருக்கிறார். அதனால் தான் சூரனாகிய புத்திரனை யடைந்த கிருபியானவள் துரோணருடைய பாதிசரீரமாயிருந்தும் அவருடன் உடன்கட்டையேறவில்லை. தாங்கள் சகல தர்மங்களையும் அறிந்தவர்கள்; மிகுந்த பாக்கியமுள்ளவர்கள்; ஆதலால் ஆசாரியருடைய வம்சமானது துக்கப்படும்படி தாங்கள் செய்வது உசிதமல்ல. அது எப்பொழுதும் பூசிக்கத்தக்கது; நமஸ்கரிக்கக்கூடியது; மேலும் இவரைக் கொன்றுவிட்டால் இவருடைய மாதாவும், பர்த்தாவையே தெய்வமாகக்கொண்டவளுமான கிருபி என்பவள் புத்திர நாசத்தால் நான் வருத்தமடைகிறதுபோலத் துக்கப்படுவாளல்லவா? பிராம்மண வம்சத்திற்குக் கோபமுண்டாகும்படி க்ஷத்திரியர்கள் செய்தார்களேயாகில், அந்த க்ஷத்திரிய வம்சம் பரிவாரங்

களுடன் துக்கிக்கும்படி நேரும். ஆதலால் பிரம்ம குலத்தால்நம்முடைய க்ஷத்திரிய குலம் எரிக்கப்படவேண்டாம்" என்று சொன்னாள்.

49—50. ஓ! பிராம்மணர்களே! தர்மத்திற்கு ஒத்ததும், நியாய விரோதமில்லாததும், தயையுள்ளதும், கபடமற்றதும், சமபுத்திடன் சொல்லப்பட்டதும், மேன்மையுள்ளதுமான (பூஜிக்கக்கூடியது) திரௌபதியின் வார்த்தையைக் கேட்டு, அருகிலிருந்த அரசனாகிய தருமபுத்திரர், நகுலர், சகாதேவர், ஸாத்யகி, அர்ச்சுனன், தேவகியின் புத்திரரான கிருஷ்ண பகவான், மற்றவர்கள், ஸ்திரீகள் ஆகிய எல்லோரும் அது உசிதமென்று ஒப்புக்கொண்டார்கள்.

51. அப்பொழுது பீமசேனன், " இவரைக் கொல்வதே அவருக்கு க்ஷேமகரமான காரியம். இவர் நித்திரை செய்துகொண்டிருக்கும் சிசுக்களை வீணாக வதஞ்செய்தார். அதனால் இவருக்காவது, இவருடைய எஜமானனாகிய துரியோதனனுக்காவது யாதொரு பிரயோசனமுமில்லை" என்று மிகுந்த கோபத்துடன் சொன்னான்.

52—58. மேலே காட்டிய இவர்களுடைய வார்த்தைகளைக் கேட்டு நான்கு கைகளுள்ள ஸ்ரீகிருஷ்ண பகவான், தம்முடைய மித்ர ரத்னமாகிய அர்ச்சுனனை நோக்கி, " ஓ! அர்ச்சுன! பிராம்மணனைக் கொல்லக்கூடாதென்ற சாஸ்திரத்தாலும், ஆததாயியை வதஞ்செய்யலா மென்று சாஸ்திரமிருப்பதால் அந்தச் சாஸ்திரம் என்னுடைய ஆக்ஞாரூபமாகையாலும் அப்படியே நீ செய்யவேண்டும். தவிரவும், திரௌபதியினிடம் உன்னால் செய்யப்பட்ட பிரதிக்ஞையையும் நிறைவேற்றவேண்டும்; பீமசேனனுக்கும், திரௌபதிக்கும், எனக்கும் இஷ்டமானதைச்

செய்' என்று சிரித்துக்கொண்டு ஆஞ்ஞாபித்தார். இதனைக் கேட்டவுடனே பகவானுடைய அபிப்பிராயம் இன்னதென்று அர்ச்சுனன் தெரிந்துகொண்டு, கத்தியினால் அந்தப் பிராம்மணருடைய தலையிலிருக்கும் ரத்னத்தை மயிர்களுடன் எடுத்துப் பின்பு கட்டை அவிழ்த்து அவ்விடமிருந்து துரத்தினான். அப்போது அவருக்குப் பாலஹத்யாதி தோஷத்தாலும், சகஜமான ரத்னமில்லாததனாலும் தேஜஸ் குறைந்துவிட்டது. க்ஷௌரஞ் செய்துவிடுதல், பணத்தை அபகரித்துக்கொள்ளுதல், இருக்குமிடத்தைவிட்டுத் துரத்திவிடுதல் ஆகிய இவைகள் வதத்திற்குச் சமமானவைகள். பிராம்மணாதமர்கள் கொல்லக்கூடிய குற்றஞ் செய்தாலும், அவர்களுக்கு மேற்காட்டிய வதமேயொழிய, தேக நாசஞ் செய்வது உசிதமல்ல. பின்பு பாண்டு புத்திரர்கள், திரௌபதியுடன் புத்திரசோகமுள்ளவர்களாகி, இறந்துபோன தம்முடைய பந்துக்களுக்குச் செய்யவேண்டிய தகனம் முதலிய உத்தர சம்ஸ்காரங்களைச் செய்து முடித்தார்கள்.

## நோட்டு.

பிரஹ்மபத்னீ—பிரஹ்மாவையே தெய்வமாயுடையவள் அல்லது பிராமணர்களால் சேவிக்கப்பட்டவள்—ஸ்ரீத. சம்யா—யாகத்திற்கு உபயோகமான சம்யா என்னும் மரத்தின் கிளை விழுந்தவிடத்தில் ஏற்பட்ட ஆசிரமம். மஹரிஷிகளின் ஆகாரத்திற்கு உபயோகமாகிய இலந்தைப் பழங்களுள்ளதென்பது தாத்பரியம்—விஜ. சோகம்—ஈசுவரன் எல்லாவற்றையும் அறிந்தவர். ஸர்வசக்தியுள்ளவர். அவருடைய மாயையால் நிஜரூபத்தை மறந்தவன் ஜீவன். அவனுக்குப் பகவத்பக்தியால் ஞானமுண்டாகிறது. அதனால் மோக்ஷத்தையடைகிறான் "ஆனந்தரூபமாகிய சித்சக்தியால் நிறைந்தவர் ஈசுவரன். அவித்தையையால் தன்னுடைய உண்மையான ரூபத்தையறியாதவனும், ஸகல துக்கங்களுக்கு இருப்பிடமுமா

யிருப்பவனே ஜீவன்,” ஸ்வாமி மாயையானது எவருடைய வசத்தி லிருக்கிறதோ, அவர் ஈசுவரனெனப்படுகிறார். எவன் அந்த மாயைக்கு வசப்பட்டுக் கஷ்டப்படுகிறானோ அவன் ஜீவன் என்று சொல்லப்படுகின்றான்’. ஸம்ஸாரத்திலுண்டான மூவகைத் தாபத் தாலுண்டானது சோகம். சரீரத்தை ஆத்மாவென்று நினைப்பதே மோகம். நரகம் முதலியவைகளில் உண்டாவது பயம்; அவைகளைப் போக்குவது பக்தியெனப்படுகிறது—சந்த். ஆசையில்லாத—நல்ல சிஷ்யனைச் சம்பாதிக்கவேண்டுமென்ற ஆசையில்லாதவர்—விஜ. கிரந்தங்களை—மோகத்தால் கலங்கியிருக்கும் உன்னுடைய புத்தியானது எப்பொழுது தெளியுமோ? அப்பொழுது கேட்டது, கேட்க வேண்டியது இவைகளிலிருந்து நிர்வேதத்தை யடைவாய்.” பகவத் கீதை. பலனை—அனேக ஜன்மங்களில் பரமாத்மாவை நேரில் பார்த் தவர்களும், முக்தியில் விசேஷ ஆனந்தமுள்ளவர்களுமான சுகர் முதலியவர்களுக்குப் பாகவதத்தில் ஆசையுண்டாயிற்று என்பதில் என்ன ஆச்சரியம்—விஜ. ஆசையுள்ளவராகி—பகவானுடைய கல்யாண குணங்கள் யாவும் அனுபவத்தாலேயே அறியக்கூடியவை கள் என்று வேதாந்த சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருந்தாலும், ஸ்வாத்யாயத்தால் யோகத்தை அடையவேண்டும்; ‘யோகத்தால் ஸ்வாத்தியாயமுள்ளவனாக ஆகிறான்’ என்றபடி பகவானுடைய குணங்களை வர்ணிக்கும் கிரந்தத்தை அப்யஸிப்பது அவசியமேயாம். மேலும் பகவானுடைய அவதாரங்களும் அவர் குணங்களும், பக்தர்களும் அவர்களுடைய குணங்களும் வேதாந்தத்தில் குறிப் பிட்டுச் சொல்லப்படவில்லை. அவைகள் யாவும்இந்தப்பாகவதத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறதுமன்றி வேதாந்தத்தில் சொல்லியிருக்கும் குணங்களைவிட அதிகமாகப் பகவத் குணங்கள் நன்றாகக் காட்டப் பட்டிருக்கின்றன. வீர. அப்யஸித்தார்—பிறருக்கு உபதேசித்தார். விஜ. சிவபெருமானிடம்—பரமசிவன் பிரம்மதேவருடையஐந்தாவது தலையை வெட்டுகிறதற்காக வரும்போது அவர் ஓடினார். ஆர்கி யென்று ஒருபாடமுண்டு. அதற்குப் பரமசிவனுடைய மூன்றாவது கண்ணின் தேஜஸினால் எரிக்கப்பட்டுப் பயந்து சனைச்சரன் ஓடினார் என்று அர்த்தங்கொள்ளவேண்டும்.—விஜ. முன்னொருகால் பிரம்ம

தேவர் தம்மால் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு அப்ஸர ஸ்திரீயினிடம் ஆசைப்பட்டு மான் வேஷங்கொண்டு ரமிக்க முயற்சித்தார். அப்பொழுது பரமசிவன் அவரைத் துரத்தினார். அர்க வென்னும் ஒரு பாடமுண்டு. அதற்கு சூரியன் ஓடியதுபோலவென்று அர்த்தம். அதாவது வித்யுன்மாலியென்று ஒரு ராக்ஷஸனிருந்தான். அவனுடைய தவத்தினால் பரமசிவன் ஸந்தோஷமடைந்து அவனுக்குத் தங்க விமானமொன்றைக் கொடுத்தார். அவன் அந்த விமானத்திலேறிக்கொண்டு சூரியன் பின்னே போய்க்கொண்டிருந்தான். அப்பொழுது ராக்ஷஸனுடைய விமானத்தின் காந்தியானது சூரிய தேஜஸைவிட மேலானதாக இருந்தபடியால் சூரியன் அதைச் சகியாமல் தம்முடைய தேஜோ விசேஷத்தால் அந்த விமானத்தை உருகிப்போகச்செய்தார். அதனால் பரமசிவன் கோபங்கொண்டு சூரியனைத் துரத்த, சூரியன் பயந்து ஓடினார். அப்பொழுது பரமசிவனுடைய கடும்பார்வையால் சூரியன் எரிக்கப்பட்டு, காசியில் விழுந்தார். அவருக்கு இப்பொழுதும் லோலாகனென்று (அலைந்த சூரியன்) பெயர் வழங்கிறது. இது வாமன புராணத்தில் விஸ்தாரமாய்ச்சொல்லப்பட்டிருக்கிறது—ஸ்ரீ த. தக்ஷப்பிரஜாபதியானவர் பரமசிவனுக்கு ஹவிர்ப்பாகங்கொடாமல் யாகஞ்செய்ய, அப்பொழுது பரமேசுவரன் வீரபத்ரராக அவதரிக்க, அவரிடமிருந்து ஓடினார்—வீர. ஆச்சியென்ற பாடத்தில்—சூரியனுடைய பிள்ளையாகிய மிருத்துவானவர் பரமசிவனைக் கண்டு ஓடினார். சந்த். கிருஷ்ண—பூமியிலுள்ள சகல ஜனங்களுக்கும் சுகத்தை யுண்டு பண்ணுகிறவர் —ஸ்ரீத. மிதுந்த—மூலத்தில் மஹாபாஹு வென்றிருப்பதால் க்ஷத்திரியர்களை யுண்டுபண்ணிய கைகளுள்ளவர் என்று காட்டப்பட்டது—வீர. நரக—பாபத்தைச் செய்த மனிதர்கள் அதற்குத் தக்கப்படி அரசனால் சிட்சிக்கப்படுவார்களானால் அவர்கள் சுத்தர்களாகப் புண்ணியசாலிகள் போல சுவர்க்கத்தை யடைகிறார்கள்''—ஸ்மிருதி. ஆததாயி—அக்னிவைப்பவன், விஷங்கொடுப்பவன், ஆயுதம் பிடித்தவன், பணம், பூமி, பார்யை இவைகளை அபகரிப்பவன் ஆகிய ஆறு பெயர்கள். மேற்காட்டிய ஆததாயியை ஆலோசிக்காமலேயே கொன்றுவிடலாம்—ஸ்ரீ த. பாதி சரீரம்—''பத்னியென்பவள் பர்த்தாவினுடைய சரீரத்தின் பாதிப்பாகம்''—சுருதி.

## அத்தியாயம் 8

### பகவானைக் குந்தி ஸ்தோத்திரஞ் செய்தது

பின்பு அந்தப் பாண்டவர்கள் யுத்தத்தில் இறந்து போன பந்துக்களுக்குத் தர்ப்பணம் (எள்ளும் ஜலமும்) செய்வதற்காக ஸ்ரீ கிருஷ்ண பகவானுடன் ஸ்திரீகளை முன்னிட்டுக்கொண்டு கங்கையின் கரை சேர்ந்தார்கள். மேலும் அவர்கள் அந்தக் கங்கா ஜலத்தில் ஸ்நானஞ் செய்து தர்ப்பணம் பண்ணி, பகவானுடைய பாதத்திலிருந்து உண்டானதால் பரிசுத்தமாயிருக்கும் அந்தத் தீர்த்தத்தில் பின்னும் ஸ்நானஞ் செய்தார்கள்.

3—11. பிறகு அவ்விடத்தில் தம்முடைய தம்பிகளுடன் உட்கார்ந்திருக்கும் தர்மபுத்திரரையும், திருதராஷ்டிரரையும், புத்திரசோகமுள்ள காந்தாரியையும் குந்தியையும், திரௌபதியையும் நோக்கி, ஸ்ரீ கிருஷ்ண பகவானவர் மஹரிஷிகளுடன், "பந்துக்கள் மரணமடைந்தார்களென்று நீங்கள் துக்கப்படுவது நியாயமல்ல. கால மகிமையால் பிராணிகளுக்கு நேரிடும் நாசம் தடுக்க முடியாதது" என்று சமாதான வார்த்தைகளைச் சொல்லி, துரியோதனனால் அபகரிக்கப்பட்டிருந்த அஜாதசத்ருவின் (எவ்விடத்திலும் விரோத புத்தியில்லாதவர்) ராஜ்யத்தை அவருக்கு வசப்படுத்தினர். மேலும், திரௌபதி தேவியின் தலைமயிரைப் பிடித்திழுத்ததால் ஆயுள் குறைந்தவர்களான துச்சாதனன் முதலியவர்களைக் கொல்வித்தார். மகேந்திரனுடைய கீர்த்தியை உபேந்திரர் உலகத்தில் பரவச் செய்ததுபோல முக்கிய கல்பங்களுள்ள மூன்று அசுவமேத யாகங்களைச் செய்வித்துப் பரிசுத்தமான அவருடைய கீர்த்தியை விஸ்தாரப்படுத்தினர். பிறகு வியாச மகா

முனி முதலியவர்களைப் பூஜித்து, அவர்களால் தாம் கொண்டாடப்பட்டு சாத்யகி, உத்தவர் முதலானவர்களுடன் பாண்டவர்களிடம் சொல்லிக்கொண்டு ரதத்தின் மீதேறித் துவாரகையை நோக்கிப் புறப்பட்டார். அப்பொழுது உத்தரையானவள் மிகவும் பயந்தவளாய், ஸ்ரீ கிருஷ்ணனிடம் வந்து அவரை நோக்கி, "மகாயோகியே! தேவர்களுக்கும் தேவரே! சகல ஜகத்திற்கும் அதிபதியே! என்னைக் காப்பாற்றும். பயத்தை நிவர்த்திப்பவர் நீர் ஒருவரேயொழிய மற்றவைகளெல்லாம் ஒன்றுக்கொன்று பயத்தை யுண்டுபண்ணுகின்றன. ஏ நாத! அக்னி போல் கொதித்துக்கொண்டிருக்கும் எஃகு முனையுள்ள பாணமானது எனக்கு எதிரில் வருகிறது. அதனால் என் சரீரம் எரிக்கப்பட்டாலும் எனக்குச் சம்மதம். என் வயிற்றிலிருக்கும் சிசுவுக்கு மாத்திரம் கெடுதி நேரிடாமல் காப்பாற்றவேண்டும்" என்று வேண்டிக்கொண்டாள். பக்தர்களிடம் வாத்சல்யமுள்ள பகவான் அதனைக் கேட்டு, இது பாண்டவர்களை நாசஞ்செய்வதற்காக அசுவத்தாமாவினால் பிரயோகிக்கப்பட்ட அஸ்திரம் என்று நிச்சயித்தார்.

12—37. அப்பொழுது பாண்டவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு எதிரில் வரும் பாணங்களைப் பார்த்து, அதனைத் தடுப்பதற்காகச் சிறந்த அஸ்திரங்களை எடுத்தார்கள். ஸ்ரீ பகவான் தம்மிடத்திலேயே மனத்தைச் செலுத்திய பக்த சிரோமணிகளான பாண்டவர்களுக்கு நேர்ந்த விசனத்தைப் பார்த்து, அந்த அஸ்திரம் வேறு அஸ்திரங்களால் தடுக்கமுடியாதாகையால் தம்முடைய சுதர்சனமென்ற சக்கரத்தைப் பிரயோகித்து, அதனால் அவர்களை ரட்சித்தார். மேலும், சகல பிராணிகளிடத்திலும்

அந்தர்யாமியாயிருக்கும் யோகேசராகிய அந்தக் கிருஷ்ண பரமாத்மாவானவர் விராடபுத்திரியான உத்தரையின் வயிற்றிலிருக்கும் கர்ப்பத்தைத் தம்முடைய மாயையால் மறைத்தார். ஏ சௌனகரே! பிரம்மாஸ்திரமென்பது மற்ற வைகளால் தடுக்கக்கூடியதல்ல; வீணாய்ப் போகாதது. ஆனாலும் விஷ்ணுவின் தேஜஸை யடைந்து அடங்கினது. பகவான் மாயையால் சிருஷ்டி, பரிபாலனம், சம்ஹாரம் ஆகிய இவைகளைச் செய்கிறவராகையாலும், சகல ஆச்சரிய ரூபியாயிருப்பதாலும், அவரிடத்தில் மேற்சொல்லிய விஷயத்தை அற்புதமென்று நினைக்கவேண்டாம். இப்படி பாண்டவர்கள் பகவானுடைய ஒத்தாசையால் பிரம்மாஸ்திரத்திலிருந்து காப்பாற்றப்பட்டார்கள். அப்பொழுது பதிவிரதையான குந்திதேவியானவள் துவாரகா நகரத்திற்கு பிரயாணமாயிருக்கும் கிருஷ்ண பகவானை நோக்கி, தன்னுடைய புத்திரர்களுடனும் திரௌபதியுடனும், "பகவத் சுரூபத்தை அறியாதவளான நான் எல்லாவற்றிற்கும் முந்திய புருஷனை நமஸ்கரிக்கிறேன். அவர் சகலத்திற்கும் ஈசுவரன். பிரகிருதி (மாயை)க்கு மேற்பட்டவர்; சகலத்திற்கும் மேற்பட்டவர்; சகல பிராணிகளாலும் பார்க்க முடியாதவர். ஆனால் பிராணிகளுடைய உள்ளிலும் வெளியிலும் இருப்பவர். மாயையாகிய திரையால் மறைக்கப்பட்டவர்; இந்திரியங்களுக்குப் புலப்படாதவர்; நாசமில்லாதவர். அந்தப் பரமபுருஷனாகிய நீர், வேஷதாரி (நடன்)போல தேகாபிமானமுள்ளவர்களால் அறியப்படுகிறீர். சுத்தசித்தர்களும் மனனம் செய்யும் சுவபாவமுள்ளவர்களுமான பரமஹம்சர்களும், உம்முடைய சுரூபத்தைத் தேடுகிறார்கள். அப்படியிருக்க ஸ்திரீகளாகிய நாங்கள் பக்தியோகத்தை யடைவதற்காக உம்மை எப்படித் தரிசிப்போம்? கிருஷ்ணன், வாசுதேவர், தேவகீ

நந்தர் (தேவகியின் புத்திரர்), கோவிந்தர் என்னும் திவ்ய நாமங்களுள்ளவரும், நந்தனென்ற கோபரு (யாதவர்)க்குப் புத்திரரும், தாமரை மலருடன்கூடிய நாபியுள்ளவரும், தாமரச புஷ்பமாலையுள்ளவரும், தாமரை மலர்போன்ற கண்கள், கால்கள் ஆகிய இவைகளுள்ளவருமான உமக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். ஏ! பிரபுவே! துஷ்டனுகிய கம்சனுல் துன்பப்படுத்தப்பட்ட தேவகியை எப்படிக் காப்பாற்றினீரோ அப்படியே என்னையும், என்னுடைய புத்திரர்களையும் கூட்டங்கூட்டமாக ஆபத்துக்கள் வந்தாலும் அவைகளிலிருந்து சம்ரட்சிக்கிறீர். (தமக்கு மாதாவிடமிருக்கும் பிரீதியைக் காட்டிலும் என்னிடம் அதிக விசுவாசமென்பது கருத்து.) விஷம், அக்னி, ராக்ஷதர்கள், அசத்துக்களுடைய சபை, வனவாச கஷ்டம், ஒவ்வொரு யுத்தத்திலும் மகாரதர்களாகிய பீஷ்மர் முதலியவர்களுடைய அஸ்திரங்கள், கடைசியாக அசுவத்தாமாவின் பிரம்மாஸ்த்திரம் ஆகிய இவைகளிலிருந்து உம்மால் காப்பாற்றப்பட்டோம். மேலும் துரியோதனனுல் தூண்டப்பட்டு, எங்களைச் சபிப்பதற்காக வந்த துர்வாச மகாமுனியைச் சகல ஜகத்துடன் திருப்தியடையச் செய்து அவரிடமிருந்தும் காப்பாற்றினீர். நீர் சகல ஜகத்திற்கும் குருவாயிருப்பவர். தேவரீருடைய தரிசனமானது மோட்சத்தைக் கொடுக்கத்தக்கது. அப்பேர்ப்பட்ட உம்முடைய தரிசனம் ஆபத்துக்காலங்களில்கிடைப்பதால்அந்த விபத்து அடிக்கடி வந்தாலும் சம்மதம். மேலான குலத்தில் பிறந்திருப்பது, ஐசுவரியம், சாஸ்திரங்களைப் படித்திருப்பது, அழகு ஆகிய இவைகளால் மிகுந்த கர்வமுள்ள புருஷன் உம்முடைய பெயரை உச்சரிக்கமாட்டான். தரித்திரனுலேயே அந்தத் திவ்ய நாமம் இடைவிடாமல் சொல்லப்படும் (சம்பத்து க்ஷேமத்திற்கு விரோதி

யென்று கருத்து). உங்களுக்குப் பக்தர்களே பணம். முக் குணங்களின் விருத்திகள் உங்களிடத்தில் சம்பந்திக்கிற தில்லை. நீர் ஆத்மாவிலேயே ரமிப்பவர்; சாந்தர்; மோக்ஷத்தைக் கொடுக்கும் சாமர்த்தியமுள்ளவர்; இப்படிப் பட்ட உமக்கு நமஸ்காரஞ்செய்கிறேன். நீர் தேவகியின் புத்திரரானாலும், பிராகிருத சிசுக்கள் போன்றவரல்ல. உம்மைக் காலரென்றும், எல்லாவற்றிற்கும் ஈசுவரரென்றும், ஆதியந்தமற்ற பிரபுவென்றும், எல்லாரிடத்திலும் சமமாகச் சஞ்சரிப்பவரென்றும் நான் நினைக்கிறேன். உமக்கு ஓரிடத்திலும் பக்ஷபாதமில்லை. ஜனங்கள் ஒருவருக்கு ஒருவர் சண்டை செய்வதற்கும் நீரே நிமித்தம்; வேறில்லை. மேலும் சிலர் விரோதிகளென்றும், சிலர் மித்திரர்களென்றும் பேத புத்தி உமக்கில்லை. நீர் மனுஷ்ய சரீரமெடுத்து அவர்கள் போல் அபினயஞ்செய்வதால் உம்மிடத்தில் பேதபுத்தியிருப்பதாகத் தோன்றுகிறதேயொழிய உண்மையிலில்லை. (அனுக்ரகத்தையாவது நிக்ரகத்தையாவது செய்கிறதில்லை.) உங்களுடைய அபிப்பிராயம் ஒருவராலும் அறியமுடியாதது. ஜகத்ரூபியாயிருக்கும் பிரபுவே! பிறப்பில்லாதவரும், ஒன்றையுஞ் செய்யாதவரும், பரமாத்மாவாக இருப்பவருமான நீர், வராக (பன்றி)மாயும், மத்ஸ்யமாயும், வாமனராயும் அவதரித்தீரென்பது பொருந்துமா? அது உலகத்தை அனுசரித்ததேயொழிய உண்மையில் உமக்கு ஜன்மமில்லை. கோகுலத்தில் நந்தருடைய கிரகத்தில் தயிர்ப்பானையை உடைத்ததற்காக யசோதை, உம்மைக் கட்டுவதற்குக் கயிற்றை எடுத்தாளல்லவா? அப்போது நீர் கண்களிலிருந்த மை கரையும்படி கண்ணீரைப் பெருக்கிக்கொண்டு கலங்கிய கண்களுள்ளவராய்த் தலைகுனிந்து மிகவும் பயந்தவர் போல் அபினயஞ் செய்தீரல்லவா? அது எனக்கு மோகத்தை யுண்டுபண்ணுகிறது. உண்மையில் ஜனனம், மரணம்

முதலியவைகளும் உம்மிடமிருந்து பயப்படுகின்றன. உம்முடைய சரிதம் ஜகத்திற்கு மோககரமாகையால் உம்முடைய ஜன்மங்களைப் பலவகையாய்ப் பெரியோர்கள் சொல்லுகிறார்கள். அதாவது, "புண்ய சுலோகராகிய யதுவின் கீர்த்தியை விருத்திசெய்வதற்காக அவருடைய வம்சத்தில், மலய பர்வதத்தைக் கௌரவப்படுத்துவதற்கு அதில் சந்தன விருட்சம் முளைத்ததுபோல் அவதரித்தீர்" என்று சிலர் சொல்லுகிறார்கள். இன்னும் சிலர் 'வசுதேவர், தேவகி இவர்களால் பிரார்த்திக்கப்பட்டு உண்மையில் பிறப்பில்லாதவரானாலும், தேவ விரோதிகளை நாசஞ்செய்து இவ்வுலகத்திற்கு க்ஷேமத்தை யுண்டுபண்ணுவதற்காக தேவகியின் புத்திரராக அவதரித்தீர்" என்று கூறுகிறார்கள். மற்றுஞ் சிலர் "பூமியில் துஷ்டர்கள் அதிகமாயிருந்தபடியால் மிகுந்த பாரத்தால் ஸமுத்ரத்தின் நடுவில் தத்தளிக்கும் கப்பல்போல் கஷ்டப்படும் பூமியின் பாரத்தை நிவர்த்திப்பதற்காக பிரம்மதேவருடைய வேண்டுகோளின்படி அவதரித்தீர்" என்று சொல்லுகிறார்கள். இன்னுஞ் சிலர் "ஆத்மாவின் ஆனந்தசுரூபத்தை யறியாமல் தேகம் முதலியவைகளில் அபிமானம் வைத்துக் கர்மங்களைச் செய்துகொண்டு கஷ்டப்படும் ஜனங்களுக்கு மேற்காட்டிய துக்கத்தை நிவர்த்திக்கவேண்டி கேட்பதற்கும், ஸ்மரிப்பதற்கும் தகுதியான லீலைகளைச் செய்வதற்காக ஜன்மாவை அங்கீகரித்தீர்" என்கிறார்கள். எந்த ஜனங்கள் உம்முடைய சரிதத்தைப் பிறர் சொல்லக் கேட்கிறார்களோ, தம் வாக்கினால் உச்சரித்துக் கானஞ்செய்கிறார்களோ, அடிக்கடி நினைக்கிறார்களோ, நினைத்து ஆனந்தப்படுகிறார்களோ அவர்கள் பிறப்பு, இறப்பு ஆகிய இவைகளைப் போக்குகிற உம்முடைய பாதங்களை வெகு சீக்கிரமாக அடைவார்கள்.

38—44. பக்தர்களுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்யும் பிரபுவே! உம்மிடம் விசேஷ பிரியமுள்ளவர்களும், தங்களுக்கு வேலைக்காரர்களுமான எங்களை விட்டுப் போவது உசிதமல்ல. துரியோதனன் முதலிய அரசர்கள் நிமித்தமாக விசேஷ பாபங்கள் செய்த எங்களுக்கு உம்முடைய பாதாரவிந்தத்தைத் தவிர வேறு கதியில்லை. மேலும், இந்திரியங்களுக்கு அதிபதியான ஜீவனில்லாதவரையில் எப்படி நாம ரூபங்கள் பயன்படுகிறதில்லையோ அப்படி உம்முடைய ஸான்னித்யமில்லாதவரையில் யாதவர்களுடன்கூடிய பாண்டவர்களாகிய எங்களுடைய கீர்த்தியும், ஸம்பத்தும் பயன்படாதவைகளேயாம். மேலும், எங்களுடைய ராஜ்யத்திற்குட்பட்ட இந்தப் பூமியானது உம்முடைய பாதங்களிலுள்ள த்வஜரேகை, வஜ்ரரேகை, அங்குச ரேகை முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்டு விளங்குகிறது. நீர் அப்புறம்போனால் இந்தப் பூமி பிரகாசிக்காது. உம்முடைய கடாக்ஷ வீட்சண்யத்தால் இந்தத் தேசத்தில் ஐசுவரியம் விருத்தியடைகின்றது. செடி, கொடி முதலியவைகள் நன்றாய் விருத்தியடைகின்றன. ஓ! ஜகத்பதியே! ஜகத் ரூபியாயிருப்பவரே! ஜகத்தில் அந்தர்யாமியா யிருப்பவரே! பந்துக்களான பாண்டவர்களிடத்திலும், விருஷ்ணிகளிடத்திலும் எனக்கிருக்கும் சிநேக (அபிமான)மாகிய பந்தத்தை நிவர்த்தியும். ஓ! மதுரா நகரத்தரசனாகிய கிருஷ்ணா! கங்கையின் பிரவாகமானது இடையில் நேரும் விக்னங்களை லட்சியஞ்செய்யாமல் சமுத்திரத்தையே யடைவதுபோல என்னுடைய மனதும் வேறிடஞ் செல்லாது இடைவிடாமல் உம்மையே பஜிக்கும்படி அனுக்கிரகிக்க வேண்டும். ஓ! கிருஷ்ண! அர்ஜுனனுக்கு மித்திரரே! விருஷ்ணிகளுக்குள் சிறந்தவரே! பூமிக்குக் கெடுதி செய்யும் அரசர்களை நாசஞ் செய்பவரே! குறைவற்ற வீரியமுள்ள

வரே! ஏ கோவிந்த! (காமதேனுவின் ஐசுவரியத்தை யடைந்தவர்கள், பசுக்கள், பிராம்மணர்கள், தேவர்கள் ஆகிய இவர்களின் உபத்திரவத்தைப் போக்கடிப்பவரே! யோகிகளுக்கு அதிபதியும், ஜகத்திற்குக் குருவாயு மிருப்ப வரே! பகவானுகிய உமக்கு நமஸ்காரஞ் செய்கிறேன்' என்று ஸ்தோத்திரம் பண்ணினுள்.

45—46. இந்தப்படி குந்திதேவியால் இனிமையான வாக்கியங்களைக்கொண்டு ஸ்தோத்திரஞ் செய்யப்பட்ட பகவான் தம்முடைய சகல மகிமைகளையும் வெளியிட்டுக் கொஞ்சம் சிரித்து, தமது மாயையால் அவளைப் பிரமிக்கச் செய்தார். பின்பு குந்தியின் பிரார்த்தனைப்படி, "எப் பொழுதும் என்னிடத்தில்உனக்கு ஸ்திரமாகப் பக்தி இருக் கட்டும்" என்று அனுக்கிரகித்து அஸ்தினபுரஞ் சேர்ந்து அவ்விடத்தில் ஸுபத்ரை முதலிய ஸ்திரீகளுக்குச் சொல் லிக்கொண்டு தமதுபட்டணத்திற்குப் போக முயற்சித்தார். அப்பொழுது, "இவ்விடத்தில் தாங்கள் சில காலம் வசிக்க வேண்டும்" என்று தர்மபுத்திரர் அன்புடன் கேட்டுக் கொள்ள, பகவானும் அதை அங்கீகரித்து அவ்விடத்தில் வசித்தார்.

47—53. பிறகு பகவானுடைய அபிப்பிராயத்தை அறியாத வியாச மகரிஷி முதலியவர்களாலும், அற்புத காரி யங்களைச் செய்யும் கிருஷ்ண பகவானுலும், பலவகையான இதிஹாசங்களைக்கொண்டு தர்மபுத்திரர் சமாதானஞ்செய் யப்பட்டும் அதனுல் அவருக்குத் துக்கம் நீங்கவில்லை. ஓ பிராம்மணர்களே! தர்மபுத்திரர் யுத்தத்தில் இறந்துபோன பந்துக்களையே நினைத்து, அவிவேகமுள்ளவராய் அபி மானம், மோகம் என்னும் இவைகளுக்கு வசப்பட்டுப் பின் வருமாறு சொல்லலானர்: 'துராத்மாவாகிய என்னுடைய

மனத்தில் ஸ்திரமாயிருக்கும் அறியாத்தன்மை மிகவும் ஆச்சரியப்படத்தக்கது. நாய், நரி முதலியவைகளுக்குச் சொந்தமான இந்தச் சரீரத்திற்காக அனேக அக்ஷௌஹிணி சைன்யங்களைக் கொன்றேன். பாலர்கள், பிராம்மணர்கள், மித்திரர்கள், பிதிருவ்யர்கள், சகோதரர்கள், குரு ஆகிய இவர்களுக்குத் துரோகஞ்செய்த நான், அநேக வர்ஷங்கள் பாபத்தின் பலனாகிய நரகத்தை அனுபவித்தாலும் ஒருபொழுதும் மோக்ஷத்தை யடையப் போகிறதில்லை. யுத்தத்தில் சத்ருக்களைக் கொல்வது அரசர்களுக்குத் தர்மமேயொழியப் பாபமில்லை' என்று சாஸ்திரத்தில் சொல்லியிருப்பது என் விஷயத்தில் பொருந்தாது. ஏனென்றால், 'அரசன் தன்னுடைய பிரஜைகளுக்கு, சத்ருக்களால் உபத்ரவம் நேரிடும்போது அவர்களைக் கொல்வது நியாயம்' என்பது சாஸ்திரத்தினுடைய தாத்பரியம். துரியோதனனால் பிரஜை காப்பாற்றப்பட்டுச் சுகமாய் வசிக்கும்போது ராஜ்யமடையவேண்டுமென்ற ஆசையால்மாத்திரம் நான் சண்டைசெய்து பந்துக்களைக் கொன்றேனாகையால், என் புத்திக்குச் சமாதானமாகவில்லை. இப்படி புருஷர்களைக் கொன்றதால் அவர்களுடைய பந்துக்களான ஸ்திரீகளுக்கும் துரோகஞ் செய்தவனாகிறேன்.

இந்தப் பாபம் கிருகஸ்தாசிரமத்தில் செய்யக்கூடிய ஸத்கர்மங்களால் நிவர்த்தித்துக்கொள்ளமுடியாதது. அநேக பிராணிகளை (அறியாத்தன்மையால்) கொன்றதால் நேர்ந்த இந்தப்பாபத்தைப் புத்திபூர்வமாய்ச் செய்யும் இம்சையுள்ள யாகத்தால் நிவர்த்திசெய்துகொள்ளவும் முடியாது. 'கலங்கிய ஜலத்தால் கலங்கிய ஜலத்தைச் சுத்தப்படுத்த முடியுமா? மத்யத்தால் உண்டான அசுத்தியானது, மத்யத்தால் நிவர்த்தியாகுமா?' என்று பலவாறாகத் துக்கித்தார்.

## நோட்டு

பயத்தை -மிருத்யுவிற்கு வசப்பட்டிருக்கும் மனிதனால் மற்றொருவனை மிருத்யுவினிடமிருந்து காப்பாற்ற முடியாதென்று கருத்து— வீர.அறியாத—பீஷ்மர் மரணமடையப் போகிறார். அதற்காக எல்லோரும் கங்கையின் கரைக்குச்செல்லவேண்டும். அவ்விடத்தில் அவரிடமாகத் தர்மங்களைக்கேட்கச்செய்து, அதனால் தர்மபுத்திருடைய துக்கத்தைப் போக்கவேண்டுமென்பது பகவானுடைய அபிப்பிராயம். ஸ்ரீத. அக்ஷௌஹிணீ—ரதங்கள் 21870, யானைகள் 21801, குதிரைகள் 65610, காலாட்படைகள் 109350. யாகத்தால்—"எவன் அசுவமேதஞ் செய்து பகவானைப் பூஜிக்கிறானோ அவன் பிரம்மஹத்யை முதலிய பாபங்களிலிருந்து விடுபடுகிறான்" என்று சுருதியில் சொல்லப்பட்டிருந்தாலும் என்பது கருத்து.

---

# அத்தியாயம் 9

## பீஷ்மர் தர்ம முரைத்தது

இப்படி தர்மபுத்ரர், "பந்துக்களுக்கு துரோகஞ்செய்தோமே" என்று பயந்து ஸகல தர்மங்களையும் தெரிந்துகொள்ள விரும்பி, பீஷ்மர் வஸிக்கும் குருக்ஷேத்திரம் சென்றார்.

பிராம்மணர்களே! அப்பொழுது அவருடைய தம்பிகளும், பகவானும், வியாஸரும், தௌம்யர் முதலானவர்களும், உத்தமமான குதிரைகள் பூட்டிய ரதத்தில் கிருஷ்ண பகவானும் அர்ஜுனனுக்கு ஸாரத்யம் செய்துகொண்டு சென்றார். அவர்களுடைய நடுவில் அந்தத் தர்மபுத்ரர் குஹ்யகர்களால் சூழப்பட்ட குபேரன் போலப் பிரகாசித்தார்.

4—8. அவ்விடத்தில் சுவர்க்கத்திலிருந்து விழுந்திருக்கும் தேவரைப்போல், பூமியில் கிடக்கும் பீஷ்மரைக்

கண்டு, பாண்டவர்களும், அவர்களுடைய பரிவாரங் களும், ஸ்ரீ கிருஷ்ண பகவானும் அவருக்கு நமஸ்காரஞ் செய்தார்கள். அந்தச் சமயத்தில், ஸகல பிரம்மரிஷிகளும், சிறந்த தேவரிஷிகளும், ராஜரிஷிகளும் அந்தப் பீஷ்மரைப் பார்ப்பதற்காக வந்து கூடினார்கள். மேலும் பர்வதர், நாரதர், தௌம்யர், வியாஸ பகவான், பிரஹதச்வர், பரத்வாஜர், அவருடைய சிஷ்யர்கள், ரேணுகையின் புத்திரராகிய பரசுராமர், வஸிஷ்டர், இந்திரபிரமதர், திருதர், கிருதஸமதர், அஸிதர், ரக்ஷிவான், கௌதமர், அத்ரி, விசுவாமித்ரர், ஸுதர்சனர், காசியபர், பிருஹஸ்பதி, சுகர் முதலிய நிர்சுபாவமுள்ள மற்றவர்களும் தங்கள் தங்கள் சிஷ்யர்களுடன் அவ்விடம் வந்துசேர்ந்தார்கள்.

9—24. தேசத்தையும் காலத்தையும் நன்ருக அறிந்த பீஷ்மர் வந்தவர்களைத் தனித்தனியே தெரிந்துகொண்டு மிக்க பாக்கியசாலிகளான மஹரிஷிகளைப் பூஜித்தார். மேலும் சமீபத்தில் உட்கார்ந்திருப்பவரும், ஜகதீசரும், மாயையால் சரீரமெடுத்தவருமான ஸ்ரீ கிருஷ்ண பகவானைப் பார்த்து, அவருடைய மகிமையை அறிந்தவராகையால், அவரை இருதயத்தில் வைத்து அர்ச்சித்தார். பின்னும் அவர் மிகுந்த வணக்கத்தோடும் பிரேமையோடும், சமீபத்தில் உட்கார்ந்திருக்கும் பாண்டவர்களைப் பார்த்து அபிமானத்தால் கண்ணீரைப் பெருக்கி அதனல் கண் தெரியாதவராய்ப் பின்வருமாறு சொல்லத் தொடங்கினர். "ஏ தர்ம புத்திர! நீங்கள் பிராம்மணர்களையும், தர்மத்தையும், ஸ்ரீ கிருஷ்ண பகவானையும் ஆசிரயித்தவர்களாக விருந்தும் கஷ்டப்பட்டு ஜீவிப்பது நியாயமல்ல. இது வெறுக்கக் கூடிய காரியம். உங்களுடைய பிதாவும் அதிரதனுமாகிய பாண்டு மரணமடைந்த பிறகு உங்களுடைய மாதாவாகிய

குந்திதேவி பால்ய வயதுள்ள குழந்தைகளுடன் அடிக்கடி மிகுந்த கஷ்டத்தை அநுபவித்தாள். மேகங்கள் வாயுவுக்கு வசப்பட்டிருப்பதுபோல, ஜனங்கள் காலத்திற்கு வசப் பட்டிருக்கிறார்கள். ஆகையால் உங்களுக்கு நேர்ந்த கஷ் டங்கள் யாவும் அந்தக் காலத்தில் செய்யப்பட்டவைகளே யாம். எந்தப் பக்ஷத்தில் அரசனாகிய தர்மபுத்திரனும், கதாயுதத்தைக் கையில் பிடித்த பீமஸேனனும், காண்டீவ மென்னும் வில்லையுடைய அர்ஜுனனும் இருக்கிறார்களோ, மேலும் அவர்களுக்குக் கிருஷ்ண பகவான் மித்ரரோ, அவ் விடத்திலும் ஆபத்துநேரிட்டதென்பது காலத்தின் மகிமை யேயாம்.

இதோ இருக்கும் கிருஷ்ண பகவானுடைய எண்ணத் தைத் தெரிந்துகொள்ள ஒருவராலும் முடியாது. கவிகளும், யோகிகளும் இவருடைய சுரூபத்தை அறிய விரும்பியும் அதை அறியாமல் மோஹிக்கிறார்கள். ஏ! தர்மபுத்திர! மேற்சொல்லிய காரணத்தால் இவை யாவும் ஈசுவரன் வசப் பட்டவை என்று நிச்சயித்து, அந்த ஈசுவரனை அநுஸரித்து அனாதர்களான பிரஜைகளைக் காப்பாற்றும்; சிருஷ்டிக்கு முந்தியிருந்த புராண புருஷராகிய பகவான் இவர்தான். இவரே நாராயணன். ஆனாலும் தம்முடைய மாயையால் உலகத்தைப் பிரமிக்கச் செய்துகொண்டு (தம் சுரூபத் தைக் காட்டாமல்) விருஷ்ணி வம்சத்தில் பிரகாசிக்கிறார். இவருடைய மஹிமை மிகவும் ரகசியமானது; அதனைப் பகவானாகிய பரமசிவனும், தேவரிஷியாகிய நாரதரும், கபில ருமே அறிவார்கள். நீங்கள் இவரை அம்மானுடைய பிள்ளை (அம்மான் சேய்) என்றும், உங்களுடைய இஷ்டப் படி நடப்பவரென்றும், பிரதியுபகாரத்தை எதிர்பாரா மல் உபகாரஞ்செய்பவர் என்றும் நினைத்து, அவரை மந்திரி

யாகவும், தூதராகவும், ஸாரதியாகவும், ஸ்நேக விசேஷத்தால் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். அப்படி நினைப்பது அறியாத்தன்மையே. ஸகல ஜகத்ரூபியும், ஸமமாயிருப்பவரும், ஒருவராய் விளங்குபவரும், அகங்காரமில்லாதவரும், ஆசை முதலியவைகளில்லாதவருமான இந்தப் பகவானுக்கு மேலான காரியமென்றும், கீழான காரியமென்றும், தகுதியுடையதென்றும், தகுதியற்றதென்றும் வேறுபாடு தோன்றுகிற பேதபுத்தி ஓரிடத்திலும் உண்டாகிறதில்லை. ஆனாலும் இடைவிடாமல் பக்தி செய்பவர்களிடத்தில் இவருக்குக் கிருபை உண்டாகிறது. இப்போது நான் உயிரைவிடச் சித்தனாயிருக்கையில், ஸ்ரீ கிருஷ்ண பகவான் எனக்குத் தரிசனங் கொடுப்பதற்காக நேரில் இவ்விடம் வந்திருக்கிறார். ஆகையால் இடைவிடாமல் பக்திசெய்பவர்களிடத்தில் பகவானுக்கு உண்டாகும் கிருபையைப் பாருங்கள். மனிதனானவன் தன்னுடைய மனதைப் பகவானிடத்தில் பக்தியுடன் செலுத்தியும், அவருடைய பெயரையே வாக்கினால் உச்சரித்துக்கொண்டும் சரீரத்தை விடுவானாகில் அவன் காமங்களாலும் கர்மங்களாலும் பாதிக்கப்படமாட்டான். ஆகையால் தேவர்களுக்கும் தேவரும், சிரிப்பினாலும், சிவந்த கண்களாலும், அழகான முகமுள்ளவரும், தியானத்திற்கு விஷயமானவரும், நான்கு கைகளுள்ளவருமான பகவான் நான் இந்தச் சரீரத்தை விடுகிறவரையில் என் முன்பு இருக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

25. இதனைக் கேட்ட, தர்மபுத்திரர் சரதல்ப (பாணப் படுக்கை)த்தில் படுத்துக்கொண்டிருக்கும் பீஷ்மரை நோக்கி, மற்ற மஹரிஷிகள் கேட்டுக்கொண்டிருக்கும் போது பலவகையான தர்மங்களைச் சொல்லவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்.

26—28. ஸகல தர்மங்களையு மறிந்தவராகிய பீஷ்மர் மனுஷ்ய ஜாதிக்குப் பொதுவானவைகளும், வர்ணாசிரமங்களுக்கு உரியவைகளும், வைராக்கிய சம்பந்தத்தால் ஏற்படும் நிவர்த்திரூபமாயும், ஆசையின் சம்பந்தத்தால் ஏற்படும் பிரவிருத்தி ரூபமாயுமுள்ள தர்மங்களையும், ராஜ தர்மங்கள், தான தர்மங்கள், மோக்ஷ தர்மங்கள், ஸ்திரீ தர்மங்கள், பகவத் தர்மங்கள் ஆகிய இவைகளையும் தனித் தனியாகப் பிரித்துச் சுருக்கமாகவும், விஸ்தாரமாகவும் சொன்னார். மேலும் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்னும் நான்கு புருஷார்த்தங்களையும், அவைகளை அடைவதற்குத் தகுந்த உபாயங்களையும், அனேக இதிஹாஸங்களையும் உபாக்யானங்களிற் சொல்லியபடி வர்ணித்தார்.

29—31. இப்படி தர்மங்களை யுபதேசித்துக்கொண்டிருக்கும்போது உத்தராயணம் வந்தது. இஷ்டப்படி மரணமடையச் சக்தியுள்ள யோகியாகிய பீஷ்மரால் தமது மரணத்திற்காக எதிர்பார்க்கப்பட்டிருந்த காலம் இதுவேயாம். அப்பொழுது ஆயிரம் ரதிகர்களைக் காப்பாற்றும் வல்லமையுள்ள பீஷ்மர் மௌனமாக (வார்த்தைகளை அடக்கிக்கொண்டு) ஆதிபுருஷரும், பீதாம்பரத்தைத் தரித்தவரும், நான்கு கைகளுள்ளவரும், எதிரில் உட்கார்ந்திருப்பவருமாகிய ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் சகல ஆசைகளையும் ஒழித்து, சுத்தமாக விருக்கும் மனத்தைக் கண்களை மூடிக்கொள்ளாமலேயே செலுத்தினார். மேலும் அவருக்கு இம் மாதிரி பரிசுத்தமாகிய தியான விசேஷத்தால் அசுபங்கள் விலகின. பகவானுடைய கருணை நிறைந்த பார்வையால் ஆயுதங்களால் உண்டாகிய காயங்களும் அவற்றின் உபத்திரவமும் நீங்கின. சகல இந்திரியங்களும் பலவிடங்களில் செல்லாமல் ஒருவழிப்பட்டன. பின்னும் ஸாத்வதர்களுக்குள்

சிறந்தவரும், ஒப்பற்ற மகிமையுள்ளவரும், தம்முடைய சுரூபமான பரமானந்தத்தை அடைந்தவரும், சிருஷ்டிக்குக் காரணமாகிய பிரகிருதியின் சம்பந்தத்தைச் சில காலம் லீலையாக அங்கீகரிப்பவருமான பகவானிடத்தில் ஒருவித ஆசையுமில்லாத தமது புத்தியைச் செலுத்தினர். இப்படி எல்லா வகையிலும் பகவத்பராயிருந்து சரீரத்தை விடுகிறவரையில் ஸ்ரீ கிருஷ்ணனைப் பின்வருமாறு ஸ்தோத்திரஞ் செய்யலானர்.

32—35. "மூவுலகத்திலும் மிகுந்த அழகுள்ளதும், பச்சிலை போல் நீல வர்ணமுள்ளதுமான திவ்ய சரீரத்தையடைந்தவரும், சூரிய கிரணம்போல் பொன்னிறமான வஸ்திரத்தைத் தரித்தவரும், நான்கு புறத்திலும் தொங்கும் சிறந்த தலைமயிர்களால் அழகான முகமுள்ளவரும், அர்ஜுனனுக்குத் தோழருமான பகவானிடத்தில் பலனையுத்தேசியாமல் எனக்கு ஸ்திரமான பக்தி யுண்டாகட்டும். மேலும், யுத்தத்தில் அர்ஜுனனுக்கு ஸாரத்யஞ் செய்யும் போது குதிரைகள் ஓடியதால் பூமியிலிருந்து கிளம்பிய தூளிகள் எவருடைய தலைமயிரில் படிந்தனவோ, எவருடைய முகம் அப்படிப்பட்ட மயிர்களோடு கூடிய வேர்வை ஜலத்துளிகளால் அலங்கரிக்கப்பட்டதோ, எவருடைய கவசம் என்னுடைய பாணங்களால் மூடப்பட்டுப் பிரகாசித்ததோ, அந்தக் கிருஷ்ண பகவானிடத்தில் என்னுடைய மனதானது ரமிக்கட்டும்; பின்னும் எந்தப் பகவான் தம்முடைய சிநேகிதனுகிய அர்ஜுனனுடைய வார்த்தையின் படி இரண்டு பக்கத்து சைனியங்களுடைய நடுவில் ரதத்தைச் செலுத்தி,சத்துரு சைனியத்திலிப்பவர்களனைவரையும் 'இவர் துரோணர், இவர் பீஷ்மர், இவர் கிருபர்' என்று சுட்டிக்காட்டிப் பார்வையாலேயே அவர்களுடைய ஆயு

ளைக் குறைத்து, இதனால் அர்ஜுனனுக்கு ஜயத்தை யுண்டு பண்ணினரோ, அந்தக் கிருஷ்ணனிடத்திலேயே என் மனம் சந்தோஷமடையட்டும்.

36—42. அர்ஜுனன் சத்துரு சைனியத்தில் யுத்தத்திற்கு ஸன்னத்தனயிருந்த, நான் முதலிய பந்துக்களைப் பார்த்து இவர்களைக் கொல்வதால் பாபம் நேரிடுமென்ற எண்ணத்துடன் யுத்தஞ்செய்வதில் ஆசையில்லாதவனாக இருக்கும்போது, அவனுக்கு ஆத்மவித்தையை யுபதேசித்து அந்த எண்ணத்தை எவர் மாற்றினரோ, அந்தப் பரமபுருஷனுடைய பாதங்களையே என் மனது தியானிக்கட்டும்; மேலும், ஸ்ரீ கிருஷ்ணன் ஆயுதமெடுக்காமல் யுத்தத்தில் ஒத்தாசை செய்வதாகப் பாண்டவர்களுக்குப் பிரதிக்ஞை செய்தவராயினும், ஸ்ரீ கிருஷ்ணனை ஆயுதமெடுக்கச் செய்கிறேன் என்று என்னால் செய்யப்பட்ட பிரதிக்ஞையை நிறைவேற்றுவதற்காக அர்ஜுனனுடைய ரதத்தை விட்டுக் கீழே இறங்கி சக்ராயுதத்தை எடுத்துக்கொண்டு யானையைக் கொல்வதற்குச் சிங்கம்வந்தாற்போல பூமி அசையும்படியாகவும், மேல்வஸ்திரந் தவறி விழும்படியாகவும் வெகு வேகமாக ஓடி வந்தார். அப்பொழுது நான் சிரித்துக்கொண்டு அவரைப் பாணங்களால் அடித்தேன். அதனால் அவருடைய கவசம் உடைந்தது; சரீர முழுவதும் ரத்தத்தால் நனைந்தது. அப்பொழுது அர்ஜுனனால் தடுக்கப்பட்டும் அவனை மீறிக்கொண்டு என்னைக் கொல்வதற்காக ஓடி வந்தார்; அந்தப் பகவானாகிய முகுந்தரே எனக்குக் கதி. பின்னும் அவர் ஒரு கையில் குதிரையோட்டுங் கோலையும் மற்றொரு கையில் குதிரைகளின் கடிவாளங்களையும் பிடித்து ஸாரதி வேஷம் பூண்டு, அநேக அகாரியங்களைச் செய்தாவது அர்ஜுனனுடைய ரதத்தைக் காப்பாற்றிக்கொண்

டிருந்தார். இந்த பகவானைத் தரிசித்ததால் சண்டையில் அடிபட்டு மரணமடைந்தவர்களனைவரும் பகவத் ஸாரூப்யத்தை அடைந்தார்கள். ஆகையால் மரணமடையும் தசையிலிருக்கும் என்னுடைய சித்தம் இந்தப் பரமபுருஷனிடத்தில் கலந்திருக்கட்டும். மேலும் அழகான நடை, லீலை, சிரிப்பு, சிநேகமான பார்வை இவைகளால் கௌரவப்படுத்தப்பட்டவர்களும், பகவானிடத்திலேயே ஸதா மனதைச் செலுத்தி, அவரால் செய்யப்பட்ட லீலைகளை அனுசரிப்பவர்களுமான கோபஸ்திரீகள் வேறு விஷயத்தில் சித்தமில்லாதவர்காளாகப் பகவத் சுரூபமாகிய பரமானந்தரூபத்தை யடைத்தார்கள். ஆனதுபற்றி அவரிடமே என்னுடைய சித்தம் வசிக்கவேண்டும். தவிரவும், தர்மபுத்திரர் ராஜஸூய யாகஞ் செய்தபோது, அநேக முனிவர்களாலும், அரசர்களாலும் நிறைந்த யாக சபையின் நடுவில் இந்தக் கிருஷ்ண பகவான் எல்லாராலும் பார்க்கக்கூடிய அற்புத சரீரமுள்ளவராய்ப் பிரகாசித்ததுமல்லாமல் எல்லாருக்கும் முந்தி பூஜிக்கப்பட்டார். அந்தப் புருஷோத்தமனாகிய இவர் என்னுடைய கண்களுக்கு எதிரில் பிரகாசிக்கிறார். எனக்கு மிகுந்த பாக்கியம் கிடைத்தது. இது மிகுந்த ஆச்சரியம். காற்றானது மூங்கிலை எரிப்பதற்கு அக்னியை யுண்டுபண்ணுவதுபோல எந்தப் பகவான் பூமியின்பாரத்தைத் தொலைப்பதற்காகக் கௌரவர்களுக்கு இந்திரிய சாபல்யத்தை யுண்டுபண்ணினாரோ, பக்தர்களுடைய உபத்திரவத்தை நிவர்த்திக்கும் பாதங்களையுடையவரும், எதிரிலிருப்பவருமான பகவானை இருதயத்தில் வைத்துக்கொண்டு இந்த மனித சரீரத்தை விட்டுவிடுகிறேன்.

43. சூரியன் ஒருவனாலும் பார்ப்பவர்களுடைய கண்களின் தோஷத்தால் பலவகையாகத் தோன்றுகிறது

போல, பகவான் ஒருவரானாலும், தம்மால் சிருஷ்டிக்கப் பட்ட ஒவ்வொரு பிராணியின் இருதயத்திலும் வெவ் வேறாகத் தோன்றுகிறார். இதற்கு அவித்தையே காரணம் (அதிஷ்டான பேதத்தால் பேதமேயொழிய உண்மையில் பேதமில்லை என்பது கருத்து.) என்று தெரிந்துகொண் டேன். பேதபுத்தியும் மோகமும் நாசமாயின. ஆதியந்த மில்லாத ஆத்ம சுரூபத்தை அவருடைய கிருபையால் நன்றாய்த் தெரிந்துகொண்டேன்; தன்யனாகிவிட்டேன்" என்றார்.

44—48. இப்படிச் சொல்லிவிட்டு மனோ வியாபாரம், வாக் வியாபாரம், கண்களின் வியாபாரம் ஆகிய இவைகளைக் கிருஷ்ணனிடத்தில் செலுத்தி, சுவாசத்தை அடக்கி, பரமாத் மாவிடம் லயித்தார். அப்போது அவ்விடமிருந்த எல் லோரும் பீஷ்மரானவர் உபாதி சம்பந்தமில்லாத பரப்பிரம் மாக ஆனதைக் கண்டு சாயங்காலத்துப் பறவைகள்போல மௌனமாக இருந்தார்கள். அப்பொழுது தேவர்களும், மனிதர்களும் துந்துபி வாத்தியங்களை முழக்கினார்கள். அங்கிருந்த அரசர்களுக்குள் பிரம்மிஷ்டர்கள் சிலாகித்தார் கள். ஆகாயத்திலிருந்து புஷ்பமாரி பெய்தது. பிரமாகம சுரூபத்தையடைந்த அந்தப் பீஷ்மருக்கு உத்தரக்ரியை களைத் தர்மபுத்திரர் செய்து சொற்ப காலம் துக்கித்தார். அப் பொழுது மஹரிஷிகள் மிகுந்த ஸந்தோஷத்துடன் பகவா னுடைய ரகசியமாகிய பெயர்களைச் சொல்லி, கிருஷ்ணனை ஸ்தோத்ரம் பண்ணி அவரையே தியானஞ்செய்துகொண்டு தங்களுடைய ஆச்சிரமஞ் சென்றார்கள்.

49—50. பிறகு தர்மபுத்திரர் ஸ்ரீ கிருஷ்ண பகவானு டன் அஸ்தினாபட்டணம்போய், புத்திரசோகத்தால் துக்கிக்

கும் காந்தாரியையும் திருதராஷ்டிரரையும் சமாதானப் படுத்தினர். மேலும் அவர் திருதராஷ்டிரராலும், ஸ்ரீ வாசு தேவராகிய பகவானாலும் அனுமோதிக்கப்பட்டு வம்ச பரம் பரையாய்க் கிடைத்த ராஜ்யத்தைத் தர்மமாகப் பரிபாலித் தார்.

## நோட்டு

தேசத்தை—தான் பாணங்களின்மீது படுத்திருப்பதனல் எதிர்கொண்டழைப்பதற்கும், நமஸ்கரிப்பதற்கும் இது சமயமல்ல வென்று மனத்தால் பகவானைப் பூஜித்தார். மித்ரரோ—ஸ்ரீ கிருஷ் ணன் பாண்டவர்களுக்கு மித்ரராயிருந்து காலத்தையே அனுஸரித் திருந்தார் என்று காட்டப்பட்டிருக்கிறது. திரவியம், காமம், காலம், சுபாவம், ஜீவனம் ஆகிய இவைகள் பகவானுடைய அனுக்ரஹத் தால் கிடைக்கின்றன. அவருடைய அனுக்கிரஹமில்லாதவரையில் மேற்சொல்லியவைகள் மனிதனுக்குக் கிடைக்காவாம்"—வீர. முந்தியிருந்த--ஜகத் ஸிருஷ்டிக்குமுன் ஸத்தாகவே இருந்தது. நாராய ணன் ஒருவரே இருந்தார்"—சுருதி. பகவான்—பகவான் புருஷன் என்ற சப்தங்கள் சாசுவதராகிய வாஸுதேவரையே குறிக்கின்றன. "ஓ! மைத்ரேய! பகவான் என்ற சப்தமானது பரப்ரஹ்மமாகிய வாஸுதேவரைச் சொல்லுகிறதேயொழிய மற்றவைகளைச் சொல் கிறதில்லை." ஸ்ரீத. ஒருருவாய்—இந்த ஜகத்தில் பரமாத்மாவைக் காட்டிலும் வெவ்வேறான வஸ்துக்களில்லை. அனேக வஸ்துக்களிருப் பதாகப் பார்ப்பவன் ஸம்ஸாரத்தை யடைகிறான்." "எப்போழுது இவனுக்கு எல்லாம் ஆத்மசுரூபமாகத் தோற்றுகிறதோ அப்பொ ழுது எதைக்கொண்டு எதைப் பார்க்கப்போகிறான்.—நான்கு கை —பீஷ்மருக்கு நான்கு கைகளுள்ளதாக பகவத் சுரூபம் பிரகாசித் தது. வீர—ஒப்பற்ற மஹிமை—எந்த நிலைமையில் வேறு விஷயத் தைப் பார்க்கமாட்டானே, வேறு விஷயத்தைக் கேட்கிறதில்லையோ இதுவே பூமா எனப்படும்." "மேலும் கீழும், முன்னும் பின்னும், இருபக்கங்களிலும் அவரே இருக்கிறார். காணப்படும் ஜகத் முழு மையும் அவரே" என்ற சுருதிகளில் சொல்லிய விபூதியுள்ளவர்—

சர்த். இருதயத்தில் —அதைச் சிருஷ்டித்து அதில் அனுப்பிரவேசஞ் செய்தார். ஒருவராகவிருக்கும் பரமாத்மாவைப் பலவகையாக நினைக்கிறார்கள்"—சுருதி. லயித்தார்—பீஷ்மர் பிரம்மத்தினிடம் பேதமில்லாமல் கலந்துவிட்டாரென்று அர்த்தங்கொள்ளக்கூடாது. "அப்பொழுது ஸத்துடன் சேருகிறான்" என்று சுருதியில் சொல்லியபடி சம்பந்தித்தார் என்றே அர்த்தம். மேற்காட்டிய சுருதியிலும் அபேதமாகக் கலக்கிறான் என்றே சொல்லப்பட்டிருப்பதாய் அர்த்தங்கொள்வோமானால் ஸுஷுப்தியில் பரமாத்மாவிடம் கலந்து ஒன்றாக ஆன ஜீவன் மறுபடி பிரிய நியாயமில்லை. மேலும், அந்தக் காரணரூபமாகிய உபாதி நாசத்தால் அபேதத்தை யடைந்த ஜீவன் விழித்துக்கொள்ளும்போது மேற்காட்டிய உபாதி ஸம்பந்தத்தை யடைந்து பரமாத்மாவினிடமிருந்து பிரிகிறான் என்று சொல்வதும் பொருந்தாது. மனது பிராணனாகிய பிரஹ்மத்தினிடத்தில் பறவை போலக் கட்டுப்பட்டிருப்பதாகச் சுருதியில் சொல்லிருப்பதால் லயிக்கிறதில்லை—சந்த்.

---

## அத்தியாயம் 10

### ஸ்ரீ கிருஷ்ணன் துவாரகை சென்றது

இதனைக் கேட்ட சௌனகர் ஸூதரை நோக்கி, "ஓ! ஸூதரே! தர்ம சிந்தையுள்ளவர்களுக்குள் சிறந்தவராகிய தர்மபுத்திரர் ராஜ்யத்தில் ஆசைப்பட்டு யுத்தத்திற்கு வந்தவர்களான துரியோதனன் முதலியவர்களைக் கொன்று, தம்முடைய தம்பிகளுடன் ராஜ்யத்தை அடைந்து, மிகுந்த போகங்களை யனுபவித்து ராஜ்யத்தை எப்படிப் பரிபாலித்தார்? பிறகு எதனைச் செய்தார்? அதைச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

2—3. அதைக் கேட்ட ஸூதர் சொல்லத் தொடங்கினர். குரு வம்சமாகிய வனமானது அதிலிருந்து உண்டான கோபமாகிய அக்னியால் எரிக்கப்பட்டபோது, ஸம்ஸாரத்தை விருத்திசெய்பவராகிய பகவான் அதை மறுபடியும் முளைக்கச்செய்து, (பரீக்ஷித்தைக் காப்பாற்றி) தர்மபுத்திரருக்கு ராஜ்யத்தைக் கொடுத்து, மிகுந்த ஆனந்தத்தை யடைந்தார். பின்பு, பீஷ்மருடைய வார்த்தைகளைக் கேட்டதாலும், ஸ்ரீ கிருஷ்ணனுடைய உபதேசத்தாலும் தர்மபுத்ரருக்கு 'நான் செய்கிறவன்', 'பலனை யனுபவிக்கிறவன்' என்ற மோகம் நீங்கியது. 'ஜகத்தானது பரமேசுவர ஆதீனமேயொழிய சுவதந்திரமுள்ளதன்று என்ற ஞானமுண்டாயிற்று. அப்படிப்பட்ட தர்மபுத்திரர் நாசமற்றவரான பகவானை மகேந்திரன்போல ஆசிரயித்து, ஸமுத்திரத்திற்குட்பட்ட பூமியைத் தம்முடைய தம்பிகளுடன் பரிபாலித்தார்.

4—6. ஒருவரிடத்திலும் விரோத புத்தியில்லாதவராகிய தர்மராஜன் அரசுபுரிந்துவரும் நாளில் காலத்தில்

மழைபெய்தது; பூமியானது ஜனங்களுக்கு வேண்டிய வஸ்துக்களை யுண்டுபண்ணிற்று; பெரிய மடியுள்ள பசுக்கள் பாலால் கொட்டில் முழுவதையும் நனைத்தன. ஆறுகள் பூரணப் பிரவாகமுள்ளவைகளாகி, வயல்களுக்கு ஜலத்தைக் கொடுத்துப் பயிர்களை விருத்திசெய்துவந்தன. ஸமுத்திரம் முத்து முதலிய இரத்தினங்களை விசேஷமாக உண்டுபண்ணிற்று. மலைகள் மனோசிலை முதலிய தாதுக்களை விருத்திசெய்தன. எல்லா ருதுக்களிலும் கொடிகள், மரங்கள் ஆகிய இவைகள் பழங்களாலும், புஷ்பங்களாலும் நிறைந்திருந்தன. நெல், பயறு, கடலை, கோதுமை முதலிய தானியங்களை அவ்வவற்றுள் பயிர்கள் விருத்திசெய்தன. மேலும் மனோ வியாதி, சரீர வியாதி, குளிர்ச்சி, உஷ்ணம் இவைகளால் நேரிடும் உபத்திரவம், ஆதிபௌதிகம், ஆதிதெய்விகம், ஆத்யாத்மிகம் ஆகிய மூவகைத் தாபங்களும் ஜனங்களுக்கு ஒருபோதும் நேரிடவேயில்லை.

7—18. அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியானவர் அஸ்தினபட்டணத்தில் சில மாதங்கள் வசித்துத் தம்முடைய மித்திரர்களின் துக்கத்தை நிவர்த்தித்து, சகோதரியான ஸுபத்ரா தேவிக்கு அதிகப் பிரியத்தை யுண்டுபண்ணி பின்பு தர்மபுத்திரரைத் தழுவி நமஸ்கரித்து அவரிடம் விடைபெற்றுக்கொண்டு இரதத்திலேறினர். அப்பொழுது சிலர் பகவானை ஆலிங்கனம் செய்ய நமஸ்கரித்தார்கள். இப்படி பகவான் துவாரகைக்குப் போக முயற்சித்ததைப் பார்த்து, ஸுபத்ரை, திரௌபதி, குந்தி, உத்தரை, விதுரர், தர்மபுத்திரர், திருதராஷ்டிரர், யுயுத்ஸு (திருதராஷ்டருக்கு வைசிய ஸ்திரீயினிடம் பிறந்தவர்), கிருபர், நகுல சகதேவர்கள், பீமஸேனர், தௌம்யர் முதலாகிய எல்லோரும் பகவானை விட்டுப் பிரிந்திருப்பதைச் சகியாமல் வருத்தப்பட்டார்

கள். மனோகரமாகிய பகவானுடைய கதையை ஒரு தடவை கேட்டதினாலேயே நல்ல ஞானமுண்டாகிறது; சரீரம் முதலியவைகளில் அபிமானம் விலகுகிறது; ஆகையால் வித்வான்கள், அதனை யொருபொழுதும் விடமாட்டார்கள். அப்படியிருக்க அவரை எப்பொழுதும் பார்ப்பது, ஆலிங்கனம் செய்துகொள்வது, பேசுவது, சேர்ந்து படுத்துக் கொள்வது, ஒரே இடத்தில் உட்காருவது, சேர்ந்து புஜிப்பது ஆகிய இவைகளால் அந்தப் பகவானிடத்திலேயே புத்தியைச் செலுத்திய பாண்டவர்களால் அவரை விட்டுப் பிரிந்திருக்க முடியுமா? ஆகையால் அவர்களெல்லாரும் கண்கொட்டாமலேயே அவரைப் பார்த்துக்கொண்டு, விசேஷ ஸ்நேகமுள்ளவர்களாய், அந்த அந்த இடங்களில் நின்றார்கள். அவர்களுடைய மனதானது அவர்பின் சென்றது. அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ண பகவான் அரண்மனையிலிருந்து வெளியில் வரும்போது, அவர்மீதிருந்த பிரியத்தால் ஸுபத்ரை முதலிய ஸ்திரீகள், 'கண்ணீரைப் பெருக்குவது அமங்கலம்' என்று நினைத்து அடக்கிக் கொண்டார்கள். மேலும் அப்பொழுது மிருதங்கம், சங்கம், பேரி, வீணை, பணவம், கோமுகம், சர்சரீ, ஆனகம், கண்டா, துந்துபி ஆகிய பத்துவகை வாத்தியங்களும் முழங்கின. கௌரவ ஸ்திரீகள் அனைவரும் பிரேமை, வெட்கம், சிரிப்பு இவைகளுடன் மேல்மாடியிலிருந்து பகவானைத் தரிசித்து, அவர்மீது புஷ்பங்களை வர்ஷித்தார்கள். ஸ்ரீ பகவானிடத்தில் மிகுந்த பிரீதியுள்ளவரும், சுருட்டை மயிருள்ளவருமாகிய அர்ஜுனர், தம்மிடத்தில் மிக்க விசுவாஸமுள்ளவராகிய ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவிற்கு, இரத்தினக்காம்புள்ளதும், முத்துமாலைகளால் அலங்கரிக்கப் பட்டதுமான வெள்ளைக் குடையைப் பிடித்தார். உத்தவரும், ஸாத்யகியும் மிக அற்புதங்களான சாமரங்களை

யெடுத்து விசிறினர்கள். இப்படி பகவான், புஷ்பம் முதலியவைகளால் வீதியில் பூஜிக்கப்பட்டுப் பிரகாசித்தார்.

19—30. அப்பொழுது பிராம்மணர்கள் மனுஷ்யாவதாரமெடுத்த பகவானுக்குத் தகுதியானவைகளும், சுத்த சுரூபத்திற்குத் தகாதவைகளுமான ஆசீர்வாதங்களைச் செய்தார்கள். உத்தமசுலோகராகிய ஸ்ரீ கிருஷ்ணனிடத்திலேயே மனத்தைச் செலுத்தினவர்களான பட்டணத்திலிருக்கும் ஸ்திரீகள் ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ளும் வார்த்தைகள் எல்லாருக்கும் திருப்திகரமானவைகளாகவும், ஸகல உபநிஷத்துக்களுக்குச் சம்மதமானவைகளுமாயிருந்தன. எப்படியென்றால், கிருஷ்ணனுடைய தேஜஸ்ஸைப் பார்த்து ஆச்சரியமடைந்த சில ஸ்திரீகளை நோக்கிச் சிலர் சொல்லுகிறார்கள். பிரளயகாலத்தில் ஜீவோபாதிகளான ஸத்வம் முதலியவைகள் ஈசுவரனிடத்தில் அடங்கியிருக்கும்போது குணங்களுடைய சேர்க்கைக்கு முன் எவர் பிரபஞ்ச சம்பந்தமில்லாத ரூபத்துடன் ஒருவராக விருந்தாரோ, அவரே இந்தக் கிருஷ்ண பகவானாக அவதரித்திருக்கிறார். (சிருஷ்டிக்கு முன்னும், பிரளயத்திலும் பிரபஞ்ச ஸமபந்தமில்லாமலிருப்பவர் இவரே என்று கருத்து.) அந்தப் பரமாத்மாவே ஸகல வேதங்களையும் வெளியிட்டு, மறுபடியும் தம்முடைய காலசக்தியால் தூண்டப்பட்டதும், ஜீவர்களை மோகிக்கச்செய்வதும், சிருஷ்டிக்க விரும்பியதுமான பிரகிருதியை அனுசரித்தார். அந்தப் பிரகிருதியே பெயர், ரூபம் இவைகளில்லாத ஜீவனிடத்தில் அவைகளை யுண்டுபண்ணிற்று. யோகிகள் இந்திரியங்களை ஜயித்து, சுவாசத்தை யடக்கி விசேஷ பக்தியால் சுத்தமான மனமுள்ளவர்களாய் எவருடைய பதத்தை யடைகிறார்களோ, அந்தப் புருஷன் இவரே. நம்முடைய புத்தியைப்

பரிசுத்தப்படுத்துவதற்குத் தகுந்தவர் இவரே யொழிய யோகம் முதலியவைகளால் முடியாது. அடி தோழி! ஆத்மாவின் ரகசியத்தை யறிந்த வித்வான்கள், எவரை ஸ்தோத்திரஞ்செய்கிறார்களோ, வேதங்களிலும், ரகசியமான ஆகமங்களிலும் எவர் வர்ணிக்கப்படுகிறாரோ, எந்த ஈசுவரன் ஜகத்தை உண்டுபண்ணுவது, பரிபாலிப்பது, நாசம்செய்வது ஆகிய இவைகளை லீலையாக நடத்துகிறாரோ, எவருக்கு அதில் பற்றுதலில்லையோ, அவரே கிருஷ்ணனுடைய சரீரமெடுத்துக்கொண்டிருக்கிறார். எந்தக் காலத்தில் அரசர்கள் தமோ குணங்களுள்ளவர்களாகி, தங்கள் பிராணனை மாத்திரம் போஷிக்கிறார்களோ, அந்தக் காலத்தில் ஐசுவரியம், செய்த பிரதிஞ்ஞையைக் காப்பாற்றுவது, உண்மையை யுபதேசிப்பது, தயை, கீர்த்தி ஆகிய இவைகளை வெளிப்படுத்துவதற்காக ஒவ்வொருயுகத்திலும் இவரே சத்வகுண ரூபியாய் அவதரிக்கிறார். யதுவினுடைய குலம் மிகவும் மேலானது. மதுராநகரம் மிகவும் புண்ய பூமியாயுள்ளது. புருஷோத்தமரும், பிரியமான கீர்த்தியுள்ளவருமான பகவான் தம்முடைய அவதாரத்தாலும், நடையினாலும் அவைகளை அலங்கரிக்கிறார். ஆச்சரியம்! துவாரகாநகரத்தின் பாக்கியம் அற்புதமானது; எல்லா நகரங்களிலும் ஸ்வர்க்கம் மேலானது என்ற ஸ்வர்க்கத்தின் கீர்த்தியைப் போக்கக்கூடியது; அதில் வஸிக்கும் ஜனங்கள் தங்களை அனுக்கிரகிப்பதற்காகவே அவ்விடத்தில் வஸிப்பவரும், புன்சிரிப்புள்ள பார்வையுள்ளவருமான ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவை எப்பொழுதும் தரிசிக்கிறார்கள் அந்தப் பகவானுடைய பத்னிகள் முன் ஜன்மத்தில் விரதங்கள், ஸ்நானம், ஹோமம் முதலியவைகளால் ஈசுவரனை உபாஸித்தவர்களென்பதில் சந்தேகமில்லை. தவிரவும், கோபஸ்திரீகள் எல்லோரும், அவருடைய அதரத்தைப் பானஞ்செய்கிறார்

கள். தவிரவும் அதையே மனத்தில் நினைத்து மோகிக்கிறார்கள். பலிஷ்டர்களான சிசுபாலன் முதலியவர்களைச் சுயம் வரத்தில் ஜயித்து, பகவானால் விவாகஞ்செய்துகொள்ளப் பட்டவர்களும், பிரத்யும்னன், ஸாம்பன் முதலியவர்களுக்குத் தாயார்களுமான ருக்மிணி, ஸத்யபாமா முதலியவர்களுடைய வீடுகளிலும், நரகாசுரனைக் கொன்று ஸ்ரீ கிருஷ்ணனால் அபகரிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மற்ற ஸ்திரீகளுடைய கிருகங்களிலும்; பகவான் எப்பொழுதும் அவர்களுக்கு வேண்டியதை சம்பாதித்துக் கொடுத்து அவர்களை ஸந்தோஷப்படுத்திக்கொண்டு வஸிக்கிறார். ஆனதால் ஸ்திரீகளுக்கு சுவாதந்திரியம், சௌசம் இவைகளில்லாமலிருந்தும், ஸ்திரீயாகவிருப்பதே மேலானதென்று விளங்குகிறது என்று பேசிக்கொண்டார்கள்.

31. இம்மாதிரியான பட்டணத்து ஸ்திரீகளுடைய வார்த்தையைக் கேட்டு ஸ்ரீ கிருஷ்ணன் பார்வையாலேயே அவர்களைச் சிலாகித்துச் சிரித்துக்கொண்டு சென்றார். அப்பொழுது தர்மபுத்திரர் சத்ருக்களிடத்தில் சந்தேகப்பட்டு, பகவானைக் காப்பாற்றுவதற்காக அவரிடம் பிரியத்தால் சதுரங்க சைனியத்தை யனுப்பினார். பின்பு ஸ்ரீ கிருஷ்ணபகவான் வெகுதூரம் தம்மைப் பின்தொடர்ந்து வந்தவர்களும் தம்மைவிட்டுப் பிரிய மனமில்லாதவர்களும், ஸ்திரமான பக்தியுள்ளவர்களுமான கௌரவர்களைத் திருப்பிவிட்டுத் தமது நகரம் நோக்கிப் புறப்பட்டார். அவர் குருஜாங்கலம், பாஞ்சாலம், சூரசேனம், யமுனையின் கரையிலிருக்கிற தேசம், பிரஹ்மாவர்த்தம், மத்ஸ்யம், ஸரஸ்வதி நதிக்கரையிலுள்ள தேசம், ஜலமில்லாத தேசம், அற்ப ஜனமுள்ள தேசம், ஸௌவீரம், ஆபீரம், ஸைந்தவம் ஆகிய இவைகளைத் தாண்டி ஆனர்த்த தேசம் போனார். குதிரைகள்

கொஞ்சம் களைப்படைந்தன. அந்தந்த இடத்தில் வஸிப்பவர்கள் பகவானை எதிர்கொண்டழைத்துப் பூஜித்தார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ண பகவான் ரதத்தைவிட்டு இறங்கி ஜலமிருக்குமிடஞ் சென்று ஸந்தியோபாஸ்தி செய்தார்.

## நோட்டு

பிரகிருதி—மாயை "மாயையைப் பிரகிருதியென்றும், மாயையைச் சுவாதீனப்படுத்திக்கொண்டிருப்பவனை மகேசுவரனென்றும் தெரிந்துகொள்ளவேண்டும்." சுருதி.—சுத்தமான "மேலான ஸூட்சும புத்தியினால் பார்க்கப்படுகிறார்"—சுருதி.

## அத்தியாயம் 11

### துவாரகாவாஸிகள் பகவானை யுபசரித்தது

இப்படி ஸ்ரீ கிருஷ்ணபகவான் மிகுந்த ஐசுவரியமுள்ள தன்னுடையதான ஆனர்த்த தேசத்தை யடைந்து திவ்ய மாகிய சங்கத்தை ஊதினர். அப்பொழுது மிகவும் வெண்மையான மத்ய பாகமுள்ளதும், பகவானுடைய உதடுகளின் காந்தியால் சிவந்ததுமான அந்தச் சங்கமானது செந்தாமரைப் புஷ்பத்தில் உரக்கச் சப்தித்துக்கொண் டிருக்கும் ஹம்ஸம்போல விளங்கிற்று. அதனைக் கேட்டு அந்தத் தேசத்தில் வஸிப்பவர்கள் கிருஷ்ணன் வருகிருர் என்பதைத் தெரிந்துகொண்டு அவரைவிட்டுப் பிரிந்திருந்த தாலுண்டான தாபத்தைவிட்டுச் சந்தோஷமடைந்தார்கள். மேலும் அவர்கள் எல்லாரும் ஸம்ஸார பயத்தைப் போக்கக் கூடிய அந்தச் சப்தத்தைக் கேட்டவுடன் தங்கள் யஜமான ஞகிய ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை யுள்ளவர்களாக அவருக்கு எதிரில் சென்ருர்கள். அந்தப் பகவான் தம்முடைய ஆத்மாவிலேயே ரமிப்பவர்; ஆனந் தானுபவத்தால் எப்பொழுதும் பூர்ணகாமர்; எல்லோருக் கும் அனுகூலத்தைச் செய்பவர். அப்பேர்ப்பட்ட பகவா னிடத்தில் சூரியனிடத்தில் தீபத்தைக் கொடுப்பதுபோல ஜனங்கள் காணிக்கைகளைச் சமர்ப்பித்து, பிதாவைக் கண்ட குழந்தைகள்போல மலர்ந்த முகமுள்ளவர்களாய், கத்கத சுவரத்துடன் தங்களைக் காப்பாற்றும் அந்தப் பகவானை நோக்கி, 'ஹே! நாத! பிரம்மதேவராலும், ஸனகர் முதலிய வர்களாலும், இந்திரன் முதலியவர்களாலும் நமஸ்கரிக்கப் பட்ட தாமரை மலர்போன்ற உம்முடைய பாதங்களுக்கு நமஸ்காரஞ் செய்கிருேம். அவைகள் இவ்வுலகத்தில்

சுகத்தை விரும்பியவர்களுக்கு முக்கிய கதியானவைகள். சகல வஸ்துக்களையும் பக்குவஞ்செய்யும் சுபாவமுள்ள காலமானது எல்லாவற்றிற்கும் மேலானதானாலும் உம்முடைய பாதங்களுக்கு சுவாதீனப்பட்டதேயாம். (உம்முடைய பாதாரவிந்தங்களை ஆசிரயித்தவர்களுக்குப் பிறப்பு, கிழத்தனம், மரணம் முதலியவைகளில்லையென்பது கருத்து.)

'ஓ! ஜகத்திற்கு அந்தர்யாமியாயிருப்பவரே! தாம் எங்களுக்கு க்ஷேமத்தைச் செய்யவேண்டும். நீரே சகலத்திற்கும் மாதா, மித்திரர், பிதா, பதி. நீரே நல்ல ஆசாரியர். முக்கியமாகிய தெய்வம். உம்மை யனுசரித்ததாலேயே நாங்கள் தன்யர்களானோம். சுவர்க்கவாஸிகளான தேவர்களாலும் பார்க்கமுடியாததும், பிரியமான சிரிப்பு, மனோகரமான பார்வை ஆகிய இவைகளுடன் கூடிய முகமுள்ளவரும், சகலவிதத்திலும் அழகு பொருந்தியவருமான தம்முடைய சரீரத்தை எப்பொழுதும் நாங்கள் தரிசிக்கும்படி நேர்ந்ததால் நாங்களே நாதனுள்ளவர்கள். தாமரை மலர் போன்ற கண்களுள்ளவரே! நீர் பந்துக்களைப் பார்க்க வேண்டி குரு நகரத்திற்காவது, மதுரா நகரத்திற்காவது சென்றால், அப்பொழுது நாங்கள் சூரியனில்லாத சமயத்தில் கண்கள்போல ஒவ்வொரு நிமிஷத்தையும் கோடி வருஷங்களுக்குச் சமமாகக் கழிக்கிறோம்' என்று ஸ்தோத்ரஞ் செய்தார்கள்.

10—34 இப்படி ஜனங்கள் செய்த ஸ்தோத்திரத்தைக் கேட்டுப் பக்தர்களைக் காப்பாற்றும் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அவர்களைக் கடாக்ஷத்தால் அனுக்ரகித்துக் கொண்டு பட்டணத்திற்குள் சென்றார். அந்த நகரம் ஸ்ரீ கிருஷ்ணனுக்குச் சமமாயுள்ள பலசாலிகளான போஜர்கள்,

மநுக்கள், தாசார்ஹர்கள், குகுரர்கள், அந்தகர்கள், விருஷ்ணிகள் ஆகிய இவர்களால் போகவதி என்னும் பட்டணம் நாகங்களால் ரட்சிக்கப்படுவதுபோல, காப்பாற்றப்பட்டிருந்தது. மேலும் அந்தப் பட்டணமானது எல்லா ருதுக்களிலும் புஷ்பிப்பவைகளும் பலிப்பவைகளுமான புண்ய விருட்சங்களாலும், கொடிகளாலும், கொடிவீடுகளாலும், உத்யான வனங்களாலும், (பழங்களையே பிரதானமாயுள்ள மரங்களுள்ளது), புஷ்பத்தோட்டங்களாலும், விளையாடும் தோட்டங்களாலும், தாமரை யோடைகளாலும் அழகாயிருந்தது. கோபுர வாசல்களிலும் வீட்டு வாசல்களிலும் மங்கள தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. வீதிகளில் பலவகையான துவஜங்கள் கட்டப்பட்டு வெயிலினது தாபமில்லாமலிருந்தது. ராஜவீதி, கடைவீதி, நாற்சந்திகள், மற்றை வீதிகள் ஆகிய இவைகள் குப்பையில்லாமல் சுத்தஞ்செய்யப்பட்டிருந்தன. பழங்கள், புஷ்பங்கள், அட்சதைகள் முதலிய மங்கள திரவியங்கள் இறைக்கப்பட்டிருந்தன; வாசனை ஜலம் தெளிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு வாசலும் தயிர், அட்சதை, பழங்கள், கரும்பு இவைகளாலும், பூர்ண கும்பங்களாலும், தூபங்களாலும், தீபங்களாலும், பலிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பின்னும் வசுதேவர், அக்ரூரர், உக்கிரஸேனர், அற்புதமான பராக்கிரமமுள்ள பலராமர், பிரத்யும்னன், சாருதேஷ்ணன், ஸாம்பன், கதன் முதலியவர்கள் மிகவும் பிரியராகிய பகவான் வருகிறார் என்று கேள்விப்பட்டு யானையை முன் நடத்தி, பிராம்மணர்களை முன்னிட்டுக்கொண்டு அதிக ஸந்தோஷத்தால் படுக்கை, போஜனம் இவைகளிலும் மனமில்லாதவர்களாக ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கு எதிரே சென்றார்கள். மேலும் அப்பொழுது சங்கம் முதலிய வாத்தியங்கள் முழங்கின. வேதங்கள் கோஷிக்கப்பட்டன. இப்படி

எல்லோரும் விசுவாசத்தால் உண்டான பரபரப்புள்ளவர்களாக இரதங்கள் மீதேறிக்கொண்டு எதிர்கொண்டு சென்றார்கள். சிறந்த தாஸிகளும் கூட்டங்கூட்டமாக வாகனங்களின் மீதேறிக்கொண்டு அவரைப் பார்க்க வேண்டுமென்று மிகுந்த ஆசையுடன் சென்றார்கள். அவர்கள் காதில் அணிந்திருந்த குண்டலங்களுடைய காந்தியால் அவர்களுடைய முகம் பிரகாசித்தது. ரஸாபினயஞ் செய்யக்கூடிய நடர்களும், தாளம் முதலியவைகளை யனுசரித்து நர்த்தனஞ் செய்பவர்களும், பாடுகிறவர்களும், ஸூதர்களும், மாகதர்களும், வந்திகளும் உத்தம சுலோகராகிய பகவானுடைய அற்புதமான சரித்தைக் கானஞ் செய்தார்கள். அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணன் தம்மைப் பார்ப்பதற்காக வந்த பந்துக்களுக்குத் தக்கபடி வணங்குவதாலும், நமஸ்கரிப்பதாலும், தழுவுவதாலும், கையைப் பிடிப்பதாலும், புன்சிரிப்புக்கொண்ட பார்வையாலும் சண்டாளன் வரையிலுள்ள எல்லாருக்கும் அபயங் கொடுத்து, அவரவர்களுக்கு இஷ்டமான வரங்களை அளித்து மரியாதை செய்தார்.

மேலும் ஆசாரியர்களும், பிராம்மணர்களும், பெரியோர்களும், மற்றவர்களும் அவரவர் ஸ்திரீகளுடன் பகவானுக்கு ஆசீர்வாதஞ் செய்தார்கள்; வந்திகள் ஸ்தோத்திரம் செய்தார்கள்; துவாரகா பட்டணத்தில் கிருஷ்ணன் இராஜவீதியில் வரும்பொழுது குலஸ்திரீகள் அவரைத் தரிசிப்பதற்காக மாடிகளின் மீதேறினார்கள். லக்ஷ்மிதேவிக்கு இருப்பிடமாகிய பகவானுடைய சரீரத்தைத் துவாரகாவாஸிகளான ஜனங்கள் எப்பொழுதும் பார்த்தவர்களானாலும் அவர்களுக்குப் போதுமென்ற திருப்தி யுண்டாகவில்லை. அவருடைய மார்பு, கைகள், பாதங்கள் ஆகிய இவைகள் லக்ஷ்மீதேவிக்கும், உலக

பாலர்களுக்கும், பக்தர்களுக்கும் முறையே வலிக்குமிடமாக இருக்கின்றன. அப்பேர்ப்பட்ட ஸ்ரீகிருஷ்ண பகவான் வழியில் வெள்ளைக்குடை, சாமரங்கள் ஆகிய இவைகளால் பூஜிக்கப்பட்டும், பூக்களால் வர்ஷிக்கப்பெற்றும் பீதாம்பரத்தாலும், துளசி மாலையாலும் பிரகாசித்தார். அது சூரியன், சந்திரன், இந்திர வில், மின்னல் இவைகளுடன் மேகம் சேர்ந்து பிரகாசித்ததுபோலிருந்தது. பின்னுமவர் வசுதேவர், தேவகி இவர்களுடைய அரண்மனை சென்று, வசுதேவருக்கும் தேவகி முதலிய ஏழு தாயார்களுக்கும் சந்தோஷமாக நமஸ்காரஞ்செய்தார். அவர்களும் இவரைத் தழுவினார்கள். தேவகி முதலிய ஸ்திரீகள் கிருஷ்ணனை மடியில் உட்காரவைத்துக் கொண்டு ஆனந்தக் கண்ணீரால் அவருக்கு அபிஷேகம் செய்தார்கள். பிறகு அந்தப் பரமாத்மா 16,000 பத்தினிகளுடைய அரண்மனைகளடங்கிய தமது அரண்மனைக்குச் சென்றார். அது சகல வஸ்துக்களாலும் நிறைந்தும் சிறந்ததுமாக விருந்தது. அப்பொழுது அங்கிருந்த ருக்மிணி முதலிய ஸ்திரீகள் தேசாந்தரத்திலிருந்து வந்த தங்களுடைய பர்த்தாவைச் சமீபத்தில் கண்டு அளவற்ற ஆனந்தமடைந்து ஆசனத்திலிருந்து சரீரத்தாலும் அந்தக்கரணத்தாலும் சீக்கிரமாக எழுந்திருந்தார்கள். அவர்கள், பர்த்தா தேசாந்தரம் போயிருக்கும் காலத்தில் செய்யவேண்டிய விரதங்களையனுஷ்டித்துக்கொண்டிருந்தவர்கள்; கடைக்கண்ணால் பார்ப்பவர்களாகவும், வெட்கத்தால் தலை குனிந்தவர்களாகவு மிருந்தார்கள். ஓ சௌனகரே! கம்பீர மனமுள்ள பகவானைக் காணாதபோது மனத்தாலும், நேரில் பார்த்தபோது பார்வைகளாலும், (புத்ரர்களைக்கொண்டு தழுவச்செய்பவர்கள்போல) ஸ்ரீகிருஷ்ணனை ஆலிங்கனம் செய்துகொண்டார்கள். (ரீதியாகப் பார்த்தார்களென்பது கருத்து.) அப்பொழுது தங்க

ளுடைய கண்களிலுண்டான ஆனந்தஜலத்தை வெட்கத்தால் அந்த ஸ்திரீகள் அடக்கிக்கொண்டிருந்தும் அது அடங்காமல் பெருகியது; ஸ்ரீகிருஷ்ணன் எப்பொழுதும் அவர்களுடைய பக்கத்திலேயே வசிக்கிறார். ஆனாலும் அவர்களுக்கு அவருடைய பாதங்கள் புதியவைகளாகவே தோன்றுகின்றன. சஞ்சல சுபாவமுள்ள ஸ்ரீதேவியும் அவரிடத்திலேயே ஸ்திரமாக வசிப்பதால் எவனுக்குத்தான் அவரிடம் பிரேமையிராது?

35—40. காற்றானது மூங்கில் காட்டில் அவைகளைக் கொண்டே அக்னியை யுண்டுபண்ணி, அதனால் அவைகளை எரிப்பதுபோல ஸ்ரீ கிருஷ்ணன், தாம் ஆயுதம் எடுக்காமலே பூமிக்குப் பாரமாயிருந்த அனேக அக்ஷௌஹிணி சைன்யங்களால் விருத்தியடைந்த தேஜஸுள்ள அரசர்களுக்குள் ஒருவருக்கொருவர் விரோதத்தை உண்டுபண்ணி, அதனால் அவர்களை நாசஞ்செய்து சாந்தியடைந்தார். இப்படி பகவான் பிராகிருத புருஷன்போல பூமியில் மாயாவதாரஞ் செய்து அநேக உத்தம ஸ்திரீகளின் நடுவிலிருந்து விளையாடினார். ஸ்திரீகள் கம்பீரமாகிய அபிப்பிராயத்தைக் காண்பிக்கும் கடாக்ஷமுள்ளவர்கள்; மனோகரமான மந்தகாசமுள்ளவர்கள்; வெட்கமுள்ளவர்கள்; அவர்களால் பரமசிவனும் மோகித்து வெட்கமடைந்து வில்லை எறிந்தார். ஸ்திரீகள் அப்பேர்ப்பட்ட சக்தியுள்ளவர்களானாலும் தங்களுடைய விலாசங்களால் கிருஷ்ணனை ஆசைப்படச் செய்யமுடியாதவர்களாக இருந்தார்கள். (சம்சாரத்தில் பற்றுதல் இல்லாதவரென்பது கருத்து.) இப்படி ஸ்ரீகிருஷ்ணன் வைராக்யமுள்ளவராக விருந்தும் ஜனங்கள் தங்களைப்போல அவரையும் சம்சாரியென்றே நினைக்கிறார்கள். அதனால்தான் அஞ்ஞர்களென்று சொல்லப்படுகிறார்கள். ஆத்மாவினிடமிருக்கும் ஆனந்தம் முதலிய குணங்களில்

ஆத்மாவை ஆசிரயித்திருக்கும் புத்தியானது சம்பந்திக்காமலிருப்பதுபோல, பகவான் பிரகிருதி காரியமாகிய சம்சாரத்திலிருந்தும் அதன் குணங்களாகிய சுகம், துக்கம் இவைகளுடன் சம்பந்தப்படாமலிருக்கிறார். அதுவே அவருடைய ஐசுவரியமென்று சொல்லப்படுகிறது. அகங்காரமானது ஆத்மாவைத் தனது வசப்பட்டவனாக நினைப்பதுபோல ஸ்ரீ கிருஷ்ணனுடைய உண்மையை அறியாதவர்களான அந்த ஸ்திரீகளெல்லோரும் "கிருஷ்ணன் தங்களிடத்தில் ஆசை கொண்டவர்; தங்களையே அனுஸரித்திருப்பவர்" என்று அஞ்ஞானத்தால் நினைத்திருந்தார்கள்.

## நோட்டு

ஸூர்ய:— ஜகத்தைத் தம்முடைய தேஜஸால் பிரகாசிக்கச் செய்பவரும், வேறு பிரகாசத்தை அபேட்சியாமல் விளங்குகிறவருமான சூரியனுக்குத் தீபத்தால் எப்படி பிரயோசனமில்லையோ அப்படி சகலவித காமங்களால் பூர்ணராகிய பகவானுக்கு ஜனங்களால் கொடுக்கப்படும் காணிக்கைகளால் ஒருவித பயனுமில்லை என்று காட்டப்பட்டது, கத்கத ஸ்வர:— ஆனந்தம், துக்கம் இவைகள் நேரும்போது கண்ணீர் பெருகி அதனால் கண்டம் அடைத்துப்போகும். அப்பொழுது தாராளமாகப் பேசமுடியாமல் சிரமப்பட்டுப் பேசும் ஸ்வரமேயாம். ஸனகர்.— மூலத்தில் வைரிஞ்ச என்றிருப்பதால் அதற்குச் சங்கரனென்று அர்த்தம்— விஜ. பசுவின் கன்றுகளைப் பிரம்மதேவர் அபகரித்த பிறகு அவரால் நமஸ்கரிக்கப்பட்டது. பகவான் பாணாசுரனிடத்தில் யுத்தஞ்செய்யும்போது சங்கரனால் ஸ்தோத்திரஞ்செய்யப்பட்டது. சந்த். க்ஷேமம்—மோக்ஷம்—விஜ. மாதா—பிறந்ததுமுதல் போஷிப்பதால். மித்ரர்—எல்லாவற்றிற்கும் அந்தராத்மாவாகவிருப்பதுடன் ஸத்காரியத்தைச் செய்யும்படி தூண்டுவதால். பிதா—இது ஹிதமென்றும், இது அஹிதமென்றும் உபதேசித்து, சாஸ்திரத்தைக் கொண்டு சிட்சிப்பதால். பதி—பர்த்தா; ஜீவனம் முதலியவைகளைக் கொடுத்துக் காப்பாற்றுவதால். ஆசாரியர்—அர்ச்சுனனை

நிமித்தமாய் வைத்துக்கொண்டு உலகத்தில் இதா சாஸ்திரத்தைப் பரவச்செய்ததால். **தெய்வம்**—மோட்சத்தைக் கொடுப்பதால்—சந்த். **ஸூதர்கள்**—புராணத்தை யறிந்தவர்கள் ஸூதர்களென்று சொல்லப்படுகிறுர்கள், வம்சாவளியைச் சொல்பவர்கள் மாகதர்களெனப்படுவார்கள். சமயத்திற்குத் தக்கபடி பேசக்கூடிய புத்திசாலிகள் வந்திகளெனப்படுவார்கள். **மேகம்**—இது அபூதோபமையென்று சொல்லப்படுகிறது. மேகம்போன்றவர் பகவான். சூரியன்போன்றது வெண்குடை, புஷ்பவர்ஷம்போன்றது நட்சத்திரங்கள் என்று சிலர். சூரியன்போன்றது கிரீடம், சந்திரன் போன்றது வெண்குடை. இந்திரனுடைய வில்போன்றது வனமாலை. மின்னல்போன்றது பீதாம்பரம். **ஏழு தாயார்**—வசுதேவருக்குப் பதினெட்டு ஸ்திரீகள். அவர்களெல்லாரையும் நமஸ்கரித்தார்; அவர்களுக்குள் முக்கியமானவர்கள் ஏழு ஸ்திரீகள், 1. தேவகி, 2. சுருததேவா, 3, சாந்திதேவா, 4. உபதேவா, 5. ஸ்ரீதேவா, 6. தேவரட்சிதா, 7. சஹதேவா. **தழுவ**—தேசாந்தரத்திலிருந்து வந்த பகவானைப் பிரத்யும்னன் முதலியவர்களைக் கொண்டு கட்டிக்கொள்ளச்செய்வதுபோல மனத்தால் தியானம் செய்தார்கள்; பின்னும் மிகுந்த ஆசையுடன் பார்த்தார்கள். **பரமசிவனும்**—மூலத்தில் அமதன: என்று பதம் பிரித்து, இப்படி ஸ்ரீதரஸ்வாமி அர்த்தஞ்செய்தார். மதன: என்று பதம் பிரிப்பதால் மன்மதன் என்று அர்த்தம்—வீர. விஜ.

---

## அத்தியாயம் 12

### பரீக்ஷித்தின் உற்பத்தி

சௌனக மகரிஷியானவர் ஸூதரைப் பார்த்து, "ஓ ஸூதரே! அசுவத்தாமாவினுல் பிரயோகிக்கப்பட்ட பிரம்மாஸ்திரத்தின் தேஜஸால் எரிக்கப்படும் உத்தரையின் கர்ப்பத்தை ஸ்ரீகிருஷ்ணபகவான் மறுபடி பிழைக்கச் செய்தாரென்று சொன்னீர்களே. மிக்க புத்திசாலியும், மகாத்மாவுமான அக்குழந்தையின் பிறப்பையும், அதன்

சரித்திரத்தையும், அவருக்குச் சுகர் ஞானோபதேசம் செய்ததையும், அவருடைய முடிவையும், மரணமடைந்த பிறகு அவருக்கு நேர்ந்த கதியையும் சிரத்தையுடன் கேட்க விரும்புகிறேன். சொல்லக்கூடியதானால் சொல்ல வேண்டும்'' என்று கேட்டார்.

4—6. இதனைக் கேட்டு ஸூதர் சொல்லுவதாவது: தர்மபுத்திரர் கிருஷ்ணனுடைய பாதங்களைச் சேவித்து சகல ஆசைகளையும் ஒழித்துத் தகப்பன் குழந்தைகளைக் காப்பாற்றுவதுபோல, பிரஜைகளைச் சந்தோஷப்படுத்திக் காப்பாற்றிவந்தார். அவருக்குப் பகவானுடைய அனுக்கிரகத்தால் சகல சம்பத்துகளும், ராஜசூயம் முதலிய யாகங்களின் பலனாகிய உத்தம லோகங்களும், திரௌபதி முதலிய ஸ்திரீகளும், பீமசேனன் முதலிய தம்பிகளும், சகல பூமியும், ஜம்பூத்வீபத்திற்கு ஆதிபத்யமும், சுவர்க்கம் வரையில் பரவிய கீர்த்தியும் கிடைத்தன. பசியுள்ளவனுக்கு அன்னத்தின்மீதே விருப்பமிருக்குமே யொழிய வேறு விஷயத்தில் ஆசையுண்டாகிறதில்லை. அதுபோல் ஸ்ரீ பகவானிடத்திலேயே சித்தத்தைச் செலுத்தி, அதனால் ரமித்துக்கொண்டிருக்கும் தர்மபுத்ரருக்கு தேவர்களாலும் விரும்பத்தக்க சுகங்கள் கிடைத்திருந்தும் அவைகளால் அவர் சந்தோஷமடையவில்லை.

7—14½. ஓ சௌனகரே! உத்தராதேவியின் கர்ப்பத்திலிருந்த சிசுவானது அசுவத்தாமாவினுடைய பிரம்மாஸ்திரத்தின் தேஜஸ்ஸால் எரிக்கப்படும்பொழுது ஒரு புருஷன் அந்தச் சிசுவிற்கு நேரில் தோன்றினர். அவர் கட்டைவிரல் அளவுள்ளவர்; சுத்தர்; சுவர்ண கிரீடமுள்ளவர்; மிக்க அழகான பார்வையுள்ளவர்; பீதாம்பரம் தரித்தவர்; ஜன்மம் முதலிய விகாரங்களற்றவர்; அழகு பொருந்தியவைகளும், நீண்டவைகளுமான கைகளுள்ளவர்; சுத்த சுவர்ண குண்டலங்களுள்ளவர்;

'என் பக்தனுக்கும் உபத்திரவம் நேரிடுகிறதா?' என்ற கோபத்தால் சிவந்த கண்களுள்ளவர்; கதாயுதத்தைத் தரித்தவர்; மேலும் அவர் குறைக் கொள்ளி போன்ற தம் கதையைச் சுழற்றிக்கொண்டு, அக் குழந்தைக்கு நான்கு புறத்திலும் சஞ்சரித்து, சூரியன் பனியைப் போக்குவதுபோல, அஸ்திர தேஜஸ்ஸை அக் குழந்தையின் சமீபம் வர வொட்டாமல் தடுத்துக் கொண்டுமிருந்தார். அவரைப் பார்த்து அந்தக் குழந்தையானது இவர் யாரென்று ஆச்சரியத்துடன் ஆலோசித்துக்கொண்டிருந்தது. இப்படி ஒன்பது மாத காலஞ் சென்றது. பத்தாவது மாதத்தில் அவ்விடக்கூடாத ரூபமுள்ளவரும், தர்மத்தைப் பரிபாலிப்பவரும், எங்கும் நிறைந்தவருமான அந்தப் பிரபுவானவர் அக்குழந்தை பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே அவ்விடத்தில் மறைந்தார். அதன்பிறகு வரும் மேலான சிரேயஸைக் காண்பிக்கத்தக்க சுப லக்னம் நேர்ந்தது; அதிலிருந்த சுபகிரகங்கள் ஒருவருக்கொருவர் மித்ரர்களாக இருந்தார்கள். அப்பேர்ப்பட்ட சமயத்தில் பாண்டுவின் வம்சத்தை விருத்திசெய்யும் புத்திரனானவன் பாண்டுவே மறுபடியும் பிறந்ததுபோல அவதரித்தான். அப்பொழுது தர்மபுத்ரர் மிகுந்த சந்தோஷத்துடன் தௌம்யர், கிருபர் முதலிய பிராமணர்களைக்கொண்டு ஜாதகர்மம், ஸ்வஸ்திவாசனம் ஆகிய இவைகளைச் செய்வித்தார். மேலும், அவர் தானத்திற்குரிய பாத்திரம், தேசம், காலம் என்னும் இவைகளை அறிந்தவராகையால் உத்தமமாகிய அந்தப் புண்ணிய காலத்தில் ஸுவர்ணம், பசு, பூமி, கிராமங்கள், சிறந்த குதிரைகள் ஆகிய இவைகளைப் பிராம்மணர்களுக்குக் கொடுத்தது மல்லாமல் போஜனமும் செய்வித்தார்.

15—17½. அப்பொழுது ஜ்யோதிச்சாஸ்திரத்தை நன்ருய்க் கற்றுணர்ந்த எல்லாப் பிராம்மணர்களும் மிகுந்த சந்தோஷமுள்ளவர்களாய், வணக்கமுள்ள அவ்வரசனை நோக்கி, "ஓ புரு வம்சத்திய அரசர்களில் சிறந்தவரே! தடுக்கமுடியாத தெய்வ வசத்தால் புரு வம்சத்தின் தொடர்ச்சி யற்றுப்போகும் சமயத்தில் அந்த வம்சத்தில் பிறந்தவர்களான உங்களுடைய க்ஷேமத்திற்காக ஸ்ரீ மகா விஷ்ணுவே இப்புத்ர ரத்னத்தை அனுகிரகித்திருக்கிருர். விஷ்ணுவினல் கொடுக்கப்பட்டவனகையால் இவன் விஷ்ணுராதனென்று பிரசித்தியடைவான். இவன் மிகுந்த கீர்த்தியுள்ளவனும், பாகவதர்களுள் சிறந்தவனுமாவான். இவ்விஷயத்தில் சம்சயப்படவேண்டாம்" என்ருர்கள்.

18—29½. இதனைக் கேட்ட தர்மராஜன் பிராம்மணர்களை நோக்கி, "புண்ய சுலோகர்களும், ராஜரிஷிகளுமான நம்முடைய முன்னேர்கள்போல இக்குழந்தையும் நல்ல கீர்த்தியுள்ளவனய் இருப்பான?" என்று மிக்க ஆதரவுடன் கேட்டார். அப்பொழுது பிராம்மணர்கள் தர்மபுத்ரரை நோக்கி, "ஓ குந்தியின் புத்ரரே! இவன் மனுவின் புத்ரராகிய இக்ஷ்வாகுபோல, பிரஜைகளைக் காப்பாற்றுவான்; தசரத புத்ரராகிய ஸ்ரீ ராமன்போல பிராமணர்களிடம் பிரியமுள்ளவனவான். வீணுகாத பிரதிக்ஞையுள்ளவனயிருப்பான். ஔசீனர தேசத்திற்கதிபதியான சிபிச் சக்ரவர்த்திபோலச் சரணமென்று வந்தவர்களைக் காப்பாற்றுவான்; மிகுந்த தாதா; துஷ்யந்தருடைய புத்ரனன பரதன்போலத் தன் பந்துக்களுக்கும், யாகம் செய்பவர்களுக்கும் விசேஷ கீர்த்தியை உண்டுபண்ணுவான். மேலும் இவன் உம்முடைய தம்பியாகிய அர்ஜுனன், கார்த்தவீர்யன் ஆகிய இவர்கள் போல வில்லைப் பிடித்தவர்களுக்குள் சிறந்தவனவான்; அக்னிபோல ஸமீபத்தில் நெருங்க முடியாதவனவான்; சிங்கம்போலப் பராக்கிரம

முள்ளவனுவான்; ஹிமவத் பர்வதம்போல ஸாதுக்களால் ஸேவிக்கத்தக்கவனுவான் ; பூமிபோலப் பொறுமையுள்ள வனுவான்; மாதா பிதிருக்கள், புத்ரர்களின் விஷயமாய் நேரும் சிரமங்களைச் சகிப்பதுபோலப் பிரஜைகள் விஷய மாக உண்டாகும் சிரமத்தைப் பொறுத்துக்கொள்ளும் சுபாவமுள்ளவனுவான் ; எல்லாரையும் சமமாய்ப் பார்ப் பதில் பிரம்மதேவரை யொத்தவனுவான் ; அண்டினவர் களிடத்தில் தயவுசெய்யும் விஷயத்தில் பரமசிவன் போன்றவனுவான்; லக்ஷ்மீபதியாகிய மஹாவிஷ்ணுபோல ஸகல பிராணிகளுக்கும் இருப்பிடமாவான். ஸ்ரீ கிருஷ் ணன்போல ஸகல நற்குணங்களால் ஏற்படும் மஹிமை யுள்ளவனுவான்; கொடுப்பதில் ரந்திதேவன் போன்றவ னுவான்; யயாதிபோலத் தர்மசிந்தை யுள்ளவனுயிருப் பான்; பலி சக்ரவர்த்திபோலத் தைரியமுள்ளவனுவான்; பிரஹலாதர்போல ஸ்ரீ கிருஷ்ணனிடம் பக்தியுள்ளவனு வான். மேலும் இவன் அநேக அசுவமேத யாகங்களைச் செய்வான்; பெரியோர்களை ஸேவிப்பான்; இவனுடைய புத்ரர்கள் ராஜரிஷிகளாக விருப்பார்கள்; கெட்ட மார்க் கத்தை அனுஷ்டிப்பவர்களைச் சிக்ஷிப்பான்; தர்மத்தை ஸம்ரக்ஷிப்பதற்காகக் கலியை நிக்ரஹிப்பான்; பின்னு மிவன் (சிருங்கி என்ற) பிராம்மண புத்திரனுல் தூண்டப் பட்ட தக்ஷகனுல் தனக்கு மரணம் நேரிடப்போவதாய்க் கேள்விப்பட்டு, ஸகல ஆசைகளையும் ஒழித்து வைராக் யத்தை யடைவான் ; பிறகு வியாஸ புத்ரராகிய சுகரிடம் ஆத்ம தத்வத்தை உபதேசம்பெற்று, கங்கைக்கரையில் இந்தச் சரீரத்தைவிட்டு நிர்ப்பயமான விஷ்ணுபதத்தை யடைவான் ” என்று வருங் காரியத்தைச் சொல்லி, தர்ம புத்திரரால் ஸம்மானிக்கப்பட்டுத் தங்களிருப்பிடம் சென் ருர்கள்.

30—32½. பிறகு அந்தக் குழந்தை மாதாவின் கர்ப்பத்தில் தன்னால் பார்க்கப்பட்டவரை மனத்தில் தியானஞ் செய்துகொண்டே 'அந்தப் புருஷன் இவர்தானோ, இவர் தானோ,' என்று ஒவ்வொருவரிடமும் பரீக்ஷித்தான்; ஆனதுபற்றி அவனுக்கு, 'பரீக்ஷித்' என்று பெயருண்டாயிற்று. அந்த ராஜகுமாரன் சுக்லபக்ஷத்தில் பதினைந்து கலைகளால் சந்திரன் நாளுக்கு நாள் விருத்தியடைவது போல, தர்மபுத்ரர் முதலியவர்களால் போஷிக்கப்பட்டு வளர்ந்தான்; ஸகல வித்தைகளும் அவனை யடைந்தன. அப்பொழுது தர்மராஜன் பந்துக்களின் வதத்தால் நேர்ந்த பாபங்களை நிவர்த்தித்துக்கொள்வதற்காக அசுவமேதஞ் செய்யவேண்டுமென்று விரும்பினார்; ஆனாலும் 'நியாயமான வரி வாங்குவதாலும், குற்றவாளிகளுக்கு அவர்களுடைய குற்றத்திற்குத் தக்கபடி அபராதம் விதிப்பதாலும் ஸம்பாதித்த பொருள் பிரஜைகளை ரக்ஷிப்பதற்கே போதுமானதா யிருந்ததாகையால் அந்தப் பொருளைக்கொண்டு யாகத்தை முடிக்கமுடியாதே; என்ன செய்கிறது' என்று கவலைப்பட்டிருந்தார்.

33—36½. அப்பொழுது அவருடைய அபிப்பிராயத்தை யறிந்து ஸ்ரீ கிருஷ்ணனால் தூண்டப்பட்ட பீமசேனன் முதலியவர்கள் வடக்குத் திக்கில் சென்று மருத்தருடைய யாகத்திற்கு உபயோகப்பட்டு மிகுந்து கிடக்கும் தனத்தைக் கொண்டுவந்தார்கள். அவைகளைக்கொண்டு யாக சாமக்ரிகளைச் சம்பாதித்துத் தர்மபுத்திரர் ஸ்ரீ கிருஷ்ணனை வைத்துக்கொண்டு குறைவில்லாமல் நிறைவேற்றவேண்டும் என்ற பயமுள்ளவராய், பாப நிவர்த்திக்காக மூன்று தரம் அசுவமேதத்தை யனுஷ்டித்து, யக்ஞ புருஷராகிய பகவானை ஆராதித்தார். ஸ்ரீ கிருஷ்ணனும் பிராம்மணர்களைக்கொண்டு தர்மராஜனுக்கு யாகஞ் செய்வித்து மித்ரர்களான

பாண்டவர்களுடைய இஷ்டப்படி சிலகாலம் அவ்விடத்தில் வசித்தார். பின்பு ஸ்ரீ கிருஷ்ணன் அரசனிடத்திலும் திரௌபதியினிடத்திலும் விடைபெற்றுத் தம்முடைய பந்துக்களுடனும், அர்ஜுனனுடனும் துவாரகா நகரஞ் சென்றார்.

## நோட்டு

இந்த அத்தியாயத்தில் வைராக்கியத்தின் பிரகாரமும், பகவான் பக்தர்களிடத்தில் தயையுள்ளவரென்பதும் காட்டப்பட்டிருக்கிறது— விஜ. சகல சம்பத்துக்களும் — காமாதுரனுக்கு ஐசுவரியத்தில் பிரியமிருக்குமேயல்லாமல் வைராக்கியமுள்ளவனுக்கு அவைகளில் பிரீதி உண்டாகிறதில்லை என்று காட்டப்பட்டது—விஜ. புண்ணிய காலத்தில்— "கொப்பூழ்க் கொடி அறுப்பதற்குமுன் சூதகமில்லை." "புத்திரன் பிறந்த காலத்திலும் வியதிபாத புண்ணியகாலத்திலும் செய்யப்பட்ட தானங்கள் குறையாத பலனைக் கொடுக்கின்றன."—ஸ்மிருதி. பிராம்மணர்களுடைய வீட்டில் புத்திரன் பிறந்த காலத்தில் சகல தேவர்களும் பிதிரு தேவர்களும் அந்த வீட்டிற்கு வருகிறார்கள்; ஆனதால் அந்தக் காலம் நூறு சூர்யகிரகணங்களைக் காட்டிலும் மேலான புண்ணியகாலம்."— ஸ்மிருதி. சிபி—இவர் தம்மைச் சரணமடைந்த புறாவைக் காப்பாற்றவேண்டிப் பருந்துக்குத் தம்முடைய மாமிசத்தைக் கொடுத்தார்—ஸ்ரீத. இவர் உசிநரருடைய புத்திரர்.—வீர. விஜ.

---

# அத்தியாயம் 13

## திருதராஷ்டிரர் வெளியில் சென்றது

விதுரர் தீர்த்தயாத்திரை செய்வதற்காக அஸ்தினபுரத்திலிருந்து புறப்பட்டுச் சகல தீர்த்தங்களுக்குஞ் சென்று, அவைகளில் ஸ்நானம் முதலியவைகளைச் செய்து, வழியில் மைத்ரேயரைக் கண்டு, அவரிடமாக ஸ்ரீமந் நாராயணனே தமக்குக் கதியென்று தெரிந்து

கொண்டு, அதனால் அறிய விரும்பியதை அறிந்தும் அஸ்தினாபுரஞ் சென்றார். மேலும், கர்மயோகம், ஞான யோகம் ஆகிய இவைகளைப்பற்றி விதுரர் கேட்ட கேள்விகளுக்கு மைத்திரேயர் சிலவற்றிற்குப் பதில் சொல்லி வரும்பொழுதே விதுரருக்கு சம்சயங்கள் யாவும் நீங்கின. ஸ்ரீ கோவிந்தரிடத்தில் ஸ்திரமான பக்தி உண்டாயிற்று. அதனால் அதற்குமேல் அவர் கேட்கவில்லை.

3—6. தர்மபுத்திரர், அவருடைய தம்பிகள், திருதராஷ்டிரர், யுயுத்ஸு, சஞ்சயர், கிருபர், குந்திதேவி, காந்தாரி, திரௌபதி, சுபத்திரை, உத்தரை, துரோணருடைய பத்தினியாகிய கிருபி, இன்னும் மற்ற பந்துக்களின் ஸ்திரீகள், பாண்டுவின் பந்துக்கள் ஆகிய எல்லாரும் தங்களுடைய பிள்ளைகளுடனும், ஸ்திரீகளுடனும் எதிர்சென்று வெகுநாள் தீர்த்தயாத்திரை செய்து திரும்பிவந்த பந்துவாகிய விதுரரைக் கண்டு மிகுந்த சந்தோஷத்துடன் அழைத்தார்கள். அப்படி அழைத்ததானது கை, கால் முதலிய அவயவங்கள் பிராணனைக் கண்டு சந்தோஷமடைந்ததுபோலிருந்தது. மேலும் அவர்கள் விதுரரிடம் வந்து முறைப்படி ஆலிங்கனம், நமஸ்காரம் முதலியவைகளைச் செய்து வெகுநாள் பிரிந்திருந்ததனால் மிகுந்த ஆசையுள்ளவர்களாய் ஆனந்தக்கண்ணீரைப் பெருக்கினார்கள். அரசனாகிய தர்மராஜனும் ஆசனத்தில் உட்கார்ந்திருக்கும் அந்த விதுரரைப் பூஜித்தார்.

7—11. பிறகு ஆகாரத்தை யுண்டு களைதீர்ந்து சுகமாய் உட்கார்ந்திருக்கும் அவரைநோக்கி, தர்மபுத்திரர் பின்வருமாறு கேட்கலானார். பறவைகளால் தங்கள் தங்கள் குஞ்சுகள் சிறகுகளால் மறைத்துக் காப்பாற்றப் படுவதுபோல நாங்களனைவரும், எங்களுடைய மாதாவுடன் விஷம், அக்னி முதலிய ஆபத்துக்களிலிருந்து

உம்மால் காப்பாற்றப்பட்டோம். ஆதலால் எங்களுடைய ஞாபகம் உமக்கிருக்கிறதா? பூமி முழுவதும் சுற்றிய தங்களுக்குத் தேக யாத்ரை எப்படி நடந்தது? எந்தெந்தத் தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தீர்கள்? எந்தெந்த க்ஷேத்திரம் சென்றீர்கள்? உங்களைப் போன்ற பகவத் பக்தர்களே மிக்க பரிசுத்தமானவர்கள்; ஆதலால் அவர்கள் தங்களுடைய மனதில் எப்பொழுதும் பகவான் வஸிப்பதால் தீர்த்தங்களைப் பரிசுத்தப்படுத்துகிருர்கள். மேலும் ஸ்ரீ பகவானையே தெய்வமாகக்கொண்ட நமது சிநேகிதர்களும் பந்துக்களும் யாதவர்களும் உம்மால் பார்க்கப்பட்டார்களா? அவர்களைப்பற்றிக் கேள்விப் பட்டதுண்டா? அவரவர்களுடைய பட்டணங்களில் சுகமாக இருக்கிருர்களா?'' என்ருர்.

*12—15.* அதனைக் கேட்டு விதுரர் தீர்த்தயாத்திரையின் நிமித்தமாகச் சென்றவிடங்களில் நடந்த சமாசாரங்களைப் பூர்ணமாகத் தர்மராஜனுக்குச் சொன்ஞர். ஆனல் யது குலத்திற்கு நேர்ந்த கெடுதியை மாத்திரம் சொல்லவில்லை. மனிதர்களால் துக்கம் சகிக்கமுடியாதது; ஆகையால் அதை அவர்கள் விரும்புகிறதில்லை யல்லவா? தவிரவும் விதுரர் மிகுந்த கருணையுள்ளவர்; துக்கமுள்ளவர்களைப் பார்த்துச் சகிக்கமாட்டார். 'ஆனதால் யதுக்களுக்குக் கெடுதியுண்டாயிற்று என்று சொன்னவுடன் பாண்டவர்கள் வருத்தப்படுவார்கள். அவர்களைப் பார்ப்பது மிகவும் கஷ்டமான கார்யம்' என்று நினைத்தே அதைச் சொல்லவில்லை. பின்பு அந்த விதுரர் பெரிய தமையனுராகிய திருதராஷ்டிரருக்கு ஆத்ம தத்வத்தை உபதேசித்தும், மற்றுமுள்ளவர்களுக்குப் பிரியத்தை விருத்திசெய்து கொண்டும் சில காலம் அவ்விடத்தில் வசித்தார். அவர்கள் விதுரரைத் தெய்வமாக நினைத்துப் பூஜித்தார்கள். மாண்டவ்ய மஹரிஷியின் சாபத்தால் யமனே சூத்ர

ஜன்மத்தை அடைந்து விதுரராகப் பிறந்தவர். யமன் இப்படி அநேக வர்ஷங்கள் பூலோகத்திலிருக்கும் காலத்தில் அவருடைய உலகத்தில் அர்யமா வென்பவர் பாபிகளுக்குத்தக்க சிக்ஷை விதித்துக்கொண்டு அந்த வேலையை நடத்திவந்தார்.

16. பகவானுடைய சகாயத்தால் தர்மபுத்திரர் ராஜ்யத்தை அடைந்து, தம்முடைய குலவிருத்திக்குக் காரணரும், பௌத்ரருமாகிய பரிக்ஷித், உலகபாலர்கள் போன்ற தம்பிகள் ஆகிய இவர்களுடன் விசேஷ ஐசுவர்யங்களைப் பெற்று ஆனந்தமடைந்தார்.

17—18. பிறகு கிருஷ்ண பகவான் தர்மபுத்திரர் முதலியவர்களிடம் விடைபெற்று, பின் தொடர்ந்துவரும் பந்துக்களைத் தடுத்துத் திருப்பிவிட்டு அர்ஜுனன், உத்தவர், ஸாத்யகி என்பவர்களுடன் துவாரகா நகரஞ் சென்றார். இப்படி கிருஹ கிருத்யங்களிலேயே ஆசையுள்ளவர்களாகவும், அவற்றால் மதித்தவர்களாகவும் அவர்கள் வெகுகாலம் கழித்தார்கள். காலத்தை மீறுவதற்குப் பிரம்மதேவராலும் முடியாதன்றோ?

19—29. அப்பொழுது விதுரர் அஞ்ஞர்களாகவே இவர்கள் வெகுகாலத்தைப் போக்கிவிட்டார்கள் என்பதைத் தெரிந்துகொண்டு திருதராஷ்டிரரை நோக்கி, "ஓ அரசனே! சமீபத்தில் பயம் நேரிடுகிறதைப் பாரும்; சீக்கிரம் பட்டணத்தைவிட்டு வெளியில் போகவேண்டும்; கால மகிமையால் நேரும் பயம் ஓரிடத்திலும் ஒருவகையாலும் தடுக்கமுடியாததாகையால் அது நம்மெல்லோருக்கும் சமீபித்துவிட்டது; அந்தக் காலம் நேரிடுமானால் பிராணனுக்கே அபாயம் உண்டாகிறது; அப்படியிருக்கையில் பணம் முதலியவைகள் போய்விடுகிறதே என்பதில் என்ன ஆச்சரியம்? பிதா, சகோதரர்கள், சிநேகிதர்

கள், புத்திரர்கள் ஆகிய இவர்கள் எல்லோரும் சண்டையில் கொல்லப்பட்டார்கள்; வயது சென்றுவிட்டது; சரீரத்தில் ஜரை வந்துவிட்டது; இயற்கையிலேயே நீர் கண்ணில்லாதவர்; இப்போது கிழத்தனத்தால் உமக்குக் காதுகளும் கேட்கும் சக்தியுள்ளவைகளாயிருக்கவில்லை; புத்தியும் குறைந்திருக்கிறது; பற்கள் உதிர்ந்துபோயின; வயிற்றில் அக்கினி குறைந்துபோயிற்று; வியாதி அதிகரித்திருக்கிறது; கபத்தின் வேகம் அதிகமாயிருக்கிறது; இவ்வளவு கஷ்டமான நிலைமையிலும் இன்னும் பிழைத்திருக்கவேண்டும் என்ற எண்ணம் உமக்கிருப்பது ஆச்சரியப்படத்தக்கதே; மேலும் நீர் வீட்டில் நெருப்பு வைத்தும், விஷங் கலந்த அன்னத்தைக் கொடுத்தும், இராஜ்யம் முதலிய ஐசுவர்யங்களை அபகரித்தும், இன்னும் பலவகையான கெடுதிகளைப் பாண்டவர்களுக்குச் செய்ததுமல்லாமல் அவர்களுடைய பத்னியை ஸபையில் அவமானப்படுத்தியு மிருக்கிறீர்; அவைகளை நினைத்து நினைத்து மிகுந்த கோபத்துடன் பீமஸேனன் வீட்டைக் காத்திருக்கும் நாய்க்குச் சோறு போடுவது போல உமக்கு அன்னம் போடுகிறான். அதனைப் புஜிக்கிறீர். இது மேலான ஜீவனமா? இவ்வளவு தைன்யமடைந்தும் இனியும் வெகுகாலம் ஜீவிக்கவேண்டுமென்று விரும்புகிறீர்; ஆனாலும் கால மகிமையால் வஸ்திரங்கள் கிழிந்துபோவதுபோல உம்முடைய சரீரம் கிழத்தனத்தால் குறைகிறது; கீர்த்தி முதலியவையிலும், பிரயோஜனமற்ற சரீரத்திலும் அபிமானம் முதலியவைகளை விட்டு எவன் சரீரத்தை விடுகிறானோ அவனே தீரனென்று சொல்லப்படுகிறான். அவன் இன்ன கதியை அடைந்தான் என்று பிறரால் அறியமுடியவில்லை. தவிரவும் குருவின் உபதேசத்தாலாவது, தானாகவாவது, ஸம்ஸாரத்தில் வைராக்யத்தை யடைந்து ஸ்திர சித்த

முள்ளவனுகி, ஸ்ரீ மஹாவிஷ்ணுவை மனதில் தியானஞ் செய்துகொண்டு வீட்டைவிட்டுப் போகிறவனே உத்தமன். இனி வருங்காலம் பெரும்பாலும் நற்குணங்களைக் குறைக்கக்கூடியதாகையால் நீர் பந்துக்களுக்குத் தெரியாமல் வடக்குத் திக்கை நோக்கிச் செல்லும்" என்ருர்.

30—31. அஜமீட வம்சத்தில் பிறந்த கண்களில்லாதவ (குருட) ரான திருதராஷ்டிரர் தம்பியான விதுரருடைய வார்த்தையைக் கேட்டு, பந்துக்களிடம் தமக்கிருக்கும் ஸ்திரமான அபிமானத்தைவிட்டு, தம்பியால் உபதேசிக்கப்பட்ட வழியே வடக்கு திக்கை நோக்கிப் புறப்பட்டார். அப்பொழுது அவருடைய பத்னியும், நல்ல நடத்தையுள்ளவளும், மிக்க பதிவிரதையுமான காந்தாரி என்பவள் தன் புருஷன்பின் சென்ருள். அவ்விருவர்களும் ஹிமயமலைக்குப் போனுர்கள். சூரர்களுக்குத் சண்டையில் ஸந்தோஷ முண்டாவதுபோல இராஜ்யத்திலிருந்து ஒழிவடைந்தவர்களுக்கு அந்தப் பர்வதமானது மிகுந்த ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடியது.

32—35. அன்றைய தினம் காலையில் தர்மபுத்ரர் ஸந்தியோபாஸ்தி செய்து, அக்னி கார்யத்தை முடித்து, எள், பசு, வஸ்திரம், ஸுவர்ணம் ஆகிய இவைகளைப் பிராமணர்களுக்குத் தானஞ்செய்து, குருக்களை நமஸ்கரிப்பதற்காக வழக்கப்படி அவர்களுடைய அரண்மனை சேர்ந்தார். அவ்விடத்தில் விதுரர், திருதராஷ்டிரர், காந்தாரி ஆகிய மூவர்களையுங் காணுமல் மிகவும் நடுக்கமுள்ளவராய், அங்கிருக்கும் ஸஞ்சயரை நோக்கி, "ஓ காவல்கணருடைய புத்ரரே! நம்முடைய பிதிருவ்யரைக் காணேமே, அவர் எங்கே போனுர்? வயது சென்றவரே; தவிரவும் கண்களில்லாதவரல்லவா? தாயாரான காந்தாரியும் எவ்விடம் சென்ருள்? அவள் புத்ர சோகமுள்ள

வளே; இவர்களுக்குச் சிநேகிதராகிய விதுரர் போன விடம் தெரியவில்லையே? நான் அறியாமையால் ஏதாவது குற்றஞ்செய்தேனே? அதனல் திருதராஷ்டிரர் என்னிடத்தில் கோபங்கொண்டு மற்ற பந்துக்கள் இறந்து போன துக்கத்தால் தமது பார்யையுடன் கங்கையின் ஜலத்தில் விழுந்து மரணமடைந்தாரோ? எங்களுடைய பிதாவாகிய பாண்டு மஹாராஜன் காலஞ்சென்றபோது சிசுக்களாகிய எங்களை விதுரரும் திருதராஷ்டிரருமே காப்பாற்றினர்கள். அப்படிப்பட்டவர்கள் எவ்விடஞ் சென்ருர்கள்? சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

36—38½. இதனைக் கேட்டு சஞ்சயர் தம் யஜமானனைக் காணமல் கவலையுள்ளவராக மிகுந்த தைன்யத்துடன் சிநேகத்தாலுண்டான அதைரியத்தால் வருத்தப்பட்டு உடனே மறுமொழி உரைக்கவில்லை. பின்பு அவர் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு தைரியத்துடன் திருதராஷ்டிரருடைய பாதங்களை நினைத்துக்கொண்டே தர்மபுத்திரரை நோக்கி, 'அவர்கள் போனவிடம் எனக்கும் தெரியாது; மஹாத்மாக்களான அவர்கள் என்னையும ஏமாற்றிவிட்டார்கள ; நானும் அவர்களைக் காணமல் கவலையுள்ளவன யிருக்கிறேன்' என்ருர்.

39—41½. இப்படி அவ்விருவர்களும் பேசிக்கொண்டிருக்கும்பொழுது நாரதர் தும்புருவுடன அவ்விடத்திற்கு வந்தார். அவரைக் கண்டு தர்மபுத்திரர் தம்பிகளுடன் எழுந்திருந்து நமஸ்காரஞ்செய்து விதிப்படி பூஜித்து, "ஓ நாரதரே! மிகுந்த மஹிமைபொருந்திய உம்முடைய தரிசனம் தெய்வச்செயலால் கிடைத்தது; எங்களுடைய பிதாவின் ஸ்கோதரர்களான விதுரரும், திருதராஷ்டிரரும், புத்ரசோகமடைந்த காந்தாரியும் இன்னவிடம் போனர்களென்று தெரியவில்லை. அவர்களைக்

காணமல் துக்கமாகிய சமுத்திரத்தில் மூழ்கியிருக்கிறோம்; அது கரையற்றது; இந்தச் சமயத்தில் கப்பல்காரர்போல நீங்கள் வந்திருக்கிறீர்கள். எங்களைக் காப்பாற்றவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்.

42—63. இதைக் கேட்டு நாரதர் தர்மபுத்திரரை நோக்கி, "ஓ தர்மபுத்திரரே! ஜகத் யாவும் ஈசுவரனுக்கு வசப்பட்டவை; (பிராணிகளைச்சேர்த்துவைப்பவர் அவரே; அவைகளைப் பிரிப்பவரும் அவரே.) ஆகையால் ஒருவரைப் பற்றியும் துக்கிக்காதீர். மூக்குக் கயிறுள்ள எருதுகள்போலும் தந்திரியில் (பிணையல்) சிறு கயிறுகளால் கட்டப்பட்ட பசுக்கள்போலவும்எல்லா உலகங்களும், உலகபாலர்களும் வேதங்களாகிய நீண்ட கயிற்றில் வர்ணாசிரமம் முதலிய சிறு கயிறுகளால் கட்டப்பட்டு, பரமேசுவரனுடைய கட்டளையை நிறைவேற்றுகிறார்கள். உலகத்தில் விளையாட்டுக் கருவிகளை விளையாடுகிறவன் தனதிஷ்டப்படி சிலவேளை சேர்த்தும் பிரித்தும் வைப்பதுபோல மனிதர்கள் சேர்ந்திருப்பதற்கும் பிரிந்துபோவதற்கும் பகவானுடைய விருப்பமே காரணம். இவ்வுலகத்தை ஜீவரூபமாக நித்யமென்று நினைத்தாலும், தேகரூபமாக அநித்யமென்று நினைத்தாலும், எவ்விதத்திலும் பந்துக்களைப்பற்றித் துக்கிக்க நியாயமில்லை. மோகத்தால் அபிமானம் வைத்ததாலேயே துக்கம் நேரிடுகிறது. மேலும் ஜகத்தை நித்தியாநித்தியமென்று சொல்வது பொருந்தாது. ஆகையால் அஞ்ஞானத்தால் ஏற்பட்ட அதைரியத்தை விட்டுவிடும். ஆனல் "என்னைவிட வேறு கதியில்லாத திருதராஷ்டிரர் முதலியவர்கள் நானில்லாமல் எப்படி ஜீவிப்பார்கள்" என்று கேட்கலாம். அப்படி நினைப்பது சரியன்று. பத்துப் பூதங்களாலுண்டான இந்தச் சரீரம் காலத்திற்கும், கர்மத்திற்கும் வசப்பட்டது. ஆகையால் நம்முடைய சரீரமே அழியும் சுபாவமுள்ளது. மலைப்பாம்பின் வாயில் அகப்பட்டவனல் எப்படி மற்றவனை இரட்சிக்கமுடியாதோ

அதுபோல் நாம் பிறரைக் காப்பாற்றுவது சாத்திய மன்று. கைகளுள்ள ஜந்துக்களான மனிதர்கள் முதலியவர்களுக்குக் கை களில்லாத பசு முதலியவைகளும், நாற்கால் பிராணிகளுக்குப் புல் முதலியவைகளும், புலி, முதலிய பெரிய ஜந்துக்களுக்கு அற்ப பலமுள்ளவைகளும் எப்படி ஆகாரமாகின்றனவோ அப்படி எல்லா ஜீவனும் ஜீவனுக்கு ஆகாரமாயிருக்கிறது. ஆதலால் எல்லாம் மரணபயமுள்ளதாகவே காணப்படுகின்றன. ஏ தர்ம புத்திரரே! இந்த ஜகத் யாவும் பகவானுடைய சுரூபமேயொழிய வேறில்லை. அவர் ஒருவரே; போக்தர் (அனுபவிப்பவர்;) வின் சுரூபமாயிருப்பவர் அவரே; போக்கிய ரூபியாயுமிருப்பவர் அவரே; பிராணிகளுக்கு உள்ளும் வெளியிலுமிருப்பவரும் அவரே. ஆனாலும் மாயையால் பலவகையாகத் தோற்றுகிறார். ஏ மகாராஜ! சகல பிராணிகளிடத்திலும் அந்தர்யாமியாக வசிக்கும் பகவான் தேவவிரோதிகளான அசுரர்களைக் (அசுரர்களுடைய அம்சமுள்ள இராஜாக்களைக்) கொல்வதற்காகக் காலரூபியாய்த் துவாரகையில் வசிக்கிறார். தேவகாரியம் அநேகமாக முடிந்துவிட்டது. மிச்சமான பாகத்தை முடிக்கக் காலத்தை எதிர்பார்த்திருக்கிறார். பகவான் இவ்வுலகத்திலிருக்கும்வரையில் நீங்களும் இவ்வுலகத்தில் வசிக்கலாம்; திருதராஷ்டிரர் தம்பியாகிய விதுரருடனும், காந்தாரியுடனும் இமயமலையின் தென்பாகத்தில் மகரிஷிகளுடைய ஆசிரமம் போயிருக்கிறார். அவ்விடத்தில் கங்கா நதியானது ஸப்தரிஷிகளுடைய பிரீதியின் நிமித்தம் ஏழுவகையாக ஓடிற்று. அதனால் ஸப்த ஸ்ரோதஸ் என்று பெயருண்டாயிற்று. அந்தத் தீர்த்தத்தில் ஒவ்வொரு காலத்திலும் திருதராஷ்டிரர் ஸ்நானஞ்செய்து, அக்னிகாரியஞ்செய்து ஜலத்தைப் புசித்து, சாந்த மனமுள்ளவராய், சகல ஆசைகளையும் ஒழித்து, சாஸ்திரத்

தில் சொல்லியபடியுள்ள ஆசனத்தை யடைந்து சுவாசத்தை யடக்கி, இந்திரியங்களை விஷயங்களில் செல்லவொட்டாமல் அடக்கிப் பகவானையே மனத்தில் தியானஞ் செய்து, அதனுல் ராஜஸ, தாமஸ தோஷங்களை நிவர்த்தித்துக்கொண்டு, மனத்தை ஸ்தூல தேகத்திலிருந்து புத்தியுடன் ஒன்ருகச் சேர்த்து, அந்தப் புத்தியைப் பார்க்கப்படும் விஷயங்களிலிருந்து க்ஷேத்ரக்ஞனுடன் சேர்த்து, அந்த க்ஷேத்ரக்ஞனைப் பார்க்கிறவரிடமிருந்து பிரித்து, கடாகாசத்தைக் கடத்திலிருந்து பிரித்து மகாகாசத்தில் சேர்ப்பதுபோல சகலத்திற்கும் ஆதாரமாகிய பிரம்மத்தினிடம் சேர்த்து, மாயையின் வர்சனையை யழித்து, இந்திரியங்களையும் மனதையும் அடக்கி, ஆகாரங்களை நிவர்த்தித்துக் கட்டைபோல அசையாமல் இருக்கிருர். சகல கர்மங்களையும் விட்டவரான அவருக்கு நீர் இடையூருகவேண்டாம்; மேலும், இன்றுமுதல் ஐந்தாவது நாளில் அவர் சரீரத்தை விடப்போகிருர். அந்தச் சரீரம் உடனே எரிந்துபோகும். இப்படி திருதராஷ்டிருடைய சரீரம் பர்ணசாலையுடன் கார்ஹபத்யம் முதலிய அக்னிகளால் எரிக்கப்படும்போது ஆசிரமத்திற்கு வெளியில் இருக்கும் அவருடைய பத்னியும் பதிவிரதையுமாகிய காந்தாரியானவள், உடன்கட்டையேறிச் சரீரத்தை விட்டுவிடுவாள். விதுரர் இந்த ஆச்சரியத்தைக் கண்டு திருதராஷ்டிருக்கு நல்ல கதி கிடைத்ததால் சந்தோஷித்தும், அவரைவிட்டுப் பிரிந்ததால் கொஞ்சம் துக்கத்தை அடைந்தும் தீர்த்த யாத்திரைக்குப்போவார்; ஆகையால் அவர்களை யழைத்துவருவதற்காகவாவது, அவருடைய சரீரத்தைத் தகிப்பதற்காகவாவது நீர் போகவேண்டியதில்லை'' என்று சொல்லி, நாரதர் தும்புருவுடன் சுவர்க்கம் சென்ருர். தர்மபுத்திரரும் நாரதருடைய வார்த்தையைக் கேட்டு, அதை மனத்தில் வைத்துச் சகல துக்கங்களையும் நிவர்த்தித்துக்கொண்டார்.

---

# அத்தியாயம் 14

## தர்மபுத்திரருக்கு நேர்ந்த அபசகுனங்கள்

பந்துக்களைப் பார்ப்பதற்கும், புண்ணியசுலோகராகிய கிருஷ்ணனுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளு வதற்கும் துவாரகா நகரஞ் சென்றிருந்த அர்ஜுனன், சென்று சில மாதங்களாகியும் திரும்பிவரவில்லை; அப்பொழுது அஸ்தினபுரத்தில் மிக்க கோரங்களான அபசகுனங்கள் நேர்ந்தன; வசந்தம் முதலிய ருதுக்களின் குணங்கள் மாறிவிட்டன; மனிதர்களுடைய மனதில் கோபம், ஆசை, பொய் ஆகிய இவைகளுண்டாயின. மனிதர்கள் பாபமான காரியத்தைச் செய்து ஜீவித்தார்கள்; பெரும்பாலும் ஜனங்கள் கபடமாகப் பேசினார்கள்; தோழர்களும் வஞ்சனையாகப் பேசிக்கொண்டார்கள்; பிதா, மாதா, மித்ரன், சகோதரர்கள், தம்பதிகள் ஆகிய இவர்கள் யாவரும் ஒருவருக்கொருவர் கலகம் செய்து கொண்டார்கள்; தகப்பன்மார்கள் பணம் வாங்கிக் கொண்டு பெண்களைக் கல்யாணஞ் செய்துகொடுத்தார்கள்; புத்திரர்கள் பிதாவைக் காப்பாற்றுகிறதில்லை; பிராம்மணர்கள் வேதத்தில் சிரத்தையில்லாதவர்கள் ஆனார்கள்; மேலும் சூத்திரர்கள் வேதத்தைப் படிக்க ஆரம்பித்தார்கள்; இப்படிக் காலகதி கோரமாயிருந்தது; இப்படி காலமானது மாறிப்போனதால், மனிதர்களுக்கு ஏற்பட்டிருக்கும் உலோபம் முதலிய மனத்தின் துர்க்குணங்களையும், அதர்மத்தை யனுஷ்டிப்பதாகிய சரீர துர்க்குணத்தையும், மிகுந்த அபசகுனங்கள் நேரிடுவதையும் கண்டு தர்மபுத்திரர் பீமசேனனை நோக்கி, "ஓ பீம! பந்துக்களைப் பார்ப்பதற்காகவும், புண்ணியசுலோகராகிய கிருஷ்ணனுடைய எண்ணத்தைத் தெரிந்துகொள்ளு வதற்காகவும் துவாரகா நகரஞ்சென்ற அர்ஜுனன்,

ஏழு மாதங்களாகியும் இன்னும் வரவில்லை; அதன் காரணமும் இன்னதென்று தெரியவில்லை ; எவருடைய அனுக்கிரகத்தால் இராஜ்யம், ஸ்திரி, பிராணன், குலவிருத்தி, சத்துருக்களை ஜயிப்பது, ஐசுவரியம், உத்தம உலகங்கள் ஆகிய இவைகள் நமக்குக் கிடைத்தனவோ, அந்தப் பகவானாகிய ஸ்ரீ கிருஷ்ணன் தம்முடைய சரீரத்தை விடப் போகிறாரென்று தேவரிஷியாகிய நாரதர் சொன்ன காலம் வந்துவிட்டதுபோலிருக்கிறது; அந்தப் பகவானை விட்டுப் பிரிவதைக்காட்டிலும், வேறு கெடுதி நமக்கு நேரிட நியாயமில்லை. ஓ புருஷ சிரேஷ்ட! ஆகாயத்தில் உண்டானவைகளும், பூமியிலுண்டாகின்றவைகளும், சரீரத்தில் காணப்படுகின்றவைகளுமான அபசகுனங்களைப் பார் ; புத்திக்கு மோககரமும் மிக்க கடுமையுமான பயம் வரப்போகிறதென்பதை இவைகள் காட்டுகின்றன ; இடக்கண்ணும், இடத்தொடையும், இடத்தோளும் அடிக்கடி துடிக்கின்றன; இருதயத்தில் நடுக்கமுண்டாகிறது; அந்த தைஹிகமான அபசகுனத்தால் வெகு சீக்கிரத்தில் கெடுதி நேரிடுமென்று காட்டப்படுகிறது.

13—23. இந்தப் பெட்டை நரியானது குறைக்கொள்ளியை வாயில் கௌவிக்கொண்டு உதயமாகும் சூரிய மண்டலத்தைப் பார்த்து ஊளையிடுகிறது ; நாயானது என்னைப் பார்த்துப் பயமில்லாமல் அழுகிறது. என்னைப் பசு முதலிய மேலானவைகள் இடமாகவும், கழுதை முதலியவைகள் வலமாகவும் சுற்றுகின்றன ; குதிரைகள் அழுகின்றன. வரும் மரணத்தைக் குறிக்கும் பாடப்புறுவும், கோட்டானும், அதற்கு விரோதியான காக்கையும் விகாரமாகக் கத்துகின்றன ; இவைகளைக் கேட்க மனம் நடுங்குகிறது ; ஜகத்தானது சூனியமாய்விடுமென்று நினைக்கிறேன்; திக்குகள் அழுக்கடைந்து நன்றாய் விளங்கவில்லை; பரிவேஷம் (சூரியன், சந்திரன் இவர்களைச் சுற்றிக்

கோட்டை கட்டுவது) உண்டாயிருக்கிறது; பூமியானது மலைகளுடன் அசைகிறது; மேகங்களின் மறைவில்லாமல் ஆகாயம் சுத்தமாயிருக்கும்போதும் இடியுண்டாகிறது; அகாலத்தில் மேக கர்ஜிதம் கேட்கிறது; மண்காற்று கடுமையாக வீசுகிறது; இருட்டுப் பரவுகிறது; மேகங்கள் வெறுக்கக்கூடியவையாக எல்லாவிடங்களிலும் இரத்த மழையைப் பொழிகின்றன; சூரியனுடைய தேஜஸ் மங்கி விட்டது; ஆகாயத்தில் கிரகங்கள் யுத்தஞ்செய்கின்றன; ருத்ரருடைய பரிவாரங்களாகிய பூதகணங்கள் மற்ற பிராணிகளுடன் சேர்ந்து எங்கும் பரவியிருப்பதால் ஆகாயம், பூமி இவைகள் தீப்பட்டவைபோலிருக்கின்றன; ஆறுகளும், நதங்களும்(மேற்குமுகமாய்ச் செல்லுகிறவை கள்), குளங்களும், ஏரிகளும், பிரஜைகளுடைய மனமும் கலங்கிவிட்டன; ஆஜ்யம் (நெய்) முதலியவைகளை ஹோமஞ்செய்வதால் அக்னி ஜ்வலிக்கிறதில்லை; இந்தக் காலம் எதனைச் செய்யப்போகிறதோ தெரியவில்லை; மேலும், குழந்தைகள் ஸ்தன்யபானஞ் செய்யவில்லை; தாயார்களுடைய ஸ்தனங்களில் பாலும் பெருகவில்லை; பசுக்கள் கண்ணீரைப் பெருக்கி அழுகின்றன; கொட்டிலி லிருக்கும் விருஷபங்கள் சந்தோஷமாக இருக்கவில்லை; தேவதாப் பிரதிமைகள் அழுகின்றவைபோலிருக்கின் றன; அவைகளில் வியர்வை உண்டாகிறது; மேலும் அவை அசைகின்றன; இந்தத் தேசமும், கிராமங்களும், பட்டணங்களும், உத்தியானங்களும், இரத்தினம் விளை யும் பூமிகளும், ஆசிரமங்களும் பிரகாசியாமலிருப்பதுடன் அவைகளில் வசிப்பவர்களும் சந்தோஷமற்றவர்களாய் இருக்கிறார்கள்; இவைகள் நமக்கு எவ்விதமான துக்கத் தைக் காண்பிக்கப்போகின்றனவோ; இப்படிப்பட்ட பெரிய உற்பாதங்களைப் பார்க்கும்போது மற்ற புருஷர் களுடைய பாதங்களில்லாத வஜ்ரரேகை முதலியவை

களால் அலங்கிருதமான ஸ்ரீ பகவானுடைய பாதங்களின் ஸ்பரிசம் பூமிக்கு இல்லாமல் பூமிதேவி பாக்கியக் குறைவுள்ளவளாய் ஆகிவிடுவாள்போலத் தோன்றுகிறது" என்றார்.

24—45. இப்படி தர்மராஜரும் பீமஸேனனும் பேசிக்கொண்டிருக்கும்போது அர்ஜுனன் துவாரகா நகரத்திலிருந்து திரும்பிவந்து தர்மபுத்திரரை நமஸ்கரித்தான். அப்பொழுது அர்ஜுனன் முன்போலிராமல் மிக்க மனவருத்தமுள்ளவனாகவும், தலையைக் குனிந்து இரு கண்களிலும் நீரைப் பெருக்கித் துக்கித்தவனாயுமிருந்தான். இப்படிச் சோபையில்லாமலிருக்கும் அர்ஜுனனைப் பார்த்து தர்மபுத்திரர் பயந்து, பந்துக்களின் நடுவில் தம்பியை நோக்கி, "ஓ அர்ஜுன! துவாரகா நகரத்தில் நம்முடைய பந்துக்களாகிய யாதவர்கள், போஜர்கள், தாசார்ஹர்கள், ஸாத்வதர்கள், விருஷ்ணிகள், சூரரும் பூஜ்யருமாகிய மாதாமகர், அம்மானாகிய வசுதேவர், அவருடைய தம்பிகள், உக்ரசேனருடைய சகோதரிகளும், வசுதேவருடைய பத்னிகளுமான தேவகி முதலிய ஏழு ஸ்திரீகள், அவர்களுடைய புத்திரர்கள், மருமகள் ஆகிய இவர்கள் க்ஷேமமாயிருக்கிறார்களா? கெட்ட பிள்ளையுள்ள அரசனாகிய உக்ரசேனர், அவருடைய தம்பியாகிய தேவகர் ஆகிய இவர்கள் பிழைத்திருக்கிறார்களா? மேலும் ஹிருதிக (ச்வபல்கர்) ருடைய பிள்ளையான அக்ரூரர், ஜயந்தன், கதன், சாரணன், சத்யஜித் அல்லது சத்ருஜித் முதலியவர்கள் க்ஷேமமாயிருக்கிறார்களா? மேலும் சாத்வதர்களுக்கு அதிபதியான பலராமன் சகல விருஷ்ணிகளுக்குள் மகாரதரும் யுத்தத்தில் கம்பீர வேகமுள்ளவருமான பிரத்யும்னர், ஸுஷேணர், சாருதேஷ்ணர், ஜாம்பவதியின் புத்திரராகிய சாம்பர், மற்ற ரிஷபன் முதலிய கிருஷ்ணனுடைய புத்திரர்கள், அவர்களுடைய

குமாரர்கள், பகவானுடன்சஞ்சரிக்கும் சுருததேவர், உத்தவர் முதலியவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனையும் பலராமனையும் ஆசிரயித்த யாதவ சிரேஷ்டர்களாகிய சுநந்தர், நந்தர் முதலியவர்கள் ஆகிய பந்துக்களெல்லாரும் க்ஷேமமாயிருக்கிறார்களா? மேலும் அவர்கள் நம்மிடத்தில் பிரியத்துடன் நம்மை நினைத்துக்கொண்டிருக்கிறார்களா? பிராம்மணர்களிடம் விசேஷ பக்தியுள்ளவரும், பக்தர்களிடத்தில் பிரீதியுள்ளவருமான ஸ்ரீ கிருஷ்ண பகவான், உலகங்களுடைய மங்களத்திற்காகவும் க்ஷேமத்திற்காகவும் (கிடைத்ததைக் காப்பாற்றுகிறதற்காகவும்) துவாரகா நகரத்தில் மித்திரர்களுடன் சுதர்மையில் சுகமாக வசிக்கிறாரா? எந்த ஸ்ரீ பகவானுடைய இருகைகளால் காப்பாற்றப்பட்ட துவாரகையில் பந்துக்கள் நன்றாகப் பூஜிக்கப்பட்டுமிருந்த ஆனந்தத்துடன் பார்ஷதகணங்கள்போல சஞ்சரிக்கிறார்களோ, அந்த ஸ்ரீ பகவான் பலராமனுடன் யதுகுலத்தில் பிரகாசிக்கிறாரா? ஸத்யபாமா முதலிய பதினாறாயிரம் ஸ்திரீகளும் ஸ்ரீகிருஷ்ண பகவானுடைய பாதஸேவையே தபஸ் முதலியவைகளைக் காட்டிலும் மேலானது என்று நினைத்து அவருக்குச் சிசுரூஷை செய்துவருகிறார்களா? அவர்களுக்குப் பகவான் தம்முடைய பலத்தால் தேவர்களை ஜயித்து, அவர்களால் அனுபவிக்கக்கூடியவைகளும், இந்திராணிக்குத் தகுதியானவைகளுமான பாரிஜாதம் முதலியவைகளைக் கொடுத்தாரல்லவா? எந்தப் பகவான் தேவர்களை ஜயித்து, தேவசிரேஷ்டர்கள் வசிக்கக்கூடிய சுதர்மா என்ற சபையை பலாத்காரமாகப் பூமியில் கொண்டுவந்து, அதில் தம்முடைய கைகளின் பலத்தை அவலம்பித்து, ஜீவிக்கும் யாதவர்கள் வசிக்கும்படியாகச் செய்தாரோ, அந்தப் பரமபுருஷன் சுகமாக வாசஞ்செய்கிறாரா? (அவர் பூமியில் வசித்தால்தான் நமக்கும் ஜனங்களுக்கும் க்ஷேம

முண்டாகுமென்பது கருத்து) மேலும் குழந்தாய் அர்ஜுன! உனக்குத் தேஜஸ் குறைந்திருப்பதாகத் தோற்றுகிறதே; சரீரத்தில் வியாதியில்லாமலிருக்கிறதா? வெகுநாளாகத் துவாரகா நகரத்தில் வசித்ததால் பந்துக்கள் உன்னைக் கௌரவப்படுத்தவில்லையா? அல்லது அவமதித்தார்களா? அல்லது பிரியமற்ற நிஷ்டுர வார்த்தைகளைச் சொன்னார்களா? அதனால் மனவருத்தமடைந்தாயா? அல்லது யாசகர்களுக்குச் சிலவற்றைக் கொடுப்பதாகப் பிரதிக்ஞை செய்து, பின்பு ஆசையால் அவற்றை அவர்களுக்குக் கொடுக்கத் தவறிப்போனாயா? எல்லாரையும் நீ காப்பாற்றும் சுபாவமுள்ளவனன்றோ? அப்படிப்பட்டவன், பிராம்மணன், குழந்தை, பசு, வயது சென்றவர், வியாதியுள்ளவர், ஸ்திரீ, மற்றைப் பிராணிகள் இவர்களில் சரணமடைந்தவரைக் காப்பாற்றாமல் விட்டுவிட்டாயோ? ஆசைப்படக்கூடாத ஸ்திரீயினிடம் ஆசைப்படாமலிருக்கிறாயா? விரும்பக்கூடிய ஸ்திரீ அழுக்கு வஸ்திரம் முதலியவைகளுள்ளவளானாலும் அவளிடம் அனுராகம் வைக்காமலிருக்கிறாயோ? அல்லது வழியில் மேலானவர்களாலாவது, ஸமமானவர்களாலாவது ஜயிக்கப்படாமலிருக்கிறாயோ? அல்லது குழந்தைகளுக்கு அன்னமிடாமல் புசித்தாயோ? (அதிதிகள், வேலைக்காரர்கள், கர்ப்பிணி, ரோகிகள், கன்னிகைகள் இவர்களுக்கு ஆகாரங்கொடாமல் புசித்தாயோ?) இன்னும் மற்ற கெட்ட காரியங்கள் எவையேனும் உன்னால் அனுஷ்டிக்கப்பட்டனவோ? மிகவும் பிரியரும், அந்தரங்க பந்துவுமான ஸ்ரீ கிருஷ்ணனை விட்டுப் பிரிந்தோமேயென்று வருத்தப்படுகிறாயோ? உனக்கு இதை விட வேறு வியாதி ஒன்றுமிருக்க நியாயமில்லை" என்று கேட்டார்.

---

# அத்தியாயம் 15

## தர்மபுத்திரர் பரலோகஞ் சென்றது

*1—17.* இம்மாதிரி தர்மபுத்திரர் பலவகையாகச் சந்தேகப்படும்படி அர்ஜுனனுடைய சரீரத்தில் காந்தியின் குறைவு முதலியவைகள் உண்டாயிருந்தன; அவர் ஸ்ரீ கிருஷ்ணனை விட்டுப் பிரிந்ததால் விசேஷ வருத்தமடைந்தார். அந்தத் துக்கத்தாலேயே தாமரை மலர் போன்ற அவருடைய முகமும் இருதயமும் வாடியிருந்தன; தேஜஸ் குறைந்திருந்தது; பிரபுவாகிய அந்த ஸ்ரீ கிருஷ்ணபகவானையே மனத்தில் தியானித்துக்கொண்டிருந்ததனால் சீக்கிரமாக விடை சொல்லமுடியாதவராயிருந்தார். பிறகு மிகச் சிரமப்பட்டுத் துக்கத்தை மனத்தில் அடக்கிக் கைகளால் கண்களைத் துடைத்து, பகவான் தம்மிடம் வைத்திருந்த சக்யம், மைத்ரி, ஸுஹ்ருத்வம் முதலியவைகளை நினைத்துக்கொண்டும் துக்கத்தினால் கண்டமடைத்து அரைகுறையான வார்த்தையுள்ளவராகத் தமையனை நோக்கி, "ஓ மகாராஜ! ஸ்ரீ கிருஷ்ணபகவான் பந்துவாகவிருந்து என்னை ஏமாற்றினார். தேவர்களாலும் ஆச்சரியப்படக்கூடிய என்னுடைய மிகுந்த தேஜஸ்ஸை அபகரித்தார். எந்தப் பகவான் பூமியைவிட்டுப் போனதால் இவ்வுலகம் முழுவதும் பிராணனில்லாத சரீரம்போலப் பார்க்க அழகாக இருக்கவில்லையோ, (தரித்திரன்போலவென்றும் சொல்வதுண்டு) தவிரவும், துருபத மகாராஜனுடைய சபையில் திரௌபதியின் சுயம்வரத்திற்காக வந்தவர்களும், மன்மதனால் மதித்தவர்களுமான அரசர்களுடைய தேஜஸை எவர் தமது பார்வையாலேயே அபகரித்தாரோ, எவருடைய அனுக்கிரகத்தால் நான் மத்ஸ்ய யந்திரத்தைப் பிளந்து திரௌபதியைக் கல்யாணஞ் செய்துகொண்

டேனே, எவருடைய சான்னித்தியத்தால் காண்டவ வனத்தை அக்கினி பகவானுக்குக் கொடுத்து அதற்கு விரோதஞ்செய்யும் தேவேந்திரனை ஜயித்தேனே, எவருடைய ஒத்தாசையால் மயனால் உண்டுபண்ணப்பட்டதும், மிகவும் ஆச்சரியகரமானதும், மாயாமயமாயுமுள்ள சபையானது நம்மால் அடையப்பட்டதோ, மேலும் எவருக்காக உம்முடைய ராஜசூய யாகத்தில் அநேக திக்குகளிலிருந்து வந்த அரசர்கள் மிக்க உத்தம வஸ்துக்களைக் காணிக்கையாகக் கொடுத்தார்களோ, எந்தப் பரமபுருஷன் சமீபத்திலிருந்ததால் உங்களுடைய தம்பியும் அநேக யானை பலமுள்ளவருமான பீமசேனர் ராஜசூய யாகத்திற்காக ஜராசந்தன் என்பவனைக் கொன்றாரோ, ஜராசந்தனால் காராக்கிருகத்தில் அடைக்கப்பட்டிருந்த அரசர்கள் எவரால் விடுவிக்கப்பட்டு உங்களுடைய யாகத்திற்குக் காணிக்கைகளுடன் வந்தார்களோ, ராஜசூய யாகத்தில் மகாபிஷேகத்தை யடைந்ததும், மேலானதுமான திரௌபதியின் தலைமயிரை துச்சாசனன் பிடித்து இழுக்கும்பொழுது உம்முடைய பத்தினியாகிய அவள் எந்தப் பகவானை ஸ்மரித்தாளோ, எவர் உடனே அவ்விடம் வந்து சேர்ந்தாரோ, எவரை நமஸ்கரிக்கும்பொழுது திரௌபதியின் கண்ணீர் அவருடைய காலில் விழுந்ததோ, எவர் துச்சாசனன் முதலியவர்களுடைய ஸ்திரீகள் தலைமயிரை விரித்துக்கொண்டு அழும்படி செய்தாரோ, மேலும் பதினாயிரம் சிஷ்யர்களுடன் போஜனம் செய்பவரான துர்வாசஸ் என்னும் மகரிஷி நமது சத்ருவாகிய துரியோதனனால் தூண்டப்பட்டு நம்முடைய ஆசிரமம் வந்தபொழுது எந்தப் பகவான் துவாரகையிலிருந்து காட்டிற்கு வந்து மீதியான சாகத்தைத் (கீரையை) தாம் புசித்து அதனால் மூவுலகத்திலிருக்கும் ஜனங்களையும் ஸ்நானம் பண்ணிக்கொண்டிருக்கும் துர்வாசஸ் முதலிய மகரிஷி

களேயும் திருப்தியடையச்செய்து நம்மைக் காப்பாற்றிஞரோ, யாருடைய தேஜஸ்ஸினுல் பரமசிவன் பார்வதியுடன்கூட ஆச்சரியமடைந்து பாசுபதமென்ற தமது அஸ்திரத்தை எனக்குக் கொடுத்தாரோ, மற்றுமுள்ள தேவர்களும் அவர்வர்களுடைய அஸ்திரங்களேயும் கொடுத்தார்களோ, இச்சரீரத்துடனேயே நான் சுவர்க்கலோகத்தில் இந்திரனுடைய ஆசனத்தையும் அடைந்தேனே, மேலும் சுவர்க்கத்திலேயே வெகுகாலம் வசித்துத் தேவர்களுக்கு விரோதியான அசுரர்களேக் கொன்றேனே, அந்தப் பரமபுருஷன் என்னே இப்பொழுது ஏமாற்றிவிட்டார். கரையற்ற கௌரவ சைன்யமாகிய சமுத்திரத்தை எவருடைய ஒத்தாசையால் நான் ஒருவனுகத் தாண்டினேனே, பின்னும் சத்துருக்களால் அபகரிக்கப்பட்ட பசுக்களேயும் அவர்களுடைய தேஜஸ்ஸிற்கு இருப்பிடமான இரத்தினக் கிரீடங்களேயும் பிடுங்கிக்கொண்டேனே, பீஷ்மர், கர்ணர், துரோணர், சல்யர் இவர்களுடைய சைனியங்கள் மிகுந்த பலமுள்ள க்ஷத்திரியர்களால் அலங்கரிக்கப்பட்டவையாஞலும், அவைகளின் நடுவில் எந்தக் கிருஷ்ண பகவான் என்னுடைய இரதத்தில் சாரதியாகவிருந்து ஒவ்வொரு சேனுதிபதிகளுடைய ஆயுஸ்ஸையும், மனேபலத்தையும், தேகபலத்தையும், பார்வையாலேயே குறைத்துவிட்டாரோ, விஷ்ணுபக்தனுகிய பிரகலாதனிடத்தில் இரண்யகசிபுவினுல் தூண்டப்பட்ட அரசர்களுடைய கொடுமைபோல் எந்தக் கிருஷ்ணனுல் காப்பாற்றப்பட்ட என்னிடத்தில் அளவற்ற மகிமையுள்ளவர்களான துரோணர், பீஷ்மர், கர்ணன், அசுவத்தாமா, ஸுசர்மா, சல்யர், ஜயத்ரதர், பாஹ்லீகர் இவர்களால் பிரயோகிக்கப்பட்ட அஸ்திரங்கள் வீணுகப் போயினவோ, மேலும், ஜயத்ரதனேக் கொல்லும்பொழுது தண்ணீர் குடிக்காததனுல் குதிரைகள்

களைத்துப்போக, இரதத்திலிருந்து எந்தப் பகவான் கீழே இறங்கி, பாணத்தால் பூமியைப் பிளந்து, அதி லிருந்து ஜலத்தை யுண்டுபண்ணிஞரோ, அப்பொழுது எவருடைய மகிமையால் சத்துருக்கள் மெய்ம்மறந்து என்னை அடிக்காமலிருந்தார்களோ, அந்த மகாபுருஷரும், மோட்சத்தைக் கொடுக்கக்கூடியவருமாகிய பகவானை சாரதியாய் வைத்துக்கொண்டேனே, நான் மிகவும் அற்ப புத்தியுள்ளவன்; அந்த அபராதத்தால்தான் என்னை அவர் ஏமாற்றிவிட்டாரோ, தெரியவில்லை.''

18—27. லக்ஷ்மீபதியாகிய பகவான், "ஓ பார்த்த! (குந்தியின் புத்ரன்) ஓ அர்ஜுன! ஓ குருநந்தன! (கௌர வர்களைச் சந்தோஷப்படுத்துகிறவன்) ஏ தோழா! என்று சிரித்துக்கொண்டு பலவகையாக வேடிக்கை வார்த்தை களைப் பேசினர் அல்லவா? அவைகள் யாவும் இப்பொ ழுது என் மனத்திலிருக்கின்றன. ஒரே படுக்கையில் படுத்துக்கொள்வது, ஒரே ஆசனத்தில் உட்காருவது, சேர்ந்தே சஞ்சரிப்பது, புசிப்பது, தம்முடைய குணங்களை தோத்திரம் செய்துகொள்வது ஆகிய இவைகளால் எங்க ளிருவர்களுக்கும் மனமும் ஒன்றுபட்டிருந்ததால் சில சமயம் "நீர் சொன்னபடி செய்தீரல்லவா" என்று நான் கிருஷ்ணனைப் பரிகாசஞ்செய்தாலும் தகப்பன் பிள்ளை செய்த பிழையைப்போலவும், அற்ப புத்தியுள்ள என்னு டைய குற்றத்தை விசேஷ மகிமை பொருந்தியவராகை யால் சகித்திருந்தார். என்னிடத்தில் மிகவும் மித்ரரும், அளவற்ற பிரீதியுள்ளவரும், அனுகூலத்தைச் செய்ய விரும்பியவருமான புருஷோத்தமனை விட்டுப் பிரிந்து, வழியில் அந்தப் பகவானுடைய களத்திரங்களைக் காப் பாற்ற முயன்றும் சக்தியற்றவனாக அஸத்துக்களால் ஸ்திரீயானவள்போல கோபர்களால் ஜயிக்கப்பட்டேன். இந்தக் காண்டீவம், பாணங்கள், ரதம், குதிரைகள், ரதி

யாகிய நான் ஆகிய எல்லாம் முன்னிருந்தவைகளானாலும், பகவானிருந்தவரையில் அவையெல்லாம் காரியத்திற்கு உபயோகப்பட்டன; பகவான சுவர்க்கம் போனபிறகு ஒரு க்ஷணத்திற்குள் சாம்பலில் செய்த ஆஹுதிபோலவும், வஞ்சகனுக்குத் தானம் செய்ததுபோலவும், களர் பூமியில் பயிரிடுதல்போலவும் பிரயோசனமற்றவைகளாயின. ஓ மகாராஜ! துவாரகா நகரத்தில் வசிக்கும் பந்துக்களுடைய க்ஷேமத்தை விசாரித்தீரல்லவா? அவர்கள் எல்லாரும் பிராம்மண சாபத்தால் மூடர்களாய், மத்யத்தைக் குடித்து மதங்கொண்டவர்களாய் ஒருவருக்கொருவர் பந்துக்களல்லாதவர்கள்போல் முஷ்டியால் அடித்துக்கொண்டு, நான்கு ஐந்து பெயர்கள் தவிர மற்றவர்கள் எல்லோரும் இறந்தார்கள். பிராணிகள் ஒருவரையொருவர் காப்பாற்றுவதும், ஒருவரையொருவர் கொல்வதுமாகிய எல்லாம் பகவானுடைய இச்சையே தவிர வேறில்லை ஜலத்தில் மத்ஸ்யம் முதலிய ஜந்துக்களில் பெரியவைகள் சிறிய பிராணிகளைக் கொல்வது போல் ஸகல பிராணிகளிலும், பலசாலிகள் அற்ப பலமுள்ளவர்களை ஜயிக்கிருர்கள். இப்படியே யாதவர்களும் ஒருவருக்கொருவர் அடித்துக்கொள்ளும்படி பகவான் செய்து பூமியின் பாரத்தைப் போக்கினர். தேசத்திற்கும் காலத்திற்கும் தகுந்தவைகளும், மனத்தின் தாபங்களைப் போக்கக்கூடியவைகளுமான கோவிந்தனுடைய வார்த்தைகளை நினைக்க நினைக்க அவைகள் மனதை அபகரிக்கின்றன என்று பிரலாபித்தார்.

28—31. இப்படி அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய தாமரைமலர் போன்ற பாதங்களை நினைத்து அவரிடம் விசேஷ பக்தியை அடைந்தார். அதனல் சித்த சுத்தி உண்டாயிற்று. சண்டையில் பகவானல் உபதேசிக்கப்பட்ட ஞானமானது, கால மகிமையாலும், கர்ம

வசத்தாலும், தமோகுணத்தாலும் மறைக்கப்பட்டிருந்தது. அதனல் அர்ஜுனன், ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய திவ்ய சரணங்களைத் தியானித்து, பூர்ணமான பக்தியை அடைந்தும் மனத்திலிருந்த எல்லா அழுக்கும் நீங்கினவராய் முந்திய ஞானத்தை நினைத்துக்கொண்டார். முக்குணங்கள், புண்ய பாபங்கள், ஸ்தூல சரீரம் ஆகிய இவைகளின் பற்றுதல் (சம்பந்தம்) அற்றுப்போயிற்று. உற்பத்தி முதலியவைகள் விலகின. ஸ்வரூப ஞானம் உண்டானது. சகல சம்சயங்களும் நாசமாயின. ஆனதால் அர்ஜுனன் எந்த வகையிலும் துக்கமற்றவனுனன்.

32—33. இம்மாதிரி பகவான் வைகுண்டம் சென்றதையும், யதுகுலத்தின் நாசத்தையும் அர்ஜுனனிடமாகத் தர்மபுத்திரர் தெரிந்துகொண்டு அந்தக்கரணத்தை யடக்கித் தாமும் ஸ்வர்க்கம் போக விரும்பினர். குந்திதேவியும் அர்ஜுனன் வார்த்தையைக் கேட்டுப் பகவானிடத்தில் இடைவிடாமல் பக்திசெய்து அவரிடத்திலேயே மனத்தைச் செலுத்தி, சம்சாரத்திலிருந்து வைராக்யத்தை யடைந்தாள். (ஜீவன் முக்தியை அடைந்தாளென்பது கருத்து.)

34—35. காலில் தைத்த ஒரு முள்ளைப் பின்னும் ஒரு முள்ளினுல் எடுப்பதுபோல, பகவான் யது குலத்தில் கிருஷ்ணனுக அவதரித்து, பூமியின் பாரத்தை நிவர்த்தித்து, அந்தச் சரீரத்தையும் விட்டுவிட்டார். பூமிக்குப் பாரமாயிருந்த சரீரமும், அதைப் போக்கடித்த கிருஷ்ண சரீரமும் பகவானுடையதாகையால் அவைகளில் அவருக்கு சமான பிரீதியே தவிர பேதமில்லை. மேலும், வேஷதாரியான நடன் மறுபடி வேஷத்தைக் கலைத்துவிடுவதுபோல ஈசுவரன் மத்ஸ்யம், கூர்மம் (ஆமை), முதலிய உருவங்களையெடுத்து, அவைகளை விட்டுவிடுகிறுர்.

அப்படியே கிருஷ்ணனாகவிருந்து பூமிக்குப் பாரமாயுள்ள அரசர்களை நாசஞ்செய்து, அந்தச் சரீரத்தையும் விட்டுவிட்டார்.

36—38½. எல்லோராலும் கேட்கக்கூடிய திவ்ய சரிதமுள்ள பகவான் என்றைய தினம் இவ்வுலகத்தை விட்டு வைகுண்டஞ் சென்றாரோ, அன்றைய தினமே அஞ்ஞர்களைக் கலி சூழ்ந்துகொண்டது. அப்பொழுது பட்டணத்திலும், தேசத்திலும், வீடுகளிலும், மனத்திலும் கலி நெருங்குவதால் பணக்காரர்களுக்கு நல்ல பாத்திரத்தில் தானஞ்செய்யவேண்டுமென்ற எண்ணமில்லாமலிருப்பது, பொய் சொல்வது, கபடமாகப் பேசுவது, பிறரை ஹிம்சிப்பது ஆகிய அதர்மங்கள் யாவும் பரவின. அதனைப் பார்த்து வித்வானாகிய தர்மபுத்திரர் இவ்வுலகத்தை விட்டுப்போக முயற்சித்தார். பின்பு, அவர் தமக்குச் சமான குணங்கள் பொருந்தியவரும், அர்ஜுனனுடைய பௌத்திரரும், மிகுந்த வணக்கமுள்ளவருமான பரீக்ஷித்திற்கு ஹஸ்தினாபட்டணத்தில் ராஜ்யாபிஷேகஞ் செய்வித்து, சூரஸேனருடைய புத்திரராகிய வஜ்ரரையும் மதுரா நகரத்திற்கு அரசனாகச் செய்தார்.

39—50. பின்பு மிக்க ஸாமர்த்தியமுள்ள தர்மபுத்ரர் பிராஜாபத்யம் என்ற இஷ்டியைச் செய்து, அக்னிகளை ஆத்மாவில் ஆரோபித்துக்கொண்டார்; அப்பொழுது சரீரத்தில் அணிந்துகொண்டிருந்த வளை முதலிய ஆபரணங்களையும், பட்டு முதலியவைகளையும் விட்டு மோஹம், அஹங்காரம் முதலியவைகளை விட்டவராய், சகல பந்தங்களையும் நிவர்த்தித்துக்கொண்டார்; சகல இந்திரியங்களை மனத்திலும், அதனைப் பிராணனிடத்திலும், அதனை அபானனிடத்திலும், அதனை அதன் வியாபாரத்துடன் மிருத்யுவினிடத்திலும், அதனை ஐந்து பூதங்

களால் ஏற்பட்ட சரீரத்திலும், அதனைக் குணத்திலும், அதனை அவித்தையிலும், அதனை ஜீவனிடத்திலும், அந்த ஜீவனை நாசமற்றவரும் கூடஸ்தருமாகிய பரப்பிரம மத்திலும் லயப்படுத்தினர். மேலுமவர் மாவுரியை உடுத்திக்கொண்டு ஆஹாரமில்லாமலும், மௌனியாயும், தலையை அவிழ்த்துக்கொண்டு மூடன்போலவும், பைத்தியம் பிடித்தவன்போலவும், பிசாசுபோலவும், ஒன்றையும் பாராதவராய்ச் செவிடன்போலப் பிறர் சொல்வதைக் கேளாமல் பெரியோர்களான முன்னோர்கள் போன வழியாக வடக்குத் திக்கை நோக்கிச் சென்றார். அப்பொழுது எதையடைந்தவர்கள் மறுபடியும் ஸம்ஸாரத்தை யடைய மாட்டார்களோ, அந்தப் பரமாத்மாவையே தியானித்துக்கொண்டிருந்தார். அவருடைய தம்பிகள் அனைவரும் நிச்சயமுள்ளவர்களாய்த் தர்மபுத்திரர்பின் சென்றார்கள். அதர்மத்தின் ஒத்தாசையுள்ள கலியானது பிரஜைகளைப் பார்த்து அவருடைய சமீபத்திலுஞ் சென்றது. அப்பொழுது சகல தர்மங்களையும் நன்றாக அனுஷ்டித்தவர்களான தர்மபுத்திரர் முதலியவர்கள் ஸ்ரீநாராயணருடைய சரணங்களே நமக்குச் சரணமென்று நினைத்து, அதனால் பக்தியதிகரித்தவர்களாகி, சித்தசுத்தியை யடைந்து, பரமபுருஷனாகிய ஸ்ரீ நாராயணனிடத்தில் ஸ்திர புத்தியுள்ளவர்களாய், யோகிகளால் அடையக்கூடியதும், ஸம்ஸாரிளுக்குக் கிடைக்காததுமான மேலான கதியை அடைந்தார்கள். மேலும், ஞானியாகிய விதுரரும் பிரபாஸ தீர்த்தக்கரையில் ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் சித்தத்தைச் செலுத்தி, இந்தச் சரீரத்தை விட்டுப் பிதிரு தேவதைகளால் அழைக்கப்பட்டுத் தமது உலகஞ் சென்றார். அப்பொழுது திரௌபதியும் தன்னுடைய பதிகளுக்குத் தன்னிடத்தில் பிரீதியில்லாமையைப் பார்த்து ஸ்ரீ வாஸுதேவரிடம் இடைவிடாமல் பக்திசெய்து உத்தம கதியை யடைந்தாள்.

*51.* பகவான் வைகுண்டம் சென்றதும், பாண்டவர்கள் பகவானை யடைந்ததுமாகிய இக்கதைகள் மிகவும் பரிசுத்தமானவைகள். இவைகளைச் சிரத்தையுடன் கேட்பவர்களுக்கு ஸ்ரீமஹாவிஷ்ணுவிடத்தில் பக்தியும், அதனால் மோக்ஷமும் கிடைக்கும்.

நோட்டு

**ஸக்யம்:**—அனுகூலத்தைச்செய்ய விரும்பியிருப்பது. **மைத்ரி**—உபகாரியாகவிருப்பது. **ஸௌஹ்ருத்வம்**—பந்துவாகவிருப்பது. **ஸ்ரீத.** ஸக்யம் ஸமான வயதுள்ளவராக இருப்பதாலேற்படக்கூடியது. **மைத்ரி**—உபகாரத்தாலேற்படக்கூடியது; அதிகப் பிரேமையால் உண்டாகக்கூடியது. **சந்த்.**

---

# அத்தியாயம் 16

## பரீக்ஷித்து தர்மத்தைக் கண்டது

*1—4.* 'பரீக்ஷித்து பிறந்தபோது அவருடைய ஜாதகத்தைப் பார்த்து ஜ்யோதிச் சாஸ்திரமறிந்த பிராம்மணோத்தமர்கள் சொன்னபடியே பின்பு ஹஸ்தினபுரத்தில் உத்தரையின் புத்திரர் அரசனாகவிருந்து, பிராம்மணர்களுடைய கட்டளையின்படி பாகவதர்களுக்குள் சிறந்தவராகி இராஜ்யத்தைக் காப்பாற்றிவந்தார். அவர் உத்தரனுடைய பெண்ணாகிய இராவதீ என்பவளை விவாஹஞ் செய்துகொண்டார்; அவளுக்கு ஜனமேஜயர் முதலிய நான்கு குமாரர்கள் பிறந்தார்கள். பின்னும் அவர் கிருபரைக் குருவாக வைத்துக்கொண்டு கங்கையின் கரையில் மூன்று அசுவமேத யாகங்களைச் செய்தார்; அவைகளில் தேவர்கள் நேரில் வந்து ஹவிர்ப்பாகங்களைப் பெற்றுக்கொண்டார்கள். மேலும் அவர் திக்விஜயஞ் செய்துவரும்பொழுது வழியில் ஒரு எருதையும் பசுவையும் ஒரு சூத்திரன் காலால் உதைக்கக் கண்டார். அவன்

ராஜவேஷம் பூண்டிருந்தான். அவனே கலிபுருஷன். அவனைத் தமது பலத்தால் நிக்ரஹித்தார்" என்று ஸூதர் சௌனகருக்குச் சொன்னார்.

5—10 'இதனைக் கேட்டு சௌனகர்' "ஓ! ஸூதரே! பரீக்ஷித் மஹாராஜா கலியை நிக்ரஹிக்கக் காரண மென்ன? அவன் அரசனாகவும் சூத்ரனாகவுமிருந்து பசுவைக் காலால் ஏன் உதைத்தான்? அந்த விஷயம் பகவத் கதையிலடங்கினதாலும், ஈசுவரனுடைய பாதங்களாகிய தாமரைப் புஷ்பங்களிலிருந்து பெருகி வரும் மதுவைப் பானஞ்செய்து திருப்தியடைந்திருக்கும் மஹான்களுடைய கதையில் சேர்ந்ததாலும் அதைச் சொல்லவேண்டும். அற்ப ஆயுஸ் உள்ளவர்களும், மரிக்கும் சுபாவமுள்ளவர்களுமான மனிதர்களுக்கு மோட்சத்தில் விருப்பமிருக்குமாகில் பகவானுடைய கதையைக் கேட்பது முதலியவைகளால் அவர்கள் ஆயுஸ்ஸைக் கழிக்க வேண்டுமேயல்லாமல் கெட்ட விஷயங்களால் வீணாக அதைச் செலவிடக்கூடாது. இந்த யாகத்திற்காக மகரிஷிகள் அந்தகனை (யமனை) வரவழைத்திருக்கிறார்கள். பகவானுடைய கதையைக் கேட்பதில் விருப்பமுள்ளவராக அவரும் வந்திருக்கிறார். இவ்விடத்தில் யமனிருக்கிற வரையில் ஒருவனும் மரணமடைகிறதில்லை. ஆகையால் பகவானுடைய லீலைகளையே கேட்கவேண்டும். சோம்பல், புத்திக்குறைவு, அற்பமான ஆயுஸ் ஆகிய இவைகளுள்ள புருஷனுடைய ஆயுஸ்ஸானது இராத்திரியில் தூக்கத்தாலும், பகலில் ஸம்ஸாரத்திற்குபயோகமான காரியங்களாலும் செல்லுகிறது. ஆகையால் பகவானுடைய கதையைக் கேட்பதில் காலத்தை யுபயோகியாதவர்களுடைய ஜீவனம் வீணானது" என்றார்கள்.

11—17. இதனைக் கேட்டு ஸூதர் சௌனகரை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானார். பரீக்ஷித்து

மகாராஜன் திக்விஜயம் செய்து வருங்காலத்தில் தம்முடைய ஆளுகைக்குட்பட்ட குருஜாங்கலம் இவைகளில் கலி வந்து பிரவேசித்தானென்ற அப்ரியமான வார்த்தையைக் கேட்டவுடன், யுத்தத்தில் மிகவும் சாமர்த்தியம் உள்ளவராகையால் ஆயுதத்தை எடுத்துக்கொண்டு கறுத்த குதிரைகள் கட்டிய இரதத்திலேறிப் புறப்பட்டார். அந்த இரதமானது சிம்மத்வஜமுள்ளது; சகல அலங்காரமுள்ளது; யானைகள், குதிரைகள், ரதங்கள், காலாட்படைகள் ஆகிய இவைகளுள்ள சேனைகள் அவரைச் சூழ்ந்துகொண்டன. அவர் பத்ராச்வம், கேதுமாலம், கிம்புருஷம், பாரதம், உத்தரகுரு ஆகிய வர்ஷங்களில் சென்று அங்கிருக்கும் அரசர்களை ஜயித்து அவர்களிடம் கப்பம் பெற்றுக்கொண்டார். ஒவ்வொரு வர்ஷங்களிலும் வசிக்கும் ஜனங்கள் பரீட்சித்தின் முன்னோர்களாகிய பாண்டவர்களுடைய சரிதத்தைச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அதில் கிருஷ்ண பகவானுடைய மகிமையும் இடையில் வர்ணிக்கப்படுகிறது. அசுவத்தாமாவினுடைய அஸ்திரத்தினிடமிருந்து பரீக்ஷித்தைக் காப்பாற்றின கதையையும், விருஷ்ணிகளுக்கும் குந்திபுத்திரர்களுக்கும் ஏற்பட்டிருந்த விசேஷ சிநேகத்தைப்பற்றியும், அவர்களுக்குப் பகவானிடமிருந்த அதிக பக்தியைப்பற்றியுஞ் சொல்லிக்கொண்டார்கள். அவற்றைக் கேட்டு, பரீக்ஷித்து மகாராஜன் கண்கள் மலர்ந்தவராக விசேஷ சந்தோஷத்துடன் அவர்களுக்கு விலையுயர்ந்த வஸ்திரங்கள், ஹாரங்கள் ஆகிய இவைகளை வெகுமதி செய்தார். பின்னுமவர் மிகுந்த பக்தியுள்ள பாண்டவர்களிடத்தில் விசேஷ பிரீதியால் பகவான் சாரத்தியஞ் செய்தது, சபாநாயகராகவிருப்பது, பாண்டவர்களுடைய மனம்போல் நடப்பது, தோழனாயிருப்பது, தூதனாயிருப்பது, ராத்திரியில் கத்தியைக்

கையில் வைத்துக்கொண்டு தூங்காமல் காப்பாற்றுவது, அவர்கள் ஏவினதைச் செய்வது, அவர்கள் மகிமையைப் பற்றி தோத்திரஞ்செய்வது ஆகிய கதைகளையும் சொல்லி, சகல ஜகத்தும் பகவானை நமஸ்கரிப்பதையும் பார்த்து ஈசுவரனுடைய சரணங்களில் பக்தி செய்தார்.

18—25. இப்படி அந்தப் பரீக்ஷித்து மகாராஜன் முன்னோர்கள் செய்தபடி ஒவ்வொரு நாளும் தாமும் நடத்திவந்தார். அப்பொழுது சமீபத்தில் ஒரு ஆச்சரியத்தைக் கண்டார். அதென்னவெனில் தர்மமானது விருஷப ரூபமெடுத்து ஒரு காலைப் பூமியில் ஊன்றிக் கொண்டு குழந்தைகள் இறந்துபோனதால் துக்கப்படும் தாய்போலக் காந்தி குறைந்து கண்ணீரைப் பெருக்கி அழுதுகொண்டிருக்கும் ஒரு பசுவை நோக்கிப் பின்வருமாறு கேட்டது. மங்களமாகிய சுபாவமுள்ளவளே! சௌக்கியமாயிருக்கிறாயா? உன்னுடைய முகம் வாடியிருக்கிறது; தேகத்தில் காந்தி குறைந்திருக்கிறது. ஓ அம்ம! மனத்தில் கவலையுள்ளவளாகத் தோற்றுகிறாய். தேசாந்தரம் போயிருக்கும் பந்துக்களைப்பற்றி வருத்தப்படுகிறாயா? அல்லது ஒரு காலால் நிற்கும் என்னைப்பற்றித் துக்கிக்கிறாயா? அல்லது கெட்ட அரசர்களால் அனுபவிக்கப்படும் உனது சரீரத்தைப்பற்றிக் கவலைப்படுகிறாயா? அல்லது யாகங்கள் விதிப்படி செய்யப்படாததால் அசுரர்கள் அவைகளை அபகரிக்கிறார்களேயென்று வருத்தப்படுகிறாயா? காலத்தில் மழை பெய்யாமலிருப்பதால் கஷ்டப்படும் பிரஜைகளைப் பார்த்துச் சிரமப்படுகிறாயா? அல்லது பர்த்தாவினால் காப்பாற்றப்படாத ஸ்திரீகளையும், தாயார், தகப்பன் முதலியவர்களால் இரட்சிக்கப்படாத பாலர்களையும், இராட்சஸர்கள் போலக் குரூர சுபாவமுள்ளவர்களால் உபத்திரவிக்கப்பட்ட சிசுக்களையும், துராசாரமுள்ள பிராம்மணர்களிடத்திலிருக்

கும் வாக்தேவியையும், பிராம்மணர்களைச் சம்ரட்சிக்காத க்ஷத்திரியர்களை சேவித்துக்கொண்டிருக்கும் மேலான குலத்தில் பிறந்தவர்களையும்பற்றிக் கவலையடைகிருயா? அல்லது, கலியினுல் வியாபிக்கப்பட்ட க்ஷத்திரியாதமர்களைப்பற்றியும், அவர்களால் உபத்திரவிக்கப்பட்ட தேசங்களைப்பற்றியும், இஷ்டமான விடங்களிலும் இஷ்டப்பட்ட காலங்களிலும் படுத்துக்கொள்வது, உட்காருவது, புசிப்பது, குடிபபது, மைதுனம் ஆகிய இவைகளில் ஆசையுள்ள பிராணிகளைப்பற்றியும் துக்கிக்கிருயா? அல்லது அம்ம! துஷ்டர்களைக் கொன்று உன்னுடைய பாரத்தை நிவர்த்திப்பதற்காக அவதாரஞ்செய்த ஸ்ரீ கிருஷ்ண பகவான் வைகுண்டஞ் சென்றதால் மோட்சத்தைக் கொடுக்கும் அவருடைய சரிதங்களை நினைத்து அவருடைய விரகத்தைச் சகிக்காமல் துன்பமடைகிருயா? மிக்க பலசாலியான காலத்தின் மகிமையால் உன்னுடைய அழகு போய்விட்டதா ? நீ வருத்தப்படுங் காரணமென்ன? சொல்லவேண்டும்" என்று கேட்டது.

26-35. இதைக்கேட்டுப் பூமிதேவி தர்மதேவதையை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானுள்:—" ஓ தர்மமே! நான் வருத்தப்படும் விஷயமின்னதென்று உனக்கே தெரிந்திருக்கலாம். உலகத்திற்குச் சௌக்கியத்தைக் கொடுக்கும நான்கு கால்களோடு நீ இருந்ததற்கு எவர் காரணமோ, எவரிடத்தில் சத்தியம், சுத்தனுகவிருப்பது, தயை, பொறுமை, கொடுப்பது, சந்தோஷம், கபடமில்லாமலிருப்பது, மனது ஸ்திரமாயிருப்பது, வெளியிலிருக்கும் இந்திரியங்களை ஜயிப்பது, தனது தர்மத்தை யனுஷ்டிப்பது, சத்ரு, மித்ரர் என்ற பேதபுத்தியில்லாமலிருப்பது, பிறர் செய்த அபராதத்தைப் பொறுப்பது, இலாபங் கிடைத்தாலும் அதில் உதாசீனனுக இருப்பது, சாஸ்திரங்களை விசாரிப்பது, ஆத்மஞானம், வைராக்கியம்,

எல்லாவற்றிற்கும் யஜமானனுகவிருப்பது, சண்டையில் உத்ஸாகம், பிரபுத்வம், தேகபலம், செய்யவேண்டியவை களை மறவாமலிருப்பது, சுதந்திரனுக விருப்பது, காரி யங்களில் சாமர்த்தியம், அழகு, தைர்யம், மிருது சுபாவ முள்ளவனுகவிருப்பது, புத்தி, விசேஷ வணக்கம், சுபா வம், மனேபலம், ஞானபலம், இந்திரிய பலம், மேலான ஞானம் முதலியவைகள், கம்பீர மனமுள்ளவராக இருப் பது, அசையாத சித்தமுள்ளவராகவிருப்பது, சிரத்தை, கீர்த்தி, மானம், அகங்காரமில்லாமலிருப்பது ஆகிய இவைகளும் மற்ற எல்லாராலும் ஆசைப்படக்கூடியவை களுமான மகாகுணங்கள் எப்பொழுதும் வசித்துக்கொண் டிருந்தனவோ, அந்தக் குணநிதியாகிய ஸ்ரீநிவாஸன் இவ்வுலகத்திலில்லாததனுல் பாப சுபாவமுள்ள கலி இவ்வுலகத்தில் வியாபித்தான்; அதனுல் எனது சுரு பத்தையும், உன்னையும், தேவர்களையும், மகரிஷிகளையும், பிதிருக்களையும், மற்ற சாதுக்களையும், எல்லா ஜாதியார் களையும், ஆசிரமிகளையும்பற்றிக் கவலைப்படுகிறேன். பிரம்மதேவர் முதலியவர்கள் எந்த லக்ஷ்மீதேவியின் கடாக்ஷத்திற்காக வெகுகாலம் தபஸ் செய்தார்களோ, அந்த லக்ஷ்மீதேவியானவள் மேலானவர்களால் ஆசிர யிக்கப்பட்டவளானுலும், தான் வஸிக்குமிடமான தாமரைமலர்களின் வனத்தை விட்டுப் பகவானுடைய பாதங்களாகிய தாமரைப்புஷ்பங்களை மிகுந்த பிரீதியுடன் ஸேவிக்கிருள்; வஜ்ரம், அங்குசம், துவஜம் ஆகிய இந்த இரேகைகளுள்ள அந்தப் பகவானுடைய திவ்ய விபூதி களை யறிந்து மூவுலகிலும் மேலானவளாக இருந்தேன். இப்படி கர்வமுள்ள என்னை ஈசுவரன் கடைசியில் விட்டுப் பிரிந்தார். அவர் எனக்குப் பாரமாயிருந்த அஸுராம்ச முள்ள அரசர்களுடைய அனேக அக்ஷௌஹிணியை நாசஞ்செய்வதற்காகவும், நான்கு பாதங்களுடன் உலகத்

இல் உன்னை ஸஞ்சரிக்கும்படி செய்வதற்காகவும் யது குலத்தில் அவதரித்தார்.

36. எந்தப் புருஷோத்தமர் பிரியமான பார்வை, அழகான சிரிப்பு, மனோஹரமான பேச்சு ஆகிய இவைகளால் ஸத்யபாமை முதலியவர்களுடைய மானத்தையும் தைர்யத்தையும் போக்கடித்தாரோ? எவருடைய பாதத்தின் அடிவைப்பினால் அலங்கரிக்கப்பட்ட எனக்கு மயிர்க்கூச்சலுண்டானதோ, அந்தப் பரமபுருஷனை விட்டுப் பிரிந்திருக்க யாரால் முடியும்'' என்றாள்.

37. இப்படி இருவரும் பேசிக்கொண்டிருக்கும் பொழுது பரீக்ஷித்து என்ற ராஜரிஷியானவர் குரு க்ஷேத்திரத்தில் கிழக்கு முகமாய்ப் பிரவஹிக்கும் ஸரஸ்வதி நதிக்கரை வந்தார்.

---

# அத்தியாயம் 17

## பரீக்ஷித் மஹாராஜன் கலியை நிக்ரஹித்தது

*1—15.* அவ்விடத்தில் பரீக்ஷித்து மஹாராஜா ஒரு எருதையும், ஒரு பசுவையும், ஒரு சூத்திரன் ராஜவேஷந் தரித்துக் கையில் தடியை எடுத்து அடித்துக்கொண்டிருக்கக் கண்டார். அவைகளில் தாமரைத்தண்டு போல் வெளுப்பான விருஷபமானது (எருது) மிகவும் பயந்து மூத்திரம் பெய்வதுபோல் நடுக்கமடைந்து அந்தச் சூத்திரனால் அடிக்கப்பட்டு ஒரு காலால் நின்று மிகவும் துன்பமடைந்திருந்தது. பால் முதலியவைகளைக் கொடுக்கும் அந்தப் பசுவானது கன்றில்லாமல் அழுதுகொண்டிருந்தது; அல்லாமல் இளைத்துமிருந்தது; புல் முதலிய ஆஹாரத்தில் விருப்பமுள்ளதாகவு மிருந்தது. அதனைச் சூத்திரன் காலால் உதைத்துக்கொண்டிருந்தான். அப்பொழுது ஸுவர்ணத்தால் அலங்கரிக்கப்பட்ட இரதத்

தின் மீதேறியிருக்கும் அந்தப் பரீக்ஷித் மஹாராஜன் வில்லில் நாணைப் பூட்டிக்கொண்டு பின்வருமாறு மேகம் கர்ஜிப்பதுபோலக் கம்பீரமாகக் கேட்கத் தொடங்கி, "அட மூட! நீ யார்? என்னால் காப்பாற்றப்படுகிற தேசத்தில் பலிஷ்டனான நீ, பலமில்லாதவர்களை உபத்திரவிக்கின்றனை; உனது வேஷத்தால் அரசனாகத் தோன்றுகின்றனை; சூத்திரனுடைய கார்யத்தைச் செய்கின்றனையாதலால் வேஷதாரி போலிருக்கின்றாய்; ஸ்ரீ கிருஷ்ண பகவானும், அர்ஜுனனும் இத்தேசத்தைவிட்டு வெகு தூரஞ் சென்றுவிட்டபடியால் இரஹஸ்யத்தில் பலமில்லாதவர்களை ஹிம்ஸிக்கின்றனை; ஆகையால் நீ, என்னால் கொல்லத்தகுந்தவன்;ஓ தாமரைத்தண்டுபோலவெளுத்த சரீரத்துடன் விருஷப ரூபமெடுத்து ஒரு காலால் ஸஞ்சரிப்பவரே! நீர், தேவதைகளுக்குள் யார்? உம்மைப் பார்க்க எங்களுக்கு வெகு துக்கமாயிருக்கிறது. கௌரவர்களுடைய கைகளால் காப்பாற்றப்படும் பூமியில் துக்கத்தாலுண்டாகும் கண்ணீர் விழுகிற வழக்கமில்லை; ஆதலால் நீர் துக்கிக்கவேண்டாம்; சூத்திரனிடமிருந்து பயம் உமக்கு நிவர்த்தியாகிவிட்டது; ஓ அம்ம, பசுவே! துஷ்டர்களை நான் சிக்ஷித்துவரும்பொழுது நீ ஏன் அழவேண்டும்? எந்த அரசனுடைய இராஜ்யத்தில் துஷ்டர்களால் ஸாதுக்களுக்கு உபத்திரவம் நேரிடுகிறதோ அவனுடைய கீர்த்தி, ஆயுஸ், பாக்யம் ஆகிய இவைகள் குறைவுபடுவதல்லாமல் அவனுக்கு நல்ல லோகமும் கிடைக்கிறதில்லை. உபத்திரவப்பட்டவர்களுடைய துன்பத்தை நிவர்த்திப்பதே அரசர்களுக்கு முக்கியமாகிய தர்மம்; ஆனதால் பிராணிகளுக்குக் கெடுதியைச் செய்கின்ற மிக்க அஸத்தாகிய இவனைச் சிக்ஷிக்கிறேன். ஓ விருஷபமே! உன்னுடைய மூன்று கால்களையும் எவன் வெட்டினான்? ஸ்ரீ கிருஷ்ணனை அனுஸரித்த அரசர்களுடைய இராஜ்

யத்தில் ஜனங்கள் உன்னைப்போலிருப்பது உசிதமல்ல. நிரபராதியும் ஸாதுவுமாகிய உனக்குக் கெடுதியைச் செய்து அதனால் பாண்டவர்களுடைய கீர்த்தியைக் குறைக்கும் அஸத் யார்? அவனைச் சொல். உனக்கு க்ஷேமமுண்டாகும்; குற்றஞ் செய்யாதவர்களை எவன் உபத்திரவிக்கிருனே அவனுக்கு என்னிடமிருந்து பல வகையிலும் பயமுண்டாகும்; கொஞ்சமாவது பயமில்லாமல் குற்றமற்றவர்களுக்குக் கெடுதிசெய்பவன் தேவனுனாலும் தோள்வளைகளுள்ள அவனுடைய கையை வெட்டி விடுவேன். கெட்ட நடையுள்ளவர்களை, சாஸ்திரமுறைப்படி சிக்ஷிக்கும் அரசர்களுக்குத் தமது தர்மத்தை யனுஷ்டிப்பவர்களைக் காப்பாற்றுவதே ஸ்வதர்மம்'' என்று சொன்னார்.

*16—19½.* இதனைக் கேட்டு தர்மமானது அரசனை நோக்கி, "ஓ! மஹாராஜ! எவர்களுடைய குணங்களால் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அவர்களுக்குத் தூதனுகவிருப்பது முதலியவைகளைச் செய்தாரோ, அந்தப் பாண்டவர்களின் குலத்தில் பிறந்தவர்களான நீங்கள் பயந்தவர்களுக்கு அபய வார்த்தை சொல்வதே உசிதம். பிராணிகளுக்குத் துக்கமுண்டாகுங் காரணத்தைப்பற்றிப் பல வகையான மதங்கள் ஏற்பட்டிருக்கின்றன; சிலர் ஆத்மாவே துக்கத்திற்குக் காரணமென்றும், ஜ்யோதிச்சாஸ்திர மறிந்தவர்கள் நவக்கிரஹங்களின் அதிதேவதையே துக்கத்திற்குக் காரணமென்றும், மீமாம்ஸகர்கள் கர்மமே காரணமென்றும், உலகாயதிகர்கள் ஸ்வபாவமே காரணமென்றும், சிலர் ஈசுவரனே காரணமென்றும் சொல்லுவதால் ஊகிக்க முடியாததும், குறிப்பிடக்கூடாததுமான ஏதோ ஒரு காரணத்திலிருந்து துக்கமுண்டாகிறது. ஒன்றையும் நிச்சயமாகச் சொல்லக்கூடவில்லை. இப்படி மதபேதத்தால் மோகித்திருப்பதால் எந்தப்

புருஷனிடமிருந்து துக்கங்கள் நேரிடுகின்றனவோ அந்தப் புருஷன் இன்னுரென்று நாம் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆனதுபற்றி அதன் காரணத்தை நீரே உம்முடைய புத்தியால், யோசித்துத் தெரிந்துகொள்ளும்'' என்று சொல்லிற்று.

20—27. இதனைக் கேட்டு அரசன் யோசித்து மோஹமில்லாதவராகத் தர்மத்தை நோக்கிப் பின்வருமாறு சொன்னுர். ''தர்மமாகிய வார்த்தையைச் சொல்வதால் நீ தர்மமேயாம்; விருஷபத்தின் சரீரத்தைத் தரித்திருக்கின்றனை; அதர்மத்தை யனுஷ்டித்தவனுக்கு எவ்வித தோஷமேற்படுமோ அது கோட்சொன்னவனுக்கு (அவனைக் காட்டிக்கொடுத்தவனுக்கு) உண்டாகிறது; அல்லது ஈசுவரனுடைய ஸங்கல்பமானது பிராணிகளுடைய மனத்திற்கும், வாக்குக்கும எட்டாததாகையால் அதை யறியமுடியாதென்பது நிச்சயம். தபஸ், சௌசம், தயை, ஸத்யம் ஆகிய நான்கு தர்மத்திற்குப் பாதங்களாகக் கிருதயுகத்தில் ஏற்படுத்தப்பட்டன. அதர்மத்தின் பாதங்களாகிய கர்வம், ஆசை, மதம் இவைகளால் தர்மத்தின் மூன்று பாதங்கள் முறிக்கப்பட்டன. இப்பொழுது நான்காவது பாதமாகிய ஸத்யத்தை அஸத்யத்துடன் கூடிய கலி பிடிக்க முயற்சிக்கின்ருன்; இவள் பூமிதேவியே. இவளுடைய பாரத்தைப் பகவான் நிவர்த்தித்தார். அவருடைய திவ்யமாகிய அடிவைப்பினுல் ஸந்தோஷமடைந்திருந்தாள். இப்பொழுது அந்தப் பகவானை விட்டுப் பிரிந்த பூமிதேவியானவள், பிராம்மணர்களைக் காப்பாற்ருதவர்களும், ராஜ வேஷத்தைமாத்திரம் தரித்தவர்களுமான சூத்திரர்கள் தமக்கு அதிபதியாக ஆகிவிடுவார்களே என்று கண்ணீரைப் பெருக்கிப் பாக்கியமற்றவள்போல் துக்கிக்கிருள்'' என்று சொல்லித் தர்மதேவதையையும், பூமியையும் ஸமாதானஞ்செய்தார்.

28—33. பின்னும் மஹாரதராகிய அவ்வரசன் அதர்மத்திற்குக் காரணமாகிய கலியைச் சிட்சிப்பதற்காகக் கூர்மையான கத்தியை எடுத்தார். அப்பொழுது கலியானவன் அரசன் தன்னைக் கொல்ல விரும்பியதைத் தெரிந்துகொண்டு இராஜவேஷத்தை விட்டு மிகவும் பயந்தவனாக அவருடைய சரணங்களில் நமஸ்கரித்தான். அப்பொழுது தம்முடைய காலில் விழுந்த கலியைப் பார்த்து, தீனர்களிடத்தில் வாத்ஸல்யமுள்ளவரும், தைர்யமுள்ளவரும், கொண்டாடக்கூடியவரும், சரண்யருமான அரசன் கருணையுடன் அவனைக் கொல்லாமலிருந்ததுமன்றி அவனை நோக்கிச் சிரித்துக்கொண்டு அர்ஜுனனுடைய கீர்த்தியைக் காப்பாற்றிவரும் நாங்கள், கைகூப்பிச் சரணமடைந்தவர்களைக் கொல்லுகிறதில்லை; ஆனாலும் நீ, அதர்மத்திற்குப் பந்துவானதால். நமக்குச் சொந்தமான இவ்விடத்தில் வசிக்கக்கூடாது; இராஜசரீரத்தில் நீ வசிக்கும்போது ஆசை, பொய்சொல்லுதல், திருடுவது. துஷ்டனாயிருப்பது, தன்னுடைய தர்மத்தை விட்டுவிடுவது, அலக்ஷ்மீகபடம், கலஹம், இடம்பம் ஆகிய அதர்மத்தின் கூட்டமும் உன்னை யனுஸரிக்கிறது. ஆதலால் அதர்ம பந்துவாகிய ஏ கலியே! ஸத்யம், தர்மம் ஆகிய இவைகள் பிரகாசித்துக்கொண்டிருக்கும் பிரஹ்மாவர்த்தத்தில் நீ வசிக்கக்கூடாது. இவ்விடத்தில் யாகத்தின் விதியை நன்றாக அறிந்தவர்கள் யக்ஞேசராகிய பகவானை யாகத்தால் பூஜிக்கிறார்கள். மேலும் யாகஸ்வரூபியான பகவான் யாகஞ்செய்பவர்களுக்கு க்ஷேமத்தைக் கொடுக்கிறார். தவிரவும், ஸ்தாவர ஜங்கமங்களாகிய எல்லாப் பிராணிகளிடத்திலும், வாயுவைப்போல் அந்தர்யாமியாயிருந்து அவரவர்கள் இஷ்டத்தை நிறைவேற்றுகிறார்'' என்று சொன்னார்.

34—36. அதனைக் கேட்டு அந்தக் கலி மிகவும் நடுக்க முள்ளவனாகி, முயற்சியுள்ள யமனைப்போலக் கத்தியைக் கையில் வைத்துக்கொண்டிருக்கும் பரீக்ஷித்தை நோக்கி, "ஓ ஸார்வபௌமரே! தங்களுடைய உத்தரவுப்படி எவ்விடத்திலாவது வஸிக்கிறேன்; எவ்விடத்திலிருந்தாலும், வில்லையும் பாணத்தையும் கையில் வைத்துக்கொண்டிருக்கும் உம்மைப் பார்ப்பேன். ஓ தர்மசிந்தையுள்ளவர்களுக்குள் சிறந்தவரே! எவ்விடத்தில் வஸிக்கும்படி நீர் ஆஞ்ஞாபிக்கிறீரோ அவ்விடத்திலேயே வஸிப்பேன்; அப்பேர்பபட்ட ஸ்தானத்தை எனக்குக் காண்பிக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டான்.

37-39. அப்பொழுது இம்மாதிரி கலியால் பிரார்த்தித்தார். பரீக்ஷித்து மஹாராஜா, சொக்கட்டான் ஆட்டம், மத்யபானம், ஸ்திரீ ஸங்கமம், பிராணி ஹிம்ஸை ஆகிய நான்கு அதர்ம ஸ்தானங்களிலும் வஸிக்கும்படி ஆஞ்ஞாபித்தார். அதிலும் திருப்தியடையாமல் பின்னும் சிலவிடங்கள் கொடுக்கவேண்டுமென்று கலி கேட்டுக்கொள்ள, அப்பொழுது அரசன் ஸ்வர்ணத்திலிருக்கும்படி சொன்னார். அதனாலும் கலி திருப்தியடையாமலிருக்க, பின்னும் அரசன் பொய், மதம், காமம், ரஜோகுணம், விரோதம் ஆகிய ஐந்து இடங்களையும், கலிக்குக் கொடுத்தார். இப்படி உத்தரையின் புத்திரரால் கொடுக்கப்பட்ட இந்தவிடங்களில் அவருடைய உத்தரவின்படி கலி வஸித்துக்கொண்டிருந்தான்.

40—44. ஆனதால் க்ஷேமத்தை விரும்பியவர்கள் இவைகளை ஸேவிக்கக்கூடாது. தர்ம சுபாவமுள்ளவனும், அரசனாயிருப்பவனும் அவைகளில் ஆசைப்படவேகூடாது. பிறகு அவர் தபஸ், சௌசம், தயை இவைகளை உலகத்தில் பரவச்செய்து முறிந்துபோன

தர்மத்தின் மூன்று பாதங்களையும் விருத்திசெய்தார்; பூமியையும் விருத்திசெய்தார். அந்தப் பரீக்ஷித்து என்பவர், தர்மபுத்திரர் காட்டிற்குப் போகும் முன்னிலையில் அவரால் தமக்குக் கொடுக்கப்பட்ட இராஜ்யத்தையடைந்து விசேஷ கீர்த்தியுள்ளவராய் ஹஸ்தினபுரத்தில் மஹாபாக்யத்துடன் சக்ரவர்த்தியாகிப் பிரகாசித்தார். அபிமன்யுவின் புத்திரராகிய அந்த அரசன் இவ்வளவு மஹிமையுள்ளவர்; அவர் ராஜ்யபாலனஞ் செய்யுங் காலமாகிய இப்பொழுது நீங்கள் ஸத்ரஞ்செய்ய ஆரம்பித்திருக்கிறீர்கள்.

---

## அத்தியாயம் 18

### பரீக்ஷித்திற்கு நேர்ந்த பிராம்மண சாபம்

*1—10.* எந்தச் சக்ரவர்த்தியானவர் தாயாருடைய கர்ப்பத்திலிருக்கும்போது அசுவத்தாமாவினுடைய அஸ்திரத்தால் எரிக்கப்பட்டும் அதியற்புதமாகிய செய்கைகளுள்ள ஸ்ரீ கிருஷ்ணனுடைய அனுக்ரஹத்தால் மரணமடையவில்லையோ, எவர் பிராமணருடைய சாபத்தால் தக்ஷகனால் தமக்கு உயிர்ச்சேதம் நேர்ந்ததும் அதனால் கொஞ்சமேனும் கவலைப்படாமல் இருந்தாரோ, சுகருடைய சிஷ்யராகிய அந்த மஹாராஜன் ஸ்ரீகிருஷ்ணனிடத்திலேயே தமது மனதைச் செலுத்தி, ஸகல ஆசைகளையும் ஒழித்து, பகவானுடைய ஸ்வரூபத்தையறிந்து கங்கா நதிக்கரையில் சரீரத்தைவிட்டார். எந்தப் புருஷர்கள் உத்தமசுலோகருடைய கதைகளைச் சொல்வதால் காலத்தைக் கழிக்கிறார்களோ, எவர்கள் மரண காலத்திலும் ஈசுவரனுடைய சரணாரவிந்தங்களைத் தியானஞ்செய்கிறார்களோ அவர்களுக்கு மோஹம் உண்டாவதில்லை. மேற்சொல்லிய அபிமன்யுவின் புத்திரராகிய

சக்ரவர்த்தி அரசனுயிருக்கும்போது உலகத்தில் கலி வந்திருந்தாலும் அதர்மம் பரவாமலிருந்தது. என்றைய தினம் எந்த க்ஷணத்தில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் பூமியை விட்டு மேலுலகஞ் சென்ருரோ, அன்றையதினமே உலகத்தில் அதர்மத்தை விருத்திசெய்யும் கலி பிரவேசித்தான். தேனீ போல் ஸாரத்தைக் கிரஹிப்பவராகிய பரீக்ஷித்து மஹாராஜன் கலியைக் கொன்றுவிடவில்லை. அவனுடைய சக்தி பரவாமலிருக்கச் செய்தார். ஏனென்ருல் அந்தக் கலியின் காலத்தில் ஸங்கல்ப மாத்திரத்தால் புண்யங்களும், செய்கையால் பாபங்களும் சித்திக்கின்றன. தைர்யமற்றவர்களிடம் சூரனுகியும், தைர்யமுள்ளவர்களிடம் பயப்படும் ஸ்பாவமுள்ளவனுயுமிருக்கிற கலியானவன் அஜாக்ரதையுள்ளவர்களைப் பிடித்துக்கொள்ள செந்நாய்போல மிக்க ஜாக்கிரதையுள்ளவனுக இருக்கிருன். (அவன் என்ன கெடுதியைச் செய்யப்போகிருன் என்பது கருத்து.) ஓ மகரிஷிகளே! உங்களால் கேட்கப்பட்டதும், மிக்க புண்யகரமுமான பரீக்ஷித்தின் சரித்தை ஸ்ரீ வாஸுதேவருடைய திவ்ய கதைகளுடன சொன்னேன். ஆதலால் க்ஷேமத்தை விரும்பிய மனிதர்கள் பகவானுடைய குணங்கள், சரித்திரங்கள் ஆகிய இவைகளடங்கிய கதைகளையே சொல்லவேண்டும்; அவைகளையே கேட்கவேண்டும்; மற்ற கதைகளை ஸேவிக்கக் கூடாதென்பது கருத்து' என்று ஸூதர் சொன்னுர்

11—18. இதனைக் கேட்டு மஹரிஷிகள் அவரை நோக்கி, "ஓ ஸூதரே! நீர் மரண தாமமுள்ள எங்களுக்கு அமிருதமான ஸ்ரீ கிருஷ்ண கதையைச் சொன்னதால் வெகுகாலம் ஜீவித்திருக்கும் எங்களால் இப்பொழுது அனுஷ்டிக்கப்படும் ஸத்ரத்தை யாதொரு குறையுமின்றி முடிப்பது அரிதாகையால் அதன் பூர்ண பலத்தை யடைவோமென்பது நிச்சயமில்லை; ஆகிலும், அதனைச் செய்து

கொண்டு புகையினுல் கறுத்த சரீரமுள்ளவர்களாகிக் கஷ்டப்படும் எங்களுக்கு ஸ்ரீ கோவிந்தருடைய பாதங்களாகிய தாமரை மலரின் தேனைக் கொடுத்தீரல்லவா? பகவத் பக்தர்களுடைய சேர்க்கையின் சிறிது பாகத்திற்குச் சுவர்க்கமாவது, மோக்ஷமாவது, மற்ற ராஜ்யம் முதலியவைகளாவது ஸமமானவையல்ல. மஹான்களுக்கு முக்கியமான கதி பரமபுருஷனே; அவரிடத்தில் பிராகிருத குணங்களில்லை. அவரிடத்தில் பொருந்தியிருக்கும் கல்யாணகுணங்கள் இவ்வளவென்று பரமசிவன், பிரம்மா முதலிய தேவர்களாலும் அறியமுடியவில்லை. அப்பேர்ப்பட்ட பகவானுடைய கதையைக் கேட்டு ரஸிகனுன எவன்தான் போதுமென்று திருப்தியடைவான்? ஆதலால் பகவத் பக்தர்களுக்குள் முக்கியரும் எல்லாவற்றையுமறிந்தவருமான நீர் மிக்க கம்பீரமாயும், பரிசுத்தமாயுமுள்ள மஹாவிஷ்ணுவின் சரிதத்தைக் கேட்க விரும்பும் எங்களுக்கு விஸ்தாரமாகச் சொல்லவேண்டும். மஹா பாகவத சிரோமணியான அந்தப் பரீக்ஷித்து மஹாராஜன் சுகரால் உபதேசிக்கப்பட்ட ஞானத்தால் மோக்ஷமென்ற பெயருள்ள ஸ்ரீ நாராயணனுடைய சரணத்தையடைந்தாரல்லவா? மிகுந்த புண்யத்தைக் கொடுப்பதும், மிகவும் அற்புதமுமாகிய யோகத்தைக் காட்டுவதும், நாசமற்றவராகிய பகவானுடைய சரிதத்தால் அலங்கரிக்கப்பட்டதும், பகவத் பக்தர்களுக்கு மனோஹரமாய்ப் பரீக்ஷித்துக்குச் சுகரால் உபதேசிக்கப்பட்டதுமான ஸ்ரீமத் பாகவதமென்ற ஆக்யானத்தை நன்ருகத் தெரியும்படி சொல்லவேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள்.

19—23. இதனைக் கேட்டு ஸூதர் சொல்லுகிருர்: "ஆச்சரியம்! யான் விலோமஜாதியுள்ளவனுனலும் என்னுடைய பிறப்பும் இப்பொழுது பெரியோர்களைக்

சேவித்ததால் சபலமாயிற்று. மிக்க மகான்களாகிய புருஷர்களுடன் பேசக்கூடிய பாக்யம் கிடைத்ததாலேயே தாழ்ந்த குலத்தில் பிறந்ததால் உண்டான மனக்கவலை நீங்கியது. எந்தப் புருஷன அளவற்ற சக்தி, அளவற்ற குணங்கள் ஆகிய இவைகளுள்ளவரோ, நாசமற்றவரோ, அதனால் அனந்தரென்று சொல்லப்படுகிறாரோ, மகான்களுக்கு முக்ய கதியாயிருக்கும் அந்தப புருஷோத்தமருடைய குணங்களைச் சொல்லுகிற எனக்குத் துக்கமே நேரிடாது. லக்ஷ்மீதேவியானவள் தன்னைப் பிரார்த்திக்கும் பிரம்மா முதலிய தேவர்களை இலக்ஷியஞ்செய்யாமல் தன்னை விரும்பாதவரான ஸ்ரீ நாராயணனுடைய பாத தூளியை சேவிக்கிறாள். அவருக்குச் சமமானவராவது, மேற்பட்டவராவது ஒருவருமில்லை. இதனாலேயே அவருடைய மகிமை நன்றாக விளங்கும். தவிரவும், எவருடைய சரணநகத்திலிருந்து பெருகியதும், பிரம்மதேவரால் சேவிககப்பட்டதுமான கங்காஜலம் பரமசிவன் முதலிய எல்லோரையும் பரிசுத்தப்படுத்துகிறதோ, அந்த முகுந்தனைத் தவிர வேறு யாரைப் பகவானென்று சொல்லக்கூடும்? அந்த ஸர்வேசனிடம் அந்தரங்கத்தைச் செலுத்தியவர்கள் தைர்யமுள்ளவர்களாகத் தேகம் முதலியவைகளில் வெகுநாளாக உண்டாகியிருக்கும் விசேஷ அபிமானத்தை யொழித்து, அஹிம்சை, சமம் இவைகளுடன் கூடி பரமஹம்ஸர்களாக ஆகிவிடுகிறார்கள். ஆனதால் ஸூர்யனுக்குச் சமமான தேஜஸுள்ள ஓ மகரிஷிகளே! பகவானுடைய சரிதத்தைச் சொல்லுகிறேன். பறவைகள் தம்முடைய சக்திக்குத் தக்கபடி ஆகாயத்தில் பறக்குமேயல்லாமல் வெகு உயரத்தில் சக்தியை மீறிப் பறக்க அவைகளால் முடியுமா? வித்வான்கள் தமது புத்திக்கு எட்டியவரையில் மகாவிஷ்ணுவின் லீலைகளை வர்ணிக்கிறார்கள். அப்படிப்போல எனக்குத்

தெரிந்தவரையில் பகவானுடைய சரிதத்தைச் சொல்லு கிறேன்" என்று பின்வருமாறு சொல்லத்தொடங்கினர்.

24—31. "பரீட்சித்து மகாராஜன் ஒருநாள் காட்டில் வேட்டையாடிவரும்போது மிருகங்களை நாடிச் சென்றதால் மிகுந்த பசி தாகமுள்ளவராய், ஏரி குளங்களைத் தேடிப் போகும்போது ஒரு ஆசிரமத்தைக் கண்டார். பின்பு அதனுள் சென்று அவ்விடத்தில் கண்களை மூடிக் கொண்டு நிஷ்டையிலிருக்கும் ஒரு மகரிஷியைக் கண்டார். அந்த மகரிஷி இந்திரியங்களையும் சுவாசத்தையும் அடக்கிக்கொண்டிருந்தார்; அவருடைய புத்தியானது விஷயங்களிற் செல்லவில்லை; ஜாக்ரத், சுவப்னம், சுஷுப்தி என்ற மூன்று அவஸ்தைகளையும் தாண்டி விகாரமற்ற பிர்ம்ம சுரூபியா யிருந்தார். அவருடைய ஜடைகள் நாலு பக்கங்களிலும் அவரை மறைத்துக் கொண்டிருந்தன; தவிரவும் மானின் தோலைப்போர்த்துக் கொண்டுமிருந்தார்; அவரை நோக்கி அரசன் மிகுந்த தாகத்தால் அதிக வருத்தப்பட்டுத்தண்ணீர் கொடுக்கும் படி பலதரம் வேண்டிக்கொண்டார்; இப்படி மகாராஜன் கேட்டும் அவர் குடிக்க நீர் கொடாமலிருந்ததுமன்றி, ஆசனங் கொடுப்பது, உட்காருவதற்கு இடங்காட்டுவது, அர்க்கியம், பிரியமான வார்த்தை முதலியவைகளாலும் அவரை யுபசரிக்கவுமில்லை; அப்பொழுது அரசன், 'மகரிஷி தம்மை அவமதித்தார்' என்று நினைத்துப் பசி, தாகம் இவைகளால் துன்பப்பட்டவராகையாலும் அவருக்கு மகரிஷியினிடம் கோபமும் விரோதமும் உண்டாயின. இம்மாதிரியான கெட்ட குணம் இதற்குமுன் நேர்ந்ததேயில்லை. பின்பு அரசன் ஆசிரமத்திலிருந்து வெளியில் வரும்போது, 'இந்த மகரிஷி உண்மையில் நாம் வந்தது தெரியாமல் நிஷ்டையிலிருக்கிறரா, அல்லது க்ஷத்திரியன் வந்தாலென்ன, போனாலென்ன

வென்று கபடமாகக் கண்களை மூடிக்கொண்டிருக்கிறாரா?" என்று பரீட்சிப்பதற்காக உயிரிழந்த ஒரு பாம்பை வில் கழியின் நுனியால் தூக்கி அவருடைய கழுத்தில் போட்டுத் தமது பட்டணஞ் சென்றார்.

32—38. அப்பொழுது மிகுந்த தேஜஸ்வியான சிருங்கியென்னும் அந்த மகரிஷியின் புத்திரன் தோழர்களுடன் விளையாடிக்கொண்டிருந்தான்; அவ்விடத்தில் அரசன் செய்த காரியத்தைக் கேள்விப்பட்டு, தன் தோழர்களை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானான். "ஆச்சரியம்! அதர்மம் மேலிட்டது. நாய்களைக் காவலுக்காக வைப்பதுபோல க்ஷத்திரியர்களைப் பிராம்மணர்கள் காவலாளர்களாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். வாசலில் காத்துக்கொண்டிருக்கும் அவன் எப்படி பூஜிக்கத்தக்கவனாவான்? பலியைப் புசிக்கும் காக்கைகள்போலும். (ஜனங்களால் கொடுக்கப்படும் வரியைக்கொண்டு ஜீவிப்பவனென்பது கருத்து) வாசலைக் காத்திருக்கும் நாய்கள் போன்ற கொழுத்த க்ஷத்திரியர்கள் யஜமானனுக்குக் குற்றஞ் செய்யும்படி நேர்ந்ததே; கெட்ட மார்க்கத்தில் சஞ்சரிப்பவர்களைச் சிட்சிப்பவரான ஸ்ரீகிருஷ்ண பகவான் வைகுண்டஞ் சென்றாலும் மரியாதை தவறினவர்களை நான் நிக்ரஹிக்கிறேன்; என்னுடைய பலத்தைப்பாருங்கள்" என்று சொல்லி, கோபத்தால் கண்கள் சிவக்க, கௌசிகீ நதியின் ஜலத்தில் ஆசமனஞ் செய்து, என்னுடைய பிதாவிற்கு அபராதஞ் செய்தவனும், மரியாதை தவறினவனும், குலத்திற்கு நெருப்புத்தணல் (குலத்தைக்கெடுப்பவனென்று கருத்து)போன்றவனுமாகிய அரசனை "இது முதல் ஏழாவது நாளில் தட்சகன் கடித்து எரித்துவிடுவானாக" என்று சபித்தான். பின்பு ஆசிரமம் வந்து அவ்விடத்தில் பிதாவின் கழுத்தில் சர்ப்பத்தைக் கண்டு மிகவும் துக்கப்பட்டுக் கதறினான்.

38—39½. இதைக் கேட்டு சமீகரென்னும் அந்த மகரிஷியானவர் மெள்ளக் கண்களைத் திறந்து தம்முடைய தோளில் உயிரில்லாத பாம்பிருக்கக் கண்டு அதனை எடுத்து எறிந்துவிட்டுத் தமது புத்திரனை நோக்கி, 'ஓ குழந்தாய்! ஏன் அழுகிருய்? எவர்கள் உனக்கு எவ்விதக் குற்றத்தைச் செய்தார்கள்?' என்று கேட்டார்.

40—50½. அதனைக் கேட்டு, சிருங்கியென்பவர் நடந்த விஷயம் எல்லாவற்றையும் உண்மையாகத் தெரிவித்தார். அதனைக் கேட்டும் மகரிஷியானவர் தம்முடைய புத்திரன் மகாராஜனைச் சபித்தது உசிதமல்லவென்று நினைத்து, அவனை நோக்கிபபின்வருமாறு தர்மத்தின் இரகசியத்தை யுபதேசித்தார். "ஓ ஒன்றையு மறியாதவனே! அரசன் செய்த சிறு குற்றத்திற்காகப் பெரிதாகிய சிக்ஷையைச் செய்தது உசிதமன்று; பெரியதாகிய பாபத்தைச் செய்தாய். ஓ விவேகமற்றவனே! அரசன் மகாவிஷ்ணுவின் அம்சமுள்ளவனுகையால் அவனைச் சாமான்ய மனிதனுக நினைக்கக்கூடாது; அவனுடைய தேஜஸ் சகிக்க முடியாதது; அதனுல் காப்பாற்றப்பட்டு ஜனங்கள் ஒருவரிடத்திலும் பயமில்லாதவர்களாக வசிக்கிறுர்கள்; மகாவிஷ்ணுவின் அம்சமுள்ள அவ்வரசனில்லாவிடில் ஜனங்கள் ஆடுகளின் கூட்டம்போல் க்ஷணகாலத்திற்குள் நாசமடைவார்கள்; தேசத்தில் அரசனில்லாத வரையில் ஜனங்களுடைய தனங்களை யபகரிக்கும் திருடர்கள் மிகுதியாய்விடுவார்கள்; ஒருவருக்கொருவர் அடித்துக்கொள்வார்கள்; கடுமையாகப் பேசுவார்கள்; பசுக்கள், ஸ்திரீகள், பணங்கள் ஆகிய இவைகளை அபகரிப்பார்கள். ஆகையால் அதனுலுண்டாகும் பாபம் நம்மைச் சேர்ந்ததாகும். (அரசனைச் சபித்ததாலென்பது கருத்து.) மேலும், வர்ணுசிரம தர்மங்கள் குறைந்துவிடும்; நல்லொழுக்கம் மறைந்துவிடும்; நாய்கள் போலவும், குரங்குகள் போலவும் அர்த்

தம், காமம் இவைகளிலேயே ஜனங்கள் மிகவும் ஆசை கொள்வார்கள்; அதனால் வர்ண சங்கரம் உண்டாகும். தவிரவும் பரீக்ஷித் மகாராஜனே தர்மத்தைக் காப்பாற்று கிறவர்; சக்ரவர்த்தி; மிகுந்த கீர்த்தியுள்ளவர்; பகவத் பக்தர்; அசுவமேத யாகஞ் செய்தவர்; மேலும் என்னிடம் வந்த சமயத்தில் பசி தாகத்தால் சிரமமடைந்து தீனரா யிருந்தவர்; ஆனதுபற்றி அவரைச் சபிப்பது நியாய மல்ல. குற்றஞ்செய்யாத வேலைக்காரர்களிடம் செய்த அப ராதத்தைச் சகல ஜகத்ரூபியான பகவான் பொறுத்துக் கொள்ளட்டும். விஷ்ணு பக்தர்களை ஒருவன் நிந்தித் தாலும், ஏமாற்றினாலும், அவமதித்தாலும், அடித்தாலும் அவர்கள் பிரதிசெய்ய சாமர்த்தியமுள்ளவர்களானாலும் ஒன்றுஞ் செய்கிறதில்லை" என்று சொல்லித் தமது புத்திரன் செய்த குற்றத்தைப்பற்றி மகரிஷி பச்சாத்தாப மடைந்து, அரசன் செய்த குற்றத்தை மனத்தில் நினைக் காமலேயே இருந்தார். பெரும்பாலும் சாதுக்கள் பிறர் செய்த கெடுதியால் அவர்களிடத்தில் கோபித்து வருத்த மடைகிறதில்லை; உபகாரத்தால் சந்தோஷமடைகிறது மில்லை. ஏனென்றால் ஆத்மாவானது உண்மையில் சுகத் திலாவது துக்கத்திலாவது ஸம்பந்திக்கிறதில்லை.

---

# அத்தியாயம் 19

## கங்கைக் கரைக்குச் சுகர் வந்தது

பரீக்ஷித்து மகாராஜன் தம்முடைய பட்டணஞ் சென்ற பிறகு மகரிஷியின் ஆசிரமத்தில் தாம் செய்து வந்த குற்றத்தை நினைத்து வருத்தப்பட்டுத் தமக்குள் தாம் பின்வருமாறு யோசிக்கலானார்: 'யாதொரு அபராத முஞ் செய்யாதவரும், தேஜஸ்ஸை யடக்கிக்கொண்ட வருமான தபஸ்வியினுடைய கழுத்தில் சர்ப்பத்தைப்

போட்டேன்; அது மிகவும் கெட்ட கார்யம்; 'பாபத்தைச் செய்யக்கூடாது' என்ற தெய்வத்தின் கட்டளையை மீறினதாக ஆயிற்று. ஆனதால் தடுக்கமுடியாத துக்கம் சீக்கிரத்தில் நேரிடும். இனி நான் இப்படிப்பட்ட கெட்ட காரியத்தைச் செய்யாமலிருப்பதற்காகவும், செய்த பாபத்திற்குப் பிராயச்சித்தமாகவும் அந்தத் துக்கம் எனக்கே நேரில் வரவேண்டும் (புத்திரன் முதலியவர்களுக்கு நேரிடவேண்டாமென்பது கருத்து) நான் பிராம்மணர்களுக்குக் கோபத்தை யுண்டுபண்ணினதால் பிராம்மண குலமாகிய அக்னியானது மிக்க பாபியான என்னுடைய இராஜ்யம், சைன்யம், பூர்ணமான செல்வம் ஆகிய இவைகளை இப்பொழுதே எரிக்கட்டும். பிராம்மணர்கள், தேவர்கள், பசுக்கள் ஆகிய இவர்கள் விஷயத்தில் மறுபடியும் எனக்கு இப்படிப்பட்ட கெட்ட புத்தி யுண்டாகவேண்டாம்" என்று சிந்தித்தார்.

4—17. இந்தச் சமயத்தில் சமீக மகரிஷியின் சிஷ்யன் ஒருவன் குருவின் அனுமதிப்படி வந்து, சிருங்கியின் சாபத்தை அரசனிடம் தெரிவித்தான். அதனைக் கேட்டு மகாராஜன் 'விஷயங்களில் மிகுந்த ஆசையுள்ள நான் வைராக்யமடைவதற்குத் தட்சகனுடைய விஷாக்னியே காரணமென்றும், அது சீக்கிரமாக நேரிடவேண்டும்' என்றும் நினைத்தார். பின்னுமவர் இவ்வுலகம், பரலோகம் ஆகிய இவ்விரண்டையும் துச்சமென்று தள்ளிவிட்டு, ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாதஸேவையையே பெரிதாக நினைத்துக் கங்கைக் கரையில் பிராயோபவேசஞ் செய்ய முயற்சித்தார். எந்த நதியானது துளஸியுடன் சேர்ந்த மகாவிஷ்ணுவின் பாததூளியைவிட மிக்க புண்யகரமான ஜலப்பிரவாகமுள்ளதோ, உலகபாலர்களுள்பட எல்லாரையும் வெளியிலும் அந்தரங்கத்திலும் பரிசுத்தப்படுத்துகிறதோ, அந்தக் கங்காநதியைச் சாகும்

த்ருணத்திலிருக்கும் எவன்தான் சேவிக்கமாட்டான்? இப்படி அந்த நதிக்கரையில் பிராயோபவேசஞ் செய்வதாகத் தீர்மானித்து, வேறு விஷயத்தில் மனதைச் செலுத்தாமல் ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரணங்களையே தியானித்து, சகல ஆசைகளையும் விட்டுவிட்டு முனியாக விருந்தார். அப்பொழுது அத்திரி, வசிஷ்டர், சியவனர், சரத்வான், அரிஷ்டநேமி, பிருகு, அங்கிரஸ், பாராசரர், விசுவாமித்ரர், பரசுராமர், உசத்யர், இந்த்ரப்ரதமர், இத்மவாஹர், மேதாதிதி, தேவலர், ஆர்ஷ்ணிஷேணர், பரத்வாஜர், கௌதமர், பிப்பலாதர், மைத்ரேயர், ஔர்வர், கவஷர், அகஸ்தியர், வியாஸபகவான், நாரதர், மற்ற தேவரிஷிகள், பிரம்மரிஷிகள், ராஜரிஷிகள், அருணர் முதலியவர்கள் ஆகிய இவர்களெல்லோரும் தங்கள் தங்கள் சிஷ்யர்களுடன் அவ்விடம் வந்தார்கள். அவர்களெல்லாரும் தீர்த்தயாத்திரை செய்கிறோம் என்ற வியாஜமாக உலகத்தைப் பரிசுத்தி செய்துகொண்டு சஞ்சரிப்பவர்கள். அப்பொழுது அவ்வரசன் பலவகையான ரிஷிகோத்திரத்தில் சிறந்தவர்களான அவர்களை முறை தவறுமல் பூஜித்து நமஸ்காரஞ் செய்தார். அவர்கள் சுகமாக உட்கார்ந்தபொழுது பினனுமவர்களுக்கு நமஸ்காரஞ்செய்து அவர்கள் முன்பாக இருகைகளையும் கூப்பிக்கொண்டு சுத்த சித்தமுள்ளவராய்த் தமது இஷ்டத்தைப் பின்வருமாறு வெளியிட்டார். "பெரியோர்களால் அனுக்ரகிக்கக்கூடிய சுபாவமுள்ள நான் மிகவும் தன்யனாகவிருக்கிறேன்; பிராம்மணர்களுடைய சுத்தமான பாததீர்த்தத்தை யடையாத க்ஷத்திரிய குலம் நிந்திக்கக் கூடியதே; மிக்க பாப சுபாவமுள்ளவனும், சம்சார சுகத்திலேயே எப்பொழுதும் ஆசையை வைத்தவனுமான எனக்கு வைராக்யத்தை யுண்டுபண்ணுவதற்காகவே பிராம்மண சாபம் நேரிடும்படி செய்து பரமபுருஷன்

என்னை யனுக்ரகிக்கிறார். பகவானையே மனத்தில் தியானிக்கிறேன். மேலும் பெரியோர்களான உங்களையும், கங்காதேவியையும் சரணமடைகிறேன். பிராம்மண சாபத்தால் தூண்டப்பட்ட தக்ஷகன் என்னை வஞ்சித்து இஷ்டப்படி கடிக்கட்டும். நீங்கள் மகாவிஷ்ணுவின சரிதத்தைக் கானம் செய்யுங்கள். நான் பின்பு எந்தச் சரீரத்தை யடைந்தாலும் அந்தந்த ஜன்மாவில் ஈசுவரனிடத்திலும் அவருடைய பக்தர்களிடத்திலும் எனக்கு விசேஷ சிநேக முண்டாகட்டும்" என்று சொல்லித் தம்முடைய பிள்ளையான ஜனமேஜயரிடம் இராஜ்யத்தை யொப்பித்து, கங்கையின் தென்கரையில் தர்ப்பங்களைக் கிழக்கு நுனியாகப் பரப்பி, அவைகளின்மீது வடக்கு முகமாய் வீற்றிருந்தார்.

*18—21.* இப்படி அரசன் பிராயோபவேசஞ் செய்த பொழுது தேவர்கள் அனைவரும், அவரைக் கொண்டாடிப் புஷ்பங்களை வர்ஷித்தார்கள்; துந்துபி வாத்தியங்களை முழக்கினார்கள்; தவிர, பிரஜைகளை யனுக்ரகிக்கும் ஸ்வபாவமுள்ள அவ்விடம் வந்த மகரிஷிகள் அவரைச் சிலாகித்து சாதுவாதஞ்செய்து அவரை நோக்கி, "இராஜ சிரேஷ்டரே! கிருஷ்ணபகவானிடத்தில் விசேஷபக்தியுள்ளவரும், இராஜ்யம் முதலியவைகளில் ஆசையில்லாதவருமான பாண்டவ குலத்தில் பிறந்த உமக்கு இம்மாதிரி எண்ணம் நேர்ந்தது இயல்பேயாம்" என்று சொல்லி அவர்கள் ஒருவருக்கொருவர் "இந்தப் பாகவத சிரோமணியான சக்ரவர்த்தி இந்தச் சரீரத்தைவிட்டு மாயா ஸம்பந்தமில்லாததும், துக்கமற்றதுமான பரமபதத்தை யடையப்போகிறபடியால் அதுவரையில் நாம் எல்லோரும் இவ்விடத்திலேயே வசிப்போம்" என்று நிச்சயித்துக் கொண்டார்கள்.

*22—24.* அப்பொழுது பக்ஷபாதமில்லாததும், தேன் போல் ரஸமுள்ளதும், கம்பீரமாகிய அர்த்தமுள்ளதும்,

உண்மையானதுமான மகரிஷிகளின் வார்த்தையைக் கேட்டு பரீக்ஷித்தானவர் மகாவிஷ்ணுவின் சரிதத்தைக் கேட்க விரும்பியவராய் அவர்களை நோக்கி, "ஸத்ய லோகத்தில் சரீரத்துடன் இருக்கும் வேதங்கள்போல நீங்கள் அனைவரும் இவ்விடம் வந்தீர்கள். பிறரை அனுக்ரஹிப்பதைவிட வேறு பிரயோஜனம் இவ்வுலகத்திலும், மேலுலகத்திலும் உங்களுக்கில்லை. ஆகையால் உங்களைக் கேட்கிறேன்; சாகுந்தருணத்திலிருப்பவர்கள் செய்யவேண்டிய சுத்தமாகிய தர்மம் யாது? சுத்தமாகிய அதனை யோசித்துச் சொல்லுங்கள்" என்று கேட்டார்.

25—39. அந்தச் சமயத்தில் வியாஸருடைய புத்திராகிய சுகர் அவதூத வேஷமுள்ளவராய், பாலர்களுடன் தெய்வச்செயலாய் அவ்விடம் வந்தார். அவரிடத்தில் ஆசிரமத்துக்குரிய அடையாளமாவது ஜாதியைக்காட்டும் குறியாவது யாதொன்றுமில்லை. அவர் ஆத்ம லாபத்தாலேயே சந்தோஷமடைந்தவர். அப்பொழுது பதினாறு வயதுள்ளவராயிருந்தார்; அழகான கைகளும், கால்களும், தொடைகளும், தோள்களும், கன்னங்களும், கண்களும், உயர்ந்த மூக்குகளும், சமமான காதுகளுமுடையவராய்ப் பிரகாசித்தார். சதைகளில் மறைந்த நரம்புகளுள்ளவர்; விசாலமும் உயர்ந்ததுமான மார்புள்ளவர்; சுழல்போன்ற கொப்பூழுள்ளவர். மூன்று மடிப்புகளால் அழகான வயிறுள்ளவர்; திக்குகளையே வஸ்திரமாகக் கொண்டவர்; சுருண்டும் பரந்துமிருக்கும் தலைமயிருள்ளவர்; நீண்டு தொங்கும் கைகளுள்ளவர்; மகாவிஷ்ணு போன்றவர்; மிகவும் மேலான யௌவனமுள்ள வயதுள்ளவராகையால் ஸ்திரீகளுடைய மனதை அபகரிப்பவர்; அழகான சிரிப்புள்ளவர்; இப்படிப்பட்ட அவரைப் பார்த்து அவருடைய லக்ஷணத்தை யறிந்தவர்களான மகரிஷிகள் எதிர்கொண்

டழைத்தார்கள். அப்பொழுது சக்ரவர்த்தியானவர் வந்த அதிதியாகிய சுகருக்கு நமஸ்காரஞ்செய்தார். பின்பு அவருடன் வந்த அஞ்ஞர்களான ஸ்திரீகளும் பாலர்களும் திரும்பிப்போனார்கள். சுகர் பெரிதான ஆஸனத்தில் உட்கார்ந்தார். அப்பொழுது பிரம்ம ரிஷிகள், தேவரிஷிகள், ராஜரிஷிகள் இவர்களுடன் மத்தியிலிருக்கும் சுகர், சுக்ரன் முதலிய கிரகங்களுடையவும், அசுவினி முதலிய நட்சத்திரங்களுடையவும், மற்ற தாரைகளுடையவும் நடுவிலிருக்கும் சந்திரன்போலப் பிரகாசித்தார். இப்படி சாந்த மனமுள்ளவரும், தடையற்ற மேதையுள்ளவருமான சுகரை மகா பாகவதரான பரீட்சித்து மகாராஜன் பின்னும் நமஸ்கரித்து, அஞ்சலிபந்தஞ்செய்து, தலைவணங்கி, ஸாவதானமாய் நின்று, பின்வருமாறு மிருதுவாகச் சொல்லலானார்: "ஓ பிராம்மண! க்ஷத்திரியனாகிய நான் ஸாதுக்களால் ஸேவிக்கக்கூடியவனாகிறேன். என்னுடைய பாக்கியம் வியக்கத்தக்கது; நீங்கள் அதிதியாக வந்து கிருபையால் என்னைப் பரிசுத்தப்படுத்தினீர்கள்; பாதத்தை வைத்த மாத்திரத்தில் வீடு முதலிய யாவும் பரிசுத்தமாய்விடக்கூடிய உங்களைத் தரிசித்தலாலும், ஸ்பர்சித்தலாலும், உங்களுடைய பாதங்களை அலம்புதலாலும், ஆஸனங்கொடுத்தலாலும் யான் பரிசுத்தமடைவதில் யாது சந்தேகம்? விஷ்ணுவைக் கண்ட அசுரர்கள்போலத் தங்களைத் தரிசித்த மாத்திரத்தில் மகா பாபங்களும் உடனே நீங்குகின்றன. பாண்டவர்களிடத்தில் மிகுந்த பிரியமுள்ள ஸ்ரீகிருஷ்ண பகவான் என்னிடத்தில் சந்தோஷமடைந்தார். அத்தையின் குமாரர்களிடம் மிகுந்த பிரியத்தால் அந்த வம்சத்தில் பிறந்த எனக்கும் தங்களுடைய தரிசனத்தைச் செய்வித்தார். அவருடைய அனுக்ரஹமில்லாமற்போனால் உங்களுடைய தரிசனம் மரணமடையச்

சித்தனயிருக்கும் எனக்குக் கிடைக்குமா ? தாங்கள் ஸித்தர்கள் ; உங்களுடைய பக்தியோ கண்டுபிடிக்க முடியாதது ; நீங்கள் மிகவும் தாதாவாகையால் எல்லாரையும் யாசிக்கச்செய்பவர். ஆகையால் ஸித்தி பெற்றவரும், யோகிகளுக்குப் பரமகுருவுமாகிய உங்களை ஒரு விஷயம் கேட்கிறேன் ; அஃதாவது, 'மரணமடையும் ஸமயத்தையுடையவன் என்ன செய்யவேண்டும்? எதனைக் கேட்கவேண்டும் ; எதனை நினைக்கவேண்டும் ? எதனை உபாஸிக்கவேண்டும் ? எவற்றைச் செயயக்கூடாது ? இவைகளைச் சொல்லவேண்டும் ; நீங்கள் கிருகஸ்தர்களுடைய வீட்டில் மாடு கறப்பதற்கு எவ்வளவு காலம் செல்லுமோ அவ்வளவு காலங்கூட நிற்கிற வழக்கமில்லையே ; ஆனதால் சீக்கிரம் சொல்லவேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

40. இந்தப்படி பரீக்ஷித்து மகாராஜனால் கேட்கப்பட்டவுடன் சகல தர்மங்களையுமறிந்த சுகர் பிரதியுத்தரம் சொல்ல ஆரம்பித்தார்.

சுபம் !